# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | கணக்குகளும் நிதியும் | 1 |
| 2. | வங்கி மேற்பார்வை | 80 |
| 3. | வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் | 85 |
| 4. | தொடர்பூட்டல் | 86 |
| 5. | நாணயம் | 88 |
| 6. | உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | 91 |
| 7. | பொருளாதார ஆராய்ச்சி | 95 |
| 8. | ஊழியர் சேம நிதியம் | 98 |
| 9. | வசதிகள் முகாமைத்துவம் | 102 |
| 10. | நிதி | 103 |
| 11. | நிதியியல் உளவறிதல் பிரிவு | 105 |
| 12. | வெளிநாட்டுச் செலாவணி | 107 |
| 13. | மனித வளங்கள் | 111 |
| 14. | தகவல் தொழில்நுட்பம் | 115 |
| 15. | உள்ளகக் கணக்காய்வு | 117 |
| 16. | பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | 117 |
| 17. | சட்டம் மற்றும் இணங்குவிப்பு | 120 |
| 18. | பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு | 121 |
| 19. | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் | 123 |
| 20. | கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | 125 |
| 21. | பொதுப்படுகடன் | 126 |
| 22. | பிரதேச அபிவிருத்தி | 128 |
| 23. | பிரதேச அலுவலக முகாமைத்துவம் | 134 |
| 24. | தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் | 135 |
| 25. | இடர்நேர்வு முகாமைத்துவம் | 136 |
| 26. | செயலகம் | 137 |
| 27. | பாதுகாப்புப் பணிகள் | 138 |
| 28. | அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 139 |
| 29. | புள்ளிவிபரவியல் | 139 |
| 30. | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | 143 |
| 31. | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 148 |

# 1. கணக்குகளும் நிதியும்

## 2019ம் ஆண்டுகாலப்பகுதி மற்றும் நிதியியல் ஆண்டுடன் தொடர்புடைய நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயற்பாட்டு அறிக்கை

### 1. அறிமுகம்

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு என்பது நாணயச்சபையினால் நியமிக்கப்பட்ட துணைக் குழுவொன்றாகும். நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது நிதியியல் அறிக்கையிடலுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருமங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள், உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு அத்துடன் நாணயச்சபையினால் குறித்தொதுக்கப்படுகின்ற வேறு ஏதேனும் விடயம் தொடர்பாக நாணயச்சபைக்கு ஆலோசனைகளை வழங்குகின்றது. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது காலாண்டு அடிப்படையில் அதன் செயலாற்றம் மற்றும் பரிந்துரைகளை நாணயச்சபைக்கு அறிக்கையிடுகின்றது.

### 2. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு

நாணயச்சபை ஆலோசனைக் கணக்காய்வு குழுவுக்கு நாணயச்சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் தலைமை தாங்குவதுடன் இரு வேறு வெளிவாரிக் கணக்காய்வுத் தொழில்சார் நிபுணர்களை கொண்டுள்ளது. 2019.12.31 அன்று உள்ளவாறு நாணயச்சபை ஆலோசனைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| i. | திரு. ஏ. என். பொன்சேகா | - | தலைவர் |
| ii. | திரு. எச். எம். ஏ. ஜயசிங்க | - | உறுப்பினர் |
| iii. | திருமதி. ஏ. ஐ. மொஹட்டி | - | உறுப்பினர் |

நாணயச்சபையின் செயலாளர் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயலாளர் ஆவார் என்பதுடன் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவிற்கான உதவிச் செயலாளர் ஆவார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவுக்கு செயலக வசதிகளை வழங்குகின்றது. இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரி கணக்காய்விற்குப் பொறுப்பான தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்தான கணக்காய்வுக் கண்காணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளர், இணங்குவித்தல் அலுவலர் மற்றும் முதன்மை இடர்நேர்வு அலுவலர் ஆகியோர் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்களில் அவதானிப்பாளர்களாகச் சமூகமளிக்கின்றனர். கலந்துரையாடல்களுக்கு அவசியப்படுகின்றவாறும் அவசியப்படுகின்ற போதும் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களத் தலைவர்கள் நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் தலைவரினால் அழைக்கப்படுகின்றனர். வெளிவாரிக் கணக்காய்வினைக் கொண்டு நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனமான கேபிஎம்ஜி ஈடுபாட்டுப் பங்காளரும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கலந்துரையாடப்படுகின்ற போது சமூகமளிக்கின்றார்.

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது ஆண்டுக்கு குறைந்தது ஆறு (06) தடவைகள் அல்லது நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் தலைவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அல்லது நாணயச்சபையினால் பணிக்கப்பட்டவாறு சந்திப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்கள் குழுவுக்கான செயலாளரினால் கூட்டப்படுகின்றன. கூட்டமொன்றிற்கான நிறைவெண், தலைவர் உள்ளடங்கலாக இரண்டு (02) ஆகும்.

### 3. 2019 நிதியியல் ஆண்டுடன் தொடர்புடையதும் ஆண்டுகாலப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது 2019இல் பத்து (10) கூட்டங்களை நடாத்தியதுடன் 2019 நிதியியல் கூற்றுக்களுடன் தொடர்புடையதும் ஆண்டுகாலப்பகுதியிலும் கொண்டு நடாத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அ. நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு;

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு பின்வருவனவற்றை மீளாய்வு செய்தது.

i. இடைக்கால பிரச்சனைக் குறிப்பறிக்கை, 2018.12.31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கேபிஎம்ஜியின் முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவப் பதிலிறுத்தல்கள்.

ii. 2018ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை,

iii. 2019ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு மீதான கேபிஎம்ஜியின் கணக்காய்வுத் திட்டம்.

iv. 2019ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு மீதான உள்ளக முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவப் பதிலிறுத்தல்கள்.

v. 2018.12.31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட ஊழியர் சேம நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள்.

vi. 2019.12.31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட ஊழியர் சேம நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள்.

ஆ. உள்ளகக் கட்டுப்பாடுகள்;

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு,

i. இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக மீளாய்வு செய்து ஆலோசனை வழங்கியது.

ii. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் மூலமான நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தது.

இ. உள்ளகக் கணக்காய்வு;

நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழு,

i. காலாண்டு அடிப்படையில் 2019இன் கணக்காய்வுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தது.

ii. உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புகள் மற்றும் அவற்றின் சீர்படுத்தல் நடைமுறைப்படுத்தல் நிலைமையினை மீளாய்வு செய்தது.

iii. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2020-2022 இற்கான தந்திரோபாய கணக்காய்வு திட்டம் மற்றும் 2020 இற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்தது.

iv. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் ஊழியர் தேவைப்பாட்டினை மீளாய்வு செய்தது.

## 2019 நிதியியல் ஆண்டிற்கான
## சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவினது செயற்பாட்டு அறிக்கை

**1. அறிமுகம்**

சபை இடர்நேர்வு மேற்பார்வைக்குழுவானது, நாணயச்சபையின் உத்தியோகபூர்வக் கையளிப்பின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு மற்றும் இணங்குவிப்புத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக நாணயச்சபையினால் உருவாக்கப்பட்ட உபகுழுவாகும். இக்குழுவானது, வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தலின் மீதான அர்ப்பணிப்புடனான கவனத்தைஉறுதி செயவதற்கு நாணயச்சபைக்கு உதவுவதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்புச் செயற்பாட்டுக்கான கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை உருவாக்குவதற்கான பொறுப்பைக்கொண்டுள்ளது.

**2. சபை இடர்நேர்வு முகாமைத்துவ மேற்பார்வைக்குழுவின் கட்டமைப்பு**

மேற்படி குழுவானது நாணயச்சசபையினால் முன்மொழியப்பட்ட நாணயச்சபையின் சுயாதீன உறுப்பினர் ஒருவரால் (நாணயச்சபை மதியுரை கணக்காய்வுக்குழுவின் தலைவரல்லாத) தலைமைதாங்கப்படும். மேலும் இக்குழு, இது தொடர்பான நிபுணத்துவமுடைய, இந்த நியமிப்புக்குக் குறைந்தது ஒரு வருட காலத்திற்குள் நிதியியல் பணிகள் துறையில் ஈடுபட்டிராத, இரு சுயாதீன வெளியக வல்லுனர்களைக் கொண்டிருக்கிறது.

31.12. 2019 அன்று மேற்குறிப்பிட்ட குழுவின் கட்டமைப்பு,

I. திரு. சி.பி.ஆர். பெரேரா, நாணயச்சபை உறுப்பினர் (தலைவர்)
II. திரு. பிரியான் பெர்ணாண்டோ (சுயாதீன வெளியக உறுப்பினர்)
III. திரு. நயோமால் குணவர்த்தன (சுயாதீன வெளியக உறுப்பினர்)

நாணயச்சபையின் செயலாளர் இக்குழுவின் செயலாளராக இருப்பதோடு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர், உதவிச் செயலாளராக இருப்பார். இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது இக்குழுவிற்குச் செயலக வசதிப்படுத்தல்களை வழங்குகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் மூத்ததுணை ஆளுனர் மற்றும் அனைத்துத் துணை ஆளுனர்கள், பணிப்பாளர் - சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம், மற்றும் பணிப்பாளர் - உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் ஆகியோர் அவதானிப்பாளர்களாக இக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்வர்.

இக்குழுவின் கூட்டங்கள் குறைந்தபட்சமாக காலாண்டுக்கொருமுறை அல்லது அதிலும் அதிகமான முறைகள், குழுவின் தலைவரின் தீர்மானத்தின் கீழ், அல்லது நாணயச்சபையின் வழிகாட்டுதலின்கீழ் நடாத்தப்படும். இக்கூட்டத்திற்கான குறைந்தபட்ச சமுகமளிப்பு, தலைவர் உள்ளடங்கலாக இரண்டு (02) அங்கத்தவர்கள் ஆகும்.

**3. 2019ஆம் ஆண்டு நிதியாண்டுடன் தொடர்புபட்ட மற்றும் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

சபை இடர்நேர்வு மேற்பார்வைக்குழு 2019ஆம் ஆண்டில் ஐந்து (05) கூட்டங்களை நடாத்தியதுடன் அதனால் மேற்கொளளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

I. இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைப் பத்திரத்தினை மீளாய்வு செய்ததுடன் இப்பத்திரத்தினை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களையும் தொடர்புடைய உள்ளீடுகளையும் வழங்கியது.

II. இலங்கை மத்திய வங்கியினுள் செயற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினையும் இடர்நேர்வு ஆளுகையினையும் மேம்படுத்துவதற்கான உலக வங்கியின் தொழினுட்ப உதவியினைப் பெறுவதற்கு இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினை வழிகாட்டியதுடன் இது தொடர்பான முதலாவது அமர்வின் நிறைவிற்குத் தீவிரமாக ஈடுபட்டது.

III. வங்கியினுள் ஓர் இடர்நேர்வுக் கலாசாரத்தினை வளர்க்கும் நோக்குடன் உலக வங்கியின் பரிந்துரைகளின் செயற்பாட்டினை வசதிப்படுத்துவதற்கான முன் முயற்சிகளை எடுத்தது.

IV. இலங்கை மத்திய வங்கியின் தன்னியக்க சம்பவ அறிக்கை முறைமையினையும் தொடர்புபட்ட வழிகாட்டுதல்களையும் அவற்றைச் செயற்பாட்டிற்கு முன்பு மீளாய்வு செய்தது.

V. இடர்நேர்வு அணி (Risk matrix), இடர்நேர்வு மதிப்பீட்டு அளவுகள் மற்றும் இடர்நேர்வு வகைபிரித்தலை உள்ளடக்கிய இலங்கை மத்திய வங்கியின் செயற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டுதல்களை மேம்படுத்துவதற்கான உள்ளீடுகளை வழங்கியதுடன் அவற்றை மீளாய்வு செய்தது.

VI. இடர்நேர்வு முகாமைத்துவத்துவத் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படும் மூன்று நிதியங்கள் (பன்னாட்டு ஒதுக்குகள், உள்ளக முதலீட்டு நிதியம், மற்றும் ஊழியர் சேமலாப நிதியம்) தொடர்பிலான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்புத் தகவல்களை முதலீட்டுக் கொள்கைப்பத்திரம், தந்திரோபாயச் சொத்து ஒதுக்கீடு மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்கள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுருக்களுக்குள் உட்பட்டிருப்பதை உறுதிசெய்யும் நோக்குடன் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்தது.

VII. மூன்று நிதியங்களினதும் முதலீட்டு முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பிலான முதலீட்டுக் கொள்கைகளை மீளாய்வு செய்ததுடன் இக்கொள்கைகளை மேம்படுத்தும் பொருட்டு இடர்நேர்வு சகிப்புத்தன்மை அளவுகள் மற்றும் சந்தை மற்றும் கடன் இடர்நேர்வு அளவுருக்கள் உள்ளடங்கலாக ஆக்கபூர்வ உள்ளீடுகளை இடர்நேர்வு முகாமைத்துவக் கண்ணோட்டத்தின் கீழ் வழங்கியது.

# இலங்கை மத்திய வங்கி

### முகாமைத்துவக் கூற்று

### 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது

### இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்பபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு கேபிஎம்ஜி பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. பீஏவ்/எச்/சீபிஎஸ்எல்/1/19/1
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2020 மாச்சு 30

கௌரவ நிதி அமைச்சர்

**இலங்கை மத்திய வங்கியின் 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவு மற்றும் நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 42(2)ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

---

## 1. நிதியியல் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் ('வங்கி') 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதியியல் கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் 13(1)ஆம் பிரிவு மற்றும் நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 42(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது. எனது அபிப்பிராயத்தின்படி வங்கியின் 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் காசுப்பாய்ச்சல் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ப.நி.அ.நி) இணங்க அனைத்துப் பொருண்மையான விடயங்களையும் நியாயமாகப் பிரதிபலிக்கின்றன.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏஎஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.3 நிதியியல் கூற்றுக்களிற்கான நாணயச் சபையினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதியியல் கூற்றுக்களை ப.நி.அ.நி இற்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாகவுள்ளது.

வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ்வாளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகவுள்ளது. 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கி வருடாந்த மற்றும் காலாந்தரமான நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதியியல் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

ஐஎஸ்எஸ் இற்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறன வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வினை போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகளை உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

- 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பொருண்மையான பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டடிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

- 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வியாபாரச் செயற்பாடுகளிற்கு வெளியே வங்கி செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் வங்கி ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

- 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் வங்கி இணங்கியொழுகாதுள்ளமையைக் குறிப்பிடுதல்.

- 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கிணங்க செயலாற்றியிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

- 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

**(ஒப்பம்)**

**டபிள்யூ. பி. சி. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் நாயகம்

# இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் நிலைமைக் கூற்று

| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறானது | குறிப்பு | 2019 ரூ.000 | 2018 ரூ.000 |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 9 | **420,709,469** | 372,175,176 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 10 | **38,493,268** | 37,467,239 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 10 | **729,801,009** | 694,876,394 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 11 | **2,021,917** | 750 |
| ப.நா. நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 12 | **147,159,174** | 147,427,452 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | **-** | 961,284 |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | **1,338,184,837** | 1,252,908,295 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 13 | **76,511,883** | 45,031,157 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 14 | **50,354,879** | 229,454,409 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 15 | **236,608,971** | 198,632,571 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 16 | **1,500,487** | 1,381,879 |
| ஏனைய சொத்துக்கள் | 17 | **17,601,747** | 14,879,268 |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | **382,577,967** | 489,379,284 |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | | **1,720,762,804** | 1,742,287,579 |
| வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள் | | | |
| தங்கம் | 18 | **173,438,430** | 149,683,439 |
| நிதியல்லாச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் | 19 | **7,298,392** | 6,568,935 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | | **1,069,076** | 1,914,087 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 20 | **16,810,691** | 16,955,854 |
| அருவச் சொத்துக்கள் | 21 | **38,046** | 30,437 |
| மொத்த நிதியல்லாச் சொத்துக்கள் | | **198,654,635** | 175,152,752 |
| மொத்தச் சொத்துக்கள் | | **1,919,417,439** | 1,917,440,331 |
| பொறுப்புக்களும் பங்குரிமை மூலதனமும் | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 22 | **958,248** | 19,301,160 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 11 | **989,958** | 14,056,460 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 23 | **82,995,147** | 79,158,977 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 24 | **471,975,073** | 416,988,246 |
| ஏனையவை | 25 | **57,091,538** | 134,730,933 |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | **614,009,964** | 664,235,776 |
| உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 26 | **254,581,620** | 320,106,183 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 27 | **499,639** | 348,718 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 28 | **43,298,325** | 28,311,221 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 29 | **677,967,150** | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 30 | **12,702,888** | 12,624,764 |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | **989,049,622** | 1,002,333,396 |
| மொத்த நிதியியல் பொறுப்புக்கள் | | **1,603,059,586** | 1,666,569,172 |
| ஏனைய பொறுப்புக்கள் | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 31 | **5** | 11 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | 32 | **11,990,647** | 12,016,804 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 33 | **181,809** | 85,945 |
| மொத்த ஏனைய பொறுப்புக்கள் | | **12,172,461** | 12,102,760 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **1,615,232,047** | 1,678,671,932 |
| பங்குரிமை மூலதனம் | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 50,000,000 |
| ஒதுக்குகள் | | **254,185,392** | 188,768,399 |
| மொத்தப் பங்குரிமை மூலதனம் | | **304,185,392** | 238,768,399 |
| மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம் | | **1,919,417,439** | 1,917,440,331 |

14ஆம் பக்கம் தொடக்கம் 79ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.
நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2020 மாச்சு 24ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் - ஆளுநர்

(திருமதி) யு.எல் முத்துகல - முதன்மைக் கணக்காளர்

# இலங்கை மத்திய வங்கி

## வருமானக் கூற்று

| 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2019<br>ரூபா 000 | 2018<br>ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 36 | **32,950,560** | 25,556,932 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | 37 | **42,900,897** | (18,259,956) |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **1,057,273** | (4,092,390) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **76,908,730** | 3,204,586 |
| வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவினம் | | | |
| வட்டிச் செலவினம் | 38 | **(8,338,019)** | (5,350,155) |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | 39 | **(187,639)** | (19,121) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவினம்** | | **(8,525,658)** | (5,369,276) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | | **(14,557,283)** | 146,854,048 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **53,825,789** | 144,689,358 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 36 | **17,886,803** | 8,956,322 |
| தேறல்செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **(117,565)** | 117,771 |
| வட்டிச் செலவினம் | **38** | **(3,763,302)** | (2,880,220) |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | 39 | **(27,241)** | (10,966) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்** | | **13,978,695** | 6,182,907 |
| ஏனைய வருமானம் | 40 | **1,702,535** | 1,692,994 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | **69,507,019** | 152,565,259 |
| **தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | | |
| ஆளணிச் செலவினங்கள்: | 41 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(5,544,943)** | (5,409,137) |
| - நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவினம் | | **(1,103,233)** | (1,536,049) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டச் செலவிற்கான பங்களிப்பு | | **(1,120,381)** | (205,147) |
| | | **(7,768,557)** | (7,150,333) |
| பெறுமானத் தேய்வும் பதிவழிப்பும் | | **(439,918)** | (498,189) |
| இருப்புச் செலவினம் (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவினம்) | | **(3,234,336)** | (3,999,000) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள் | 42 | **(2,168,481)** | (1,850,083) |
| சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்புக் கட்டணங்கள் | | **-** | (20,650) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | **(13,611,292)** | (13,518,255) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **55,895,727** | 139,047,004 |
| **வரி** | 43 | **(290,888)** | (1,119,286) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **55,604,839** | 137,927,718 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

14ஆம் பக்கம் தொடக்கம் 79ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| திசெம்பர் 31இல் உள்ளவாறானது | | 2019<br>ரூபா 000 | 2018<br>ரூபா 000 |
|---|---|---|---|
| ஆண்டுக்கான இலாபம் | | **55,604,839** | 137,927,718 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | | |
| **இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்வகைப்படுத்தக்கூடிய விடயங்கள்** | | | |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | 34 | **10,628,206** | (877,778) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான அரச பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 34 | **113,231** | 5,259 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் எதிரீடுகள்/ (இழப்புக்கள்) | 10.2 | **37,245** | (1,939) |
| | | **10,778,682** | (874,458) |
| இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள் | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | 32 | **(873,926)** | (11,823,458) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 34 | **115,859** | 122,747 |
| | | **(758,067)** | (11,700,711) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | **10,020,615** | (12,575,169) |
| **மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | **65,625,454** | 125,352,549 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

14ஆம் பக்கம் தொடக்கம் 79ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## பங்குரிமை மூலதன மாற்றக் கூற்று
## திசெம்பர் 31இல் உள்ளவாறானது

| | பங்களிக் கப்பட்ட மூலதனம் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 34) ரூபா 000 | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|
| **2018 சனவரி 01இல் உள்ளவாறு** | 50,000,000 | 52,708,582 | 25,879,432 | 128,588,014 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | 137,927,718 | 137,927,718 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | 291,983 | (291,983) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் கிரயம் | - | - | (11,823,458) | (11,823,458) |
| தேறிய வெளிநாட்டு செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | 146,854,048 | (146,854,048) | - |
| தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கிற்கு நிதியங்களை மாற்றல் | - | 2,000,000 | (2,000,000) | - |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கு மாற்றல் | - | - | (171,843) | (171,843) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி நட்டம் | - | (877,778) | - | (877,778) |
| பிடித்துவைத்திருக்கப்பட்ட வருவாய்களிலிருநது சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | 24,337,841 | (24,337,841) | - |
| பொது ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | 5,013,869 | (5,013,869) | - |
| 2017ஆம் ஆண்டிற்கான இலாபப் பகிர்ந்தளிப்பு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2017ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து அறவிடுதல் | - | - | (15,000,000) | (15,000,000) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | - | (321) | (321) |
| தொழிலுக்குப் பின்னரான நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்காக ஒதுக்கத்திற்கு மாற்றல் | - | 5,372,178 | (5,372,178) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதனம் மீதான விற்பனை இலாபம் | - | (16,289) | 16,289 | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான இலாபம் | - | 5,259 | - | 5,259 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீட்டு மீதான இலாபம் | - | 122,747 | - | 122,747 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | - | (1,939) | - | (1,939) |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றல் | - | (21,154,178) | 21,154,178 | - |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | 50,000,000 | 214,656,323 | (25,887,924) | 238,768,399 |
| **2019 சனவரி 01இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **214,656,323** | **(25,887,924)** | **238,768,399** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | 55,604,839 | 55,604,839 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கு மாற்றல் | - | 333,334 | (333,334) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் கிரயம் | - | - | (873,926) | (873,926) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டத்தின் மாற்றல் | - | (14,557,283) | 14,557,283 | - |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கு மாற்றல் | - | - | (208,445) | (208,445) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம் | - | 10,628,206 | - | 10,628,206 |
| பிடித்துவைத்திருக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | 1,166,517 | (1,166,517) | - |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | - | (16) | (16) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடகிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான இலாபம் | - | 113,231 | - | 113,231 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடகிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீடு மீதான இலாபம் | - | 115,859 | - | 115,859 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | - | 37,245 | - | 37,245 |
| **2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **212,493,432** | **41,691,960** | **304,185,392** |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

14ஆம் பக்கம் தொடக்கம் 79ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2019 ரூபா 000 | 2018 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **32,610,501** | 25,346,571 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **1,219,056** | 821,348 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **939,708** | (3,974,618) |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி நட்டம் | | **(17,363,660)** | (9,065,597) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,676,979** | 1,605,833 |
| | | **19,082,584** | 14,733,537 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **8,452,517** | 4,855,646 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **3,094,863** | 2,368,605 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **7,312,048** | 6,765,420 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **6,768,262** | 3,380,162 |
| **செலுத்தப்பட்ட வரி** | | **290,888** | 1,100,219 |
| | | **25,918,578** | 18,470,052 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | 44 | **(6,835,994)** | **(3,736,515)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு | | **(2,093,732)** | (2,487,565) |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை/மீட்பு | | **-** | 19,789 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **56,793** | 127,584 |
| தொகுதிக் கடன்களிலான முதலீடுகளின் விற்பனை/ மீட்பு | | **-** | 15,178 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான பெறுகைகள் | | **36,821** | 10,284 |
| மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **14,987,104** | (12,340,173) |
| | | **12,986,986** | (14,654,903) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு | | **27,507,003** | 5,592,252 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **1,308,261** | (263,842) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **90,905,310** | (34,064,176) |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் செலுத்தத்தக்கவையிலான அதிகரிப்பு/ (குறைவு) | | **10,735** | (14,311) |
| கொடைகள் தவிர்ந்த ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள் | | **215,654** | 104,362 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **22,227** | 25,484 |
| தங்க இருப்புக்களிலான தேறிய குறைவு | | **(2,663,074)** | (19,060,015) |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **2,750** | - |
| | | **117,308,866** | (47,680,246) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட/ (முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(104,321,880)** | 33,025,343 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள் :** | | | |
| சுற்றோட்ட நாணயங்களை வெளியிடுதல் | | **777,061,814** | 796,515,572 |
| சுற்றோட்ட நாணயங்களை மீளப்பெறல் | | **(740,037,174)** | (753,626,964) |
| சுற்றோட்ட நாணயங்களின் தேறிய வெளியீடு | | **37,024,640** | 42,888,608 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்) | 45 | **(126,565,213)** | 233,216,924 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு | 46 | **65,524,563** | 23,010,511 |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்) | | **(61,040,650)** | 256,227,435 |
| **சுற்றோட்ட நாணயத்தின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **98,065,290** | (213,338,827) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவு | | **(58,497,399)** | (39,813,671) |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **16** | 321 |
| ஓய்வூதிய நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | **1,344,579** | - |
| திரட்டிய நிதியத்திற்கு இலாபங்களை மாற்றல் | | **-** | 14,227,097 |
| | | **(57,152,804)** | (25,586,253) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட/ (நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | **155,218,094** | (187,752,574) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **44,060,220** | (158,463,746) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **4,624,467** | 70,882,845 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **372,246,740** | 459,827,641 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 9 | **420,931,427** | 372,246,740 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

14ஆம் பக்கம் தொடக்கம் 79ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

**இலங்கை மத்திய வங்கி**
**2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்**

## 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க இலங்கை நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

இந்நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கு நாணயச் சபையின் சார்பில் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2020 மாச்சு 24ஆம் திகதி அதிகாரமளிக்கப்பட்டது.

### 1.1 முதன்மை நடவடிக்கைகள்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றப்படுவதற்கு அல்லது மேற்கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கொள்கைகள் அல்லது வழிமுறைகளைத் தீர்மானிப்பதற்குப் புறம்பாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இதனிடம் பொதுவாக வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியானது இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு முதன்மைப் பொறுப்பாக இருப்பதுடன் அரசாங்கத்தின் இறை முகவராகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன:

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்
- நாணயத்தை வெளியிடுதல்
- அலுவலக ரீதியான பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தல்
- நிதியியல் முறைமையை மேற்பார்வை செய்தல்
- வங்கிகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமமளித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- தீர்ப்பனவு வசதிகளை வழங்குதல் மற்றும் கொடுப்பனவு முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்தல்
- பொருளாதாரத் தரவு மற்றும் புள்ளிவிபரங்களைத் தொகுத்தல், பரப்புதல் மற்றும் பகுப்பாய்தல்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல்.
- அரசாங்கம் மற்றும் அதன் முகவர்களுக்கு வங்கியாளராகச் செயற்படுதல் மற்றும் அரச பிணையங்களுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் வர்த்தக வங்கியல்லாத முதனிலை வணிகர்களுக்கு நடைமுறைக் கணக்கு வசதிகளை வழங்குதல்

இலங்கையின் உற்பத்தியாக்க வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கில் அதன் பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதித்தன்மை குறிக்கோள்களை அடையும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வேறுபடுத்தலாம். இந்நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருமானக் கூற்றினைப் பொறுத்தவரை தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

## 2. நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் அடிப்படை

### 2.1. இணக்கக் கூற்று

2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந்நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 16 "குத்தகைகள்" பிரயோகிக்கப்பட்ட முதல் தொகுதி நிதியியல் கூற்று இதுவாகும். முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றங்கள் குறிப்பு 4இல் விபரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டிற்கான அடிப்படை

கீழ்வருவனவற்றிற்குத் தவிர்ந்து, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- தங்கமானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.
- பெறுதி நிதியியல் சாதனங்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட பெறுதியல்லா நிதியியல் சாதனங்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டன.
- காணி மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நேரத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் மீள்மதிப்பிட்ட தொகையிலிருந்து ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் பெறுமதியிழிப்பு நட்டங்களைக் கழித்த தொகையில் அளவிடப்படுகின்றன.
- நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டிற்கான பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் அளவிடப்படுகின்றது.

### 2.3 அறிக்கையிடல் வடிவம்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் நிதியியல் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி காட்டுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் பரந்தளவில் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறையானது குறிப்பு 7இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

### 2.4 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

இந்நிதியியல் கூற்றுக்கள் வங்கியின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன. மீளாய்வுக்குரிய ஆண்டில் வங்கியின் சமர்ப்பித்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 2.5 பொருண்மை மற்றும் ஒன்றுசேர்ப்பு

ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைப் பிரிவும் நிதியியல் கூற்றுக்களில் வேறுவேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மைத்தன்மை அற்றதாக இருந்தாலன்றி வேறு வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.6 எதிரீடு

வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருந்து ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கோ அல்லது சொத்துக்களை தேறல் செய்து அதேநேரத்தில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கோ விரும்பும் சந்தர்ப்பங்களில் மட்டும் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதியியல் நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.7 ஒப்பீட்டுத் தகவல்

ஒப்பீட்டுத் தகவலானது நடப்பாண்டின் சமர்ப்பிப்புடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

## 3. மதிப்பீடுகள் மற்றும் திறனாய்வுகளின் பயன்பாடு

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவத்தின் திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன் இவை வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையான அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிர்கால நோக்கில் இனங்காணப்படுகின்றன. நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளினைக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துவதில் செய்யப்பட்ட திறனாய்வு முடிவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### 3.1 நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி இழப்பு

சொத்துக்கள் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியை மதிப்பிடுகையில் வங்கியானது திறனாய்வுகளை மேற்கொண்டதுடன் நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகையின் மீதான முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவு மட்டுமா என்பதை மதிப்பிட்டது. வங்கியானது மேலும் நிதியியல் சொத்துக்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வானது அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அதிகரித்துள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக பிரமாணங்களை உருவாக்குதல், எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் அளவீட்டிற்கு முன்னோக்கிய தகவல்களை உள்ளடக்குவதற்கான வழிமுறையை தீர்மானித்தல் மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளப்பதற்கான மாதிரிகளின் தெரிவு மற்றும் ஒப்புதலுக்கும் திறனாய்வுகளைப் பயன்படுத்தியது.

### 3.2 ஓய்வூதியமும், தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கிரயமானது ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத்திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. ஆயுட்கால மதீப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளன.

### 3.3 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சீர்மதிப்புப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

## 4. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

கீழே விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள ப.நி.அ.நி 16 ‘குத்தகைகள்’ உடன் தொடர்புபட்ட கொள்கைகள் தவிர பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் இல்லையென்பதுடன், கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

### 4.1 ப.நி.அ.நி. 16 குத்தகைகள்

வங்கியானது ப.நி.அ.நி ‘குத்தகைகள்’ இனைத் திருத்தப்பட்ட பின்னோக்கிய அணுகுமுறையில் (தெரிவு ஆ) முதன்முதலில் 2019 சனவரி 01 இலிருந்து பிரயோகித்தது. எனவே, ஒப்பீட்டுத் தகவல்கள் மீளஅறிக்கையிடப்படாததுடன், ப.க.நி. 17 குத்தகைகள் மற்றும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் விளக்கக் குழு 4 “ஒரு ஒழுங்கு குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதைத் தீர்மானித்தல்” என்பவற்றின் கீழ் தொடர்ந்து அறிக்கையிடப்படும்.

இந்நியமத்தை முதலில் பிரயோகிப்பதன் தாக்கமானது முக்கியமாக பின்வருவனவற்றிற்கு தொடர்புபடுத்தப்படும்

- சொத்துக்களின் பாவனை உரிமையின் அங்கீகரிப்பு
- தொடர்பான குத்தகை பொறுப்புக்களின் அங்கீகரிப்பு

ப.நி.அ.நி 16 இனைப் பின்பற்றுவதன் காரணமாக வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் ஏற்படும் தாக்கமானது குறிப்பு 8இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்கள் தவிர்த்து, இந்நிதியியல் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்துக் காலப்பகுதிகளுக்கும் வங்கியானது குறிப்பு 5இல் குறித்துரைக்கப்பட்டவாறான கணக்கீட்டுக் கொள்கைகளை நிலையாகப் பிரயோகித்தது.

#### குத்தகையின் வரைவிலக்கணம்

முன்னர், வங்கியானது ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், அவ்வொழுங்கானது குத்தகையா அல்லது குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதனை ப.க.நி 17இன் கீழ் தீர்மானித்தது. ப.நி.அ.நி 16இன் கீழ், வங்கியானது ஒப்பந்தமொன்று குத்தகையா அல்லது குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதனைக் குறிப்பு 5.22இல் விபரிக்கப்பட்டவாறு குத்தகையின் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் மதிப்பிடுகின்றது.

ப.நி.அ.நி 16 இற்கு மாறும் போது, எந்தக் கொடுக்கல்வாங்கல்கள் குத்தகை என்பதை மதிப்பிடுவதற்கு வங்கியானது நடைமுறைக்குப் பொருத்தமான முறையைப் பிரயோகிப்பதற்குத் தெரிவு செய்தது. அது ப.நி.அ.நி 16 இனை முன்னர் குத்தகைகளாக அடையாளங் காணப்பட்ட ஒப்பந்தங்களுக்கு மாத்திரமே பிரயோகித்தது.

#### குத்தகையாளரின் (குத்தகைக்கு எடுத்தவர்) கணக்கீட்டு அணுகுமுறை

குத்தகையாளர் என்ற வகையில், வங்கியானது முன்னர் குத்தகைகளை, அக்குத்தகை தொடர்பான சொத்தின் உரிமையாளருக்கு ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகளையும் வெகுமதிகளையும் வங்கிக்கு மாற்றுகின்றதா என்ற மதிப்பீட்டின் அடிப்படையில்

தொழிற்பாட்டு அல்லது நிதிக் குத்தகையாக வகைப்படுத்தியது. ப.நி.அ.நி 16இன் கீழ், வங்கியானது சொத்துக்களின் பாவனை உரிமை மற்றும் குத்தகைகளுக்கான குத்தகைப் பொறுப்புக்களை அங்கீகரிக்கின்றது. அதாவது இக்குத்தகைகள் ஐந்தொகையிலுள்ளவை.

**(அ) முன்னர் ப.க.நி. 17இன் கீழ் தொழிற்பாட்டுக் குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகள்**

வங்கியானது ஆதனக் குத்தகைகளை முன்னர் ப.க.நி 17இன் கீழ் தொழிற்பாட்டுக் குத்தகைகளாக வகைப்படுத்தியிருந்தது. மாறுகையில், குத்தகைப் பொறுப்புக்கள், 2019 சனவரி 1இல் உள்ளவாறான வங்கியின் அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டு வீதத்தில் கழிவீடு செய்யப்பட்ட எஞ்சியிருக்கும் குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டன. பாவனை உரிமைச் சொத்துக்கள் ஏதாவது முன்கூட்டியே செலுத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவு அல்லது செலுத்தப்பட வேண்டிய குத்தகைக் கொடுப்பனவின் பெறுமதியினால் சீராக்கப்பட்ட குத்தகைப் பொறுப்பிற்குச் சமனான தொகையில் அளவிடப்பட்டது. வங்கி அனைத்துக் குத்தகைகளுக்கும் இவ்வணுகு முறையையே பின்பற்றியது. வங்கியானது மாறும் திகதியில் பாவனை உரிமைச் சொத்துக்களை பெறுமதியிழப்பிற்காக சோதித்ததுடன் பாவனை உரிமைச் சொத்துக்கள் பெறுமதியிழப்பதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை என்ற முடிவுக்கு வந்தது.

வங்கியானது முன்னர் ப.க.நி 17இன் கீழ் தொழிற்பாட்டுக் குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகளுக்கு ப.நி.அ.நி 16 இனைப் பிரயோகிக்கும் போது பின்வரும் நடைமுறைக்குப் பொருத்தமான அணுகுமுறையைப் பயன்படுத்தியது.

- ஒரே மாதிரியான குணவியல்புகளைக் கொண்ட குத்தகைகளின் சொத்துப்பட்டியலுக்கு ஒரே கழிவு வீதத்தைப் பிரயோகித்தல்
- முதன் முதலில் பிரயோகிக்கும் திகதியில் பாவனை உரிமைச் சொத்தின் அளவீட்டிலிருந்து ஆரம்ப நேரடிக் கிரயத்தை நீக்குதல்
- ஒப்பந்தமானது குத்தகையை நீடிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான தெரிவைக் கொண்டிருக்கும் போது குத்தகைக் காலத்தைத் தீர்மானிப்பதற்கு பின்னறிவைப் பயன்படுத்துதல்

**நிதியியல் கூற்றுக்கள் மீதான தாக்கம்**

ப.நி.அ.நி 16 இற்கு மாறுகையில், வங்கியானது மேலதிக பாவனை உரிமைச் சொத்துக்களையும் மேலதிக குத்தகைப் பொறுப்புக்களையும் அங்கீகரித்ததுடன் இவற்றில் 2019 சனவரி 1 இலுள்ளவாறான கணிய ரீதியான தாக்கம் குறிப்பு 8இல் தரப்பட்டுள்ளது.

**5. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

குறிப்பு 4இல் விபரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள் தவிர, வங்கியினால் கணக்கீட்டுக்கொள்கைகள் ஒரே மாதிரியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**5.1 வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள் மற்றும் நிலுவைகள்**

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. நாணய விடயங்கள் மீதான வெளிநாட்டு நாணயமாற்று வீத இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான இலங்கை ரூபா நாணயமாற்று வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2019<br>ரூபா | 2018<br>ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **127.5343** | 128.8113 |
| 1 கனேடிய டொலர் | **139.8206** | 134.0153 |
| 1 யூரோ | **203.6571** | 209.5593 |
| 1 யப்பானிய யென் | **1.6724** | 1.6661 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **250.7887** | 253.5111 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **240.7922** | 233.0792 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **181.6340** | 182.7499 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | **26.0905** | 26.5988 |

வெளிநாட்டு நாணயத்தின் வரலாற்றுக் கிரய அடிப்படையில் அளவிடப்படும் நிதியல்லாத விடயங்கள் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டுள்ளன.

**5.2 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு**

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் தங்கம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுகின்றது. பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பு 51இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களின் போது சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்பட்ட அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்பட்ட விலை எனப் பொருள்படும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச்சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் சொத்து அல்லது பொறுப்பினை விலையிடும் போது தமது சிறந்த பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர் என்ற கருதுகோளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதியல்லாச் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கருத்தில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமானதும் சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளதும் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான மதிப்பீட்டு நுணுக்கங்களை பயன்படுத்துகின்றது.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், பொதுவாக சீர்மதிப்புப் பெறுமதியின் அளவிடலுக்குப்

போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில், கீழே விபரிக்கப்பட்டவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலைக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்

மட்டம் 2 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவதானிக்கக் கூடியவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மட்டம் 3 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை அவதானிக்க முடியாதவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் படிநிலையிலுள்ள மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாவென வகையிடலை மீளமதிப்பிடுவதன் மூலம் (முழுமையான சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) நிர்ணயிக்கிறது.

### 5.3 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்

வங்கியானது, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன் இணைந்த வருமானம் மற்றும் செலவினங்களையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது.

வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக அறிக்கையிடுவது வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் முன்வைப்பதாகக் கருதப்படுகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுதல் நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

#### 5.3.1 அங்கீகரித்தல் மற்றும் ஆரம்ப அளவீடு

அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் முதலில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீட்டுடன் தொடர்புபட்ட கொள்வனவுக் கட்டணங்கள் உள்ளடங்கலாக செலுத்தப்பட்ட விலையின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அனைத்து கிரமமான வழி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் அவற்றிற்குரிய வர்த்தகத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. கிரமமான வழி கொள்வனவு அல்லது விற்பனை என்பது பொதுவாக ஒழுங்குமுறைப்படுத்தலினால் அல்லது சந்தையின் மரபினால் உருவாக்கப்பட்ட காலவரம்பிற்குள் சொத்துக்களின் கையளிப்பை தேவைப்படுத்தும் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையாகும்.

#### 5.3.2 வகைப்படுத்தல்

**நிதியியல் சொத்துக்கள்**

ஆரம்ப அங்கீகரிப்பில், வங்கியானது கீழ்வருவனவற்றில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துகிறது

- பதிவழிக்கப்பட்ட செலவு
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதி

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து இலாபம் மற்றும் நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகிறது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடைய வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல் மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக்கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப்பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துகளை விற்றல் இரண்டின் மூலமும் குறிக்கோளை அடைந்துகொள்ளும் வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல் மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக்கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப் பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத பங்குரிமை முதலீட்டின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது வங்கியானது சீர்மதிப்புப் பெறுமதியில் அடுத்துவரும் மாற்றங்களை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டுவதற்கு மாற்றமுடியாதபடி தெரிவுசெய்யலாம். ஏனைய அனைத்து நிதியியல் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

**வியாபார மாதிரி மதிப்பீடு**

வங்கியானது சொத்தொன்று சொத்துப்பட்டியல் மட்டத்தில் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியின் குறிக்கோளின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்கின்றது. ஏனெனில் இது வியாபாரம் முகாமை செய்யப்படும் விதம் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்கப்படும் விதம் பற்றி சிறப்பாக பிரதிபலிக்கின்றது. கவனத்திலெடுக்கப்படும் தகவலானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருப்பதோடு இது இதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை:

- வியாபார மாதிரியின் செயலாற்றம் மற்றும் அவ்வியாபார மாதிரியில் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றன.
- வியாபார மாதிரியின் (மற்றும் அவ்வியாபார மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள்) செயலாற்றத்தினைப் பாதிக்கும் இடர்நேர்வுகள் மற்றும், குறிப்பாக இவ்வுடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்.
- முன்னைய காலங்களின் விற்பனையின் தடவைகள், அளவு மற்றும் காலக்கிரமம் அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை தொடர்பான அதன் எதிர்பார்ப்புகள். எனினும், விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவலானது தனியாக கருத்திற்கொள்ளப்படுவதில்லை, மாறாக இது நிதியியல் சொத்துக்களை முகாமை செய்வதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் காசுப்பாய்ச்சல்கள் எவ்வாறு தேறல் செய்யப்படுகின்றன என்பது தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டு அல்லது முகாமைப்படுத்தப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதியில் அவற்றின் செயலாற்றம் மதிப்பிடப்படும் நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதற்கான காரணம் அவை ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அல்லது ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதுடன் நிதியியல் சொத்துக்களை விற்பதற்காகவோ வைத்திருக்கப்படாமையாகும்.

**ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவா என்பதை மதிப்பிடுதல்**

நிதியியல் சொத்துக்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவு பரீட்சிப்பை பூர்த்திசெய்வதனை கண்டறிவதற்காக நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளை வங்கி மதிப்பிடுகின்றது. இம்மதிப்பீட்டு நோக்கத்திற்காக 'முதல்' என்பது ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதியியல் சொத்தின் சீர்மதிப்புப் பெறுமதி எனவும் 'வட்டி' என்பது பணத்தின் காலப்பெறுமதி, குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் வெளிநின்ற முதல் தொகையுடன் தொடர்புபட்ட கொடுகடன் இடர்நேர்வு மற்றும் ஏனைய அடிப்படை கடன்வழங்கல் இடர்நேர்வுகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கான கைமாறு எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

ஒரு கடன் வழங்கல் உடன்படிக்கையினுள் காணப்படும் வட்டியினது மிக முக்கியமான கூறாகக் காணப்படுவது பணத்தின் காலப்பெறுமதி மற்றும் கொடுகடன் இடர்நேர்வாகும். முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவின் மதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்கு, வங்கியானது மதிப்பாய்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டிருக்கும் நாணயம் மற்றும் வட்டிவீதம் தீர்மானிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதி போன்ற தொடர்புடைய காரணிகளைக் கருத்திற்கொள்கின்றது.

மாறாக, அடிப்படையான கடன்வழங்கல் ஒழுங்கிற்கு தொடர்புபடாத ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களின் இடர்நேர்வு அல்லது தளம்பல்களுக்கு குறைந்தபட்ச வெளிப்படுத்துகையை விட அதிகமாக தேவைப்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள் வெளிநின்ற தொகை மீதான முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவுகளைக் கொண்ட ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலை தோற்றுவிக்காது. அத்தகைய சந்தர்ப்பங்களில், நிதியியல் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

**மீள்வகைப்படுத்தல்**

நிதியியல் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்காக வங்கி அதன் வியாபார மாதிரியை மாற்றியதற்கு பின்னரான காலப்பகுதி தவிர, நிதியியல் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

**5.3.3 விலக்குதல்**

**நிதியியல் சொத்துக்கள்**

வங்கியானது நிதியியல் சொத்திலிருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்தின் உடமையினது குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் மாற்றல் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலினை பெறுவதற்கான உரிமையை மாற்றல்செய்யும் போது அல்லது வங்கி உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமல் அல்லது மாற்றல் செய்யாமல் இருப்பதுடன் நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டை கொண்டிருக்காத போது நிதியியல் சொத்தொன்றினை அங்கீகரிப்பிலிருந்தும் விலக்குகின்றது.

நிதியியல் சொத்தொன்றின் விலக்கலின்போது சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கும் (அல்லது விலக்கப்படும் சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதிக்கும்) (i) பெறப்பட்ட விலை (பெறப்பட்ட ஏதாவது புதிய சொத்திலிருந்து உறப்பட்ட ஏதாவது பொறுப்பை கழித்தவை உள்ளடங்கலாக) மற்றும் (ii) ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பங்குரிமை முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள், அத்தகைய பிணையங்கள் விலக்கப்படும்போது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படமாட்டா. வங்கியினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட, விலக்கல்களுக்கு தகுதியான மாற்றல் செய்யப்படும் நிதியியல் சொத்தில் இருக்கும் ஏதாவது வட்டியானது தனியான சொத்தொன்றாக அல்லது பொறுப்பொன்றாக காட்டப்படுகின்றது.

வங்கியானது கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதன் மூலம் அதன் நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சொத்துக்களை மாற்றல் செய்கின்றது. எனினும், அது ஒன்றில் மாற்றல் செய்யப்படும் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வைத்துக்கொள்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்கள் விலக்கப்படுவதில்லை. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு உதாரணங்களாக பிணையங்களின் கடன்வழங்கல் மற்றும் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை குறிப்பிடலாம். வங்கியானது நிதியியல் சொத்தொன்றின் உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமலோ அல்லது மாற்றல் செய்யாமலோ இருந்து அச்சொத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதியிலான மாற்றங்களுக்கு அது வெளிப்படுத்தப்படும் அளவினால் தீர்மானிக்கப்பட்டவாறு அதன் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு வங்கி தொடர்ந்து அங்கீகரிக்கும்.

**நிதியியல் பொறுப்புக்கள்**

நிதியியல் பொறுப்பின் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் இடைநிறுத்தப்படுகையில் அல்லது நிறுத்தப்படுகையில் அல்லது காலாவதியாகையில் வங்கி நிதியியல் பொறுப்பொன்றினை அங்கீகரிப்பில் இருந்தும் விலக்கும்.

**5.3.4 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு**

இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதியியல் சாதனங்கள் தொடர்பிலான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான நட்ட படிகளை வங்கி அங்கீகரிக்கின்றது.

- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்
- பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள்
- பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்

பங்குரிமை முதலீடுகள் தொடர்பில் பெறுமதியிழப்பு அங்கீகரிக்கப் படுவதில்லை.

வங்கியானது முதலீட்டுத் தரத்திலுள்ள (பிஏஏ3/பிபிபி- மற்றும் மேற்பட்ட தரமிடப்பட்டவை) முதலீடுகளுக்காக 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு சமமான தொகையில் நட்டப்படியை அளவிடுகின்றது. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் வகைப்படுத்தப்படும் வங்கியின் பெரும்பாலான முதலீடுகள் பிஏஏ3/பிபிபி- தரத்திற்கு மேற்பட்டவையாகவே இருக்கின்றன. 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் "கட்டம் 1 நிதியியல் சாதனங்கள்" என குறிப்பிடப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகரிப்பின் போது முதலீட்டுத் தரத்திற்கு கீழ் இருக்கும் அல்லது பீஏஏ3/பிபிபி-இற்கு கீழ் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வு தேய்வடையும் அல்லது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகிய சாதனங்களுக்கு ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படுகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்டு கொடுகடன் பெறுமதி இழக்காத நிதியியல் சாதனங்கள் 'கட்டம் 2 நிதியியல் சாதனங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றன. 'கட்டம் 3 நிதியியல் சாதனங்கள்' எனக் குறிப்பிடப்படும் கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சாதனங்களுக்கும் ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படும்.

**எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் அளவீடு**

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டின் பொறிமுறையானது முக்கிய கூறுகளுடன் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

**தவணை தவறுதல் நிகழ்தகவு:** தவணை தவறுதல் நிகழ்தகவு என்பது தரப்பட்ட காலப்பகுதியொன்றில் தவணை தவறல்களின் சாத்தியத்தன்மையின் மதிப்பீடொன்றாகும். வசதியானது முன்னர் விலக்கப்படாமலிருந்து இன்னமும் சொத்துப்பட்டியலில் காணப்படுமாயின், தவணை தவறுதலானது மதிப்பிடப்படும் காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மாத்திரம் ஏற்பட முடியும். வங்கியானது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் பதிவழிக்கப்பட்ட செலவிலான அதன் அனைத்து வெளிநாட்டு முதலீடுகளுக்காக புளூம்போர்க்கிடமிருந்தான வழங்குநர்கள் அல்லது இணைத்தரப்பினரின் குறிப்பிட்ட பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துவதுடன், பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவு காணப்படாத சந்தர்ப்பத்தில் தரப்பட்ட அறிக்கையிடல் திகதியில் புளூம்போர்க் பொதுவான தவணை தவறல் நிகழ்தகவில் இருந்து குறிப்பிட்ட வழங்குநர் அல்லது இணைத்தரப்பின் தரமிடலுக்கு பிரியோகிக்கத்தக்க தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துகின்றது.

தவணை தவறுதலின் போதான வெளிப்படுத்துகை: தவணை தவறுதலின் போதான வெளிப்படுத்துகை என்பது, ஒப்பந்தத்தின் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் மூலம் அட்டவணையிடப்பட்டுள்ள முதல் மற்றும் வட்டியின் மீள்கொடுப்பனவு, ஒப்புக்கொண்ட வசதிகள் மீது எதிர்பார்க்கப்படும் குறைப்புக்கள் மற்றும் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தான அட்டுறு வட்டி போன்றவை உள்ளடங்களாக அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் வெளிப்படுத்துகையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கவனத்திற்கொண்டு எதிர்கால தவணை தவறல் திகதியில் வெளிப்படுத்துகையின் மதிப்பீடொன்றாகும்.

இழப்பினைத் தருகின்ற தவணை தவறல்கள்: இழப்பினைத் தருகின்ற தவணை தவறல்கள் என்பது குறிப்பிட்டதொரு நேரத்தில் தவணை தவறல் ஒன்று இடம்பெறுவதினால் ஏற்படும் இழப்பின் மதிப்பீடொன்றாகும். இது வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலுக்கும் ஏதாவது பிணையத்திலிருந்து தேறப்படும் தொகையுட்பட கடன்வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்க்கும் தொகைக்கும் இடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். வங்கியானது நிதியியல் சொத்துக்களின் வேறுபட்ட வகைகளுக்கு இழப்பினைத்தருகின்ற தவணைத் தவறல்களைப் பிரயோகிக்கையில் அவற்றின் வங்கிக்கான இடர்நேர்வு வெளிப்படுத்துகையின் அடிப்படையில் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது.

பொருளியல் காரணி சீராக்கம்: வங்கியானது சுழற்சி முழுவதுக்குமான தவணை தவறல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட நேரத்திலுள்ள தவணை தவறல் நிகழ்வுகளுக்கு மாற்றுவதற்காக பொருளியல் காரணி சீராக்கத்தைப் பயன்படுத்துவதுடன் தவணை தவறல் நிகழ்தகவினை சீராக்கும் முக்கிய பொருளியல் காரணியாக வங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவைப் பயன்படுத்துகின்றது.

**கொடுகடன் இடர்நேர்விலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பை மதிப்பிடல்**

வங்கியானது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறல் நிகழ்தகவு இரட்டிப்பாகும்போதும் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் பிபிபி- இற்குக் கீழான ஏதாவது தரமிடலில் கீழ்நோக்கிய திருத்தம் மேற்கொள்ளப்படுகையிலும் நிதியியல் சாதனம் குறிப்பிடத்தக்க அதிகரித்த இடர்நேர்வைக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றது. இது தவணை தவறல் நிகழ்தகவின் இரண்டு மடங்கு அல்லது அதற்கு அதிகமான அதிகரிப்பை தோற்றுவிக்கும் பிஏஏ3 இலிருந்து பிஏ1 இற்கான மிகச் சிறிய கீழ்நோக்கிய தரமிடல் உட்பட, முதலீட்டுத்தர தரமிடலிருந்து முதலீட்டுத் தரமல்லாத கீழ்நோக்கிய தரமிடல்களின் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் கொண்டு செல்லப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதங்கள் கொடுகடன் பெறுமதியிழந்திருக்கின்றனவா ('கட்டம் 3 நிதியியல் சொத்துக்கள்' எனக் குறிப்பிடப்படும்) என்பது தொடர்பில் வங்கி மதிப்பிடும். ஒரு நிதியியல் சொத்தானது, நிதியியல் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களுக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று அல்லது மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் "கொடுகடன் பெறுமதி இழந்ததாக" கருதப்படும். நிதியியல் சொத்தொன்று கொடுகடன் பெறுமதி இழந்ததற்கான சான்றுகள் பின்வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கும்:

- கடன்பெறுநர் அல்லது வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடு
- தவணை தவறல் அல்லது காலந்தவறல் நிகழ்வு போன்ற ஒப்பந்த மீறல்
- கடன்பெறுநர் வங்குரோத்துக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள்கட்டமைப்பிற்குள்ளாகப்போகிறார் என சாத்தியமாகத் தெரிதல்

**நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான படியின் சமர்ப்பிப்பு**

எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான நட்டப்படியானது நிதியியல் நிலைமைக்கூற்றில் பின்வருமாறு காட்டப்படுகின்றது:

- பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள்: சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்தான குறைப்பொன்றாக
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும் முதலீடுகள்: நிதியியல் நிலைமைக்கூற்றில் நட்டப்படி அங்கீகரிக்கப்படுவதில்லை ஏனெனில் இச்சொத்துக்களில் கொண்டுசெல்லல் பெறுமதி அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். எனினும், நட்டப்படி வெளிப்படுத்தப்படுவதுடன் இது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது
- கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்: பொதுவாக ஏற்பாடொன்றாக

**பதிவழிப்பு**

நிதியியல் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் பகுதியொன்றினையோ அறவிடுவதற்கு போதுமான எதிர்பார்ப்புக்கள் இல்லாதவிடத்து கடன்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் பதிவழிக்கப்படுகின்றன (ஒன்றில் பகுதியளவில் அல்லது முழுமையாக). பதிவழித்தலுடன் தொடர்புபட்ட தொகையை மீளச்செலுத்துவதற்கு போதுமான காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய வருமான

மூலங்களையோ அல்லது சொத்துக்களையோ கடன்பெறுநர் கொண்டிருக்கவில்லை என வங்கி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இது பொதுவான வழமையாகும். இம்மதிப்பீடானது தனிப்பட்ட சொத்து மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னர் பதிவழிக்கப்பட்ட தொகைகளின் அறவிடலானது இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றின் "நிதியியல் சாதனங்கள் மீதான பெறுமதி இழப்பு நட்டம்" இல் உள்ளடக்கப்படுகின்றன.

### 5.4 இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவையினுள் வகைப்படுத்தப் பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் "இலாபம் அல்லது நட்டத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பின் போது தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் அவை இடம்பெறும் பொழுது அங்கீகரிக்கப்படுகின்றன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

பிணையம் இப்பொழுதும் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம்/ (நட்டமானது) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ/ நட்டமோ தேறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது "தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும்.

### 5.5 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடுகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியாக குறித்துரைக்கப்பட்ட பெறுதியல்லா முதலீடுகள் அல்லது நிதியியல் சொத்துக்களின் ஏனைய வகையொன்றாக வகைப்படுத்தப்படாதவையாகும். ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் பங்குரிமைப் பிணையங்களையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான வெளிநாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக்கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள முதலீடுகளின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாக அல்லது குறைவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் கிடைப்பனவின்மை காரணமாக தொடர்பான நிறுவனங்களின் தேறிய சொத்துக்களின் அடிப்படையில் பெறுமதியிடப்படுகின்றன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகளிலான சந்தைப் பெறுமதி மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் நேரடியாக பங்குரிமையில் (ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்) அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீடு விற்கப்படும் வரை, சேகரிக்க அல்லது வேறுவகையில் அகற்றப்படும் வரை அல்லது முதலீடு பெறுமதியிழக்கப்பட்டது என்று தீர்மானிக்கப்படும் வரை நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படுவதுடன் முன்னர் கூறப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று இடம்பெறும் நேரத்தில், அகற்றப்படுகையில் வருமானக்கூற்றுக்கு சுழற்சிப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்களின் விதிவிலக்குடன், முன்னர் பங்குரிமையில் அறிக்கையிடப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது பயனுறு வட்டி முறைமையைப் பயன்படுத்தி வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 5.6 பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள்

ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிக்கும் பொருட்டு நிதியியல் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடனான வியாபார மாதிரியினுள் இருப்பதுடன் ஒப்பந்த நியதிகள் முதல் மற்றும் வட்டியை மட்டும் கொண்ட காசுப்பாய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இச்சாதனங்கள் பின்னர் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

### 5.7 நிதியியல் பெறுதிக் கருவிகள்

வங்கி, குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், நாணயத்தேர்வுகள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்ற பெறுதிகளை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. பெறுதிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சீர்மதிப்புப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும். பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)" உள்ளடக்கப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான தரவை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை (ஒரு நாள் வேறுபாடு) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)" ஆக அங்கீகரிக்கும். அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 5.8 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் வைப்பாளராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையிலேயே ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதிய அனுமதிப் பங்கு சொத்தும் சிறப்பு எடுப்பனவு உரிமை வைத்திருப்பும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதுடன் ஏனைய அனைத்து பன்னாட்டு

நாணய நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்மதிப்பீட்டிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### 5.9 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவையும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள காசு, குறுங்கால வைப்புகள் மற்றும் அவற்றின் சந்தைப் பெறுமதி மாற்றங்களால் குறிப்பிடத்தக்க இடர்நேர்வில்லாத மூன்று மாதங்களுக்கு குறைந்த ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட உயர்ந்தளவு திரவத்தன்மையான நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை குறுங்கால கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படுகின்றன. காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நாணயக் கொள்கைப் பொறிமுறையாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந்நிதியியல் கூற்றில் 45 மற்றும் 46ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வெளியிடுகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 5.10 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது. மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், அட்டுறு வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி பதிவழிக்கப்பட்ட செலவில் அறிக்கையிடப்படுகின்றன.

### 5.11 துணைநில் வைப்பு மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகள்

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது [முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி (மீள்கொள்வனவு)] பிணை ஒதுக்கங்கள் இல்லாத “தூய வைப்புக்கள்” ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் நாளாந்த அடிப்படையில் முதலிடுகின்றன.

துணைநில் கடன்வழங்கல் வசதியின் [முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு (நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி)] நடைமுறைகள் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றதுடன் இரண்டும் நிதியியல் நிலைமைக்கூற்றில் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 5.12 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவினமாகப் பதிவு செய்யப்படுகின்றது.

### 5.13 இலங்கை அரச பிணையங்கள்

இலங்கை அரச பிணையங்கள் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரச பிணையங்களிலான முதலீடுகள் நிதியியல் நிலைமை கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் பதியப்படுகிறது.

### 5.14 அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை பின்னர் பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன.

### 5.15 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கபட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

### 5.16 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கீழ் காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப்பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத கடன்பட்ட பிணையங்களினது சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட தரகு அட்டுறு அடிப்படையில் செலவிடப்படுகின்றது.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றல் செய்யப்பட்டால் மட்டுமே நிதியியல் நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

### 5.17 அலுவலர்களுக்கான கடன்கள்

வங்கியின் அலுவலர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இக்கடன்கள் ப.நி.அ.நி. 9 இன்படி கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியில் பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - ஐ.அ.டொலர் வர்த்தக வட்டி மேற்கோள் வீதம் மீதான நீண்ட காலப் பணவீக்க இலக்கிடலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு இடர்நேர்வுக் கட்டணத்திற்காக 1 சதவீதத்தைச் சேர்த்த வீதம் கழிவு வீதமாகப் பயன்படுத்தப்படுவதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலுள்ள வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் பதிவழிக்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக்கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சீர்மதிப்பு பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

### 5.18 தங்கம்

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67 (2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலோ வைத்திருப்பதற்கு முயல வேண்டும். மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருப்பதோடு பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படாததால் தங்கமானது சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

### 5.19 நாணய இருப்பு

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வழங்கப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்திற்கு வழங்கப்பட்ட புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வழங்கப்படும் வேளையில் வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு படி மேற்கொள்ளப்படுகின்றது.

### 5.20 ஏனைய இருப்புக்கள்

ஏனைய இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயமானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

### 5.21 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

காணி மற்றும் கட்டடம் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம், கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி இழப்பு கழித்த தொகையில் கூறப்பட்டுள்ளது. அங்கீகரிப்பு பிரமாணம் பூர்த்தி செய்யப்படும் பொழுது இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவினங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது.

காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்படும் திகதியில் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து பின்னர் ஒன்று சேர்ந்த பெறுமானத் தேய்வுகளும், பின்னர் ஒன்று சேர்ந்த பெறுமதி இழப்பு நட்டங்களும் கழித்த தொகையான மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

இறையிலி காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள ஆயுட்காலம் |
|---|---|
| இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | குத்தகைக் காலம் அல்லது 50 ஆண்டுகளில் குறைந்தது |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| 2014 இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உந்து ஊர்திகள் | 10 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் | 4 ஆண்டுகள் |
| ஏனையவை | 3 ஆண்டுகள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதெனச் சுட்டிக்காட்டும் பொழுது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் பெறுமதி இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

வங்கியின் காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுக்கொரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும். எந்த மீள்மதிப்பீட்டு மிகையும் வருமானக்கூற்றிலே முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியை மறுதலையாக்கும் சந்தர்ப்பம் நீங்கலாக நிதியியல் நிலைமைக் கூற்றின் பங்குரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு வரவு வைக்கப்படும். அவ்வாறு மறுதலையாக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையானது, அப்பற்றாக்குறை அதே சொத்தின் முன்னைய மிகையை நேரடியாக எதிரீடு செய்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள மதிப்பீட்டு மிகையை நேரடியாக எதிரீடு செய்யும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. விற்கப்படுகையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், பிடித்துவைக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விடயமொன்று விற்கப்படுகையில் அல்லது அதன் பாவனை அல்லது விற்பனையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அது அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனைப் பெறுகைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்பட்ட ஆண்டின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. பொருத்தமானவிடத்து சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட் காலங்கள் மற்றும் முறைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

மூலதன நடப்பு வேலைகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டிடங்கள், பாரிய பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முறைமை அபிவிருத்திகளின் கட்டுமானத்தின் போது நேரடியாக ஏற்படும் மூலதனத் தன்மை கொண்ட செலவுகளாகவும் மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

### 5.22 குத்தகைகள்

#### 2019 சனவரி 2இலிருந்து பிரயோகிக்கத்தக்க கொள்கை

குத்தகைகள் ஒப்பந்தமொன்றை ஆரம்பிக்கும் போது வங்கியானது அவ்வொப்பந்தம் குத்தகையா அல்லது அவ்வொப்பந்தம் குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பிடுகின்றது. ஒரு ஒப்பந்தமானது, வெகுமதி ஒன்றிற்கு பரிமாற்றாக, குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குக் கொண்டிருக்குமாயின், அது குத்தகையாக அல்லது குத்தகையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். ஒரு ஒப்பந்தமானது குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு, வங்கியானது ப.நி.அ.நி 16இலுள்ள குத்தகையின் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்துகின்றது. இந்தக் கொள்கையானது 2019 சனவரி 01இல் அல்லது அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட (அல்லது மாற்றப்பட்ட) ஒப்பந்தங்களுக்குப் பிரயோகிக்கப்படும்.

#### குத்தகையாளராக வங்கி செயற்படுதல்

வங்கியானது சொத்துப் பாவனை உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பினை குத்தகையை ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கிறது. சொத்துப் பாவனை உரிமையானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது ஆரம்பத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது குத்தகைக் கொடுப்பனவிற்கான குத்தகைப் பொறுப்புச் சீராக்கத்தின் ஆரம்பத் தொகையுடன் ஏற்பட்ட ஏதாவது ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் அகற்றுவதற்கான செலவின் மதிப்பீட்டைக் கூட்டி காணி அல்லது அலுவலகப் பணிமனைக்கு மேற்கொள்ளப்பட்ட மேமம்படுத்தல்களை நீக்கியை தொகையை உள்ளடக்கியிருக்கும்.

சொத்துப் பாவனை உரிமையானது பின்னர், ஆரம்பத் திகதியிலிருந்து குத்தகைக் கால முடிவு வரைக்கும் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்படும். மேலும், சொத்துப் பாவனை உரிமையானது காலக்கிரமத்தில் பெறுமதியிழப்பு நட்டங்களினால், ஏதுமிருப்பின், குறைவதுடன் குத்தகைப் பொறுப்பின் சில மீள்மதிப்பீடுகளுக்காகச் சீராக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பொறுப்பானது, ஆரம்பத் திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வட்டி வீதத்தினால், அல்லது அந்த வீதம் தீர்மானிக்கப்பட முடியாதவிடத்து, வங்கியின் அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டு வீதத்தினால் கழிவிட்ட தற்போதைய பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

குத்தகை பொறுப்பின் அளவீட்டில் உள்ளடக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- தவிர்க்க முடியாத நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக நிலையான கொடுப்பனவுகள்
- சுட்டெண் ஒன்றில் அல்லது ஒரு வீதத்தில் தங்கியிருக்கும் மாறுபடக்கூடிய குத்தகைக் கொடுப்பனவுகள் ஆரம்பத் திகதியிலுள்ளவாறான சுட்டெண் அல்லது வீதத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன
- எஞ்சியிருக்கும் பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள் அத்துடன்
- செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது கொள்வனவுத் தெரிவின் கீழ் செயற்பாட்டு விலை, நீட்டிப்பதற்குரிய தெரிவை செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது தெரிவுக்குரிய காலத்தை புதுப்பிப்பதற்கான காலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கி உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்தாதென உறுதியாக நம்புவதற்குரிய போதுமான ஆதாரங்கள் இருந்தாலொழிய, குத்தகையினை உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப் பணம்

குத்தகைப் பொறுப்பானது பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றது. இது, சுட்டெண் அல்லது வீதத்திலான மாற்றத்தினால் எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று ஏற்படுகையில், எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை தொடர்பில் வங்கியின்

மதிப்பீட்டில் மாற்றமொன்று ஏற்படுகையில், வங்கி நீட்டிப்புத் தெரிவைச் செயற்படுத்துவது தொடர்பில், மற்றும் உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தெரிவிற்கான தண்டப்பணம் தொடர்பிலான வங்கியின் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுகையில் அல்லது தவிர்க்க முடியாத நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் திருத்தப்படுகையில் மீள அளவிடப்படுகின்றது.

குத்தகைப் பொறுப்பு இம்முறையில் மீளஅளவிடப்படும் போது, சொத்துப் பாவனை உரிமையின் கொண்டு செல்லும் பெறுமதிக்கு ஒத்திசைவான சீராக்கமானது மேற்கொள்ளப்படுகின்றது, அல்லது சொத்துப் பாவனை உரிமை கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியத்திற்குக் குறைவடைந்திருப்பின் இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகிறது.

வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துப் பாவனை உரிமையினை ‘ஆதனம், பொறி மற்றும் உபகரணம்’ (குறிப்பு 20) இனுள்ளும் குத்தகைப் பொறுப்புக்களை ‘நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்’ (குறிப்பு 33) இனுள்ளும் சமர்ப்பிக்கிறது.

**2019 சனவரி 1இற்கு முன்னர் பிரயோகிக்கத்தக கொள்கைகள்**

2019 சனவரி 1 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட குத்தகைகளைப் பொறுத்தவரை, வங்கியானது பின்வரும் மதிப்பீட்டு அடிப்படையில் ஒரு ஒழுங்கு குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதைத் தீர்மானித்தது:

- ஒழுங்கின் நிறைவேற்றமானது குறிப்பிட்ட சொத்து அல்லது சொத்துக்களின் பாவனை மீது தங்கியிருத்தல்
- ஒழுங்கானது சொத்தின் பாவனைக்கான உரிமையை அளித்தல்

**குத்தகையாளராக**

வங்கியானது ப.க.நி 17இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட எந்தவொரு நிதிக் குத்தகையையும் கொண்டிருக்கவில்லை.

ஏனைய குத்தகைகளின கீழ் வைத்திருக்கப்பட்ட சொத்துக்கள் தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டதுடன் வங்கியின் நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படவில்லை. தொழிற்பாட்டுக் குத்தகைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் குத்தகைக் காலப்பகுதி முழுவதற்கும் நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன. பெறப்பட்ட குத்தகை ஊக்குவிப்புக்கள் மொத்தக் குத்தகைச் செலவினங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக குத்தகைக் காலப்பகுதி முழுவதற்கும் அங்கீகரிக்கப்பட்டன.

**5.23 அருவச் சொத்துக்கள்**

கணனி வன்பொருள்களில் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து இவ்வருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு கழிக்கப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்படுகின்றன. கணணி மென்பொருள் சொத்துக்கள் மீதான தொடர்ந்துவரும் செலவுகள், அவை குறித்த சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய அனைத்துச் செலவுகளும் ஏற்படும்போது செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பதிவழிப்பானது, சொத்து பாவனைக்குரியதாகவுள்ள திகதியிலிருந்து நான்கு வருட பயனுள்ள ஆயுட்காலத்திற்கு நேர்கோட்டு முறையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் இம்முறையானது சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்கால நுகர்வுக் கோலத்தை மிகச் சரியாகப் பிரதிபலிக்கின்றது.

**5.24 ஏனைய சொத்துக்கள்**

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**5.25 நிதியியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு**

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் பெறுமதி இழப்பை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதியியலல்லாச் சொத்துக்கள் பெறுமதி இழக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சும் சந்தர்ப்பத்தில் சொத்தானது பெறுமதி இழந்ததாக கருதப்படுவதுடன் அது அதன் மீளப்பெறத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. பெறுமதியிழப்பு நட்டங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**5.26 ஏற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருந்து அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக்கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம்

அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**5.27 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதியியல் நிலைமைக் கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

**5.28 ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத்திட்டங்கள்**

வங்கியால் தொழிற்படுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத்திட்டங்கள் குறிப்பு 32இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**5.29 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்**

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களானவை, நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களாகும். ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பின்னரான மருத்துவ நலன்கள் போன்ற நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் திட்டங்களை வங்கி தொழிற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளிகளும் தனித்தனியாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் கிரயமானது எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாகத் தீர்மானிக்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் தொடர்பாக வங்கியின் கடப்பாடு, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக, ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய மற்றும் முன்னைய காலங்களில் வழங்கிய பணிகளுக்கு பிரதிபலான ஈட்டிய எதிர்கால நன்மைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுவதுடன், அந்நன்மை அதன் தற்போதைய மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக

கழிவீடு செய்யப்படுகின்றது. இனங்காணப்படாத ஏதாவது கடந்த காலச் பணி செலவுகள் மற்றும் திட்டச்சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி என்பன கழிக்கப்படும். கழிவீடு செய்யப்படும் வீதமானது, சராசரி மீதமுள்ள பணிக் காலத்திற்கு அண்ணளவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணையங்களின் மதிப்பீட்டுத் திகதியன்றுள்ள விளைவு வீதமாகும். குறிப்பு 32இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து முதன்மையான ஆயுட்டுகால மதிப்பீட்டு அனுமானங்களும் வருடாந்தம் திருத்தப்படும்.

### 5.30 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் முறையே பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களாகும்.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்பிற்கான கடப்பாடுகள், வருமானக் கூற்றில் அவை ஏற்படும் போது செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 5.31 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் என்பதற்கும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை இணங்கி ஒழுகப்படும் என்பதற்குமான உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பங்குரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவின விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 5.32 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

எதிர்பாரா பொறுப்புக்களானவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளின் மூலம் மட்டும் உறுதி செய்யப்படுகின்ற சாத்தியமான கடப்பாடுகளாகக் காணப்படுவதுடன், இங்கு எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் மாற்றல் நிச்சயமற்றதாக அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியாததாகக் காணப்படுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாத படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் என்பன எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச்சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றன.

### இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

### 5.33 வருமானங்களும் செலவினங்களும்

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய சாத்தியம் காணப்பட்டு அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாக உள்ள போது வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்:

#### 5.33.1 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் சாதனங்களுக்கான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் அட்டுறு கழிவுகள் மற்றும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

#### 5.33.2 பங்கிலாபங்கள்

வங்கியின் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

#### 5.33.3 நானாவித வருமானம் மற்றும் செலவினங்கள்

நானாவித வருமானமும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையான தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளுக்கான தற்செயலான நடவடிக்கை மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பொருண்மைத்தன்மை இல்லாத ஒரேமாதிரியான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

#### 5.33.4 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள் மற்றும் தொடர்பான செலவுகள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### 5.33.5 வருமான வரிச் செலவு

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவு மற்றும் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் பிரிவு 9(10) என்பவற்றின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்டவாறான 2017ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பொருளாதார பணிக் கட்டணச் சட்டத்தின் நியதிகளில், 2017.04.01 இலிருந்து ஆரம்பித்து இலங்கை மத்திய வங்கி பொருளாதாரப் பணிக் கட்டணத்திற்கு ஏற்புடையதாகும். எனினும், திருத்தப்பட்டவாறான 2018ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொருளாதார பணி கட்டணச் சட்டத்தின்படி, 2018 ஒத்தோபரில் இருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செலாவணி வீதம் மீதான தேறல் செய்யப்படாத இலாபங்களும் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான தேறல் செய்யப்படாத சந்தைப்

படியான இலாபங்களும் பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீது பெறுமதிசேர் வரியானது விலக்களிக்கப்பட்டது.

**5.34 அறிக்கையிடும் திகதியிற்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்**

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்து பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் எடுக்கப்படுவதுடன், பொருத்தமானவிடத்து நிதியியல் கூற்றுக்களுக்கான தொடர்பான குறிப்புக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்றானது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 - காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றின் தயாரிப்பில் "நேரடி முறை" யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**6. விடுக்கப்பட்டிருந்தும் அறிக்கையிடும் திகதியில் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள புதிய கணக்கீட்டு நியமங்கள்**

பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் சபையால் விடுக்கப்பட்ட பின்வரும் நியமங்களும் தொடர்பான விளக்கக் குறிப்புக்களும் 2020 சனவரி 1 இற்குப் பின்னர் ஆரம்பிக்கும் நிதியியல் காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்கத்தக்கதாகும். இதன்படி, இந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வங்கி கீழ்வரும் புதிய நியமங்களைப் பிரயோகிக்கவில்லை.

கீழ்வரும் திருத்தப்பட்ட நியமங்கள் வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படவில்லை.

- ப.நி.அ.நி நியமங்களின் கருத்து ரீதியான கட்டமைப்பிற்கான உசாத்துணைகளுக்கான திருத்தம்
- வியாபாரமொன்றின் வரைவிலக்கணம் (ப.நி.அ.நி 3 இற்கான திருத்தம்)
- ப.நி.அ.நி 17 காப்புறுதி ஒப்பந்தங்கள்

**7. நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு**

**7.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியலானது வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ்வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் முக்கியமாக இறைமைப் பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பன்னாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

**7.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைமைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறைமையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான அல்லது சந்தைக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து அல்லது சந்தையிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத்தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

**7.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந்நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

**8. நிலைமாற்ற வெளிப்படுத்துகைகள்**

ப.நி.அ.நி. 16 இற்கு மாறுகையில், வங்கியானது மேலதிக சொத்துப் பாவனை உரிமையையும் மேலதிக குத்தகைப் பொறுப்புக்களையும் அங்கீகரித்தது. மாறுவது தொடர்பிலான தாக்கமானது பின்வருமாறு சுருக்கித் தரப்பட்டுள்ளது.

| | 2019 சனவரி 01இல் உள்ள வாறான நிலுவை ரூ. 000 |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பாவனை உரிமை | **66,287** |
| குத்தகைப் பொறுப்புக்கள் | **47,411** |

தொழிற்பாடுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகளுக்கான குத்தகைப் பொறுப்புக்களை அளவிடுகையில், குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய வட்டி வீதம் குறிப்பிடப்படாமையினாலும் வங்கிக்கு பொருத்தமான அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டு வீதம் இல்லாமையினாலும், 2019 சனவரி 01 இலுள்ளவாறான குத்தகையின் காலப்பகுதிக்குப் பொருத்தமான திறைசேரி முறிக் கொள்வனவு விளைவைப் பயன்படுத்தி குத்தகைக் கொடுப்பனவுகளை வங்கி கழிவீடு செய்தது.

| | 2019 சனவரி 01இல் உள்ள வாறான நிலுவை ரூ. 000 |
|---|---|
| ப.க.நி 17 இன்படியான 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழிற்பாட்டு குத்தகைக் கடப்பாடுகள் | **145,540** |
| 2019 சனவரி 1 இல் திறைசேரி முறிக் கொள்வனவு விளைவு வீதத்தைப் பயன்படுத்தி கழிவிடப்பட்டது | **47,411** |
| **2019 சனவரி 1 இல் அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புக்கள்** | **47,411** |

**9. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்**

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு நிலுவைகள் | **278,004,505** | 117,035,257 |
| வங்கிகளுடனான கால வைப்புக்கள் | **79,519,728** | 92,862,673 |
| ஓரிரவு வைப்புக்கள் | **63,353,939** | 162,300,186 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீது பெறவேண்டிய வட்டி | **53,255** | 48,624 |
| **காசுப்பாய்ச்சல் நோக்கத்திற்கான காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | **420,931,427** | **372,246,740** |
| **கழிக்குக:** காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் (குறிப்பு 9.1) | **(221,958)** | (71,564) |
| மொத்தம் | **420,709,469** | **372,175,176** |

**9.1 காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு**

| | 2019 | | | 2018 |
|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **71,564** | **-** | **71,564** | - |
| ப.நி.அ.நி 9 இன் ஆரம்பப் பிரயோகம் தொடர்பான சீராக்கம் | **-** | **-** | **-** | 50,505 |
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **71,564** | **-** | **71,564** | 50,505 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்புக்கள் | **147,767** | **2,627** | **150,394** | 21,059 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **219,331** | **2,627** | **221,958** | **71,564** |

**10. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்**

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் (குறிப்பு 10.1) | **38,493,268** | 37,467,239 |
| | **38,493,268** | 37,467,239 |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | **729,801,009** | 694,876,394 |
| | **729,801,009** | 694,876,394 |
| **வெளிநாட்டுப் பிணையங்களிலான மொத்த முதலீடுகள்** | **768,294,277** | **732,343,633** |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் (குறிப்பு 10.2) | **100,894** | 63,649 |

10.1 இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்களாக வகைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகளானவை, உலக வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஒதுக்கு ஆலோசனை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் வங்கியினால் செய்யப்பட்ட முதலீடுகளை உள்ளடக்கியுள்ளது. 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான இம்முதலீட்டின் பெறுமதியானது ரூ.38,493.27 மில்லியனாகும் (2018 ரூ.37,467.24 மில்லியன்).

**10.2 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு**

| | 2019 | | | 2018 |
|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **63,649** | **-** | **63,649** | - |
| ப.நி.அ.நி 9இன் ஆரம்ப பிரயோகத்தின் போதான சீராக்கம் | **-** | **-** | **-** | 65,588 |
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **63,649** | **-** | **63,649** | 65,588 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்புக்கள்/ (எதிர்ப்பதிவுகள்) | **17,610** | **9,635** | **37,245** | (1,939) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **81,259** | **19,635** | **100,894** | **63,649** |

**11. பெறுதி நிதியியல் சாதனங்கள்**

11.1 கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகையானது பெறுதியின் அடிப்படையான சொத்து, குறிப்பீட்டு வீதம் அல்லது சுட்டெண்ணின் தொகையாகும் என்பதுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கான அடிப்படையாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் ரூ. 000 | பொறுப்புக்கள் ரூ. 000 | பெயரளவுத் தொகை ரூ. 000 | சொத்துக்கள் ரூ. 000 | பொறுப்புக்கள் ரூ. 000 | பெயரளவுத் தொகை ரூ. 000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **2,021,917** | **923,039** | **284,757,444** | - | 13,590,145 | 203,257,715 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | **-** | **-** | **-** | 750 | - | 548,250 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | **-** | **66,919** | **3,087,778** | - | 466,315 | 5,299,747 |
| மொத்தம் | **2,021,917** | **989,958** | **287,845,222** | 750 | 14,056,460 | 209,105,712 |

11.2 நாணய பரஸ்பர பரிமாற்றல்கள், நாணயத் தேர்வுகள் மற்றும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேற்படி பெறுதிகள், பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான நியதித் தேவை நோக்கங்களை வசதிப்படுத்துவதற்காக வங்கிகளால் பேணப்படும் பன்னாட்டு ஒதுக்குகளின் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. மேலும், வங்கியானது இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதித்தன்மையினைப் பேணுவதற்காகவும் நாட்டின் நிதியியல் முறைமையினை வலுப்படுத்துவதற்காகவும் மற்றும் வங்கிகள் வெளிநாட்டு நிதியங்களை கொண்டு வருவதை ஊக்குவிப்பதற்காகவும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் வெளிநாட்டு மத்திய வங்கிகளுடன் வெளிநாட்டு ஒதுக்குகளின் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது.

11.3 பெறுதிகள் என்பது வட்டி வீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

11.4 வங்கியின் பெறுதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையாக இணங்கப்பட்ட திகதியில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/ பெறுகிறது.

11.5 வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத் திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

**11.6** பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமாகக் கிடைக்கும் தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

## 12. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை** | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் (குறிப்பு 12.1) | **1,319,576** | 217,126 |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு (குறிப்பு 12.2) | **145,156,517** | 146,732,242 |
| ப.நா.நி. பங்கு தொடர்பான பெறத்தக்க வட்டி | **8,711** | 9,667 |
| | **146,484,804** | 146,959,035 |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்பட்டவை** | | |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் (குறிப்பு 12.3) | **189,326** | 199,965 |
| முற்செலுத்தப்பட்ட விதிப்புக்கள் - ப.நா.நிதியக் கடன்கள் | **485,048** | 268,456 |
| **கழிக்குக:** ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் (குறிப்பு 12.4) | **(4)** | (4) |
| | **674,370** | 468,418 |
| | **147,159,174** | 147,427,452 |

### 12.1 சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) என்பது ப.நா.நி. அங்கத்தவர்களின் எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக்கூடிய நாணயங்கள் மீதான கோரலாக இருப்பதுடன், இதில் சிஎஉ உடமையாளர்கள் தமது சிஎஉரிமைகளை இந்நாணயங்களுக்காகப் பரிமாறிக் கொள்ள முடியும். ஒதுக்குச் சொத்தொன்றாக சிஎஉரிமையின் பெறுமதியானது சிஎஉரிமையை வைத்திருப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான அங்கத்தவர்களின் கடப்பாடுகள் மற்றும் சிஎஉரிமை முறைமையின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பு என்பவற்றிலிருந்து தோன்றுகின்றது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயங்கள் மீதான சிஎஉ கோரலானது மதிப்பளிக்கப்படுவதை ப.நா.நி. இரண்டு விதங்களில் உறுதி செய்கின்றது அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையைக் கொண்ட ப.நா.நி அங்கத்தவர்களைப் பெயர் குறித்துரைப்பதன் மூலமும் அத்துடன் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் பங்கேற்கும் அங்கத்தவர்களுக்கிடையிலான தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்ளும் ஒழுங்கின் மூலமுமாகும். மேலே காட்டப்பட்ட தொகையானது தொடர்பான அறிக்கையிடும் திகதிகளிலுள்ளவாறான வங்கியின் மொத்த உடமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

### 12.2 ப.நா. நிதிய அனுமதிப் பங்கு

ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன சந்தாக்கள்) அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய வளங்களின் முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

ப.நா. நிதியம், பொது அனுமதிப் பங்கு மீளாய்வு உடன்படிக்கைக்கு அமைவாக, ப.நா. நிதியத்தின் 189 அங்கத்தவர்களினதும் அனுமதிப் பங்கினையும் 2016 சனவரியில் அதிகரிக்க முடிவு செய்தது. இதன் விளைவாக, இலங்கையின் ப.நா. நிதிய அனுமதிப்பங்கு 2016 பெப்புருவரி 17இல் முன்னைய அனுமதிப்பங்கு தொகையான சிஎஉ 413.40 மில்லியனிலிருந்து சிஎஉ 578.80 மில்லியனுக்கு அதிகரித்தது.

ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு தொடர்பில் செலுத்தப்படத்தக்க தொகை குறிப்பு 24இல் அனுமதிப் பங்கு பொறுப்பு என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அங்கத்தவரொருவரின் அனுமதிப் பங்கு பின்வருவன உட்பட ப.நா. நிதியத்துடனான நாட்டின் நிதியியல் மற்றும் அமைப்பியல் ரீதியான தொடர்புகளை நிர்ணயிக்கின்றது:

**(i)** **சந்தாக்கள்:** ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் சந்தாவானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும் என்பதோடு அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

(ii) **வாக்களிக்கும் அதிகாரம்:** ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.50 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

(iii) **நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குகள் மற்றும் நீடிக்கப்பட்ட ஒழுங்குகளுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 145 சதவீதமும் திரண்ட ரீதியில் 435 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் இவ்வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) **சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குகளின் பங்கு தீர்மானிக்கப்படுகிறது.

### 12.3 ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (வி.எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 இனை மாற்றியதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை வைப்பு மேற்கொள்ளப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 ஐ முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக வி.எ.நி. கணக்கு-2 இல் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றியதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 இற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், வி.எ.நி. கணக்கு- 2இற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது. இது பின்னர் 2024 வரை நீடிக்கப்பட்டது.

### 12.4 பா.நிதியத்துடன் தொடர்புபட்ட சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| கட்டம் 1 | | |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **4** | - |
| ப.நி.அ.நி 9இன் ஆரம்ப பிரயோகத்தின் போதான சீராக்கம் | **-** | 3 |
| சனவரி 1இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **4** | 3 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்புக்கள் | **-** | 1 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **4** | 4 |

### 13. இலங்கை அரச பிணையங்கள்

அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச் சட்டத்தின் 90(2) பிரிவின் கீழ், நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது.

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | **25,125,790** | 43,443,802 |
| திறைசேரி முறிகள் | **50,177,084** | 1,542,796 |
| பெறத்தக்க வட்டி | **1,209,009** | 44,559 |
| | **76,511,883** | 45,031,157 |

### 14. மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **50,275,000** | 229,333,000 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீது பெறத்தக்க வட்டி | **79,879** | 121,409 |
| | **50,354,879** | 229,454,409 |

### 15. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிக்கின்றன. இது திரண்ட நிதியத்திலிருந்து உறப்படுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் செலவுகளுக்கான முற்பணங்களின் வழங்குகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

### 16. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 'ஏ'ற்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பிரிவின் கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு வங்கிக்கு வலுவளிக்கப்பட்டுள்ளது.

#### 16.1 முதலீட்டு நிலைமை

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | பங்குகளின் எண்ணிக்கை | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000 | பங்குகளின் எண்ணிக்கை | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000 |
|---|---|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்)லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **2,950,000** | **498,268** | 2,950,000 | 417,128 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் பணிகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **500,000** | **81** | 225,000 | 1,396 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | **48,244** | **1,002,138** | 48,244 | 963,355 |
| | | | **1,500,487** | | 1,381,879 |

16.2 பங்குரிமை முதலீடுகளானவை, வங்கியின் நிதியியல் கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில் இருந்த இக்கம்பனிகளின் மிகப் பிந்திய கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் படி பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்களின் அடிப்படையில் 2019 திசெம்பர் 31 இலுள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்பட்டன. இதன்படி, கீழ்வரும் திகதிகளில் உள்ளவாறான பங்கொன்றிற்கான தேறிய சொத்து பயன்படுத்தப்பட்டது.

லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட் - 2019 திசெம்பர் 31

வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் பணிகள் பணியகம் - 2019 நவெம்பர் 30

வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் - 2019 திசெம்பர் 31

## 17. ஏனைய சொத்துக்கள்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | |
| உள்ளக நிதியங்களின் முதலீடு | **10,180,258** | 7,955,537 |
| **கழிக்குக:** சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு (குறிப்பு 17.1) | **(190,908)** | (163,144) |
| உள்ளக நிதியங்களின் தேறிய முதலீடு | **9,989,350** | 7,792,393 |
| வங்கிகளுக்கான கடன்கள் (குறிப்பு 17.2) | **39,324** | 96,117 |
| வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க் கப்படும் கொடுகடன் இழப்பு (குறிப்பு 17.3) | **(35)** | (154) |
| | **39,289** | 95,963 |
| பதிவழிக்கப்பட்ட செலவில் அலுவலர் கடன்கள் | **5,447,883** | 5,780,754 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **11,763** | 18,785 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **56,615** | 126,086 |
| | **5,516,261** | 5,925,625 |
| | **15,544,900** | 13,813,981 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **2,056,847** | 1,065,287 |
| | **17,601,747** | 14,879,268 |

### 17.1 சொத்துக்களின் பெறுமதியிழப்பிற்கான ஏற்பாட்டிலான அசைவு

| | 2019 | | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | கட்டம் 3 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 3 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1இலுள்ளவாறான நிலுவை | **92** | **-** | **163,052** | **163,144** | - | 151,674 | 151,674 |
| ப.நிஅ.நி9 ஆரம்பப் பிரயோகத்தின் போதான சீராக்கம் | **-** | **-** | **-** | **-** | 8 | - | 8 |
| சனவரி 1இலுள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **92** | **-** | **163,052** | **163,144** | 8 | 151,674 | 151,682 |
| ஆண்டு காலப் பகுதியிலான விதிப்பு | **15,525** | **16** | **12,223** | **27,764** | 84 | 11,378 | 11,462 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **15,617** | **16** | **175,275** | **190,908** | **92** | **163,052** | **163,144** |

### 17.2 வங்கிகளுக்கான கடன்கள்

இக்கடன்களானவை நாணய விதிச் சட்டத்தின் அத்தியாயம் V இன் பகுதி III 'அ' இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக கடன் கொடுத்தலை வசதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **24,757** | 26,951 |
| சௌபாக்கிய கடன் திட்டம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **-** | 13,122 |
| - ஏனையோர் | **-** | 8,345 |
| கிழக்கின் பொருளாதார நடவடிக்கைகளை மீளமைத்தல் கடன் திட்டம் (மீள்நிதியிடல் கட்டம் III) | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **50** | 12,358 |
| - ஏனையோர் | **-** | 16,403 |
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **14,517** | 18,830 |
| வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (மீள்நிதியிடல் கட்டம் II) | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **-** | 108 |
| | **39,324** | 96,117 |

### 17.3 வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 15 | 139 | 154 | - | - | - |
| ப.நிஅ.நி 9 ஆரம்பப் பிரயோகத்தின் போதான சீராக்கம் | - | - | - | 26 | 616 | 642 |
| சனவரி 1 இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | 15 | 139 | 154 | 26 | 616 | 642 |
| ஆண்டு காலப்பகுதியிலான எதிர்ப்பதிவுகள் | (15) | (104) | (119) | (11) | (477) | (488) |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **-** | **35** | **35** | 15 | 139 | 154 |

## 18. தங்கம்

இது நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு, பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படும் பௌதீக ரீதியான தங்கத்தின் பெறுமதியாகும். நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலோ வைத்திருப்பதற்கு முயல வேண்டும்.

## 19. இருப்புக்கள்

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **2,912,568** | 2,495,222 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **4,028,748** | 2,194,055 |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக் குத்திகள் | **-** | 613,432 |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள் | **345,954** | 1,253,694 |
| | **7,287,270** | 6,556,403 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(45,000)** | (45,000) |
| | **7,242,270** | 6,511,403 |
| எழுதுகருவிகளும் நானாவித இருப்புகளும் | **55,890** | 57,318 |
| மருத்துவ நிலைய இருப்புக்கள் | **232** | 214 |
| **மொத்த இருப்புக்கள்** | **7,298,392** | **6,568,935** |

2019 காலப்பகுதியில் ரூ.3,234.34 மில்லியன் (2018இல் ரூ.3,999.00 மில்லியன்) பெறுமதியான இருப்புக்கள் ஆண்டுகாலப்பகுதியில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டு "இருப்பின் கிரயம்" (புதிய நாணய வழங்கல் செலவு) ஆக உள்ளடக்கப்பட்டது.

## 20. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கிரயம் | காணியும் கட்டடமும் | பொறி மற்றும் பொறி ஒருங்கிணைப்புக்கள் | தள பாடங்களும் உபகரணங்களும் | உந்து ஊர்திகள் | கணனி | சொத்துக்களின் பாவனை உரிமை | ஏனையவை | நடைபெற்று வரும் கட்டுமானம் | 2019 மொத்தம் | 2018 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1இல் உள்ளவாறு** | **16,009,028** | **1,576,664** | **1,311,372** | **601,263** | **895,550** | **-** | **56,739** | **16,322** | **20,466,938** | 21,157,497 |
| சொத்துப் பாவனையின் ஆரம்ப அங்கீகரிப்பு | **-** | **-** | **-** | **-** | **-** | **66,287** | **-** | **-** | **66,287** | - |
| 2019 சனவரி 2இல் சீராக்கப்பட்ட நிலுவை | **16,009,028** | **1,576,664** | **1,311,372** | **601,263** | **895,550** | **66,287** | **56,739** | **16,322** | **20,533,225** | 21,157,497 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **-** | **1,355** | **42,951** | **-** | **54,389** | **-** | **715** | **116,244** | **215,654** | 104,514 |
| ஆண்டுகாலப்பகுதியில் அகற்றப்பட்டவை | **-** | **(277)** | **(7,943)** | **(39,970)** | **(1,852)** | **-** | **-** | **-** | **(50,042)** | (772,671) |
| ஆண்டுகாலப்பகுதியில் மாற்றல் செய்யப்பட்டவை/ பதிவழிக்கப்பட்டவை | **97,418** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **(97,418)** | **-** | (22,402) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **16,106,446** | **1,577,742** | **1,346,380** | **561,293** | **948,087** | **66,287** | **57,454** | **35,148** | **20,698,837** | 20,466,938 |

| தேய்மானம் | காணியும் கட்டடமும் | பொறி மற்றும் பொறி ஒருங்கிணைப்புக்கள் | தள பாடங்களும் உபகரணங்களும் | உந்து ஊர்திகள் | கணனி | சொத்துக்களின் பாவனை உரிமை | ஏனையவை | நடைபெற்று வரும் கட்டுமானம் | 2019 மொத்தம் | 2018 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1இல் உள்ளவாறு** | **376,087** | **938,641** | **932,954** | **423,064** | **803,039** | **-** | **37,299** | **-** | **3,511,084** | 3,196,980 |
| ஆண்டிற்கான தேய்மானம் | **188,423** | **78,652** | **80,602** | **25,923** | **44,101** | **6,240** | **1,068** | **-** | **425,009** | 421,451 |
| ஆண்டுகாலப்பகுதியில் அகற்றப்பட்டவை | **-** | **(127)** | **(6,088)** | **(39,970)** | **(1,762)** | **-** | **-** | **-** | **(47,947)** | (107,347) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **564,510** | **1,017,166** | **1,007,468** | **409,017** | **845,378** | **6,240** | **38,367** | **-** | **3,888,146** | 3,511,084 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | **15,541,936** | **560,576** | **338,912** | **152,276** | **102,709** | **60,047** | **19,087** | **35,148** | **16,810,691** | 16,955,854 |

காணிகள் மற்றும் கட்டடங்களின் கொண்டு செல்லும் பெறுமதி சீர்மதிப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு எவ்.எம். வலுவேர்ஸ் (குஆ மதிப்பீட்டாளர்) இனால் 2016 திசெம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

பிரேசில் மற்றும் நியூயோர்க்கிலுள்ள வங்கியின் ஆதனங்கள் வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சிற்கு 2018 மேயில் கிரயத்தில் விற்கப்பட்டன.

நிதியாண்டுப் பகுதியில் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் காசு வடிவிலமைந்த மொத்தச் செலவு ரூ.215.65 மில்லியனாகும் (2018 - ரூ.104.36 மில்லியன்).

2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகப் பெறுமதி தேய்வழிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூ.1,660.12 மில்லியனாக இருந்தது (2018 - ரூ.1,611.38 மில்லியன்).

**வங்கியின் இறையிலி காணியிலுள்ள கட்டங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள் என்பனவற்றின் மதிப்பீடு தொடர்பான தகவல்கள்**

| ஆதனம் | பட்டயம் பெற்ற மதிப் பீட்டாளரின் பெயர் | மதிப்பீட்டு அணுகுமுறை | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை (ரூபா) | சதுர அடி ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விலை (ரூபா) | மாத மொன்றுக் கான மதிப்பிடப் பட்ட வாடகை (ரூபா) | வெளிச் செல்லும் செலவுகள் | கொள்வனவு ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **காணி மற்றும் கட்டடம்** | | | | | | | |
| தலைமை அலுவலகம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 12,500,000 | 9,000 - 15,000 | - | - | - |
| வைற்வேய்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,000,000 | 40% | 16.66 |
| லொய்ட்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,750,000 | 40% | 16.66 |
| சென்றல் பொயின்ட் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 14,000,000 | - | 7,500,000 | 35% | 16.66 |
| வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் - இராஜகிரிய | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 2,500,000 - 3,500,000 | 2,500 - 9,500 | - | - | - |
| வங்கி இல்லம் - கொழும்பு 07 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 7,500,000 | 3,500 - 8,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தறை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,500,000 - 3,000,000 | 4,000 - 7,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தளை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 100,000 - 500,000 | 2,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - நுவரெலியா | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,000,000 | 2,000 - 7,000 | - | - | - |
| விடுமுறை இல்லம் - கதிர்காமம் | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 200,000 | 4,500 - 10,000 | - | - | - |
| **குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள்** | | | | | | | |
| பிரதேச அலுவலகம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 3,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 5,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 1,500 - 7,000 | - | - | - |
| விடுமுறை இல்லம் - சோமாவதிய | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 10,000 | - | - | - |

| காணி, கட்டடங்களின் உள்ளடக்கம் | கொண்டு செல்லும் பெறுமதி 2019 ரூ. 000 | கொண்டு செல்லும் பெறுமதி 2018 ரூ. 000 |
|---|---|---|
| இறையிலி காணி | **8,930,375** | 8,930,375 |
| இறையிலி காணிகளிலுள்ள கட்டடங்கள் கட்டடங்கள் | **6,366,871** | 6,449,206 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **244,690** | 253,360 |
| | **15,541,936** | 15,632,941 |

மீள்பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் கொண்டு செல்லும் பெறுமதி கிரயத்திலிருந்து தேய்மானங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியாக நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூ.7,751.14 மில்லியனாகும் (2018 - ரூ.7,796.82 மில்லியன்).

**21. அருவச் சொத்துக்கள்**

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயம்:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **982,688** | 957,204 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **22,227** | 25,484 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **1,004,915** | 982,688 |
| **பதிவழிப்பு:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **952,251** | 876,581 |
| ஆண்டிற்கான பதிவழிப்புக் கட்டணம் | **14,618** | 75,670 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **966,869** | 952,251 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி:** | | |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **38,046** | 30,437 |

ஆண்டுகாலப்பகுதியில் வங்கி காசின் மூலம் கொள்வனவு செய்த அருவச் சொத்துக்களின் மொத்தச் செலவு ரூ.22.23 மில்லியனாகும் (2018 - ரூ.25.48 மில்லியன்).

2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகப் பதிவழிப்புச் செய்யப்பட்ட அருவச் சொத்துக்களின் பெறுமதி ரூ.948.65 மில்லியனாகும் (2018 - ரூ.927.38 மில்லியன்).

**22. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்**

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **609,483** | 16,864,115 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **348,765** | 2,437,045 |
| | **958,248** | 19,301,160 |

**23. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்**

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே பிராந்தியங்களுக்கிடையிலான கொடுப்பனவுகளை பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான முறைமையொன்றாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் நிறுவப்பட்டது. இலங்கை, பங்களாதேசம், ஈரான், நேபாளம், பாகிஸ்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் மற்றும் மாலைதீவு ஆகியன ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தில் பங்குபற்றும் நாடுகளாகும். ஒவ்வொரு ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய பங்குபற்றுனரின் தேறிய தீர்ப்பனவு நிலையானது, இரண்டு மாத காலப்பகுதியில் வைத்திருக்கப்பட்ட நாளாந்த வெளிநின்ற தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதுடன் தீர்ப்பனவானது அடுத்துவரும் மாதத்தில் நான்கு வேலை நாட்களுக்குள் இடம்பெறும். 2019 காலப்பகுதியில் வட்டி வீதமானது 1.60 சதவீதத்திற்கும் 2.51 சதவீதத்திற்குமிடையில் இருந்தது. (2018 - 1.45 சதவீதம் மற்றும் 2.28 சதவீதம்).

**24. பன்னாட்டு நாணய நிதியம்**

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் | **238,808,553** | 181,318,765 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **99,176,963** | 100,253,563 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **67,332,745** | 68,063,665 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **66,656,812** | 67,352,253 |
| | **471,975,073** | 416,988,246 |

24.1 வட்டியுடனான கடன்கள், ப.நா.நிதியத்திடமிருந்து பெறப்பட்ட நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி) ஒழுங்குகளை உள்ளடக்கியுள்ளது.

24.2 **நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி)** என்பது சென்மதி நிலுவை மற்றும் அரசினுடைய பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் என்பனவற்றுக்கு உதவுவதற்காக ப.நா. நிதியத்தால் வழங்கப்பட்ட மூன்று வருடகால வசதியாகும். ப.நா. நிதியம் சிஎஉ 1.10 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.50 பில்லியன்) பெறுமதி கொண்ட நீ.நி வசதிக்கு 2016 யூனில் ஒப்புதலளித்தது. இத்தொகையானது நாட்டின் தற்போதைய ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கின் 185 சதவீதத்திற்குச் சமனானதாகும். நீ.நி. வசதியின் கீழ் முதற்கட்ட தொகுதிக் கொடுப்பனவு சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 168.10 மில்லியன்) 2016 யூனில் கிடைக்கப்பெற்றது. இரண்டாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 162.56 மில்லியன்), மூன்றாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் (167.20 மில்லியன்), நான்காவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 177.77 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 251.40 மில்லியன்), ஐந்தாவது தொகுதி கொடுப்பனவுப் பெறுமதியான சிஎஉ 177.77 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 252.00 மில்லியன்), ஆறாவது தொகுதிக் கொடுப்பனவுப் பெறுமதியான சிஎஉ 118.50 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 164.10 மில்லியன்) மற்றும் ஏழாவது தொகுதிக் கொடுப்பனவுப் பெறுமதியான சிஎஉ 118.50 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 164.00 மில்லியன்) என்பன முறையே 2016 யூன், 2017 யூலை, 2017 திசெம்பர், 2018 யூன், 2019 மே மற்றும் 2019 நவெம்பரில் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஏழாவது தொகுதிக் கொடுப்பனவுடன் நீடிக்கப்பட்ட நிதிய வசதியின் பேரில் இலங்கை இதுவரை மொத்தமாக ஐ.அ.டொலர் 1.31 பில்லியனை பெற்றிருக்கின்றது. மிகுதித் தொகையானது 2020இல் பகிர்த்தளிக்கப்படுவதற்கு

எதிர்பார்க்கப்படுகிறது. நீ.நி.வ மீது பிரயோகிக்கத்தக்க வட்டிவீதமானது சிஎஉ வட்டி வீதத்திற்குச் சமனான (தற்பொழுது ஆண்டிற்கு 0.05 சதவீதத்தில் இருக்கிறது) அடிப்படை கட்டணவீதத்துடன் 100 அடிப்படைப் புள்ளிகளை கூட்டிய வீதத்தை உள்ளடக்கியிருக்கும்.

| | பயனுறுதி வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|---|---|
| நீடிக்கப்பட்ட நிதிய வசதி | 0.74 | 2029 | **238,808,553** | 81,318,765 |
| **வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள்** | | | **238,808,553** | 181,318,765 |

24.3 **சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ)** என்பது கைவசமுள்ள ஒதுக்குச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉ ஐ இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 12 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

24.4 **ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்:** தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

24.5 **அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்:** 12.2ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது

## 25. ஏனையவை

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள் (குறிப்பு 25.1) | **640,278** | 1,577,068 |
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரொ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III (குறிப்பு 25.2) | **2,458,292** | 5,968,519 |
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரொ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II (குறிப்பு 25.3) | **2,527,891** | 6,242,573 |
| திறைசேரி துணைச் செயலாளர் டொலர் க/கு - அம்பாந்தோட்டை துறைமுகம் (குறிப்பு 25.4) | **-** | 91,374,950 |
| திறைசேரி துணைச் செயலாளர் - சிறப்பு டொலர் கணக்கு 2 (குறிப்பு 25.5) | **51,409,578** | 29,493,915 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **55,499** | 73,908 |
| | **57,091,538** | 134,730,933 |

### 25.1 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள்

ஐ.அ.டொலர் 214.20 கொண்ட இவ்வுடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் 2012 யூன் 28ஆம் நாளன்று கையெழுத்தானது. இக்கடன் உடன்படிக்கையின் நோக்கம், மொறககந்தையிலுள்ள நீர்மின் வலு நிலையத்தின் கட்டுமானத்திற்கு நிதியிடுவதற்கு வசதியளிப்பதேயாகும். இச்செயற்றிட்டம் நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல் முகாமைத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி இவ்வுடன்படிக்கையின் வங்கியாளராக வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின்படி கடன்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் நோக்கத்திற்காக வங்கியின் பொதுப் பேரேட்டில் கணக்கொன்றினைத் திறந்தது. 2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5.10 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2019 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 3.53 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது.

### 25.2 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் 2014 மாச்சு 11ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியனுக்காக கையெழுத்தானது. இக்கடனின் நோக்கம் யாதெனில் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் ஐ இன் மேம்பாட்டிற்கும் புனரமைப்பு வேலைகளுக்கும் ஏற்படும் செலவிற்கு நிதியிடுவதேயாகும். வசதி உடன்படிக்கையின்படி, வங்கியானது இலங்கை அரசாங்கத்திற்கான வங்கியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை வீதி அபிவிருத்திக்கு பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 19.13 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2019 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 13.53 மில்லியன் எஞ்சிய நிலுவையாகக் காணப்பட்டது.

### 25.3 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II

இவ்வுடன்படிக்கையின் கட்டம் II இன் கீழ் 2014 நவெம்பர் 24ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறப்பட்டது. 2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில், ஐ.அ.டொலர் 20.24 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு எஞ்சிய நிலுவை ஐ.அ.டொலர் 13.92 மில்லியனாகக் காணப்பட்டது.

### 25.4 திறைசேரி துணைச் செயலாளர் - டொலர் கணக்கு - அம்பாந்தோட்டை துறைமுகம்

இது, இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் சைனா மேர்சன்ற் போர்ட் ஹோல்ட்டிங் கம்பனி லிமிடெட்டிற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் தொடர்ச்சியாக, அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்பாடுகளை கையளிக்கும் முகமாக சைனா மேர்சன்ற் போர்ட் ஹோல்ட்டிங் கம்பனி லிமிடெட்டிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையை வைப்பிடுவதற்காக, திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சார்பாக பேணப்படுகின்ற சிறப்பு டொலர் கணக்காகும். முதற் பெறுகையாக ஐ.அ.டொலர் 292.1 மில்லியன் 2017 திசெம்பர் 22இல் பெறப்பட்டது. ஐ.அ.டொலர் 97.37 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 584.19 மில்லியன் பெறுமதியான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப்பெறுகைகள் முறையே 2018 சனவரி 24 மற்றும் 2018 யூன் 25இல் கிடைத்தன. கணக்கிலிருந்த நிலுவையான ஐ.அ.டொலர் 500.00 மில்லியனானது 2019 சனவரி 11இல் திறைசேரி துணைச் செயலாளர் - சிறப்பு டொலர் கணக்கு 2 இற்கு மாற்றப்பட்ட அதேவேளை, கணக்கானது பூச்சிய நிலுவையில் பேணப்பட்டது.

### 25.5 திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் கணக்கு 2

இது திறைசேரியின் சார்பில் ஐ.அ.டொலரில் பெறப்படும் தொகையை வரவு வைக்கும் பொருட்டு திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சார்பில் பேணப்படும் டொலர் கணக்காகும். 2019ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி முறிகள், வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுக் கடன்கள் மற்றும் நீண்டகால நிதியிடல் வசதி என்பவற்றின் பெறுகைகள் வரவு வைக்கப்பட்டதுடன் அரசாங்கத்தின் சார்பில் கடன்களின் மீள்கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டது. 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான எஞ்சிய நிலுவை ஐ.அ.டொலர் 283.04 மில்லியனாகும்.

### 26. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக தொடர்பான தரப்பினர் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் ஏனையவை) என வகைப்படுததப்பட்டிருப்பினும், இவ்வைப்புக்கள் தொடர்பான நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| வங்கிகளினால் செய்யப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **148,823,686** | 192,367,084 |
| - ஏனையவை | **95,155,405** | 127,555,665 |
| | **243,979,091** | 319,922,749 |
| நிதியியல் நிறுவனங்களால் செய்யப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **67** | 177 |
| - ஏனையவை | **10,602,462** | 183,257 |
| | **10,602,529** | 183,434 |
| வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் செய்யப்பட்ட மொத்த வைப்புக்கள் | **254,581,620** | **320,106,183** |

### 27. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **160,442** | 167,537 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **339,197** | 181,181 |
| | **499,639** | 348,718 |

வங்கி, அரச மற்றும்/ அல்லது அரச முகவராண்மைகளின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக இருப்பதனால் நாணய விதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

### 28. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| துணைநில் வைப்பு வசதிகள் | **43,298,325** | 28,311,221 |
| | **43,298,325** | 28,311,221 |

நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 91இன் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் மாத்திரம் ஈடுபடுத்தப்படுகின்றன.

துணைநில் வைப்பு வசதியும் பணச் சந்தையில் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வசதியானது நாளாந்த மீள்கொள்வனவு ஏலங்களில் தமது திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இது, பிணையில்லாத வசதியாக இருப்பதுடன் ஓரிரவு அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றது.

### 29. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது.

வங்கியினால் வெளியிடப்பட்டு குறிப்பிட்ட அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயப் பெறுமதிகள் பின்வருமாறு:

| பெறுமதி குத்திகள்: | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,709** | 5,707 |
| சதம் 5 | **23,266** | 23,260 |
| சதம் 10 | **39,236** | 39,232 |
| சதம் 25 | **121,247** | 121,046 |
| சதம் 50 | **185,149** | 185,247 |
| ரூபா 1 | **963,796** | 929,905 |
| ரூபா 2 | **1,477,366** | 1,414,466 |
| ரூபா 5 | **4,695,714** | 4,408,327 |
| ரூபா 10 | **6,721,241** | 6,101,195 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **591,386** | 590,240 |
| | **14,827,741** | **13,822,256** |
| **தாள்கள்:** | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,694** | 26,694 |
| ரூபா 5 | **37,191** | 37,192 |
| ரூபா 10 | **1,259,975** | 1,271,474 |
| ரூபா 20 | **5,876,733** | 5,607,149 |
| ரூபா 50 | **5,720,916** | 5,456,882 |
| ரூபா 100 | **23,662,737** | 22,612,502 |
| ரூபா 200 | **127,820** | 128,307 |
| ரூபா 500 | **41,697,085** | 40,093,478 |
| ரூபா 1000 | **134,367,933** | 136,787,726 |
| ரூபா 2000 | **4,044,172** | 5,331,902 |
| ரூபா 5000 | **446,313,172** | 409,761,967 |
| | **663,139,409** | 627,120,254 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **677,967,150** | 640,942,510 |

## 30. ஏனைய செலுத்தத்தக்கவை

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| ஏற்பாடுகளும் கட்டணங்களும் | **1,392,762** | 1,706,541 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வைப்புக்கள் | **1,924,674** | 2,082,061 |
| பெறப்பட்ட கைவிடப்பட்ட ஆதனங்களுக்கெதிரான பொறுப்பு (குறிப்பு 30.1) | **7,645,575** | 6,188,502 |
| ஊழியர் நன்மைத் திட்டங்களின் நிலுவைகள் (குறிப்பு 30.2) | **7,599** | 18,333 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **1,732,278** | 2,629,327 |
| | **12,702,888** | 12,624,764 |

**30.1** கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பான செலுத்தத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட ஆதனங்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 30.2 ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கு நடைமுறைக் கணக்கு வசதிகளினை வழங்குகின்றது. தனியாக நிருவகிக்கப்படுகின்ற வங்கியின் ஊழியர் நன்மைத் திட்டங்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் உள்ளக நிறுவகக் கணக்குகளில் வரவாக இருக்கும் தொகைகள் பின்வருமாறு:

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் நிலுவைகள் | **7,599** | 18,333 |
| | **7,599** | 18,333 |

## 31. பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **11** | 45 |
| இவ்வாண்டு காலப்பகுதியிலான பதிவழிப்புக்கள் | **(6)** | (34) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **5** | 11 |

பிற்போடப்பட்ட கொடைகள் அத்தகைய சொத்துக்களின் தேய்மானக் கொள்கையுடன் பொருந்தத்தக்க விதத்தில் இக்காலப்பகுதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டன. இது, எவ்வித விலையுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

## 32. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும்

அனைத்து தகுதியான ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஏழு நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் (பழையது) கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 ஆண்டு பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். புதிய ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு பின்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 ஆண்டு பணிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டங்களானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைகளின் கிரயத்தை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்

திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள அதேவேளை, புதிய விதவைகள் மற்றும் அநாதைகள் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் 1998 சனவரி 01 இற்குப் பின்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளது. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (பழையது), விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (பழையது) இன் கீழ் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினைப் பங்களிப்புச் செய்வதுடன் புதிய விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தகுதிபெற்ற ஊழியர்கள் தங்களின் மாதாந்த அடிப்படை சம்பளத்தில் 5.5 சதவீதத்தினைப் பங்களிப்புச் செய்கின்றனர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதிபெறாத ஊழியர்களுக்காக பணிக்கொடை நன்மைகளை வங்கி வழங்குகின்றது. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக, ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பிற்குச் சமமானதொரு தொகை ஏற்பாடாக நிதியியல் நிலைமைக் கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

தொழிலுக்குப பின்னரான நன்மைத் திட்டத்தின் கீழ், ஓய்வுபெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில், அவர்களது பெற்றோர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், புதிய விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நனமைத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பில் மீள்மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பன்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீளமுதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியில் அனைத்து நன்மைக் கடப்பாடுகளினது தற்போதைய பெறுமதியான ரூ.52,461.11 மில்லியன் (2018 - ரூ.48,245.66 மில்லியன்) திட்டச் சொத்துக்களின் மொத்தச் சீர்மதிப்புப் பெறுமதியான ரூ.43,931.50 மில்லியனை (2018 - ரூ.38,884.03 மில்லியன்) விட விஞ்சிக் காணப்பட்டதுடன் ரூ.8,529.61 மில்லியன் பற்றாக்குறையைத் தோற்றுவித்தது (2018இல் - ரூ.9,361.63 மில்லியன் பற்றாக்குறை).

2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு

| நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூ தியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நன்மை திட்டம் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | **37,116,752** | **1,376,825** | **7,840,685** | **1,343,408** | **693,189** | **373,017** | **3,717,231** | **52,461,107** |
| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி | **(28,458,298)** | **(4,450,843)** | **(5,550,824)** | **(2,466,612)** | **(667,087)** | **(284,777)** | **(2,053,059)** | **(43,931,500)** |
| நன்மைப் பொறுப்பு/ (சொத்து) | **8,658,454** | **(3,074,018)** | **2,289,861** | **(1,123,204)** | **26,102** | **88,240** | **1,664,172** | **8,529,607** |

நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஓய்வூதியமும் தொழிலுக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களின் மீதியானது, பின்வரும் காரணங்களின் காரணமாக மதிப்பீட்டாளரின்படி தேறிய பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது:

**அ)** விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சிய மீதியை வங்கிக்குப் பகிர்ந்தளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதன் காரணமாக இந்நிதியத்தின் தேறிய சொத்து நிலைமை கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

**ஆ)** வங்கியானது வெவ்வேறான நிதியத்தில் (உள்ளக ரீதியாக நிர்வகிக்கப்பட்ட) தொடர்பான சொத்துக்களை வைத்திருக்காததன் காரணமாக பணிக்கொடை மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் இரண்டிற்கும் நிதியியல் கூற்றுக்கள் மொத்தப் பொறுப்பு நிலைமையைக் காட்டுமேயன்றி, மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட தேறிய பொறுப்புக்களைக் காட்டாது.

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | **8,658,454** | 9,851,097 |
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | **(3,074,018)** | (2,463,637) |
| விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **2,289,861** | 903,848 |
| விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | **26,102** | 665,884 |
| பணிக்கொடைத் திட்டம் | **373,017** | 290,932 |
| மருத்துவ நன்மைத் திட்டம் | **3,717,231** | 2,768,680 |
| | **11,990,647** | 12,016,804 |

| நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்து) களிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மை திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2019 சனவரி 01இல் உள்ளவாறு | 9,851,097 | (2,463,637) | 903,848 | (978,132) | 665,884 | 47,765 | 1,334,808 | 9,361,633 |
| தேறிய நன்மைச் செலவினம் | 1,182,132 | (245,782) | 71,561 | (127,165) | (177,540) | 36,512 | 194,747 | 934,465 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | (1,135,396) | (92,561) | 1,314,452 | (17,907) | 24,120 | 3,963 | 777,255 | 873,926 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (1,239,379) | (272,038) | - | - | (486,362) | - | (642,638) | (2,640,417) |
| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 8,658,454 | (3,074,018) | 2,289,861 | (1,123,204) | 26,102 | 88,240 | 1,664,172 | 8,529,607 |

| எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மை திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2019 சனவரி 01இல் உள்ளவாறு | 35,971,523 | 1,055,695 | 6,241,591 | 1,199,154 | 718,088 | 290,932 | 2,768,680 | 48,245,663 |
| வட்டிச் செலவு | 4,316,583 | 126,683 | 748,991 | 143,898 | 86,171 | 34,912 | 332,242 | 5,789,480 |
| தற்போதைய பணிச் செலவு | - | 49,855 | - | - | - | 30,780 | 42,080 | 122,715 |
| கடந்தகால பணிச் செலவு | - | - | - | - | (205,335) | - | - | (205,335) |
| நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள் | (2,798,205) | (988) | (502,519) | (32,405) | - | (13,609) | (291,406) | (3,639,132) |
| கடப்பாடுகளின் மீதான ஆயுட்கால (இலாபங்கள்)/ நட்டங்கள் | (373,149) | 145,580 | 1,352,622 | 32,761 | 94,265 | 30,002 | 865,635 | 2,147,716 |
| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 37,116,752 | 1,376,825 | 7,840,685 | 1,343,408 | 693,189 | 373,017 | 3,717,231 | 52,461,107 |

| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்பு பெறுமதியிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மை திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2019 சனவரி 01இல் உள்ளவாறு | 26,120,425 | 3,519,332 | 5,337,743 | 2,177,286 | 52,204 | 243,167 | 1,433,872 | 38,884,029 |
| வட்டி வருமானம் | 3,134,451 | 422,320 | 640,529 | 261,274 | 6,264 | 29,180 | 172,065 | 4,666,083 |
| தொழில்தருநரின் பங்களிப்புக்கள் | 1,239,379 | 272,038 | - | - | 486,362 | - | 642,638 | 2,640,417 |
| ஊழியர்களின் பங்களிப்புகள் | - | - | 36,901 | 9,789 | 52,112 | - | 7,510 | 106,312 |
| நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள் | (2,798,204) | (988) | (502,519) | (32,405) | - | (13,609) | (291,406) | (3,639,131) |
| வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்களின் வருமானம் | 762,247 | 238,141 | 38,170 | 50,668 | 70,145 | 26,039 | 88,380 | 1,273,790 |
| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 28,458,298 | 4,450,843 | 5,550,824 | 2,466,612 | 667,087 | 284,777 | 2,053,059 | 43,931,500 |

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், பணிக் கொடைத் திட்டம் மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் போன்ற நிதியங்களின் கீழ் ரூ.561.39 மில்லியன் பெறுமதி கொண்ட பிணைகளற்ற முதலீடு காணப்படுவதனால் அவற்றிற்கு 100 சதவீத ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் விளைவாக திட்டச் சொத்துக்களின் பெறுமதியில் உள்ளடக்கப்படவில்லை (2018 - ரூ.522.23 மில்லியன்). அத்தகைய முதலீடுகளின் பெறுமதி உள்ளடக்கப்படாத போதும், வங்கியானது விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பொறுப்புக்களின் ஆயுட்கால மதிப்பீட்டின் கீழ் தேறிய சொத்து நிலையைக் கொண்டுள்ளது.

| 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மை திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| காலப்பகுதிக்குரிய கடப்பாடுகளின் மீதான ஆயுட்கால (இலாபங்கள்)/ நட்டங்கள் | | | | | | | | |
| நிதியியல் எடுகோள்களின் மாற்றத்தின் காரணமாக | 2,958,314 | 146,525 | 372,103 | 75,815 | 75,881 | 14,411 | 154,256 | 3,797,305 |
| அனுபவத்தின் காரணமாக | (3,331,463) | (945) | 980,519 | (43,054) | 18,384 | 15,591 | 711,379 | (1,649,589) |
| வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்களின் வருமானம் | (762,247) | (238,141) | (38,170) | (50,668) | (70,145) | (26,039) | (88,380) | (1,273,790) |
| காலப்பகுதிக்குரிய ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேறிய (வருமானம்) / செலவினம் | (1,135,396) | (92,561) | 1,314,452 | (17,907) | 24,120 | 3,963 | 777,255 | 873,926 |

| 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நன்மைச் செலவினம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நன்மைக் கடப்பாடுகளின் மீதான வட்டிச் செலவு | 4,316,583 | 126,683 | 748,991 | 143,898 | 86,171 | 34,912 | 332,242 | 5,789,480 |
| திட்டமிட்ட சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் | (3,134,451) | (422,320) | (640,529) | (261,274) | (6,264) | (29,180) | (172,065) | (4,666,083) |
| நடைமுறைப் பணிச் செலவு | - | 49,855 | - | - | - | 30,780 | 42,080 | 122,715 |
| கடந்தகால பணிச் செலவு | - | - | - | - | (205,335) | - | - | (205,335) |
| ஊழியர்களின் பங்களிப்புக்கள் | - | - | (36,901) | (9,789) | (52,112) | - | (7,510) | (106,312) |
| நன்மைச் செலவினம் | 1,182,132 | (245,782) | 71,561 | (127,165) | (177,540) | 36,512 | 194,747 | 934,465 |

| திட்டச் சொத்துக்களின் உள்ளடக்கம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் | 21,339,406 | 3,899,255 | 3,932,975 | 1,983,543 | 657,190 | 258,908 | 1,218,959 | 33,290,236 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகளிலான முதலீடுகள் | 2,975,118 | 55,066 | 343,015 | 127,180 | 5,348 | - | 346,217 | 3,851,944 |
| தொகுதிக்கடன்களிலான முதலீடுகள் | 593,468 | 146,543 | 448,893 | 42,288 | - | 8,509 | - | 1,239,701 |
| நிலையான வைப்புக்களிலான முதலீடுகள் | 3,548,628 | 349,170 | 823,951 | 312,782 | 4,062 | 17,360 | 487,883 | 5,543,836 |
| நடைமுறைக் கணக்கில் எஞ்சியிருக்கும் நிலுவைகள் | 1,678 | 809 | 1,990 | 819 | 487 | - | - | 5,783 |
| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான மொத்த திட்டச் சொத்துக்கள் | 28,458,298 | 4,450,843 | 5,550,824 | 2,466,612 | 667,087 | 284,777 | 2,053,059 | 43,931,500 |

**2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு**

| நன்மைப் பொறுப்புகளின்/ (சொத்துகளின்) அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| **2018 சனவரி 01இல் உள்ளவாறு** | 892,685 | (2,533,060) | (424,605) | (1,279,273) | - | (22,218) | 942,158 | (2,424,313) |
| நன்மைகளுக்கான செலவினம் | 283,821 | (294,427) | (88,343) | (176,350) | 665,884 | 14,991 | 145,554 | 551,130 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 9,059,635 | 567,448 | 1,416,796 | 477,491 | - | 54,992 | 247,096 | 11,823,458 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (385,044) | (203,598) | - | - | - | - | - | (588,642) |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **9,851,097** | **(2,463,637)** | **903,848** | **(978,132)** | **665,884** | **47,765** | **1,334,808** | **9,361,633** |

| எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியிலான அசைவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| **2018 சனவரி 01இல் உள்ளவாறு** | 29,232,145 | 718,032 | 5,218,411 | 912,262 | - | 153,167 | 2,158,269 | 38,392,286 |
| வட்டிச் செலவு | 3,800,179 | 93,344 | 678,393 | 118,594 | - | 19,912 | 280,575 | 4,990,997 |
| நடைமுறைப் பணிச் செலவு | 167,772 | 34,871 | - | - | - | 17,879 | 30,481 | 251,003 |
| கடந்தகாலப் பணிச் செலவு | - | - | - | - | 718,088 | - | - | 718,088 |
| நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள் | (2,365,843) | (966) | (479,098) | (30,040) | - | (5,570) | (218,416) | (3,099,933) |
| கடப்பாடுகள் மீதான ஆயுட்கால இழப்புக்கள் | 5,137,270 | 210,414 | 823,885 | 198,338 | - | 105,544 | 517,771 | 6,993,222 |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 35,971,523 | 1,055,695 | 6,241,591 | 1,199,154 | 718,088 | 290,932 | 2,768,680 | 48,245,663 |

| திட்டச் சொத்துக்களின/ முதலீடுகளின் சீர்மதிப்பு பெறுமதியிலான அசைவுகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| **2018 சனவரி 01இல் உள்ளவாறு** | 28,339,459 | 3,251,092 | 5,643,016 | 2,191,535 | - | 175,385 | 1,216,111 | 40,816,598 |
| வட்டி வருமானம் | 3,684,130 | 422,642 | 733,592 | 284,900 | 14,346 | 22,800 | 158,094 | 5,320,504 |
| தொழில்தருநரின் பங்களிப்புக்கள் | 385,044 | 203,598 | - | - | - | - | - | 588,642 |
| ஊழியர்களின் பங்களிப்புகள் | - | - | 33,144 | 10,044 | 37,858 | - | 7,408 | 88,454 |
| நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள் | (2,365,843) | (966) | (479,098) | (30,040) | - | (5,570) | (218,416) | (3,099,933) |
| வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்கள் மீதான வருமானம் | (3,922,365) | (357,034) | (592,911) | (279,153) | - | 50,552 | 270,675 | (4,830,236) |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 26,120,425 | 3,519,332 | 5,337,743 | 2,177,286 | 52,204 | 243,167 | 1,433,872 | 38,884,029 |

| 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| காலப்பகுதிக்கான கடப்பாடுகள் மீதான ஆயுட்கால (இலாபங்கள்)/ நட்டங்கள் | | | | | | | | |
| நிதியியல் எடுகோள்களின் மாற்றத்தின் காரணமாக | 3,809,336 | 200,760 | 638,640 | 156,561 | - | 76,750 | 460,701 | 5,342,748 |
| அனுபவத்தின் காரணமாக | 1,327,934 | 9,654 | 185,245 | 41,777 | - | 28,794 | 57,070 | 1,650,474 |
| வட்டி வருமானம் தவிர்ந்த திட்டச் சொத்துக்கள் மீதான வருமானம் | 3,922,365 | 357,034 | 592,911 | 279,153 | - | (50,552) | (270,675) | 4,830,236 |
| காலப்பகுதிக்குரிய ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேறிய (வருமானம்) / செலவினம் | 9,059,635 | 567,448 | 1,416,796 | 477,491 | - | 54,992 | 247,096 | 11,823,458 |

| 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நன்மைச் செலவினம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| நன்மைகள் கடப்பாடுகளின் மீதான வட்டிச் செலவு | 3,800,179 | 93,344 | 678,393 | 118,594 | - | 19,912 | 280,575 | 4,990,997 |
| திட்டமிட்ட சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் | (3,684,130) | (422,642) | (733,592) | (284,900) | (14,346) | (22,800) | (158,094) | (5,320,504) |
| நடைமுறை பணிச் செலவு | 167,772 | 34,871 | - | - | - | 17,879 | 30,481 | 251,003 |
| கடந்தகாலப் பணிச் செலவு | - | - | - | - | 718,088 | - | - | 718,088 |
| ஊழியர்களின் பங்களிப்புக்கள் | - | - | (33,144) | (10,044) | (37,858) | - | (7,408) | (88,454) |
| **நன்மைச் செலவினங்கள்** | 283,821 | (294,427) | (88,343) | (176,350) | 665,884 | 14,991 | 145,554 | 551,130 |

| திட்டச் சொத்துக்களின் உள்ளடக்கம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மைத் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் | 18,951,019 | 3,138,194 | 3,665,611 | 1,682,559 | 43,131 | 214,815 | 1,150,734 | 28,846,063 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகளிலான முதலீடுகள் | 219,425 | 21,471 | 44,950 | 26,096 | 3,883 | - | 4,013 | 319,838 |
| தொகுதிக்கடன்களிலான முதலீடுகள் | 761,114 | 43,004 | 449,408 | 20,335 | - | 6,633 | - | 1,280,494 |
| நிலையான வைப்புக்களிலான முதலீடுகள் | 6,173,983 | 315,885 | 1,176,978 | 448,149 | 4,848 | 21,719 | 279,125 | 8,420,687 |
| நடைமுறைக் கணக்கில் எஞ்சியிருக்கும் நிலுவைகள் | 14,884 | 778 | 796 | 147 | 342 | - | - | 16,947 |
| **2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான மொத்த திட்டச் சொத்துக்கள்** | 26,120,425 | 3,519,332 | 5,337,743 | 2,177,286 | 52,204 | 243,167 | 1,433,872 | 38,884,029 |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

| | 2018 | 2017 |
|---|---|---|
| கழிவு வீதம் | **11.50%** | 12.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் | **11.50%** | 12.00% |
| சம்பள அதிகரிப்பு வீதம் - பணிக்கொடைத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டம், ஊழியர் ஓய்வூதியத் திட்டம் பழையது | **11.50%** | 11.50% |
| சம்பள அதிகரிப்பு வீதம் - ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் - புதிய | **6.50%** | 6.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| தேய்வு வீதம் | **2.00%** | 2.00% |
| மருத்துவச் செலவு பணவீக்க வீதம் | **4.50%** | 4.50% |
| எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **26 ஆண்டுகள்** | 26 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் - புதிய | **38 ஆண்டுகள்** | 38 ஆண்டுகள் |
| விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **26 ஆண்டுகள்** | 26 ஆண்டுகள் |
| விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **26 ஆண்டுகள்** | 26 ஆண்டுகள் |
| விதவைகள் மற்றும் அநாதைகள் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் - புதிய | **38 ஆண்டுகள்** | 38 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **18 ஆண்டுகள்** | 19 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நன்மைத் திட்டம் | **26 ஆண்டுகள்** | 26 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

| **உணர்திறன் பகுப்பாய்வு 0.5மூ இல் (2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு)** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம்** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய** | **விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்** | **விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்** | **விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய** | **பணிக் கொடைத் திட்டம்** | **மருத்துவ நன்மைத் திட்டம்** |
|---|---|---|---|---|---|---|---|
| | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** |
| நடைமுறை கருதுகோள்களின் மீது எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் | 37,116,752 | 1,376,825 | 7,840,685 | 1,343,408 | 693,189 | 373,017 | 3,717,231 |
| கழிவிடல் வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,534,175) | (146,525) | (372,103) | (75,815) | (75,881) | (14,411) | (154,256) |
| கழிவிடல் வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,655,617 | 148,060 | 406,180 | 82,979 | 87,994 | 15,437 | 168,217 |
| தேய்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | 72,688 | - |
| தேய்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | (80,042) | - |
| சம்பள உயர்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 148,673 | 110,617 | 12,930 | 4,733 | 50,118 | 15,366 | - |
| சம்பள உயர்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (145,067) | (101,264) | (12,633) | (4,615) | (46,053) | (14,473) | - |
| மருத்துவச் செலவு பணவீக்கத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | - | 177,741 |
| மருத்துவச் செலவு பணவீக்கத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | - | (164,884) |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,549,844 | - | 405,358 | 80,520 | - | - | - |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,452,462) | - | (375,008) | (74,400) | - | - | - |

## 33. நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்

நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் செலுத்த வேண்டிய குத்தகைகள், கணக்குகளில் செலுத்தத்தக்க நிலுவைகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள் மற்றும் மீளளிக்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

### 33.1 குத்தகைகள்

வங்கியானது 2 இலிருந்து 30 வரையான ஆண்டு கால குத்தகைக் காலப்பகுதிகளைக் கொண்ட காணி மற்றும் கட்டடங்களை குத்தகைக்கு எடுத்திருப்பதுடன் இக்குத்தகைகளில் சில அத்திகதிக்குப் பின்னர் புதுப்பிக்கக்கூடிய தெரிவைத் கொண்டிருக்கின்றன. முன்னர் இக்குத்தகைகள் ப.க.நி 17இன் கீழ் தொழிற்பாட்டுக் குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. வங்கி குத்தகையாளராக இருக்கும் குத்தகை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

#### 33.1.1 சொத்துப் பாவனை உரிமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் காட்டப்பட்டுள்ள குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பான சொத்துப் பாவனை உரிமை (குறிப்பு 20).

33.1.2 வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

| | 2019 ரூ. 000 |
|---|---|
| குத்தகைப் பொறுப்பு மீதான வட்டி | **5,291** |
| சொத்துப் பாவனை உரிமையின் பதிவழிப்பு | **6,240** |

33.1.3 காசுப்பாய்ச்சல் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

| | 2019 ரூ. 000 |
|---|---|
| குத்தகைகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் | **3,765** |

33.1.4 குத்தகைப் பொறுப்புக்கள்

| | 2019 ரூ. 000 |
|---|---|
| சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | **-** |
| ப.நி.அ.நி 16இன் ஆரம்பப் பிரயோகத்தின் போதான சீராக்கம் | **47,411** |
| சனவரி 01 இல் உள்ளவாறான சீராக்கப்பட்ட நிலுவை | **47,411** |
| ஆண்டுகாலப்பகுதியிலான வட்டிக் கட்டணங்கள் | **5,292** |
| ஆண்டுகாலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் | **(3,765)** |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **48,938** |

33.1.5 குத்தகைப் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| | 2019 ரூ. 000 |
|---|---|
| நடைமுறையல்லாத | **44,449** |
| நடைமுறை | **4,489** |
| | **48,938** |

33.1.6 ஒப்பந்த ரீதியான கழிவிடப்படாத காசுப்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| | 2019 ரூ. 000 |
|---|---|
| ஒரு ஆண்டிற்குக் குறைவானவை | **7,827** |
| ஒன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டவை | **17,769** |
| ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | **114,409** |
| மொத்தக் கழிவிடப்படாத குத்தகைப் பொறுப்புக்கள் | **140,005** |

34. பங்குரிமை

பங்குரிமை விடயங்களின் தன்மை

34.1 மூலதன நிதியம்

**பங்களிப்பு மூலதனம்** - நாணய விதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின்படி மூலதனக் கணக்கு, வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50.00 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50.00 பில்லியனுக்கு அதிகரித்தது.

34.2 ஏனைய ஒதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

i) **பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு** - பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின்படி நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்காகும். இதன்படி, தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களிலுள்ள மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதனூடாக உருவாகின்ற தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

ii) **சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு** - வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலைப் பெறுமதி இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானித்தது.

மேலும், 2016 பெப்புருவரி 29இல் திகதியிடப்பட்ட வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை தொடர்பில் பிரேரிக்கப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் எம்பீ/ டீயி (டபிள்யு)/7/1/2016 இற்கமைய, நாணயச் சபையானது அவசியம் எனக் கருதும் பட்சத்திலும், குறிப்பிடத்தக்க தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டத்தின் காரணமாக பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் எதிர்மறையாகக் காணப்படுமிடத்தும் சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலிருந்து பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றல் செய்யமுடியும்.

2018ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட சந்தைப்படியான இலாபத்தை கருத்திற்கொண்டு, 2019 பெப்புருவரி 27ஆம் திகதியிடப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் பீபி எம்பீ/எவ் /8/3/2019இன்படி ரூ.1.17 பில்லியன் தொகை பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டது.

iii) **ஏனைய ஒதுக்குகள்** - பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

iv) **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்பு இலாபம்/(நட்டம்):** ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் மற்றும் அலகு முதலீடுகளின் மீள்மதிப்பீடு தொடர்பான தேறல் செய்யப்படாத இலாபங்களும் நட்டங்களும் இவ்வொதுக்கிற்கு மாற்றப்படுகின்றன.

v) **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதற்காக பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந்நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

vi) **ஓய்வூதிய நிதிய ஒதுக்கு** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் பாதிப்பினால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை உருவாகுமாயின், அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து மேலதிகமாக ரூ.3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து ரூ.1

பில்லியன் தொகை இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது. 2015 யூனில் நாணயச் சபை பத்திர இலக்கம் எம்பீ/எச்ஆர்/11/12/2015 இன்படி புதிய ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஓய்வூதிய நிதிய ஒதுக்கிலிருந்து, புதிய ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு ரூ.2 பில்லியன் மாற்றல் செய்யப்படடது.

**vii) தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கு** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கு 2007 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து உருவாக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு மாச்சு மாத காலப்பகுதியில் 2017ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து ரூ.2.0 பில்லியன் இவ்வொதுக்கிற்கு மேலதிகமாக மாற்றப்பட்டது.

**viii) மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப்பகுதியில், நடுத்தர மற்றும் நீண்ட கால அபிவிருத்தி நோக்கங்களுக்காக வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.90 பில்லியன் பெறுமதியான இலாபத்திலிருந்தான நிதியியன் மூலம் மீள்நிதியிடல் கொடுகடன் திட்டமொன்றினை வங்கி ஆரம்பித்தது. அத்தகைய கடன்கள் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன. 2019 ஏப்பிறல் காலப்பகுதியில் மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் நிறைவடைந்தமையினால் நிலுவையான ரூ.2.90 பில்லியன் நடுத்தர மற்றும் நீண்ட கால ஒதுக்கிற்கு மாற்றப்பட்டது.

**ix) சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கு** - இவ்வொதுக்கு நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2 பில்லியனை மாற்றல் செய்ததன் மூலம் 2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1 பில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் II) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. எஞ்சிய ரூ.1 பில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

**x) தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களினை நிதியிடும் நோக்கத்திற்காக ஒதுக்கு** - 2016.12.16ஆம் திகதியிடப்பட்ட எம்/எப்/39/20/2016ஆம் இலக்க நாணயச் சபையின் தீர்மானத்திற்கமைய ஆயுட்கால நட்டங்கள் மற்றும் நன்மைச் செலவுகள் காரணமாக பங்குரிமை மூலதனத்திற்கு எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கும் போது அதனை ஈடுசெய்ய தேவையான அளவு பகிரக்கூடிய இலாபம் இருக்குமெனில் கொடுக்கப்பட்ட ஆண்டின் (2016ஆம் ஆண்டிலிருந்து) உண்மையான நன்மைச் செலவுகளின் 50 சதவீதத்தினை குறித்த ஒதுக்கத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டது. 2018ஆம் ஆண்டில் பகிரப்படக்கூடிய இலாபங்கள் இல்லாதமையினால் வங்கியால் 2018ஆம் ஆண்டின் எந்தவிதமான ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், 2019ஆம் ஆண்டிற்குரிய பகிரத்தக்க இலாபங்களிலிருந்து இந்நிதியத்தின் ரூ.742.48 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

**xi) மீள்மதிப்பீட்டு ஒதுக்கு** - ப.க.நி 16இன் படி இவ்வொதுக்கானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு மிகையைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | "நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கு" | "சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு" | ஏனைய ஒதுக்கங்கள் | சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | ஏனைய அனைத்தை உள்ளடக்கிய வருமானத்தி ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணைங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் | மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்ட நிதியம் | தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவை களுக்கான ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **2019 சனவரி 01இல் உள்ளவாறு** | 1,925,000 | 18,940,161 | 15,966,402 | 2,000,000 | 2,118,801 | 155,427,777 | 9,022,907 | (2,978,222) | 2,000,000 | 3,000,000 | 2,900,000 | 4,333,497 | 214,656,323 |
| அ.நே.மொ.தீ. கடன்கரைப்பு நிதியத்திற்கு மாற்றல் | - | - | - | - | 333,334 | - | - | - | - | - | - | - | 333,334 |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தினை மாற்றல் | - | - | - | - | - | (14,557,283) | - | - | - | - | - | - | (14,557,283) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | - | - | - | - | - | - | - | 10,628,206 | - | - | - | - | 10,628,206 |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | - | 1,166,517 | - | - | - | - | - | - | - | - | - | - | 1,166,517 |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் | - | - | - | - | - | - | - | 113,231 | - | - | - | - | 113,231 |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | - | - | - | - | - | - | - | 115,859 | - | - | - | - | 115,859 |
| மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்ட நிதியத்தின் மாற்றல் | 2,900,000 | - | - | - | - | - | - | - | - | - | (2,900,000) | - | - |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | - | - | - | - | - | - | - | 37,245 | - | - | - | - | 37,245 |
| **2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 4,825,000 | 20,106,678 | 15,966,402 | 2,000,000 | 2,452,135 | 140,870,494 | 9,022,907 | 7,916,319 | 2,000,000 | 3,000,000 | - | 4,333,497 | 212,493,432 |

## 35. இலாபப் பகிர்ந்தளிப்பு

நாணய விதிச்சட்டத்தின்படியும் நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை (2018 இலிருந்து நடைமுறைக்குவரும்) இன்படியும் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் பொருட்டு ஆண்டுக்கான தேறிய இலாபத்திற்கு பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

**அ)** செலாவணிவீத இலாபத்தை நீக்குதல். நட்டத்தினை இல்லாமல் செய்வதற்கு தேவையானளவான செலாவணிவீத இலாபம் திரட்டப்படும் வரை வெலாவணிவீத நட்டங்களை அகற்றுதல். எந்தவொரு மேலதிக செலாவணிவீத நட்டத்தையும் உள்ளடக்குதல் (இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பு கொள்கையின்படி).

**ஆ)** தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிருந்தான இலாபத்தினை நீக்குதல் (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்கள்). எனினும் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டங்களை (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள்) விதித்தல் (இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்புக் கொள்கையின்படி).

**இ)** நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38 இன்படியான வேறு ஏதேனும் மாற்றல்கள் மற்றும் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 இலிருந்து எழும் வேறு ஏதேனும் சீராக்கங்கள்.

மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் பொருட்டு சீராக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட சீராக்கங்களின் அடிப்படையில், 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிரத்தக்க இலாபம் பின்வருமாறு:

| விடயம் | 2019<br>ரூ. 000 |
|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்** | 55,604,839 |
| **கழிக்குக:** | |
| நாணயவிதிச் சட்டத்தின்படி செலாவணி வீத நட்டங்களை பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் | (14,557,283) |
| வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான சந்தைப்படியான இலாபத்தை சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் | 43,356,467 |
| ஏனைய கணக்கீட்டுச் சீராக்கங்கள் | 541,921 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திற்கு மாற்றல் (ப.க.நி 19: ஊழியர் நன்மைகளின்படி) | 873,926 |
| **நாணய விதிச் சட்டம், வங்கியினுடைய இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை மற்றும் ஏனைய சீராக்கங்கள் என்பவற்றின்படியான பகிரத்தக்க இலாபம்** | **25,389,808** |
| **கழிக்குக: ஒதுக்குகளிற்கான மாற்றல் (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38)** | |
| -தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டத்தின் நிதியிடல் நோக்கத்திற்கான ஒதுக்கிற்கு மாற்றல் | 742,476 |
| -பொது ஒதுக்கிற்கான மாற்றல் | 638,355 |
| -வெளிநின்ற இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளை அறவிடல் (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39) | 8,977 |
| **திரட்டிய நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட தொகை (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39)** | **24,000,000** |

## 36. நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | **3,107,387** | 3,889,162 |
| நிதியியல் சொத்துக்கள் | **14,245,223** | 13,588,824 |
| பெறுதிகள் | **15,597,950** | 8,078,946 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **32,950,560** | 25,556,932 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **16,658,658** | 7,941,274 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **1,228,145** | 1,015,048 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **17,886,803** | 8,956,322 |
| **நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **50,837,363** | **34,513,254** |

## 37. தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| வெளிநாட்டுப் பிணையங்கள் | **295,181** | 214,157 |
| தங்கம் | **27,613,441** | (4,103,042) |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **14,672,223** | (14,882,288) |
| நாணயத் தேர்வுகள் | **320,052** | 511,217 |
| **தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான மொத்த இலாபம்/ (நட்டம்)** | **42,900,897** | (18,259,956) |

## 38. நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | **1,638,792** | 991,982 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **4,937,068** | 3,862,093 |
| பெறுதிகள் | **1,722,776** | 486,325 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்தத்தக்கவை | **39,383** | 9,755 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **8,338,019** | 5,350,155 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **795,441** | 925,379 |
| துணைநில் வைப்பு வசதி | **2,301,163** | 1,409,287 |
| முறிக் கடன்பாடுகள் | **-** | 15,882 |
| கைவிடப்பட்ட ஆதனம் | **666,335** | 529,672 |
| நானாவித வட்டிச் செலவினங்கள் | **363** | - |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **3,763,302** | 2,880,220 |
| **நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **12,101,321** | 8,230,375 |

பற்றாக்குறை திரவத்தன்மை நிலை காரணமாக, சந்தைக்கு திரவத் தன்மையை உட்செலுத்தும் விதமாக வங்கியின் நடவடிக்கைகளில் ரூ.17,080.98 மில்லியன் (2018 - ரூ.10,041.78 மில்லியன்) தேறிய உள்நாட்டு நாணயப் பெறுமதியைக் கட்டுப்படுத்துவதற்கான இலாபம் காணப்பட்டது. உள்நாட்டு நாணயப் பெறுமதியைக் கட்டுப்படுத்துவதற்கான செலவானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீது ஏற்பட்ட வட்டிச் செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களிலிருந்தான வட்டி வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்குகிறது.

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவினம் | **795,441** | 925,379 |
| முறிக் கடன்பாட்டின் மீதான வட்டிச் செலவினம் | **-** | 15,882 |
| துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம் | **2,301,163** | 1,409,287 |
| **கழிக்குக:** | | |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **4,579,630** | 4,313,387 |
| ஐ.அ.டொலர்/ இல.ரூபா பெறுதி இலாபம் | **15,597,950** | 8,078,946 |
| | **17,080,976** | 10,041,785 |

## 39. நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | |
| பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள் | | |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவை (குறிப்பு 9.1) | **(150,394)** | (21,059) |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்து (குறிப்பு 12.4) | **-** | (1) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் (குறிப்பு 10.2) | **(37,245)** | 1,939 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கட்டணம்** | **(187,639)** | (19,121) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | |
| பதிவழிக்கப்பட்ட ‘செலவிலான நிதியியல் சொத்துக்கள் | | |
| வங்கிகளுக்கான கடன்கள் (குறிப்பு 17.3) | **119** | 488 |
| ஏனைய சொத்துக்கள் (குறிப்பு 17.1) | **(27,764)** | (11,462) |
| கொடுகடன் உத்தரவாத ஏற்பாடு | **404** | 8 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கட்டணம்** | **(27,241)** | (10,966) |
| **நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கட்டணம்** | **(214,880)** | (30,087) |

## 40. ஏனைய வருமானம்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்பான தரப்பினர் | **149,686** | 126,111 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் அகற்றல் மீதான இலாபம் | **33,915** | 79,373 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் பதிவழிப்பு | **6** | 34 |
| நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம் | **624,100** | 580,950 |
| வாடகை வருமானம் | **346,790** | 402,429 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் | **121,576** | 123,361 |
| நானாவித வருமானம் | **426,462** | 380,736 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **1,702,535** | 1,692,994 |

## 41. ஆளணிச் செலவினங்கள்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | **5,544,943** | 5,409,137 |
| நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவு | **1,103,233** | 1,536,049 |
| தொழிலுக்குப் பின்னரான நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டச் செலவு | **1,120,381** | 205,147 |
| **மொத்த ஆளணிச் செலவினங்கள்** | **7,768,557** | 7,150,333 |

## 42. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **910,949** | 831,201 |
| ரொயிட்டர், புளும்பேர்க், சுவிப்ற் போன்றவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **188,605** | 162,735 |
| பயணம் | **138,243** | 131,033 |
| வாடகைச் செலவினங்கள் | **69,664** | 3,004 |
| அச்சிடல் | **35,015** | 36,412 |
| கணக்காய்வுக் கட்டணம் | **247,435** | 11,199 |
| நாணயச் சபை/ துணைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான ஊதியம் | **6,420** | 4,510 |
| இ.ம.வ சேம நிதியம் மீதான வட்டி உதவுதொகை | **-** | 85,383 |
| விளம்பரச் செலவு | **82,686** | 104,930 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் | **124,220** | 102,718 |
| குத்தகைப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம் | **5,292** | - |
| நானாவிதச் செலவினம் | **359,952** | 376,958 |
| **மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்** | **2,168,481** | 1,850,083 |

## 43. வரி

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் பிரிவு 9(1) இன்படி வங்கி வருமான வரி செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின்படி அரச பிணையங்கள் மீது செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரியானது 2018.04.01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நீக்கப்பட்டதனால் 2018ஆம் ஆண்டு மாச்சு 31ஆம் திகதி வரை வங்கியால் செலுத்தப்பட்ட பிடித்துவைத்தல் வரி மற்றும் வங்கியால் செலுத்தப்பட்ட பொருளாதாரப் பணிக் கட்டணம் என்பன உண்ணாட்டரசிறைத் திணைக்களத்திற்கு 2018இல் வங்கி செலுத்திய இறுதி வரிகளாகும்.

2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ரூ.290.89 மில்லியன் பொருளாதாரப் பணிக் கட்டணத்தின் காரணமாக (2018 - ரூ.851.20 மில்லியன்) மொத்த வரியாக ரூ.290.89 மில்லியனை (2018 - ரூ.1,119.29 மில்லியன்) வங்கி செலுத்தியது. 2019இல் பிடித்துவைத்தல் வரி எதுவும் செலுத்தப்படவில்லை (2018 - ரூ.268.08 மில்லியன்).

## 44. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலுடன் இணக்கப்படுத்தல்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட இலாபம்** | **55,604,839** | 137,927,718 |
| **கூட்டுக/ (கழிக்குக): காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | **439,918** | 498,189 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(16,658,660)** | (7,941,273) |
| நிர்ணயிக்கப்பட்ட ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கான தேறிய ஏற்பாடுகள் | **467,211** | 390,483 |
| மொத்தத் தேறாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்)/ நட்டம் | **(3,012,872)** | (149,861,582) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான (இலாபம்)/ நட்டம் | **(33,915)** | (79,381) |
| ஏற்பாடுகள் மற்றும் அட்டுறுக்கள் | **(805,841)** | 2,288,287 |
| நிதியியல் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடுகள் | **214,880** | 30,087 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **(6)** | (34) |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு | **8,368** | (7,747) |
| செயற்பாட்டிலுள்ள கட்டுமானங்களின் பதிவழிப்பு | **-** | 22,402 |
| நிலையான வருமான பிணையங்களின் பதிவழிப்புச் செலவினங்கள் | **5,674** | 109,525 |
| **கூட்டுக/ (கழிக்குக): ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைவு | **(729,457)** | 306,597 |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/ குறைவு | **(354,822)** | 2,558,796 |
| நானாவிதப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைவு) | **323,129** | (21,325) |
| செலுத்தத்தக்க வட்டியின் அதிகரிப்பு | **627,537** | 1,075,371 |
| ஏனைய பெறத்தக்கவற்றின் அதிகரிப்பு | **(237,576)** | (3,234,520) |
| **கூட்டுக/ (கழிக்குக): முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **(42,694,401)** | 12,201,892 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(6,835,994)** | (3,736,515) |

## 45. அரச கொடுக்கல்வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்)

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் (விற்பனை)/ கொள்வனவு | **(147,771,168)** | 241,803,062 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(16,619,525)** | (7,393,636) |
| இலங்கை அரசுக்கான முற்பணங்களின் அதிகரிப்பு/ (குறைவு) | **37,976,400** | (1,168,300) |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் அதிகரிப்பு | **(150,920)** | (24,202) |
| | **(126,565,213)** | 233,216,924 |

**46. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்)**

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான குறைவு | **65,524,563** | 23,010,511 |
| | **65,524,563** | 23,010,511 |

**47. நிதியிடலின் திரட்சி**

**47.1 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை**

| | இலங்கை அரசு | இலங்கை பொதுமக்கள் | இலங்கை வர்த்தக வங்கிகள் | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 830,677 | 127,571 | 958,248 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | 197,014 | - | 792,944 | 989,958 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 82,995,147 | - | 82,995,147 |
| ப.நா.நிதியம் | - | - | - | 471,975,073 | - | 471,975,073 |
| ஏனையவை | 57,036,040 | - | - | 50,408 | 5,090 | 57,091,538 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 57,036,040 | - | 197,014 | 555,851,305 | 925,605 | 614,009,964 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | 243,979,091 | - | 10,602,529 | 254,581,620 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 499,447 | 192 | - | - | - | 499,639 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | 40,663,818 | - | 2,634,507 | 43,298,325 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | 677,967,150 | - | - | - | 677,967,150 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 83,678 | - | 1,924,674 | - | 10,694,536 | 12,702,888 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 583,125 | 677,967,342 | 286,567,583 | - | 23,931,572 | 989,049,622 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 57,619,165 | 677,967,342 | 286,764,597 | 555,851,305 | 24,857,177 | 1,603,059,586 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | - | - | - | - | 5 | 5 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | - | - | - | - | 11,990,647 | 11,990,647 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | - | - | - | - | 181,809 | 181,809 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | - | - | - | - | 12,172,461 | 12,172,461 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 57,619,165 | 677,967,342 | 286,764,597 | 555,851,305 | 37,029,638 | 1,615,232,047 |

47.2 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

| | இலங்கை அரசு | இலங்கை பொதுமக்கள் | இலங்கை வர்த்தக வங்கிகள் | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 811,552 | 18,489,608 | 19,301,160 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | 12,156,003 | - | 1,900,457 | 14,056,460 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 79,158,977 | - | 79,158,977 |
| ப.நா.நிதியம் | - | - | - | 416,988,246 | - | 416,988,246 |
| ஏனையவை | 134,657,025 | - | - | 68,817 | 5,091 | 134,730,933 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 134,657,025 | - | 12,156,003 | 497,027,592 | 20,395,156 | 664,235,776 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| **வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்** | - | - | 319,922,749 | - | 183,434 | 320,106,183 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 348,681 | 37 | - | - | - | 348,718 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | 16,741,679 | - | 11,569,542 | 28,311,221 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | 640,942,510 | - | - | - | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 103,736 | - | 2,082,061 | - | 10,438,967 | 12,624,764 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 452,417 | 640,942,547 | 338,746,489 | - | 22,191,943 | 1,002,333,396 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **135,109,442** | **640,942,547** | **350,902,492** | **497,027,592** | **42,587,099** | **1,666,569,172** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | - | - | - | - | 11 | 11 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | - | - | - | - | 12,016,804 | 12,016,804 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 2,562 | - | - | - | 83,383 | 85,945 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 2,562 | - | - | - | 12,100,198 | 12,102,760 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **135,112,004** | **640,942,547** | **350,902,492** | **497,027,592** | **54,687,297** | **1,678,671,932** |

## 48. இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியானது (இ.ம.வ) கொள்கைக் குறிக்கோள்களை பின்பற்றுவதில் நிதி மற்றும் நிதியல்லா இயல்புகளையுடைய பல்வேறுபட்ட இடர்நேர்வுகளை எதிர்நோக்குகின்றது. இதில் எந்தவொரு இடர்நேர்வினதும் பொருண்மைத் தன்மையானது இ.ம.வங்கியின் நற்பெயர் மற்றும் நிதி நிலைமைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனால் இ.ம.வங்கிக்கான முறையாக வடிவமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாகும். இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையின் தந்திரோபாய முக்கியத்துவத்தினை உணர்ந்து, தனித்தனியாக இடர்நேர்வுகளை நோக்கும் வழக்கமான முகாமைத்துவத்திலிருந்து விடுபட்டு இ.ம.வங்கியானது 2015இல் தனியாக இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களத்தினை (இ.மு.தி) உருவாக்கியது. அதன்படி, இ.ம.வ 2018 - 2020 ஆண்டிற்கு முக்கிய தந்திரோபாய முன்னுரிமையாக இடர்நேர்வு முகாமைத்துவத்தினை அடையாளப்படுத்தியதுடன் இ.ம.வங்கிக்கு நிறுவன அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை செயற்படுத்தும் செயற்பாட்டிலுள்ளது. இந்தக் கட்டமைப்பானது வங்கியின் எல்லா மட்டங்களிலும் இடர்நேர்வு ஏற்கும் பண்பினை ஊக்குவிக்கும் நோக்காகக் கொண்டது.

வங்கி எதிர்நோக்கிய நிதி மற்றும் நிதியல்லா இடர்நேர்வுகள் இரண்டையும் உள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பு மற்றும் இடர்நேர்வு ஆளுகை அமைப்பு ஆகிய இரண்டும் உள்ளடக்கிய இடர்நேர்வு ஆளுகைகட்டமைப்பானது 2018ஆம் ஆண்டு சனவரியில் நாணயச் சபையினால் ஒப்புதளிக்கப்பட்டது. இவ்விடர்நேர்வு ஆளுகை அமைப்பில் நாணயச் சபை மற்றும் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு அத்துடன் நாணயச் சபை ஆலோசனை கணக்காய்வுக் குழு ஆகிய இரண்டு சபையின் உப குழுக்களும் உள்ளடங்கியுள்ளது. வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவப் பணிகளில் இறுதிப் பொறுப்பாண்மையை நாணயச் சபை கொண்டிருப்பதுடன் "மேல் தொனி" யாகவும் அமைகின்றது. மேலும் இ.ம.வங்கிக்கான இடர்நேர்வேற்பு விருப்பம் மற்றும் இடர்நேர்வு தாக்குப்பிடிக்கும் தன்மை என்பனவற்றின் அளவினைத் தீர்மானிப்பதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவம்/ இணக்கக் கட்டமைப்பை அங்கீகரிப்பதற்கும் நாணயச் சபை பொறுப்புடையதாகும்.

2018ஆம் ஆண்டு ஓகத்தில் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு ஏற்படுத்தப்பட்டதுடன் நாணயச் சபையின் சுயாதீன உறுப்பினரான திரு.கிருஷாந்த பெரேரா அவர்களினால் தலைமை தாங்கப்படுவதுடன் இரண்டு சுயாதீன வெளியக நிபுணர்களையும் கொண்டிருக்கின்றது (பிராண்டெக்ஸ் லங்கா லிமிட்டெட்டின் தலைவரும் பொஸ்டன் கொன்ஸ

ல்டிங் குரூப்பின் சிரேஷ்ட ஆலோசகருமான திரு. பிரியான் பெர்னான்டோ 2018.10.05ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டதுடன் நித்தியா பாட்னேர்ஸின் பங்காளரான திரு.நயோமல் குணவர்டென 2019.03.01ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார்). நாணயச் சபையிலிருந்து ஒரு முறையான குழுவாக சபையின் இடர்நேர்வு மேற்பார்வை குழுவானது இ.ம.வங்கியினுடைய ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடுகளை மேற்பார்வையிடுவதுடன் வங்கியினுடைய இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடு ஆகியவற்றிற்கான சபையின் தந்திரோபாயம் மற்றும் கொள்கைகளை அமைப்பதற்கான பொறுப்பையும் கொண்டிருக்கின்றது. மேலும், சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல்களுக்கு ஒரு பிரத்தியேக கவனம் செலுத்துவதற்கு நாணயச் சபைக்கு உதவிபுரிகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பு மூன்று மட்டப் பாதுகாப்பு மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மட்ட பாதுகாப்பில் தொழிற்பாட்டுத் திணைக்களங்கள் இடர்நேர்வுகளை அடையாளங் கண்டு மதிப்பிட்டு கட்டுப்படுத்தி குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இந்தச் செயற்பாடுகள் வங்கியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுடன் ஒத்துப்போவதனை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். செயற்பாட்டு முகாமைத்துவத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பயனுறுதி வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கு உதவுதல் மற்றும் இடர்நேர்வு ஆளுகை அமைப்பு, இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவற்றிற்குகிடையே ஒரு இணைப்பை உருவாக்கி இடர்நேர்வு ஆளுகை அமைப்பிற்கு இடர்நேர்வு தொடர்பான பிரச்சனைகளை சுயாதீனமாக அறிக்கையிடுவதும் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமாகும். இது இரண்டாவது மட்ட பாதுகாப்பு மாதிரியாகும். மூன்றாவது மட்டப் பாதுகாப்பில், கட்டுப்பாடுக் குறிக்கோள்கள் மற்றும் முதலாம், இரண்டாம் மட்டப் பாதுகாப்பு மாதிரியில் இடர்நேர்வு முகாமைத்துவத்தினால் அடையப்பட்டவை உள்ளடங்கலாக உள்ளக கட்டுப்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஆளுகையின் செயற்றிறன் ஆகியவற்றிற்கு உள்ளக கணக்காய்வு உத்தரவாதமளிக்கின்றது. இந்த மூன்று மட்டங்களும் வங்கியினுடைய இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பில் தனித்துவமான பங்கை வகிக்கின்றது.

மூன்று மட்ட பாதுகாப்பு மாதிரியின் கீழ் எல்லாத் திணைக்களங்களினுடைய நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்கு மேலதிகமாக, பன்னாட்டு ஒதுக்குகளினுடையதும் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியம் மற்றும் அரசாங்கத்தின் முகவராண்மைச் செயற்பாடாக மேற்கொள்ளப்படும் ஊழியர் சேம நிதியம் ஆகியவற்றின் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் பொறுப்பானதாகும். ஆண்டு காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் இம்மூன்று நிதியங்களின் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கான மூலோபாய சொத்து ஒதுக்குகளினையும் முதலீட்டு கொள்கை அறிக்கைகளினையும் மீளாய்வு செய்தது. இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் மேலும் இந்த நிதியியல் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகளை சுயாதீனமாகக் கண்காணித்ததுடன் அதிலிருந்து வரக்கூடிய இடர்நேர்வுகளை தொடர்புடைய முதலீட்டு மேற்பார்வைக் குழுவிற்கு மாதாந்த அடிப்படையிலும் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவிற்கு காலாண்டு அடிப்படையிலும் அறிக்கையிட்டது.

புதிய கட்டமைப்பிற்கிணங்க இலங்கை மத்திய வங்கி முழுவதும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்கும் வகையில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிக்குரிய இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை அறிக்கையொன்றினை தயாரித்தது. இச்செயற்பாட்டில், இலங்கை மத்திய வங்கியானது தெளிவான பொறுப்புகளையுடைய பல்வேறுபட்ட பங்குபற்றுனர்களிடையே இடர்நேர்வு உரிமை மற்றும் முகாமைத்துவத்தை வழங்குகின்றவேளை இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுகின்றது.

இலங்கை மத்திய வங்கியை பாதிக்கக்கூடிய வங்கி முழுவதற்குமான தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைத் தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் உயர்மட்ட முகாமைத்துவத்தினிடையே ஒரு வருடாந்த கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பு பெறுபேறுகள் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வு வகைப்படுத்தல்களை திருத்தியமைப்பதற்கும் நிறுவனத்தைப் பாதிக்ககும் வகையிலான பிரதான தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை முன்னுரிமைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுவதுடன் முகாமைத்துவத்தின் கவனத்தினையும் வேண்டிநிற்கின்றது.

வங்கிக்குள் இடர்நேர்வு பண்பினை ஊக்குவிப்பதற்காக ஆண்டு காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்கள ஊழியர்கள் மற்றும் வெளியக வளவாளர்கள் ஆகியோரின் ஈடுபாட்டோடு பல்வேறுபட்ட மன்றங்களில் இலங்கை மத்திய வங்கியின் அலுவலகர்களுக்காக ஏராளமான இடர்நேர்வு விழிப்புணர்வுகளை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நடாத்தியது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டினை வலுப்படுத்தும் நோக்குடன் உலக வங்கியினுடைய தொழிற்பாட்டு இடர்நேர்வு குழுவுடன் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நெருக்கமாக வேலை செய்ததனால் ஏற்கனவேயிருந்த இடர்நேர்வு ஆளுகை முறைமையும், தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கான கட்டமைப்பும் மீளாய்வு செய்யப்பட்டதுடன் இடர்நேர்வு வகைபிரித்தல் இறுதிப்படுத்தப்பட்டதுடன் நிதிசாரா இடர்நேர்வுகளினை இனங்காணல், மதிப்பீடு செய்தல் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பனவற்றிற்கான மதிப்பீட்டு அளவுகள் உருவாக்கப்பட்டன. உலக வங்கி இலங்கை மத்திய வங்கியின் தெரிவு செய்யப்பட்ட இரண்டு அடிப்படை பிரிவுகளிற்கான தொழிற்பாட்டு இடர்நேர்வு மதிப்பீட்டினை மேற்கொண்டதுடன் அனைத்து பிரதான அலுவலகர்களுக்கும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியினையும் வழங்கியது.

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் இடர்நேர்வு பதிவேடுகளை தயாரிப்பதை எளிதாக்குவதற்காகவும் இவ்விடர்நேர்வு பதிவுகளினை தயாரிப்பதிலிருந்து படிப்படியாக வெளியேறி எக்சல் (Excel) அடிப்படையிலான இடர்நேர்வு பதிவு வடிவத்தினை செம்மைப்படுத்துவதற்கும் ஏனைய திணைக்களங்களோடு இணைந்து வேலை செய்தது. இச்செயன்முறை நிறைவு பெற்றவுடன் திணைக்களச் செயற்பாடுகள் தொடர்பில் உணர்வுபூர்வமானதும் தெளிவானதுமான இடர்நேர்வுத் தீர்மானங்களினை முகாமைத்துவம் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் உதவியுடன் ஓர் தன்னியக்க சம்பவ அறிக்கை முறைமையினை ஒத்தோபர் 1, 2019 ஆம் ஆண்டு நிர்மாணித்ததுடன் இது இலங்கை மத்திய வங்கியின் அனைத்து மட்டங்களிலுமுள்ள அலுவலகர்களாலும் அணுகக்கூடியதாகவுள்ளது. இம்முறைமையானது சம்பவங்களின் அறிக்கையிடலை ஊக்குவிப்பதற்கும் சீர்செய்யும் நடவடிக்கைகளின் முன்னேற்றததைக் கண்காணிக்கும் அதேவேளை, சம்பவங்களின் மத்திய களஞ்சியத்தின் அபிவிருத்தியை வசதிப்படுத்துவதற்கும் சாத்தியமான போக்குகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளை அடையாளம் காண்பதற்கும் அத்துடன் இடர்நேர்வுக் குறைப்பு வழிமுறைகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது இ.ம.வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிதியத்திற்குமான முதலீட்டுக் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்களை மீளாய்வு செய்யும் வருடாந்த செயன்முறையினூடாக இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை மேலும்

பலப்படுத்தும். இ.ம.வங்கியின் இணைத்தரப்பினர், வழங்குநர்கள் மற்றும் கட்டுக்காப்பாளர்களை உள்ளடக்கி இ.ம.வங்கியின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தும் செயன்முறைலில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் ஈடுபட்டிருக்கின்றது. அதேநேரம் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் நடைமுறையிலுள்ள முதலீடுகள் தொடர்பான கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளை தொடர்ச்சியாக கண்காணிப்பதுடன் அவை நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தந்திரோபாய சொத்து ஒதுக்கீடு, முதலீட்டுக் கொள்கை அறிக்கை மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்ட வரையறைகளிற்குள் உள்ளனவா என்பதனை உறுதிசெய்வதுடன் இவ்விடர்நேர்வுகளை எல்லா நேரங்களிலும் முகாமைத்துவத்திற்கு முன்னிலைப்படுத்துகின்றது.

**48.1 கொடுகடன் இடர்நேர்வு**

**(அ) புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு உள்ளாகும் தன்மையின் திரட்சி**

வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நிறுவனத்திற்கு உரித்தான நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| இலங்கை | **384,424,472** | 489,380,034 |
| ஐக்கிய அமெரிக்கா | **527,800,817** | 665,241,791 |
| யப்பான் | **249,868,714** | 95,625,902 |
| பிரித்தானியா | **21,960,920** | 9,869,079 |
| ஐரோப்பா | **131,542,095** | 118,939,171 |
| பல்தேசிய | **274,053,375** | 266,277,984 |
| ஏனையவை | **131,112,411** | 96,953,618 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,720,762,804** | **1,742,287,579** |

**(ஆ) நிறுவனங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி**

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களின் வகைக்கேற்ப வருமாறு:

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| அரசு | **1,284,462,212** | 1,340,399,127 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **274,053,375** | 266,277,984 |
| வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **145,340,379** | 121,789,777 |
| இலங்கை வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **3,585,399** | 1,353,647 |
| ஏனையவை | **13,321,439** | 12,467,044 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,720,762,804** | **1,742,287,579** |

**(இ) கொடுகடன் தரமிடலின்படி கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை**

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் றேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதியியல் சொத்துக்களின் அல்லது வெளியிடுபவர்களின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் றேட்டிங்ஸ் தரமிடல்களுக்குமேற்ப AAA குறியீடுகள் அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிக மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதியியல் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், பிச் றேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2019 ரூபா 000 | % | 2018 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | | | | |
| பெடரல் ரிசர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து ரிசர்வ் வங்கி | | **354,721,018** | **20.61%** | 327,240,508 | 18.78% |
| | **AA** | **633,850** | **0.04%** | 79,844 | 0.00% |
| | **AA-** | **32,167,823** | **1.87%** | 15,894,101 | 0.91% |
| | **A+** | **32,434,119** | **1.88%** | 28,154,296 | 1.62% |
| | **A** | **260,070** | **0.02%** | 544,841 | 0.03% |
| | **A-** | **275,673** | **0.02%** | 51,131 | 0.00% |
| | **BBB-** | **1,126** | **0.00%** | 1,572 | 0.00% |
| | **NR** | **215,790** | **0.01%** | 208,883 | 0.01% |
| | | **420,709,469** | **24.45%** | 372,175,176 | 21.36% |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | | | | | |
| | **AAA** | **173,323,411** | **10.07%** | 137,844,494 | 7.91% |
| | **AA+** | **476,808,494** | **27.71%** | 508,501,483 | 29.19% |
| | **AA** | **22,814,258** | **1.33%** | 3,892,615 | 0.22% |
| | **AA-** | **29,937,637** | **1.74%** | 26,115,880 | 1.50% |
| | **A+** | **19,964,131** | **1.16%** | 13,325,830 | 0.76% |
| | **A** | **562,329** | **0.03%** | 196,616 | 0.01% |
| | **BBB+** | **-** | **0.00%** | 134,539 | 0.01% |
| | **NR** | **6,390,749** | **0.37%** | 4,864,937 | 0.28% |
| | | **729,801,009** | **42.41%** | 694,876,394 | 39.88% |
| இலாப அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் | | | | | |
| | **AAA** | **31,442,202** | **1.83%** | 26,605,392 | 1.53% |
| | **AA+** | **1,750,732** | **0.10%** | 2,335,172 | 0.13% |
| | **AA** | **4,072,209** | **0.24%** | 4,861,898 | 0.28% |
| | **AA-** | **309,103** | **0.02%** | 1,385,016 | 0.08% |
| | **A+** | **369,944** | **0.02%** | 367,606 | 0.02% |
| | **A-** | **-** | **0.00%** | (596,292) | -0.03% |
| | **BBB+** | **-** | **0.00%** | 671,554 | 0.04% |
| | **NR** | **549,078** | **0.03%** | 1,836,893 | 0.11% |
| | | **38,493,268** | **2.24%** | 37,467,239 | 2.15% |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | | | | |
| உள்நாட்டில் தரமிடப்பட்டவை | **AA-** | **49,364** | **0.00%** | - | 0.00% |
| | **A+** | **34,141** | **0.00%** | - | 0.00% |
| | **A** | **13,119** | **0.00%** | - | 0.00% |
| | **A-** | **78,789** | **0.00%** | - | 0.00% |
| | **AA** | **772,254** | **0.05%** | - | 0.00% |
| | **AA-** | **67,564** | **0.00%** | 750 | 0.00% |
| | **A+** | **430,063** | **0.03%** | - | 0.00% |
| | **A-** | **113,046** | **0.01%** | - | 0.00% |
| | **NR** | **463,577** | **0.03%** | - | 0.00% |
| | | **2,021,917** | **0.12%** | 750 | 0.00% |
| ப.நா.நி தொடர்பான சொத்துக்கள் | | **147,159,174** | **8.55%** | 147,427,452 | 8.46% |
| | | **147,159,174** | **8.55%** | 147,427,452 | 8.46% |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **NR** | **-** | **0.00%** | 961,284 | 0.06% |
| | | **-** | **0.00%** | 961,284 | 0.06% |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | **1,338,184,837** | **77.77%** | 1,252,908,295 | 71.91% |

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2019 ரூபா 000 | % | 2018 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | B | **76,511,883** | **4.45%** | 45,031,157 | 2.58% |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | B | **50,354,879** | **2.93%** | 229,454,409 | 13.17% |
| அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் | B | **236,608,971** | **13.75%** | 198,632,571 | 11.40% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | NR | **1,500,487** | **0.09%** | 1,381,879 | 0.08% |
| ஏனைய சொத்துக்கள் | AAA | **-** | **0.00%** | 198,899 | 0.01% |
| | AA+ | **1,126,217** | **0.08%** | 1,035,550 | 0.06% |
| | AA- | **2,058** | **0.00%** | 1,233 | 0.00% |
| | AA | **58,092** | **0.00%** | 55,313 | 0.00% |
| | A+ | **186,384** | **0.01%** | 6,904 | 0.00% |
| | A | **6,617** | **0.00%** | 6,620 | 0.00% |
| | A- | **345,045** | **0.02%** | 2,816 | 0.00% |
| | BBB+ | **14,288** | **0.00%** | - | 0.00% |
| | BBB- | **-** | **0.00%** | 523 | 0.00% |
| | BB+ | **194** | **0.00%** | 17,704 | 0.00% |
| | B | **8,301,507** | **0.48%** | 6,458,108 | 0.37% |
| | NR | **7,561,345** | **0.44%** | 7,095,598 | 0.41% |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | **382,577,967** | **22.23%** | 489,379,284 | 28.09% |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,720,762,804** | **100.00%** | 1,742,287,579 | 100.00% |

(ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படியான சுருக்கம்

| | கொடுகடன் தரமிடல் | 2019 ரூபா 000 | % | 2018 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து ரிசேர்வ் வங்கி | | **354,721,018** | **20.61%** | 327,240,508 | 18.78% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | **147,159,174** | **8.55%** | 147,427,452 | 8.46% |
| | AAA | **204,765,613** | **11.90%** | 164,449,886 | 9.44% |
| | AA+/- | **568,543,470** | **33.04%** | 563,066,009 | 32.32% |
| | A+/- | **53,992,315** | **3.14%** | 42,044,028 | 2.41% |
| | BBB+/- | **1,126** | **0.00%** | 807,665 | 0.05% |
| | NR | **7,155,617** | **0.42%** | 7,871,997 | 0.45% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AA | **772,254** | **0.05%** | - | 0.00% |
| | AA- | **67,564** | **0.00%** | 750 | 0.00% |
| | A+/- | **543,109** | **0.03%** | - | 0.00% |
| | NR | **463,577** | **0.03%** | - | 0.00% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,338,184,837** | **77.77%** | 1,252,908,295 | 71.91% |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | AAA | **-** | **0.00%** | 198,899 | 0.01% |
| | AA+ | **1,126,217** | **0.07%** | 1,035,550 | 0.06% |
| | AA | **58,092** | **0.00%** | 55,313 | 0.00% |
| | AA- | **2,058** | **0.00%** | 1,233 | 0.00% |
| | A+ | **186,384** | **0.01%** | 6,904 | 0.00% |
| | A | **6,617** | **0.00%** | 6,620 | 0.00% |
| | A- | **345,045** | **0.02%** | 2,816 | 0.00% |
| | BBB+ | **14,288** | **0.00%** | - | 0.00% |
| | BBB- | **-** | **0.00%** | 523 | 0.00% |
| | BB+ | **194** | **0.00%** | 17,704 | 0.00% |
| | B | **371,777,240** | **21.60%** | 479,576,245 | 27.53% |
| | NR | **9,061,832** | **0.53%** | 8,477,477 | 0.49% |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | **382,577,967** | **22.23%** | 489,379,284 | 28.09% |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | | **1,720,762,804** | **100.00%** | 1,742,287,579 | 100.00% |

**48.2 வட்டி வீத இடர்நேர்வு**

**(அ) வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன்**

**வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டங்களின் இடர்நேர்வாகும்**

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திலான முதலீடுகள் தவிர்ந்த நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத உணர்திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் மாற்றமுறுவதன் காரணமாக உருவாகக்கூடிய சாத்தியமான இலாபம் அல்லது இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத உணர்திறனானது, வட்டி வீதம் 1 அடிப்படைப்புள்ளியினால் மாற்றமுறுவதன் காரணமாக உருவாகக் கூடிய சாத்தியமான இலாபம் அல்லது இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. பிரிவுகளாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வெளிப்படுத்துகையின் உணர்திறனானது கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2019 | 2018 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | **8.14** | 7.86 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | **0.03** | 0.03 |

வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் முகாமை செய்கின்றது:

**i)** வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத உணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக வங்கி பயன்படுத்துகின்றது. மாற்றப்பட்ட காலவரையறையானது வட்டி வீதத்திலான ஒரு சதவீத மாற்றத்திற்கான பிணையங்களின் விலையிலான மாற்றத்தை (விளைவு) அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, சொத்துப்பட்டியலின் பண்புகள் மற்றும் முறிப்பட்டியலின் இடர்நேர்வேற்பு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட கால வரையறை

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை | |
|---|---|---|
| | 2019 | 2018 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **2.03** | 2.08 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | **1.38** | 1.41 |

**ii)** மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் மாற்றத்திற்கான சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு வீத மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் பிணைய விலைகளின் விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும்.

பிரிவாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு

| பட்டியல் பிரிவு | சாத்தியமான நட்டம் (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2019 | 2018 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | **0.07** | 0.07 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | **0.04** | 0.04 |

**iii) இடர்நேர்வேற்புப் பெறுமதி**

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் சுருக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது. வங்கியானது ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டவை தவிர்ந்த நிலையான வருமான பிணையங்கள் பட்டியலிற்கு இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு 99 சதவீத நம்பக இடைவெளியில் 10 நாட்களுக்கான மென்டே கார்லோ முறைமையைப் பயன்படுத்துகின்றது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டவை நிலையான வருமான பிணையங்கள் பட்டியலிற்கு இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு 99 சதவீத நம்பக இடைவெளியில் ஒரு மாதகால மென்டே கார்லோ முறைமையைப் பயன்படுத்துகின்றது.

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2019 | 2018 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | **25.30** | 19.94 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | **1.17** | 0.78 |

**iv) வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்**

தனிப்பட்ட வணிகர்களுக்காக “வணிகப்படுத்தல் அதிகாரம்” என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தில் செய்யப்பட்ட முதலீடுகளுடன் தொடர்பான வட்டி வீத இடர்நேர்வு அளவீடுகளாவை கிரமமான முறையில் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துக் குழுவிற்கு அறிக்கை இடப்படுகின்றன.

**(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன்**

அரசாங்க பிணையங்களின் சொத்துப்பட்டியலானது ப.நி.அ.நி 9இன் கீழ் வியாபார மாதிரி மதிப்பீட்டிற்கிணங்க ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் இ.ம. வங்கியின் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றது. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி அரசாங்க பிணையங்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. அதன் மையக் குறிக்கோள்களிலொன்றான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி அரசாங்கப் பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள அரசாங்கப் பிணையங்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தைக்கு ரூபாய் திரவத்தன்மையை வழங்குவதில் அல்லது சந்தையிலிருந்து திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் அரசாங்க பிணையங்களின் பட்டியலின் அளவுகளின் மாற்றங்களிலிருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற அரசாங்கப் பிணையங்கள் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீத உணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

**(இ) பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

| வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி: | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2019 மொத்தம் | 6 மாதமும் அதற்குக் குறைவான | 6 - 12 மாதங்கள் | 1 - 2 ஆண்டுகள் | 2 - 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.5951 | 420,709,469 | 420,709,469 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 1.6638 | 768,294,277 | 121,361,607 | 107,692,880 | 200,227,307 | 336,808,900 | 2,203,583 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.7382 | 13,321,144 | 13,321,144 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,202,324,890 | 555,392,220 | 107,692,880 | 200,227,307 | 336,808,900 | 2,203,583 |
| **வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 133,838,030 | 8,712 | - | - | 189,322 | 133,639,996 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 2,021,917 | 2,021,917 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 135,859,947 | 2,030,629 | - | - | 189,322 | 133,639,996 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,338,184,837 | 557,422,849 | 107,692,880 | 200,227,307 | 336,998,222 | 135,843,579 |
| **வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 1.7430 | 238,808,553 | - | 2,505,672 | - | 148,177,305 | 88,125,576 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 1.5974 | 82,995,147 | 82,995,147 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 321,803,700 | 82,995,147 | 2,505,672 | - | 148,177,305 | 88,125,576 |
| வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | | |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் | | 958,248 | 958,248 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 989,958 | 792,944 | 130,095 | 66,919 | - | - |
| ப.நா.நிதியம் | | 233,166,520 | - | - | - | - | 233,166,520 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 57,091,538 | 57,091,538 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 292,206,264 | 58,842,730 | 130,095 | 66,919 | - | 233,166,520 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 614,009,964 | 141,837,877 | 2,635,767 | 66,919 | 148,177,305 | 321,292,096 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி** | | 880,521,190 | 472,397,073 | 105,187,208 | 200,227,307 | 188,631,595 | (85,921,994) |

| உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி: | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2019 மொத்தம் | 6 மாதமும் அதற்குக் குறைவான | 6 - 12 மாதங்கள் | 1 - 2 ஆண்டுகள் | 2 - 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **8.6555** | **76,511,883** | **5,919,706** | **19,206,084** | **47,364,717** | **3,700,911** | **320,465** |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **8.0000** | **50,354,879** | **50,354,879** | **-** | **-** | **-** | **-** |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | **3.7969** | **7,504,730** | **207,586** | **210,149** | **434,744** | **1,396,201** | **5,256,050** |
| - வங்கிகளுக்கான கடன்கள் | **4.1046** | **39,289** | **26,562** | **1,743** | **3,336** | **7,648** | **-** |
| - ஏனையவை | **9.8528** | **9,989,349** | **1,406,078** | **798,551** | **427,503** | **2,062,387** | **5,294,830** |
| **மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **144,400,130** | **57,914,811** | **20,216,527** | **48,230,300** | **7,167,147** | **10,871,345** |
| **வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | **236,608,971** | **236,608,971** | **-** | **-** | **-** | **-** |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவை | | **68,379** | **68,379** | **-** | **-** | **-** | **-** |
| பங்குரிமை பிணையங்களிலான முதலீடுகள் - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | | **1,500,487** | **-** | **-** | **-** | **-** | **1,500,487** |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **238,177,837** | **236,677,350** | **-** | **-** | **-** | **1,500,487** |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **382,577,967** | **294,592,161** | **20,216,527** | **48,230,300** | **7,167,147** | **12,371,832** |
| **வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| **துணைநில் வைப்பு வசதி** | **7.0000** | **43,298,325** | **43,298,325** | **-** | **-** | **-** | **-** |
| **மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **43,298,325** | **43,298,325** | **-** | **-** | **-** | **-** |
| **வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | **254,581,620** | **254,581,620** | **-** | **-** | **-** | **-** |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | **499,639** | **499,639** | **-** | **-** | **-** | **-** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | **677,967,150** | **677,967,150** | **-** | **-** | **-** | **-** |
| ஏனைய செலுத்ததக்கவைகள் | | **12,702,888** | **12,702,888** | **-** | **-** | **-** | **-** |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **945,751,297** | **945,751,297** | **-** | **-** | **-** | **-** |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **989,049,622** | **989,049,622** | **-** | **-** | **-** | **-** |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி** | | **101,101,805** | **14,616,486** | **20,216,527** | **48,230,300** | **7,167,147** | **10,871,345** |

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி: | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2018 மொத்தம் | 6 மாதமும் அதற்குக் குறைவான | 6 - 12 மாதங்கள் | 1 - 2 ஆண்டுகள் | 2 - 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1.9645 | 372,175,176 | 372,175,176 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியிலான மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 2.4936 | 732,343,633 | 121,625,585 | 51,601,808 | 223,725,010 | 329,351,259 | 6,039,971 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 1.0991 | 12,348,975 | 12,348,975 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,116,867,784 | 506,149,736 | 51,601,808 | 223,725,010 | 329,351,259 | 6,039,971 |
| **வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 135,078,477 | 9,667 | - | - | 199,961 | 134,868,849 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 750 | 750 | - | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 961,284 | 961,284 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 136,040,511 | 971,701 | - | - | 199,961 | 134,868,849 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,252,908,295 | 507,121,437 | 51,601,808 | 223,725,010 | 329,551,220 | 140,908,820 |
| **வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 2.1080 | 181,318,765 | - | - | - | 99,568,098 | 81,750,667 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 2.2345 | 79,158,977 | 79,158,977 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 260,477,742 | 79,158,977 | - | - | 99,568,098 | 81,750,667 |
| **வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | | 19,301,160 | 19,301,160 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 14,056,460 | 11,736,595 | 1,853,550 | - | 466,315 | - |
| ப.நா.நி. | | 235,669,481 | - | - | - | - | 235,669,481 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | | 134,730,933 | 134,730,933 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 403,758,034 | 165,768,688 | 1,853,550 | - | 466,315 | 235,669,481 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 664,235,776 | 244,927,665 | 1,853,550 | - | 100,034,413 | 317,420,148 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி** | | 856,390,042 | 426,990,759 | 51,601,808 | 223,725,010 | 229,783,161 | (75,710,696) |

| உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2018 மொத்தம் | 6 மாதமும் அதற்குக் குறைவான | 6 - 12 மாதங்கள் | 1 - 2 ஆண்டுகள் | 2 - 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 12.8451 | 45,031,157 | 43,443,802 | 407,078 | - | 886,336 | 293,941 |
| மீளவிற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 8.9950 | 229,454,409 | 229,454,409 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 4.2160 | 6,846,041 | 269,780 | 275,058 | 563,545 | 1,810,962 | 3,926,696 |
| - வங்கிகளுக்கான கடன்கள் | 7.7395 | 95,963 | 65,057 | 16,347 | 3,571 | 9,499 | 1,489 |
| - ஏனையவை | 9.7553 | 7,792,394 | 470,308 | 1,012,421 | 1,417,860 | 1,105,413 | 3,786,392 |
| **மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 289,219,964 | 273,703,356 | 1,710,904 | 1,984,976 | 3,812,210 | 8,008,518 |
| **வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 198,632,571 | 198,632,571 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவை | | 144,870 | 144,870 | - | - | - | - |
| பங்குரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி | | 1,381,879 | - | - | - | - | 1,381,879 |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 200,159,320 | 198,777,441 | - | - | - | 1,381,879 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 489,379,284 | 472,480,797 | 1,710,904 | 1,984,976 | 3,812,210 | 9,390,397 |
| **வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி | 8.0000 | 28,311,221 | 28,311,221 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 28,311,221 | 28,311,221 | - | - | - | - |
| **வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 320,106,183 | 320,106,183 | - | - | - | - |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 348,718 | 348,718 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 640,942,510 | 640,942,510 | - | - | - | - |
| ஏனைய செலுத்ததக்கவைகள் | | 12,624,764 | 12,624,764 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர்திறனற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 974,022,175 | 974,022,175 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 1,002,333,396 | 1,002,333,396 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் இடைவெளி** | | 260,908,743 | 245,392,135 | 1,710,904 | 1,984,976 | 3,812,210 | 8,008,518 |

### 48.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்குள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச்செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், யப்பான் யென், யூரோ, அவுஸ்திரேலிய டொலர் மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணய நிலைமைகளுக்காக உருவாக்கப்பட்ட வரையறைகளுடனான இணங்குவிப்பு கண்காணிக்கப்படுகின்றது.

**வெளிநாட்டு நாணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை**

2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு | நாணயம் ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | யப்பானிய யென் | ஸ்ரேலிங் பவுண் | சிஎஉ | அவுஸ்தி ரேலிய டொலர் | கனேடியன் டொலர் | நியூசிலாந்து டொலர் | ஏனைய நாணயங்கள் | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 298,441,454 | 29,837,438 | 25,036,846 | 494,431 | - | 384,072 | 40,968 | 574,817 | 66,121,401 | 420,931,427 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 692,861,144 | - | 5,058,431 | 6,666,792 | - | 33,173,454 | - | 18,046,158 | 12,488,298 | 768,294,277 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 175,413 | - | - | - | - | - | - | - | 1,846,504 | 2,021,917 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 147,159,178 | - | - | - | - | 147,159,178 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 991,478,011 | 29,837,438 | 30,095,277 | 7,161,223 | 147,159,178 | 33,557,526 | 40,968 | 18,620,975 | 80,456,203 | 1,338,406,799 |
| விகிதம் | 74.08% | 2.23% | 2.25% | 0.54% | 10.99% | 2.51% | 0.00% | 1.39% | 6.01% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 957,119 | 17 | - | 1,050 | - | 62 | - | - | - | 958,248 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 792,943 | - | - | - | - | - | - | - | 197,015 | 989,958 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 82,995,147 | - | - | - | - | - | - | - | - | 82,995,147 |
| ப.நா. நிதியம் | - | - | - | - | 471,975,073 | - | - | - | - | 471,975,073 |
| ஏனையவை | 57,036,040 | - | - | - | - | - | - | - | 55,498 | 57,091,538 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 141,781,249 | 17 | - | 1,050 | 471,975,073 | 62 | - | - | 252,513 | 614,009,964 |
| விகிதம் | 23.09% | 0.00% | 0.00% | 0.00% | 76.87% | 0.00% | 0.00% | 0.00% | 0.04% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 849,696,762 | 29,837,421 | 30,095,277 | 7,160,173 | (324,815,895) | 33,557,464 | 40,968 | 18,620,975 | 80,203,690 | 724,396,835 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு | இலங்கை ரூபா ரூ. 000 | ஐ. அமெரிக்க டொலர் ரூ. 000 | யப்பானிய யென் ரூ. 000 |
|---|---|---|---|
| கொள்வனவுகள் | 67,267,470 | 219,385,125 | - |
| விற்பனைகள் | - | (64,843,338) | (219,914,105) |
| முன்னோக்கிய எதிர் கணக்கு | (1,895,152) | - | - |

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு | நாணயம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | யப்பானிய யென் | ஸ்ரேலிங் பவுண் | சிஎஉ | அவுஸ்திரேலிய டொலர் | கனேடியன் டொலர் | நியூசிலாந்து டொலர் | ஏனைய நாணயங்கள் | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியில் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 192,721,396 | 23,570,165 | 17,512,023 | 1,004,533 | - | 1,470,823 | 56,163 | 962,564 | 134,949,073 | 372,246,740 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 658,211,280 | - | 5,303,481 | 6,251,413 | - | 32,289,309 | - | 17,069,668 | 13,218,482 | 732,343,633 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - | - | - | - | - | 750 | 750 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 147,427,456 | - | - | - | - | 147,427,456 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | 961,284 | - | - | - | - | - | - | - | - | 961,284 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியில் சொத்துக்கள்** | 851,893,960 | 23,570,165 | 22,815,504 | 7,255,946 | 147,427,456 | 33,760,132 | 56,163 | 18,032,232 | 148,168,305 | 1,252,979,863 |
| விகிதம் | 67.99% | 1.88% | 1.82% | 0.58% | 11.77% | 2.69% | 0.00% | 1.44% | 11.83% | 100.00% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 19,299,921 | 444 | 1 | 57 | - | 737 | - | - | - | 19,301,160 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | 1,900,457 | - | - | - | - | - | 12,156,003 | 14,056,460 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 79,158,977 | - | - | - | - | - | - | - | - | 79,158,977 |
| ப.நா. நிதியம் | 811,552 | - | - | - | 416,176,694 | - | - | - | - | 416,988,246 |
| ஏனையவை | 43,282,075 | - | - | - | - | - | - | - | 91,448,858 | 134,730,933 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 142,552,525 | 444 | 1,900,458 | 57 | 416,176,694 | 737 | - | - | 103,604,861 | 664,235,776 |
| விகிதம் | 21.46% | 0.00% | 0.29% | 0.00% | 62.65% | 0.00% | 0.00% | 0.00% | 15.60% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 709,341,435 | 23,569,721 | 20,915,046 | 7,255,889 | (268,749,238) | 33,759,395 | 56,163 | 18,032,232 | 44,563,444 | 588,744,087 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு | இலங்கை ரூபா ரூ. 000 | ஐ. அமெரிக்க டொலர் ரூ. 000 | யப்பானிய யென் ரூ. 000 |
|---|---|---|---|
| கொள்வனவுகள் | 123,164,315 | 71,072,884 | - |
| விற்பனைகள் | - | (132,733,080) | (72,973,340) |
| முன்னோக்கிய எதிர் கணக்கு | 11,469,221 | - | - |

**48.4 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்**

2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த ரீதியான முதிர்ச்சிகள் பின்வருமாறு:

| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 6 மாதங்களுக்குக் குறைவானவை | 6 மாதம்/ 1 மாதங்கள் | 1/ 2 ஆண்டுகள் | 2/ 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களுக்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 420,709,469 | - | - | - | - | 420,709,469 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 8,659,736 | 3,439,276 | 22,442,101 | 12,641,807 | - | 47,182,920 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 86,547,759 | 116,095,513 | 207,638,126 | 342,541,454 | 2,148,610 | 754,971,462 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 13,329,855 | - | - | 189,322 | 133,639,997 | 147,159,174 |
| **மொத்த கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 529,246,819 | 119,534,789 | 230,080,227 | 355,372,583 | 135,788,607 | 1,370,023,025 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 19,124,134 | 11,819,359 | 49,530,248 | 3,938,496 | 350,990 | 84,763,227 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 50,401,892 | - | - | - | - | 50,401,892 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 236,608,972 | - | - | - | - | 236,608,972 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | - | - | 1,500,487 | 1,500,487 |
| ஏனைய சொத்துக்கள் | 2,531,816 | 1,656,834 | 1,997,187 | 6,312,460 | 14,360,202 | 26,858,499 |
| **மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 308,666,814 | 13,476,193 | 51,527,435 | 10,250,956 | 16,211,679 | 400,133,077 |
| **மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 837,913,633 | 133,010,982 | 281,607,663 | 365,623,539 | 152,000,286 | 1,770,156,102 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 958,248 | - | - | - | - | 958,248 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 82,995,147 | - | - | - | - | 82,995,147 |
| ப.நா.நிதியம் | 2,449,181 | 4,962,312 | 14,832,012 | 110,510,673 | 373,148,819 | 505,902,997 |
| ஏனையவை | 57,091,538 | - | - | - | - | 57,091,538 |
| **மொத்த கழிவிடப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 143,494,114 | 4,962,312 | 14,832,012 | 110,510,673 | 373,148,819 | 646,947,930 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 254,581,620 | - | - | - | - | 254,581,620 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 499,639 | - | - | - | - | 499,639 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 43,298,325 | - | - | - | - | 43,298,325 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 677,967,150 | - | - | - | - | 677,967,150 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 12,702,888 | - | - | - | - | 12,702,888 |
| **மொத்த கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 989,049,622 | - | - | - | - | 989,049,622 |
| **மொத்த கழிவிடப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,132,543,736 | 4,962,312 | 14,832,012 | 110,510,673 | 373,148,819 | 1,635,997,552 |
| **தேறிய கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | (294,630,103) | 128,048,670 | 266,775,651 | 255,112,865 | (221,148,533) | 134,158,550 |

| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 6 மாதங்களுக்குக் குறைவானவை | 6 மாதங்கள் தொடக்கம் 1 ஆண்டு |
|---|---|---|
| | ரூ. 000 | ரூ. 000 |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 221,766,015 | 7,671,870 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 219,914,106 | 7,628,628 |

**வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த ரீதியான முதிர்ச்சிகள் பின்வருமாறு:

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 6 மாதங்களுக்குக் குறைவானவை | 6 மாதம்/ 1 மாதங்கள் | 1/ 2 ஆண்டுகள் | 2/ 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களுக்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 372,175,176 | - | - | - | - | 372,175,176 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 5,841,047 | 4,480,121 | 17,820,925 | 10,335,966 | - | 38,478,059 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 86,972,038 | 58,347,392 | 236,273,635 | 341,808,636 | 9,636,712 | 733,038,413 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 12,358,642 | - | - | 199,961 | 134,868,849 | 147,427,452 |
| ஏனைய பெறத்தக்கவை | 961,284 | - | - | - | - | 961,284 |
| **மொத்தக் கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 478,308,187 | 62,827,513 | 254,094,560 | 352,344,563 | 144,505,561 | 1,292,080,384 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 42,861,171 | 1,928,480 | 128,960 | 1,150,405 | 384,130 | 46,453,146 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 229,504,446 | - | - | - | - | 229,504,446 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 198,632,571 | - | - | - | - | 198,632,571 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | - | - | 1,381,879 | 1,381,879 |
| ஏனைய சொத்துக்கள் | 14,783,147 | 1,746,023 | 2,781,355 | 4,497,531 | 11,526,581 | 35,334,637 |
| **மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 485,781,335 | 3,674,503 | 2,910,315 | 5,647,936 | 13,292,590 | 511,306,679 |
| **மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 964,089,522 | 66,502,016 | 257,004,875 | 357,992,499 | 157,798,151 | 1,803,387,063 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 19,301,160 | - | - | - | - | 19,301,160 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 79,158,977 | - | - | - | - | 79,158,977 |
| ப.நா. நிதியம் | 2,429,189 | 2,481,530 | 7,459,381 | 80,131,608 | 363,326,740 | 455,828,448 |
| ஏனையவை | 134,730,933 | - | - | - | - | 134,730,933 |
| **மொத்தக் கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 235,620,259 | 2,481,530 | 7,459,381 | 80,131,608 | 363,326,740 | 689,019,518 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 320,106,183 | - | - | - | - | 320,106,183 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 348,718 | - | - | - | - | 348,718 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 28,311,221 | - | - | - | - | 28,311,221 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 640,942,510 | - | - | - | - | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 12,624,764 | - | - | - | - | 12,624,764 |
| **மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 1,002,333,396 | - | - | - | - | 1,002,333,396 |
| **மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,237,953,655 | 2,481,530 | 7,459,381 | 80,131,608 | 363,326,740 | 1,691,352,914 |
| **தேறிய கழிவிடப்படாத நிதியியல் செத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | (273,864,133) | 64,020,486 | 249,545,494 | 277,860,891 | (205,528,589) | 112,034,149 |

| 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ. 000 | 6 மாதங்கள் தொடக்கம் 1 ஆண்டு ரூ. 000 |
|---|---|---|
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 103,671,375 | 18,943,940 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 114,165,546 | 19,919,739 |

### 48.5 திரவத்தன்மை இடர்நேர்வு

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலில் பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதியியல் சொத்துக்களை விரைவாக, சீர்மதிப்புப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்றபோது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற நோக்கம் மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நிதியக் கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை காசாக மாற்றுவதற்கான சாத்தியமான தேவைப்பாட்டை இது பிரதிபலிக்கின்றது. நிதியங்கள் விரைவாக பெறப்படுவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது:

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச்சொத்து விகிதங்கள்.
- ஒரு இணைத்தரப்பினருடன் மற்றும் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக் கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற அதிக திரவத்தன்மையுடனான சந்தைப்படுத்தக்கூடிய சாதனங்களை பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதியியல் சாதனங்களைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப்பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையை முகாமைப்படுத்துகிறது.

### 49. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| 2019 திசெம்பர் 31இலுள்ளவாறு | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 420,709,469 | - | 420,709,469 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 11,679,449 | 26,813,819 | 38,493,268 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 79,359,748 | 650,441,261 | 729,801,009 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 2,021,917 | - | 2,021,917 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 13,329,855 | 133,829,319 | 147,159,174 |
| இலங்கை அரச பிணையங்கள் | 26,334,798 | 50,177,085 | 76,511,883 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 50,354,879 | - | 50,354,879 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 236,608,971 | - | 236,608,971 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | 1,500,487 | 1,500,487 |
| ஏனைய சொத்துக்கள் | 3,191,431 | 14,410,316 | 17,601,747 |
| தங்கம் | - | 173,438,430 | 173,438,430 |
| இருப்புக்கள் | - | 7,298,392 | 7,298,392 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 953,887 | 115,189 | 1,069,076 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | - | 16,810,691 | 16,810,691 |
| அருவச் சொத்துக்கள் | - | 38,046 | 38,046 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **844,544,404** | **1,074,873,035** | **1,919,417,439** |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 958,248 | - | 958,248 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 989,958 | - | 989,958 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 82,995,147 | - | 82,995,147 |
| ப.நா. நிதியம் | - | 471,975,073 | 471,975,073 |
| ஏனையவை | 51,409,578 | 5,681,960 | 57,091,538 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 254,581,620 | - | 254,581,620 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 499,639 | - | 499,639 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 43,298,325 | - | 43,298,325 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 677,967,150 | - | 677,967,150 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 12,702,888 | - | 12,702,888 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 1 | 4 | 5 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டங்கள் | - | 11,990,647 | 11,990,647 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 145,842 | 35,967 | 181,809 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,125,548,396** | **489,683,651** | **1,615,232,047** |
| **தேறிய** | **(281,003,992)** | **585,189,384** | **304,185,392** |

| 2018 திசெம்பர் 31இலுள்ளவாறு | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 372,175,176 | - | 372,175,176 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 9,975,116 | 27,492,123 | 37,467,239 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 80,991,450 | 613,884,944 | 694,876,394 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 750 | - | 750 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 12,358,642 | 135,068,810 | 147,427,452 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவைகள் | 961,284 | - | 961,284 |
| இலங்கை அரச பிணையங்கள் | 43,874,997 | 1,156,160 | 45,031,157 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 229,454,409 | - | 229,454,409 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 198,632,571 | - | 198,632,571 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | 1,381,879 | 1,381,879 |
| ஏனைய சொத்துக்கள் | 2,595,128 | 12,284,140 | 14,879,268 |
| தங்கம் | - | 149,683,439 | 149,683,439 |
| இருப்புக்கள் | - | 6,568,935 | 6,568,935 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 1,789,376 | 124,712 | 1,914,088 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | - | 16,955,853 | 16,955,853 |
| அருவச் சொத்துக்கள் | - | 30,437 | 30,437 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 952,808,899 | 964,631,432 | 1,917,440,331 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 19,301,160 | - | 19,301,160 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,056,460 | - | 14,056,460 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 79,158,977 | - | 79,158,977 |
| ப.நா. நிதியம் | - | 416,988,246 | 416,988,246 |
| ஏனையவை | 134,730,933 | - | 134,730,933 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 320,106,183 | - | 320,106,183 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 348,718 | - | 348,718 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 28,311,221 | - | 28,311,221 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 640,942,510 | - | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 12,624,764 | - | 12,624,764 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 6 | 5 | 11 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டங்கள் | - | 12,016,804 | 12,016,804 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 49,224 | 36,721 | 85,945 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,249,630,156 | 429,041,776 | 1,678,671,932 |
| **தேறிய** | (296,821,257) | 535,589,656 | 238,768,399 |

## 50. நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்

### 50.1 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தல்கள்

நிதியியல் சாதனங்களின் வகைகள் மற்றும் நிதியியல் நிலைமைக் கூற்றிலுள்ள வரிசை விடயம் என்பவற்றிற்கிடையேயான இணங்குவித்தல்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| 2019 திசெம்பர் 31இலுள்ளவாறு | இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான சாதனங்கள் | ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான படுகடன் சாதனங்கள் | ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை சாதனங்கள் | பதிவழிக்கப்பட்ட செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | - | - | 420,709,469 | 420,709,469 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 38,493,268 | - | - | - | 38,493,268 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | - | 729,801,009 | - | - | 729,801,009 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 2,021,917 | - | - | - | 2,021,917 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 146,484,804 | - | - | 674,370 | 147,159,174 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 186,999,989 | 729,801,009 | - | 421,383,839 | 1,338,184,837 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 76,511,883 | - | - | 76,511,883 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 50,354,879 | 50,354,879 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | - | - | 236,608,971 | 236,608,971 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | 1,500,487 | - | 1,500,487 |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | 17,601,747 | 17,601,747 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | - | 76,511,883 | 1,500,487 | 304,565,597 | 382,577,967 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 958,248 | 958,248 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 989,958 | - | - | - | 989,958 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 82,995,147 | 82,995,147 |
| ப.நா. நிதியம் | - | - | - | 471,975,073 | 471,975,073 |
| ஏனையவை | - | - | - | 57,091,538 | 57,091,538 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 989,958 | - | - | 613,020,006 | 614,009,964 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 254,581,620 | 254,581,620 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 499,639 | 499,639 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 43,298,325 | 43,298,325 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | - | - | 677,967,150 | 677,967,150 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | - | - | - | 12,702,888 | 12,702,888 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | - | - | - | 989,049,622 | 989,049,622 |

| 2018 திசெம்பர் 31இலுள்ளவாறு | இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான சாதனங்கள் | ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான படுகடன் சாதனங்கள் | ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை சாதனங்கள் | பதிவழிக்கப்பட்ட செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | - | - | 372,175,176 | 372,175,176 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 37,467,239 | - | - | - | 37,467,239 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | - | 694,876,394 | - | - | 694,876,394 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 750 | - | - | - | 750 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 146,959,035 | - | - | 468,418 | 147,427,452 |
| ஏனைய பெறத்தக்கவை | - | - | - | 961,284 | 961,284 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 184,427,024 | 694,876,394 | - | 373,604,878 | 1,252,908,295 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 45,031,157 | - | - | 45,031,157 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 229,454,409 | 229,454,409 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | - | - | 198,632,571 | 198,632,571 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | 1,381,879 | - | 1,381,879 |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | 14,879,268 | 14,879,268 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | - | 45,031,157 | 1,381,879 | 442,966,248 | 489,379,284 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 19,301,160 | 19,301,160 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,056,460 | - | - | - | 14,056,460 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 79,158,977 | 79,158,977 |
| ப.நா. நிதியம் | - | - | - | 416,988,246 | 416,988,246 |
| ஏனையவை | - | - | - | 134,730,933 | 134,730,933 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 14,056,460 | - | - | 650,179,316 | 664,235,776 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 320,106,183 | 320,106,183 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 348,718 | 348,718 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 28,311,221 | 28,311,221 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | - | - | 640,942,510 | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | - | - | - | 12,624,764 | 12,624,764 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | - | - | - | 1,002,333,396 | 1,002,333,396 |

## 51. சீர்மதிப்புப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்

### 51.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் முதன்மைச் சந்தையில் அல்லது அது இல்லாத சந்தர்ப்பத்தில் அத்திகதியில் வங்கிக்கு அணுகக்கூடியதாகவுள்ள மிக அநுகூலமான சந்தையில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களில் சொத்தொன்றை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற விலை அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி அதன் செயலாற்ற இடர்நேர்வைப் பிரதிபலிக்கின்றது.

சந்தை விலைகளை அவதானிக்க முடியாத நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு 5.2 இல் விபரிக்கப்பட்டவாறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. அடிக்கடி வர்த்தகப்படுத்தப்படாத மற்றும் குறைந்தளவான விலை வெளிப்படைத்தன்மையைக் கொண்ட நிதியியல் சாதனங்களுக்கு சீர்மதிப்புப் பெறுமதி குறைந்தளவு பாரபட்சமற்றதாக இருப்பதுடன் இது திரவத்தன்மை, செறிவு, சந்தைக் காரணிகளின் நிச்சயமற்ற தன்மை, விலையிடல் எடுகோள்கள் மற்றும் குறிப்பிட்ட சாதனங்களைப் பாதிக்கும் பிற இடர்நேர்வுகள் ஆகியவற்றைப் பொறுத்து பல்வேறுபட்ட விதங்களில் திறனாய்வுகளைத் தேவைப்படுத்துகின்றது. நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும் படிநிலைகள் பின்வருமாறு:

மட்டம் 1: ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக செயற்படும் சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

**மட்டம் 2:** மட்டம் 1 இல் குறிப்பிடப்பட்ட விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட விலைகளைத் தவிர வேறு நுட்பத்தின்படி ஒன்றில் நேரடியாக (அதாவது விலைகள்) அல்லது மறைமுகமாக (அதாவது விலைகளிலிருந்து பெறப்பட்டவை) சொத்து அல்லது பொறுப்பிற்காக அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

**மட்டம் 3:** சொத்து அல்லது பொறுப்பிற்காக அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்காத (அதாவது அவதானிக்க முடியாத உள்ளீடுகள்) உள்ளீடுகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

பின்வரும் அட்டவணை சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையிவ் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினை தருகின்றது

| 2019 திசெம்பர் 31இலுள்ளவாறு | மட்டம் 1<br>ரூ.000 | மட்டம் 2<br>ரூ.000 | மட்டம் 3<br>ரூ.000 | மொத்தம்<br>ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | **38,493,268** | **-** | **-** | **38,493,268** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | **729,801,009** | **-** | **-** | **729,801,009** |
| பெறுதிகள் | **-** | **2,021,917** | **-** | **2,021,917** |
| | **768,294,277** | **2,021,917** | **-** | **770,316,194** |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | **173,438,430** | **-** | **-** | **173,438,430** |
| | **173,438,430** | **-** | **-** | **173,438,430** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **76,511,883** | **-** | **-** | **76,511,883** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | **-** | **-** | **1,500,487** | **1,500,487** |
| | **76,511,883** | **-** | **1,500,487** | **78,012,370** |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | **-** | **-** | **8,930,375** | **8,930,375** |
| கட்டடம் | **-** | **-** | **6,611,561** | **6,611,561** |
| | **-** | **-** | **15,541,936** | **15,541,936** |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | **-** | **-** | **66,919** | **66,919** |
| பெறுதிகள் | **-** | **923,039** | **-** | **923,039** |
| | **-** | **923,039** | **66,919** | **989,958** |

| 2018 திசெம்பர் 31இலுள்ளவாறு | மட்டம் 1<br>ரூ.000 | மட்டம் 2<br>ரூ.000 | மட்டம் 3<br>ரூ.000 | மொத்தம்<br>ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 37,467,239 | - | - | 37,467,239 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 694,876,394 | - | - | 694,876,394 |
| பெறுதிகள் | - | 750 | - | 750 |
| | 732,343,633 | 750 | - | 732,344,383 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 149,683,439 | - | - | 149,683,439 |
| | 149,683,439 | - | - | 149,683,439 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 45,031,157 | - | - | 45,031,157 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | 1,381,879 | 1,381,879 |
| | 45,031,157 | - | 1,381,879 | 46,413,036 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 8,930,375 | 8,930,375 |
| கட்டடம் | - | - | 6,702,566 | 6,702,566 |
| | - | - | 15,632,941 | 15,632,941 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 466,315 | 466,315 |
| பெறுதிகள் | - | 13,590,145 | - | 13,590,145 |
| | - | 13,590,145 | 466,315 | 14,056,460 |

**நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்**

பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது பங்கிற்கான தேறிய சொத்தின் மதிப்பீட்டு நுட்பத்தினை உபயோகித்து கணக்கிடப்பட்டது.

**பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க அவதானிக்க முடியாத உள்ளீடுகள்**

பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி

**உணர்திறன் பகுப்பாய்வு**

பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி 10 சதவீதத்தால் அதிகரித்தால் சீர்மதிப்புப் பெறுமதியும் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும்

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **1,381,879** | 41,095 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **2,749** | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | **115,859** | 1,360,573 |
| ஆண்டுகாலப்பகுதியில் அகற்றப்பட்டவை | **-** | (19,789) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **1,500,487** | 1,381,879 |

**காணி மற்றும் கட்டடங்கள்**

**மதிப்பிடப்படும் முறை**

காணியானது நேரடி ஒப்பீட்டு முறையுடன் சந்தை அணுகுமுறையைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இம்முறையில் மேம்படுத்தப்பட்ட பெறுமதி பெயரளவு கூட்டப்படாத அல்லது கூட்டப்படாத அண்மைய விற்பனையுடன் சொத்துக்கள் ஒப்பிடப்பட்டு வேறுபாடுகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதி பெறப்படுகின்றது.

சமூகத்திற்குச் சேவை வழங்குகின்ற பொதுத்துறை நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் திறந்த திரவத்தன்மை சந்தையில் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, சென்றல் பொயின்ற், வைற் எவேய்ஸ் மற்றும் லொயிட்ஸ் கட்டடங்கள் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களுக்கும் மதிப்பீடு செய்யப்படும் பொழுது பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறைப் பதிலீட்டுக் கிரயமுறை பயன்படுத்தப்பட்டது.

ஏனைய கட்டடங்களை மதிப்பிடுவதற்கு வருமான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் இம்முறையானது ஆதனங்களை எதிர்கால மதிப்பிடப்பட்ட வருமானம், இலாபம் அல்லது காசுப் பாய்ச்சலை தனியொரு நடைமுறைத் தொகைக்கு மாற்றுவதன் (கழிவிடப்படுவதன்) மூலம் மதிப்பிடுகின்றது.

**சந்தை அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்):**

- பேர்ச் ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)
- சதுர அடி ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)
- கட்டடங்களிற்கான பெறுமானத்தேய்வு வீதம் குறைதல்/ (அதிகரித்தல்)

**வருமான அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்)**

- மொத்த வருடாந்த வாடகை வருமானம் அதிகரித்தல்/ (குறைதல்)
- கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுகள் அதிகரித்தல்/ (குறைதல்)

**பெறுதிகள்**

பெறுமதி மதிப்பீட்டு மாதிரிகள் முன்னோக்கிய விலைகளை (சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னோக்கிய புள்ளிகளுக்கு மேலதிக நிறைகளை அறிவிப்பதன் மூலம் கணக்கிடப்பட்டது) பயன்படுத்தியதுடன் பெறுமதித் திகதியிலுள்ளவாறு தொடர்பான நாணயங்களில் பூச்சிய நறுக்கு விளைவு வளைகோட்டினை அடிப்படையாகக் கொண்டு கழிவின் வீதம் கணிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட சாதனமானது இலாபத்தை உள்ளடக்கியிருப்பின் இலாபத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுவதற்காக முன்னோக்கிய விலைகள் மற்றும் அல்லது வட்டி வீதங்களுக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள்**

உள்ளடக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி பிளக் ஷோல்ஸ் மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டதுடன் இதன் அசைவு பின்வருமாறு:

| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **466,316** | 1,244,582 |
| வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட சீர்மதிப்பு பெறுமதி நட்டம் | **(399,397)** | (778,266) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **66,919** | 466,316 |

பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க அவதானிக்க முடியாத உள்ளீடு

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 10% |
| தளம்பல் | 4% |

| உணர்திறன் பகுப்பாய்வு | கழிவிடல் வீதம் | | தளம்பல் | |
|---|---|---|---|---|
| | 9% | 11% | 3% | 5% |
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | 68,085 | 65,882 | 66,833 | 67,679 |

| உள்ளடக்கப்பட்ட பெறுதிகளிலுள்ள பிற்போடப்பட்ட சொத்து | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **102,406** | 369,455 |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்ட கட்டுப்பணம் | **(79,344)** | (267,049) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **23,062** | 102,406 |

**51.2 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சீர்மதிப்புப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு வழங்கப்பட்ட துணைநில் வைப்பு வசதியின் கொண்டு செல்லல் பெறுமதி ரூ.43,298.32 மில்லியனாகவும் (2018 - ரூ. 28,311.22 மில்லியன்) 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் கொண்டு செல்லல் பெறுமதி ரூ.50,354.88 மில்லியனாகவும் (2018 - ரூ.229,454.41 மில்லியன்) இருந்தது. 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட வெளிநின்ற அரச பிணையங்கள் எதுவும் காணப்படவில்லை (2018 - இல்லை).

51.3 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சீர்மதிப்புப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

51.4 வைப்புக்கள்

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் கொண்டு செல்லல் பெறுமதியானது சீர்மதிப்புப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமென கருதப்படுகின்றது.

51.5 சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படப்படாத நிதியியல் சாதனங்கள்

சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படப்படாத நிதியியல் சாதனங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | கொண்டு செல்லும் தொகை | | சீர்மதிப்புப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2019 ரூ.000 | 2018 ரூ.000 | 2019 ரூ.000 | 2018 ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **420,709,469** | 372,175,176 | **420,709,469** | 372,175,176 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **674,369** | 468,418 | **677,113** | 457,745 |
| ஏனைய பெறத்தக்கவை | - | 961,284 | - | 961,284 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **50,354,879** | 229,454,409 | **50,354,879** | 229,454,409 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | **236,608,971** | 198,632,571 | **236,608,971** | 198,632,571 |
| ஏனைய சொத்துக்கள் | **17,601,747** | 14,879,268 | **14,841,261** | 13,040,368 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **958,248** | 19,301,160 | **958,248** | 19,301,160 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | **82,995,147** | 79,158,977 | **82,995,147** | 79,158,977 |
| ப.நா. நிதியம் | **471,975,073** | 416,988,246 | **471,975,073** | 416,988,246 |
| ஏனையவை | **57,091,538** | 134,730,933 | **57,091,538** | 134,730,933 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | **254,581,620** | 320,106,183 | **254,581,620** | 320,106,183 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | **499,639** | 348,719 | **499,639** | 348,719 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **43,298,325** | 28,311,221 | **43,298,325** | 28,311,221 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | **677,967,150** | 640,942,510 | **677,967,150** | 640,942,510 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **12,702,888** | 12,624,764 | **12,702,888** | 12,624,764 |

பன்னாட்டு நாணய நிதிய வைப்புக்கள், வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் உள்ளக நிதிய முதலீடுகளுடன் தொடர்புபட்ட நிலுவைகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்து வேறுபடுகின்றது.

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள், உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் அரசிற்கான தற்காலிக முற்பணங்கள், வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம், பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் ஏனையவை அத்துடன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள், அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள், மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் சீர்மதிப்புப் பெறுமதிகள் அவற்றின் கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து வேறுபடவில்லை.

52. ஒப்பிட்டு ரீதியான தகவல்கள்

முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு:

| | 2018 ரூ. 000 |
|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| வங்கிகளுக்கான கடன்கள் | 95,963 |
| ஏனைய சொத்துக்கள் | 14,783,305 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | |
| ஊழியர் நன்மைத் திட்டங்களின் நிலுவைகள் | 18,333 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 12,606,431 |

தற்போதைய சமர்ப்பிப்பு:

| | குறிப்பு | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| ஏனைய சொத்துக்கள் | 52.1 | 17,601,747 | 14,879,268 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 52.2 | 12,702,888 | 12,624,764 |

52.1 2018இன் நிதியியல் நிலைமைக் கூற்றில் தனியாக வெளிக்காட்டப்பட்டிருந்த ரூ.95.96 மில்லியன் பெறுமதியான வங்கிகளுக்கான கடன்கள் சிறந்த சமர்ப்பித்தல் நோக்கங்களுக்காக ஏனைய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

52.2 2018இன் நிதியியல் நிலைமைக் கூற்றில் தனியாக வெளிக்காட்டப்பட்டிருந்த ரூ.18.33 மில்லியன் பெறுமதியான ஊழியர் நன்மைத் திட்ட நிலுவைகள் சிறந்த சமர்ப்பித்தல் நோக்கங்களுக்காக ஏனைய செலுத்தத்தக்கவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

53. தொடர்பான தரப்பினர்கள்

53.1 அரச மற்றும் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினருள் இலங்கை அரசாங்கம் (அரசு, இ.ம. வங்கியின் உரிமையாளர் என்ற

ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஆனால் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| அரச பிணையங்களின் உடனடிக் கொள்வனவு | **42,559,699** | 20,458,308 |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | **-** | 58,674,669 |
| மீள்கொள்வனவு/ விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/ விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **5,895,258,629** | 4,800,410,194 |
| மீள்கொள்வனவு/ மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட/ விற்பனை செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்க பிணையங்கள் மீதான வட்டி வருமானம்/ செலவினம் | **2,832,113** | 2,426,510 |
| அரசாங்கத்தின் சார்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியங்கள் (குறிப்பு 25.1-25.5) | **1,040,676,718** | 1,188,003,197 |
| அரசாங்கத்தின் சார்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் (குறிப்பு 25.1 - 25.5) | **1,118,006,037** | 1,144,407,670 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவு (குறிப்பு 53.1.3) | **1,459,560** | 1,605,463 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் (குறிப்பு 53.1.4) | **2,050,704** | 2,234,657 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (குறிப்பு 53.1.6) | | |
| விற்பனை | **7,242,180** | 89,011,978 |
| கொள்வனவு | **41,331,290** | 25,078,570 |
| ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள் | **193,142,524** | 221,347,285 |
| இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட ஆதனம் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | **361,297** | 118,989 |
| வாடகை வருமானம் | **346,790** | 395,682 |
| பங்கிலாப வருமானம் | **149,686** | 126,111 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் (குறிப்பு 53.1.9) | **938,056** | 1,266,674 |
| **நிலுவைகள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் (குறிப்பு 53.1.7) | **76,511,883** | 45,031,157 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் (குறிப்பு 15) | **236,608,971** | 198,632,571 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **9,710,804** | 7,524,488 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான அ.நே.மொ.தீ. நிலுவைகள் (குறிப்பு 26) | **148,823,686** | 192,367,084 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **216,077** | 209,155 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு செலுத்தத்தக்கவை (குறிப்பு 25) | **57,036,040** | 134,657,025 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் | **(119,522)** | (141,802) |
| கைவிடப்பட்ட ஆதன நிலுவைகள் | **3,125,129** | 2,571,814 |
| ஏனைய நிலுவைகள் (குறிப்பு 53.1.9) | **155,651** | 212,877 |

**53.1.1** நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 6 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 1 சிறப்பியல்பு வாய்ந்த வங்கி இலங்கை மத்திய வங்கியின் தொடர்புடைய தரப்பினர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**53.1.2** நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின்படி நாணயச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தீர்ப்பனவுகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் படுகடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதியிடல் தேவைகள் மற்றும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகள் என்பவை பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுவதற்காக அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

**53.1.3** நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் ஏக உரிமையையும் அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஏக அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டி லா ரூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**53.1.4** வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள

நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

**53.1.5** மத்திய வங்கியானது, குறிப்பு 56 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

**53.1.6** நாணய விதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறங்களிலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

**53.1.7** வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வர்த்தக நிறுவனங்களினதும் வேறும் சில நிதியியல் நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2019 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 13இல் தரப்பட்டுள்ளன. அரச பிணையங்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 36இல் தரப்பட்டுள்ளது.

**53.1.8** வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

**53.1.9** ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றன.

**53.2 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்**

ஆளுநர், துணை ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள் உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**53.3 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான கொடுப்பனவு**

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நன்மைகள் | **188,111** | 161,833 |

மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடனான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய வங்கியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

**53.4 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான வெளிநின்ற கடன்கள் | **92,549** | 71,459 |
| இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | **10,299** | 18,000 |
| இவ்வாண்டுப்பகுதியில் மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் | **7,137** | 18,052 |

அனைத்துக் கடன்களும் கடன் வகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பிணையத்தைக் கொண்டுள்ளதுடன் மாதாந்தம் மீளச் செலுத்தப்படுகின்றன.

**53.5 தொழில்நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2019<br>ரூ. 000 | 2018<br>ரூ. 000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **87,413** | 82,798 |

குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத்திற்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளைப பங்களித்ததுடன் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.715.06 மில்லியன் (2018இல் ரூ.718.71 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது வங்கியானது அதன் தொழிலுக்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான மீதிகளின் தொகை குறிப்பு 30.2இல் தரப்பட்டுள்ளது.

## 54. எதிர்பாராப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்

**54.1 நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்**

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய வெளிநின்ற உத்தரவாதங்கள் எதுவுமிருக்கவில்லை.

**54.2 கொடுகடன் உத்தரவாதங்கள்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வெளியக கொடுகடன் மூலங்களிலிருந்தான கடன் பெறுகைகளிலிருந்து மீள்நிதியிடலை வழங்குதல், அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு கடன்கள் மீதான கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குதல், உத்தரவாத தவணைத் தொகைகளைச் சேகரித்தல், கொடுகடன் உத்தரவாத நிதியங்களை நிருவகித்தல், கடன் செலுத்தத் தவறுகைகளைத் தடுக்கும் நோக்குடன் கடன் நிதியங்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக கொடுகடனுக்குப் பின்னரான சோதிப்புக்கள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தொழிற்பாடுகளை வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது. ஆண்டுகாலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது தொடர்ந்து மீள்நிதியிடல் வசதிகளை வழங்கியதுடன் இதன் கீழ், இவ்வொழுங்கின் கீழ் கொடுகடன்களை வழங்கிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு எழக்கூடிய இழப்புக்களுக்கெதிராக வங்கி உத்தரவாதங்களை வழங்கியது. இது கடன்பெறுநர்களின்

செலுத்தத் தவறுகைகளுக்கான ஒரு உத்தரவாதமல்ல என்பதோடு இழப்புக்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற இழப்புக்களுக்காக மாத்திரம் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கொடுகடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை | |
|---|---|---|
| | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
| தொடர்பான தரப்பினர்கள் | **796** | 784 |
| மொத்தக் கொடுகடன் உத்தரவாதங்கள் | **796** | 784 |

உள்நாட்டு வர்த்தக வங்கிகளின் கொடுகடன் உத்தரவாதங்கள் காரணமாக வங்கியானது 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிலுள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பாக ரூ.9.32 (2018 - ரூ.0.40 மில்லியன்) ஐப் பதிவுசெய்தது.

### 54.3 நம்பகமான செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ்வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது வழங்கச் செய்கின்றது. ஆனாலும் அச்செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

### 54.4 சட்ட ரீதியான கோரல்கள்

2019 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஏற்பாடுகளும் மேள்கொள்ளப்படவில்லை.

### 54.5 கடப்பாடுகள்

அ) 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.1,008.73 மில்லியன் பெறுமதியான மூலதனக் கடப்பாட்டைக் கொண்டிருந்தது.

ஆ) 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | 2019 ரூ. 000 | 2018 ரூ. 000 |
|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனைகள் | | |
| ஐ.அ.டொலர் | **357,000** | 726,310 |
| யப்பான் யென் | **131,500,000** | - |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | | |
| ஐ.அ.டொலர் | **-** | 388,908 |

## 55. நிதியியல் சொத்துக்களின் மாற்றல்கள்

வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது நிதியியல் சொத்துக்களின், முக்கியமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பிணையங்களின் மாற்றலுக்கு வழிவகுக்கக்கூடிய கொடுக்கல்வாங்கல்களில் வங்கி ஈடுபடுகின்றது. குறிப்பு 5.3.3இல் குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கையின்படி மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் தொடர்ச்சியாக முழுமையாக அல்லது வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படலாம் அல்லது அவை முழுமையாக அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படலாம்.

வங்கியானது முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத அல்லது முக்கியமாக பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மூலம் வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டைக் கொண்டிருக்கும் நிதியியல் சொத்துக்களை மாற்றல் செய்கின்றது.

- மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்
- கடன் பிணையங்கள்
- பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்

### 55.1 முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள்

**அ) மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் வங்கியின் நாணயக் கொள்கை செயற்பாட்டின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்படுவதுடன் இவை உடைமையின் குறிப்பிடத்தக்களவு அனைத்து இடர்நேர்வுகளையும் வெகுமதிகளையும் கொண்டுள்ளமையால் நிதியியல் நிலைமைக் கூற்றில் "இலங்கை அரச பிணையங்கள்" இன் கீழ் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கப்பட்டன. செலுத்தப்பட வேண்டிய காசு பிரதிபலன்கள் மற்றும் அதனுடன் தொடர்பான அட்டுறு வட்டி என்பன நிதியியல் நிலைமைக் கூற்றின் உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்களின் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**ஆ) கடன் பிணையங்கள்**

கடன் பிணையங்கள் விபரிப்பது யாதெனில் கட்டணத்தினால் உருவாக்கப்பட்ட சந்தை நடைமுறைகளில் பிணையங்கள் தற்காலிக அடிப்படையில் ஒரு தரப்பினரிடமிருந்து (கடன்கொடுப்பவர்: உதாரணம் இ.ம.வ) இன்னொரு தரப்பினருக்கு (கடன்பெறுபவர்) மாற்றல் செய்யப்படுவதாகும். கடன்வாங்கியவர் ஒப்பந்த தவணை முடிவில் அல்லது கேட்கப்படும் போது திரும்பச் செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும். தற்போது பல்வேறு வழங்குநர்களினால் வழங்கப்படும் முறிகள் மற்றும் பல்தேசிய முறிகள் ஆகியவற்றின் கூட்டுக்காப்பாளராக தெரிவுசெய்யப்பட்ட கிளியரிங் ஹவுஸ் செயற்படுகின்றது. அந்த முறிகளின் கேள்வியின் அடிப்படையில் அவற்றை கடன்கொடுப்பதற்கு கிளியரிங் ஹவுசினை ஏதுவாக்குவதற்காக அதனுடன் இலங்கை மத்திய வங்கி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி கடன் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடாது கிளியரிங் ஹவுஸ் நேரடியாக கடன்படுநர்களுக்கு அவற்றைக் கொடுப்பதனால் இச்செயற்பாடு தன்னியக்க முறி கடன்வழங்கல் என அழைக்கப்படும். ஒவ்வொரு மாத இறுதியிலும் தன்னியக்க கடன்வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறிகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் தன்னியக்க முறி கடன்வழங்கலின் கட்டண வருமானத்தினைக் கட்டுக்காப்பாளர் அனுப்பி வைப்பார். இது உடைமையின் குறிப்பிடத்தக்களவு முழுமையான இடர்நேர்வு மற்றும் வெகுமதிகளை கொண்டிருப்பதனால் வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களைத் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கின்றது. இந்தப் பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்களாகக் காட்டப்படுகின்றன.

**இ) பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்**

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுஸ்திரேலியா டொலர் 35.0 மில்லியன் பெறுமதியுடைய பிணையங்கள் வங்கியினால் யூரோ கிளியர் வங்கியில் பிணையிடப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 30 மில்லியன் பெறுமதி கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

வங்கிக் கணக்கிலான நடவடிக்கையின் மீளாய்வு மற்றும் யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் நீட்டிப்பை ஆளுகை செய்யும் பொது நிபந்தனைகளின் குறிப்பு என்பனவற்றைத் தொடர்ந்து வங்கியின் கொடுகடன் வசதயானது 2017 சனவரி 31 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஐ.அ.டொலர் 20.0 மில்லியனுக்குக் குறைவடைந்தது.

யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் நீட்டிப்பை ஆளுகை செய்யும் பொது நிபந்தனைகளில் குறிபடபிடப்பட்டவாறு 2018 நவெம்பர் 5 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொடுகடன் வசதி இடைநிறுத்தப்பட்டதென யூரோ கிளியரினால் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்டது.

| | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறு மதியிலான நிதியியல் சொத்துக்கள் 2019 ரூ. 000 | விற்பனைக்கு கிடைக்க தக்கவற்றிலான நிதியியல் சொத்துக்கள் 2018 ரூ. 000 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| கடன் பிணையங்கள் | **1,059,885** | 3,714 |
| பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள் | **4,794,109** | 4,841,397 |
| சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி | **5,853,994** | 4,845,111 |

## 56. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

**56.1** வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதியிடப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் கொடுகடன் திட்டங்களின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைத்தரப்பினர் நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

**56.2** வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். சட்ட நியதிகளின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், மற்றும் அங்கத்தவர்களுக்கு நன்மைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பன நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

**56.3** மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

**56.4** 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673∴ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி, 2019.12.31இல் உள்ளவாறு 73 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்பட வேண்டிய வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்கள் மற்றும் அனைத்துக் கடன் சாதனங்களும் நீங்கலான உறுப்பினர் நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் ஆரம்பத்தில் வைப்பாளர்களாகயிருந்து 2012 சனவரி 01இற்கு முன்னர் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நாணயச் சபையின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வியாபார மீளமைத்தல் திட்டங்களின் ஒரு பகுதியாக உரிமை மூலதனமாக மாற்றப்பட்ட பங்குதாரர்களின் பங்குகளின் பெறுமதி என்பவற்றை உள்ளடக்கும்.

வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.20 மில்லியன் மாற்றலின் மூலமும் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் முதலீட்டு மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31இல் நிதியத்தின் அளவு ரூ.65.1 பில்லியனாக் (தற்காலிகமானவை) இருந்தது. தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத் தொகை ரூ.600,000.00 அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கு மேலதிகமாக ஏற்படும் ஏதாவது பொறுப்பிற்கு நாணயச் சபையோ இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து இத்திட்டம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்” என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதி நிதி “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதி” என மீளப்பெயரிடப்பட்டது.

வைப்புக் காப்புறுதிப் பிரிவு தற்பொழுது தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், இது, காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்∴ ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளரின்

அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கின்றது. வைப்புக் காப்புறுதிப் பிரிவானது வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தெளிவாகவும் தனியாகவும் ஏடுகளையும் கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

**56.5** நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்கின்றது. இத்தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையகப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**56.6** வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பாற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச சங்வர்த்தன வங்கி மற்றும் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட அத்தகைய தொகையை விஸ்கம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு மீள்நிதியிடலாக வழங்கியது. 2019 திசெம்பர் 31இல், அவ்வாறு திரட்டப்பட்ட அனைத்து நிதியங்களும் வங்கிகளுக்கு மீளளிக்கப்பட்டதுடன் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வெளிநின்ற கடன் தொகை எதுவுமிருக்கவில்லை என்பதுடன் 2019இல் அத்தகைய கடன்களுக்காக வட்டி எதுவும் பெறப்படவில்லை (2018 காலப்பகுதியில் ரூ.0.17 மில்லியன்). மேலும் முதலீட்டிலிருந்து ரூ.102.65 மில்லியன் (2018 - ரூ.28.12 மில்லியன்) வருமானத்தை உழைத்துக் கொண்டது.

**56.7** பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வங்கியின் நாணயச் சபையின் சார்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் வெளிநாட்டுக் கொடையாளர்களின் நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் முகவராகத் தொழிற்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட செற்றிட்டங்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.

I. **இ.ம.வங்கியினால் நிதியிடப்படும் செயற்றிட்டங்கள்**

(i) **முடிவடைந்த செயற்றிட்டங்கள்**

| செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.) | | குறிக்கோள் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.) |
|---|---|---|---|---|
| சுசகன | இல.ரூ | 352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தொழில்முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 351.06 |
| சுசகன | இல.ரூ | 3,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத்தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,750.00 |
| சுசகன கட்டம் II | இல.ரூ | 500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத்தொடங்குவதற்கு மேலதிக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 |
| வடக்கின் எழுச்சி | இல.ரூ | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,000.00 |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு துறைகளின் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குதல் | 1,000.00 |
| சுனாமிக்குப் பின்னைய கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.09 | சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய சொத்துக்களை மீளப்பெறுவதற்கும் அவர்களுடைய வழமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கான அடித்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் அதேநேரம் புதிய இலாபமுள்ள வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கும் உதவி வழங்குதல் | 190.77 |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இல.ரூ | 1,078.27 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு உதவியளித்தல் | 1,000.00 |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இல.ரூ | 1,000.00 | உயர் கேள்வி மற்றும் வியாபாரச் சூழலை புனரமைப்பதற்கான பிரதேசத்தின் தேவைப்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு மேலும் உதவியளித்தல் | 1,428.47 |
| வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | இல.ரூ | 600.00 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் போது சேதமடைந்த வீடுகளைத திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600.00 |
| அனர்த்தங்களுக்கு பின்னரான பொருளாதார நடவடிக்கைகளை மீளமைப்பதற்கான கடன் திட்டம் | இல.ரூ | 134.58 | அண்மைக்கால வெள்ளம் மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள்/ சிறிய முயற்சியாண்மைகள் தமது வியாபாரங்கள் அல்லது வருமானமீட்டும் நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கு அவ்வியாபாரங்கள் அல்லது சிறிய முயற்சியாண்மைகளின் அனர்த்தத்திற்குப் பின்னரான மீட்பு நடவடிக்கைகளில் கடன்பெறுநர்களுக்கு (தனிநபர்களின் தனிநபர் குழு) உதவுதல் | 134.58 |
| மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இல.ரூ | 2,900.00 | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களின் நடவடிக்கைகளை விரிவாக்குதல் | 2,900.00 |

(ii) **நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| சௌபாக்கிய கடன் திட்டம் | இல.ரூ | 30,301.79 | நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வியாபார நடவடிக்கைகளை விரிவாக்குதல் | 30,301.79 |

II. இலங்கை அரசாங்கம்/ கொடையாளர் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

(i) முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத்தன்மையினையும் அதிகரிக்கும் அதேவேளை இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் அநுகூலங்களைப் பேணுவதற்காக பெருந்தோட்டத் துணைத் துறைகளில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் | 5,200.00 |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 2,656.00 | சிறிய வியாபாரங்களை மீட்பதன் மூலம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 2,663.40 |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் -சுழலும் நிதியம் | இல.ரூ | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 122.72 |
| தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் | இல.ரூ | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மேம்படுத்தல் | 94.59 |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப்புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ | 15.10 | வீடுகளைக் கட்டுவதனூடாக வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு குறைந்த வருமானச் சமூகத்தினருக்கு உதவுதல் | 1,915.76 |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 1.80 | வடமேல் மாகாணத்திலுள்ள மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில்முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 |
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தி இயலளவை அதிகரித்தல் | 642.00 |
| வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | ஐந்து எல்லை மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 |
| சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலைக்கான வசதிகளை புனரமைத்தல் | 645.93 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக முறையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறையொன்றினை ஏற்படுத்துதல் | 1,402.45 |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 17.40 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும் | 345.69 |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றுதல் | 564.00 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் அதன் பணித் துறைகள் உள்ளடங்கலாக சிறிய மற்றும் நடுத்தரளவு செயற்றிட்டங்களை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 |
| வடக்கின் எழுச்சி | இல.ரூ | 2,154.25 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,361.00 |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்தல் | 1,199.82 |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல், பண்ணையல்லாத தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குதல் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குதல் | 77.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II | இல.ரூ | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேலும் மேம்படுத்துவதற்கும் | 70.00 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2381.00 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 3,213.20 |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி | இல.ரூ | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 232.39 |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குதல் | 252.95 |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ. டொலர் | 32.90 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தியில் நன்மை பெறுநர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் சிறு உடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளித்தல் மற்றும் அவர்களது வருமானத்தினை மேம்படுத்துவதற்கு தொழில்பெறும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குதல் | 113.13 |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 2.60 | மொனராகல, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 487.66 |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - நுண்பாக நிதி | இல.ரூ | 1,049.84 | தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்ட பிரதேசங்களின் வசதி குறைந்தோரின் வருமான மட்டம் மற்றும் சமூக நிலையை முன்னேற்றுதல். | 1,049.84 |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி மூலதன வேளாண் கடன் திட்டம் | இல.ரூ | 135.69 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் திறன், தரம் மற்றும் கூட்டப்பட்ட பெறுமதியை அதிகரித்தல் | 135.69 |
| தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மை கடன் திட்டம். | இல.ரூ | 302.04 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம் மற்றும் கூட்டப்பட்ட பெறுமதியை மேலும் மேம்படுத்தல் | 302.04 |
| “தருண திரிய” இளைஞர்களுக்கு வலுவளித்தல் மற்றும் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | இல.ரூ | 288.48 | சிறிய வியாபாரங்கள் மற்றும் ஏனைய வடிவங்களிலான சுயமுயற்சி செயற்றிட்டங்களை உள்ளடக்கி, தேர்ச்சி மட்டங்களை மேம்படுத்தவும் இயலளவைக் கட்டியெழுப்பவும் கிராம மட்டத்திலான வறிய இளைஞர்களுக்கு உதவுதல் | 288.48 |
| வறண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 252.90 | அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானமீட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தல் | 252.89 |
| சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல். | 1,564.75 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) - சுழலும் நிதி | இல.ரூ | 2,764.84 | குறைந்த வருமான சமூகத்தினரின் மட்டத்தை மேம்படுத்தல் மற்றும் முறையான நிதியியல்பணிகளின் உள்ளடக்கத்தினை மேம்படுத்தல் மற்றும் அத்தகைய மக்களின் வருமானமீட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தல் | 7,016.86 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4 பீ மூலதனம் | ஐ.அ. டொலர் | 30.29 | உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி அவற்றின் இயலளவைக் கட்டியெழுப்புதல், தனியார் துறையுடனான பங்குடமையுடன் வலையமைப்பை அமைத்தல் மற்றும் வலுப்படுத்தல் செயன்முறையைப் பயன்படுத்தி வர்த்தக ரீதியான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையினூடாக சிறு உடமையாளர்களின் வறுமையைக் குறைத்தல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல் மற்றும் 57,500 சிறு உடமையாளர்களின் வருமான மட்டம் மற்றும் உணவுத் தரத்தை அதிகரித்தல் போன்றவற்றிற்குப் பங்களித்தல் | 125.85 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4 பீ பருவகாலம் | | | | 854.05 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் இளைஞர் | | | | 14.45 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் வருமான உருவாக்கம் | | | | 106.42 |

(ii) **நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,100.00 | தொழில் துறையிலுள்ள தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்தல் | 964.87 |
| சுவசக்தி கடன் திட்டம் | இல.ரு | 4,000.00 | புதிய மற்றும் தற்போதுள்ள முயற்சியாளர்களுக்கு உதவி வழங்கும் அதேவேளை வேலைவாய்ப்புக்களை விரிவுபடுத்தல் | 2,576.89 |
| "அத்வெல" - அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் | இல.ரு | 2,000.00 | இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டவாறு எந்தவொரு அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட எந்தவொரு தகுதிவாய்ந்த பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைக்க ஆதரவளித்தல் | 1,687.52 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் மீள் நிதியிடல் (பிரபோதினி) | இல.ரு | 1,031.00 | முறைமை சார்ந்த நிதியியல் துறை வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத குறைந்த வருமானமீட்டும் குழுக்கள் அல்லது சமூகத்தினரால் மேற்கொள்ளப்படும் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறையை உருவாக்குவதற்கு உதவியளித்தல் | 5,284.56 |
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ. டொலர் | 30.29 | உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி அவற்றின் இயலளவைக் கட்டியெழுப்புதல், தனியார் துறையுடனான பங்குடமையுடன் வலையமைப்பை அமைத்தல் மற்றும் வலுப்படுத்தல் செயன்முறையைப் பயன்படுத்தி வர்த்தக ரீதியான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையினூடாக இலங்கையின் சிறு உடமையாளர்களின் வறுமையைக் குறைத்தல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல் மற்றும் 57,500 சிறு உடமையாளர்களின் வருமான மட்டம் மற்றும் உணவுத் தரத்தை அதிகரித்தல் போன்றவற்றிற்குப் பங்களித்தல் | - |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்சித்திட்டம் 4 பீ இளைஞர் | | | | |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் இளைஞர் | | | | |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் வேளாண்வியாபாரம் | | | | |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் வருமான உருவாக்கம் | | | | |
| சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு - கட்டம் II | இல.ரு | 950.00 | தேசிய தொழிற்பயிற்சி தகைமையின் சான்றிதழை அல்லது டிப்ளோமை பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு புதிய வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவேயிருக்கும் வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு உதவியளித்தல் | 409.54 |

II. **ஏனையவை**

(i) **நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| விஸ்கம் (வேளாண்மைத் துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்) | இல.ரு | 1,325.60 | நாட்டில் வர்த்தக வேளாண் வியாபாரத்தின் முதலீடு, பன்முகப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் | 881.00 |

**57. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

நிதியியல் கூற்றுக்களை சீர்செய்தல் அல்லது நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்தப்படவேண்டிதாகவுள்ள பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் நிதி அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து, காலாந்தரப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க நிறுவப்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை, திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆளப்படுகின்றன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இலங்கையிலுள்ள வங்கி முறைமையின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதுடன் உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பாளர்களின் வட்டி மற்றும் கடன்கொடுநர்களைப் பாதுகாப்பதற்கும் தொழிற்படுகின்றது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக வர்த்தக மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு உரிமம் வழங்குவதுடன் முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் வழிகாட்டல்களையும் உருவாக்குதல் (இதன்பின் உரிமம்பெற்ற வங்கிகள்) உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் காலாந்தரப் பரீட்சிப்புக்களையும் மேற்கொள்ளுதல், உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள் முதன்மை நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணிகளின் வேலைக்குப் பொருத்தமான தன்மையினை அங்கீகரித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், தேவையானவிடத்து நாணயச் சபையின் ஒப்புதலுடன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் வங்கித்தொழில் துறையின் விழிப்பணர்வினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல் போன்றன உள்ளடக்கப்படுகின்றன.

2019இன் இறுதியிலுள்ளவாறு, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வரம்பிற்குள் 26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் வங்கித்தொழில் துறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக 3 வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்களும் இலங்கையில் தொழிற்படுகின்றன. உரிமம்பெற்ற வங்கிகளினதும் பிரதிநிதித்துவ அலுவலகங்களினதும் பட்டியல் இணைப்பு II-1 இல் தரப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல்

உரிமம் பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. முக்கிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

**அ. கரைகடந்த அலுவலர்களின் தொழிலுக்கான கட்டமைப்பு**

ஏற்கனவே விடுக்கப்பட்ட சுற்றறிக்கையினை பின்வாங்கும் அதேநேரம் இலங்கையில் உரிமம்பெற்ற வங்கியில் கரைகடந்த அலுவலர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதற்கான கட்டமைப்பினை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிப்பதற்கு ஓர் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. வங்கிகளானது கரைகடந்த அலுவலர்களைத் தொழிலிற்கு அமர்த்துவதற்கு முன்னர் உள்ளூர் அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்பதுடன் நியாயமான காலப்பகுதிக்குள் கரைகடந் அலுவலர்களினால் வைத்திருக்கப்பட்ட பொறுப்புக்களை எடுத்துக்கொள்வதற்கு உள்ளூர் திறமையான அலுவலர்களை இனங்கண்டு பயிற்சியளிப்பதற்கான தொடர்ச்சியான திட்டத்தை உருவாக்க வேண்டுமென வேண்டிக் கொள்ளப்படுகின்றன.

**ஆ. வருடாந்த மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல்களின் பிரசுரம்**

புதிய இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ. நியமம் 9இன் பிரகாரம், ஏற்கனவே இருக்கின்ற மாதிரியினை மாற்றுவதுடன் நிதியியல் கூற்றுக்களைப் பிரசுரிப்பதற்கு புதிய மாதிரித் தொகுதிகள் “உரிமம்பெற்ற வங்கிகளின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல்களின் பிரசுரம்” எனும் சுற்றறிக்கை மூலம் விடுக்கப்பட்டிருக்கிறது.

**இ. உரிமம் பெற்ற வங்கிகளின் வட்டி உழைக்கக்கூடிய சேமிப்பு மற்றும் கால வைப்புக்களுக்கான வட்டியல்லாத ஊக்குவிப்புத் திட்டம்**

இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட வட்டி வீதக் கொள்கைகளைக் குறைத்து மதிப்பிடும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையிலான தேவையில்லாத போட்டியை உருவாக்கக்கூடிய வட்டி உழைக்கக்கூடிய வைப்புக்களைச் சேமிப்பதற்காக வழங்கப்படும் வட்டியல்லாத ஊக்குவிப்புத் திட்டங்களை கருத்திற்கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளானது நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளைத் திரிவுபடுத்தக்கூடிய பண்புகளையுடைய அதிஷ்ட இலாபச்சீட்டு மற்றும் பரிசுத்திட்டங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் தீமையான நிலைமையினை நிறுத்துவதற்கு வேண்டிக் கொள்ளப்பட்டனர்.

**ஈ. உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப்பொருட்களின் இறக்குமதியினைக் குறைப்பதற்கான அளவீடுகள்**

இசைவாக்கச்சீட்டின் பிரகாரம் சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காக திறக்கப்படும் நாணயக் கடிதம் மீதான கடப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளது என உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

**உ. உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபாப் வைப்புக்களின் ஆகக்கூடுதலான வட்டி வீதங்கள்**

நிதியியல் முறைமையினூடாக நாணயக் கொள்கை மாற்றத்தை வரைவுபடுத்துவதற்கும் மற்றும் பலப்படுத்துவதற்குப் பொருளாதாரத்தில் காணப்படும் வைப்புக்கள் மற்றும் கடன் சாதனங்களின் ஆகக் கூடுதலான மெய் வட்டி வீதங்களைக் கருத்திற்கொண்டு ரூபாய் வைப்புக்களுக்குக் ஆகக் கூடுதலான வட்டி வீதங்களை அமுல்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நாணய விதிச் சட்டத்தின் கட்டளையொன்று விடுக்கப்பட்டிருக்கின்றது. மெய் பொருளாதாரத்தில் உரிமம்பெற்ற வங்கிகளின் நிதிச் செலவுகளைக் குறைத்து அதன் பிரகாரம் கடன் வட்டி வீதங்களைக் குறைத்து கடன்பாய்ச்சலினை அதிகரிப்பதற்காகவே இச்செயற்பாடு அமுல்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், மூன்று மாதங்களிற்கு உட்பட்ட அல்லது முதிர்வு நிதியிடப்படாத சேமிப்பு மற்றும் வைப்புக்களுக்கான வட்டி வீதம் நியதி வைப்பு வசதி வீதத்தின் பிரகாரம் இருக்க வேண்டுமென்பதுடன் மூன்று மாதம் மற்றும் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட வைப்புக்களின் வட்டி வீதங்கள் திறைசேரி 364 நாட்கள் உண்டியல்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். ரூபாய் மதிப்புடைய சந்தைக் கடன் வீதங்களுக்கான அண்மையில் விடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மான மாற்றங்களின் செயற்றிறனை அதிகரித்தல் தொடர்பான நாணய விதிச் சட்டத்தின் விடுப்புடன் இக்கட்டளையானது செத்தெம்பரில் பின்வாங்கப்பட்டது.

ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வழங்கல் வீதங்களில், சமீபகால கொள்கைத் தீர்மானங்களின் ஊடுகடத்தல் வினைத்திறனின் மேம்பாடு மீதான ஒரு நாணயவிதிச் சட்டக் கட்டளை உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. இதற்கமைய, மந்தமான பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக பொருளாதாரத்துக்கான கடன் பாய்ச்சலை மேம்படுத்தும் நோக்கில் இலக்கிடப்பட்ட திகதிகளுக்கிடையில் ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டிவீதத்தினை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான அடிப்படைப் புள்ளிகளால் குறைக்குமாறு உரிமம் பெற்ற வங்கிகள்

கோரப்பட்டன. மேலதிகமாக, கடன் அட்டை முற்பணங்கள், முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட மேலதிகப் பற்றுகள் மற்றும் அபராத வட்டிவீதங்களுக்கான வட்டிவீத உச்ச எல்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**ஊ. இலங்கை கணக்கீட்டு நியமத்தினைப் பின்பற்றுவதற்கான சுற்றறிக்கையின் துணைப்பகுதி - இ.க.நி. 9 - உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிதியியல் சாதனங்கள்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களினால் எதிர்வுகொள்ளப்பட்ட அதிகூடிய வட்டி வீதங்கள் மற்றும் பிரச்சனைகளைக் கருத்திற்கொள்ளும் விடயமாக 01.01.2019 இலிருந்து 30.06.2019 மாறும் காலப்பகும் இ.க.நி. 9 இனைப் பின்பற்றுவதன் பிரகாரம் பல்வேறுபட்ட இடைக்கால அளவீடுகளை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்குவதற்கு சுற்றறிக்கை ஒன்று வழங்கப்பட்டது.

**எ. மூலதனம் மற்றும் திரவத்தன்மை நியமங்கள் மீதான பாசல் III இன் கீழ் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பில் வரையறுக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள்**

பாசல் III கட்டமைப்பின் கீழ் மூலதனம் மற்றும் திரவதத்தன்மை நியமங்களுக்கான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை அடையாளப்படுத:துவதற்கான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை அறிவிப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

**ஏ. சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட சலுகை**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பிரகாரம், சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட எதிர்மறையான விளைவினைக் கருத்திற் கொண்டு, சலுகை பெற்றுக்கொள்ள விரும்பும் சுற்றுலாத் துறையிலுள்ள தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு சலுகையினை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை வேண்டிக் கொள்வதற்கு சுற்றறிக்கை ஒன்று விடுக்கப்பட்டது. இச்சலுகையானது சுற்றுலாத் துறையிலுள்ள தனிப்பட்ட மற்றும் நிறுவனங்களின் வியாபாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் உரிமம்பெற்ற வங்கிகளிலுள்ள செயற்படாக் கடன்களைக் குறைப்பதனையும் நோக்கங்களாகக் கொண்டிருந்தன. இதன் பிரகாரம், இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகாரசபை அல்லது இவ்வதிகாரசபைக்கு கீழுள்ள ஏதாவது அதிகாரசபை மற்றும் முகவர்களில் பதிவுசெய்த தனிநபர் மற்றும் நிறுவனங்கள் வேறுபட்ட அடிப்படையில் பிற்போடப்பட்ட கடன் கொடுப்பனவு முறையினை உரிமம்பெற்ற வங்கிகளும் வழங்கலாம் என அறிவிக்கப்பட்டது. 2020 யூலையிலிருந்து அறிவிடக்கூடிய வகையில் சலுகை வட்டி வீதத்தில் பிற்போடப்பட்ட தவணைக் கடனாகச் செலுத்தப்படாத மூலதனம் மற்றும் வட்டி வீதங்களை மாற்றுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டிக் கொள்ளப்பட்டன. தொடர்ச்சியாக, கணக்கீட்டுச் செயற்பாடு மற்றும் பதிவுசெய்யப்பட்ட தனிநபர் மற்றும் நிறுவனங்களை அங்கீகரிக்கின்ற சலுகை அடிப்படையில் பிற்போடப்பட்ட முறையினை விண்ணப்பித்தல் தொடர்பான விபரம் தொடர்பாக விரிவான கூறிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

**ஐ. உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கான பெறுமதிக்கு கடன் விகிதங்கள்**

இலங்கை முயற்சியாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையிலான சிறிய வாகனங்களின் கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பதிவுசெய்யப்படாத இலத்திரனியல் உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஊர்திகளுக்கான கடன் வசதிகளுக்குப் பொருத்தமான கடன் பெறுமதி விகிதங்கள் மீளப்பார்க்கப்பட்டது தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

**ஒ. இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.க.நி. 9 இன் பிரகாரம் மூலதனப் போதுமை விகிதம் மற்றும் முடுக்கி விகிதம் மீதான ஒழுங்குபடுத்தும் வங்கித்தொழில் சட்ட ஒழுங்குபடுத்தல்களை இசைவுப்படுத்தல்.**

பாசல் III இன் கீழ் இ.க.நி. 9 இனைப் பின்பற்றுவதிலுள்ள சிக்கல்கள் மற்றும் மூலதனம் மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் கணக்கீட்டின் சமூகத்தின் உறுதிப்படுத்தலைக் கருத்திற்கொண்டு, இ.க.நி. 9 உடன் பாசல் III இன் கீழ் மூலதனப் போதுமை விகிதம் மற்றும் முடுக்கி விகிதத்திற்கான ஒருங்கிணைந்த கணிப்பீட்டினை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விரிவான குறிப்பினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் விடுத்துள்ளது.

**ஓ. இலங்கையில் உரிமம்பெற்ற வங்கிகளின் திறைசேரி செயற்பாடுகளுக்கான சந்தை நடத்தை மற்றும் நடைமுறைகள்**

உரிமம்பெற்ற வங்கிகளுக்கான சந்தை நடத்தை மற்றும் திறைசேரி தொழிற்பாடுகளுக்கான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளானது, சந்தை நடத்தை மற்றும் விழுமிய நடைமுறைகள், நம்பகத்தன்மைத் தேவைப்பாடுகள், கொடுக்கல்வாங்கல் தொடர்பான உரையாடல்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள், இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், தொழில்சார்ந்த மனப்பான்மை, அறிவு மட்டம் மற்றும் பணிப்புரைகளுடன் இணக்கமின்மைகளின் போதான தடைகள் என்பவற்றை உள்ளடக்கி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்பட்டது. இந்த வழிகாட்டுதல், திறைசேரிச் செயற்பாடுகளுக்கான சந்தை நடத்தை மற்றும் நடைமுறைகளை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளில் சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை வலுப்படுத்தவும் அதன் மூலம் நிதி அமைப்பின் உறுதித்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டிருந்தது. இது தொடர்பாக முன்பு வெளியிடப்பட்ட பணிப்புரைகளும் சுற்றறிக்கைகளும் மீளப்பெறப்பட்டது.

**(ஔ) இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வீதங்களின் அண்மைய கொள்கை முடிவுகளைப் பரிமாற்றுவதன் வினைத்திறனை அதிகரித்தல்**

இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வீதங்களின் அண்மைய கொள்கை முடிவுகளைப் பரிமாற்றுவதன் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ஒரு நாணய விதிச் சட்டக் கட்டளை வெளியிடப்பட்டது. அதன்படி, பொருளாதார நடவடிக்கைகளைப் புதுப்பிக்க, பொருளாதாரத்துக்கு கடன்பாய்ச்சும் நோக்குடன், நிர்ணயிக்கப்பட்ட இலக்கு திகதிகளின் அடிப்படையில் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களைக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அடிப்படைப் புள்ளிகளால் குறைத்திட உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. மேலும், கடனட்டை முற்பணம், முன்னேற்பாடு செய்யப்பட்ட தற்காலிக வங்கி மேலதிகப்பற்று மற்றும் அபராத வட்டி வீதங்களுக்கான வட்டி விகித மேலெல்லை அறிமுகப்படுத்தப்பட்டன.

**(க) உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு தகுதியான கணக்காய்வாளர்களின் பட்டியல்**

2021 சனவரி 01ஆம் திகதி முதல், உரிமம் பெற்ற வங்கிகளின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு தகுதியான கணக்காய்வாளர்களின் புதிய பட்டியலை அறிவித்து சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. வங்கித்தொழில் துறைப் பரப்பில் ஏற்படும் மாற்றங்கள், கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் தொழில்களிலான மாற்றங்கள், பாசல் III தேவைப்பாடுளின் அறிமுகம் மற்றும் இலங்கை கணக்கீட்டு அறிக்கையிடல் நியமம் 09 போன்ற மாற்றங்களுடன் தற்போதுள்ள கணக்காய்வாளர்களைத் தெிவுசெய்தவற்கான தகுதிகள் வலுப்படுத்தப்பட்டன.

**(ங) உரிமம்பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களை மதிப்பீடு செய்வது தொடர்பான ஒழுங்குமுறைக் கட்டமைப்புக்கான திருத்தங்கள்**

உரிமம்பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் கீழ் மதிப்பீட்டாளர்களுக்கான தகுதிகளைத் திருத்தும் வகையில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

**(ஞ) உரிமம்பெற்ற வங்கிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் நிறைவேற்று பணிகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பீடு செய்தல்**

வங்கித்தொழில் சட்ட தீர்மானங்கள், உரிமம்பெற்ற வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை மேற்கொள்வதற்கான அதிகாரிகளாகக் குறிப்பிட்ட பதவி நிலைகளை குறித்துரைத்து மற்றும் அவ்வதிகாரிகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் பணி நியமனத்திற்று முன் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில், வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலைப் பெறும் நோக்குடன் தங்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பிட/ மீளமதிப்பீடு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியால் வகுத்தமைக்கப்பட்ட கட்டமைப்பில் தகவ்களை வழங்க வேண்டி வெளியிடப்பட்டது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட முன்னைய சுற்றறிக்கைகளும் மீளப்பெறப்பட்டது.

**(ட) உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பீடு செய்தல்**

உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பீடு செய்வதற்கான வங்கித்தெரில் சட்டப் பணிப்புரையானது, உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்ளாக தெரிவுசெய்யப்பட்ட, தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட நபர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள் உட்பட, அத்தகைய பணிப்பாளர்ளின் வருடாந்த மீள்மதிப்பீடு செய்வதற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலைப் பெறுவதற்குத் தேவையான தகவல்களை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கி வெளியிடப்பட்டது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட முன்னைய சுற்றறிக்கைகள் மீளப்பெறப்பட்டது.

**(ண) கம்பனி ஆளுகை தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்பரைக்கான திருத்தங்கள்**

இலங்கையில் தொழிற்படும் ஒரு உரிமம்பெற்ற வங்கியின் ஒரு பணிப்பாளர் அல்லது ஒரு பிரதம நிறைவேற்று அலுவலரை இன்னொரு இலங்கையில் தொழிற்படும் உரிமம்பெற்ற வங்கியின் ஒரு பணிப்பாளராக அல்லது ஒரு பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக நியமிக்கப்படுவதற்காக 6 மாத காலப்பகுதியை அறிமுகப்படுத்தி உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

**(த) கட்டமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் கையாளுவதற்கான கட்டமைப்பு**

ரூ.500 பில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்ட வங்கிகளை கட்டமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக வரையறை செய்த முன்னைய நிபந்தனையைத் திருத்தி, அளவு, இணைப்பு நிலைமை, பிரதியீடற்றதன்மை மற்றும் சிக்கலான தன்மை என்பவற்றின் காரணமாக அவற்றின் தோல்வியானது நிதியியல் முறைமையில் பெரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வங்கிகளை அடையாளங்காணக்கூடிய கட்டமைப்பொன்று வெளியிடப்பட்டது. அத்தகைய வங்கிகள் மேலதிகமாக, உயர் நட்டங்களை ஏற்றுக்கொள்வதற்கான தேவைகளை மேலதிக மூலதனத் தேவைப்பாடாக வைத்திருக்கத் தேவைப்படுத்தப்படுகின்றன. இதன்படி, 4 உரிமம்பெற்ற வங்கிகள் கட்டமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக நிர்ணயிக்கப்பட்டு அவற்றுக்கான உயர் நட்டங்களை ஏற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடுகளைக் குறிப்பிட்டு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை வெளியிடப்பட்டது. மேலும், கட்டமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான மேலதிக உயர் நட்டங்களை ஏற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடுகளை பொது உரிமை மூலதன அடுக்கு 1 என்ற வடிவில் உருவாக்கவேதுவாக பாசல் IIIஇன் கீழான மூலதன தேவைப்பாடுகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மீளமைக்கப்பட்டன.

**2.2 புதிய வங்கித்தொழில் சட்ட வரைவு**

நிதியியல் துறையில் ஏறத்தாழ 62 சதவீதத்தைக் கொண்ட இலங்கையின் வங்கித்தொழில் துறையின், போட்டித்திறன், வேகமான பரிமாணம் மற்றும் சிக்கலான தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்போதைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான முக்கியத்துவம் அண்மைக் காலத்தில் உயர்வாகக் காணப்பட்டது. அதன்படி, வங்கி மேற்பார்வைத் திணைக்களம் புதிய வங்கித்தொழில் சட்டத்தை வரைவதனைத் தொடங்கியதுடன் புதிய வங்கித்தொழில் சட்டம் தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ள பிரதான எண்ணக்கருக்கள் நாணயச் சபைக்கு 2019 காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

புதிய வங்கித்தொழில் சட்டத்தில் சேர்ப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய எண்ணக்கருக்கள், ஒற்றை வகை வங்கி உரிமம், வங்கி ஒழுங்குமுறைகளில் விகிதாசார முறை, உரிமம்பெற்ற வங்கிகளின் துணைக் கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனிகளுக்கான நிதியியல் பிடித்துவைப்பு கம்பனி கூட்டமைப்பு அறிமுகம், வங்கிகளின் உரிமை மூலதன முதலீடுகளை ஒழுங்குபடுத்துதல், இலங்கையிலுள்ள வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் துணைக் கம்பனி மயமாக்கல் நுகர்வோர் பாதுகாப்பு, கம்பனி ஆளுகையை வலுப்படுத்துதல் மற்றும் கொழும்பு பன்னாட்டு நிதியியல் நிலையத்தில் உருவாக்கப்பட்ட வங்கிகளுக்கு புதிய வங்கித்தொழில் சட்டத்தின் விதி முறைகளை விரிவுபடுத்தல் என்பனவாகும்.

மேற்கூறப்பட்ட எண்ணக்கருக்கள் அடங்கிய ஒரு ஆலோசனை அறிக்கை வங்கித்தொழில் துறைக்கும் பிறதொழில்சார்ந்த தொடர்புடைய தரப்பினருக்கும் கருத்துக்களை வழங்கவும் மற்றும் அவதானிப்பிற்காகவும் வெளியிடப்பட்டதுடன், 2021இன் தொடக்கத்தில் புதிய சட்டத்தினை ஒருங்கமைப்பதனை நிறைவுசெய்ய இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

**2.3 வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் நாணயச் சபையால் வழங்கப்படட ஒப்புதல்கள்**

**(அ) உரிமம்பெற்ற வங்கிகளின் இணைப்புக்கள், கையகப்படுத்தல்கள் மற்றும் மூடல்கள்**

இவ்வாண்டு காலப்பகுதியில் மத்திய வங்கி சிறிய அரசுடமையான உரிமம்பெற்ற வங்கிகளை ஒருங்கிணைப்பதற்கான தொழிற்பாட்டிற்கு வழிவகுத்தது. அதன்படி, இலங்கை மத்திய வங்கி பிரதேச அபிவிருத்தி வங்கியால் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி லிமிடெட்டின் வங்கி வணிகத்தை கையகப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தலை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கான ஒழுங்கமுறைப்படுத்தல் ஒப்புதல்களை உரிய நேரத்தில் வழங்கியதுடன் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்கியது. ஒருங்கிணைப்பு தொழிற்பாடு நிறைவடைந்தவுடன் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கியின் உரிமம் இரத்துச் செய்யப்படடது. மேலும், தேசிய சேமிப்பு வங்கியால் இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டை கையப்படுத்துவதற்கான செயற்பாட்டுக்கும் மத்திய வங்கி வழிவகுத்தது. மேலும், அக்சிஸ் வங்கி லிமிடெட்

மற்றும் ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் என்பவற்றை மூடுவதற்கான செயற்பாடுள் அவற்றின் தலைமையகத்தின் கோரிக்கையின்படி நாணயச் சபையால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகளின் கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள்

இவ்வாண்டு காலப்பகுதியில், 1557 ஒப்புதல்கள் செயற்படுத்தப்பட்டதுடன் 1,519 ஒப்புதல்கள் வழங்கப்பட்ட வேளையில் 38 கோரிக்கைகள் முன்மதியுடைய விடயங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்டன/ நிராகரிக்கப்பட்டன (அட்டவணை II-1). இதன்படி, 2019 இறுதியில் 3,604 வங்கிக் கிளைகளும் 3,783 மாணவர் சேமிப்பு அலகுகளும் 5,571 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன.

**அட்டவணை II - 1**

**கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் தொடர்பான ஒப்புதல்கள்**

| ஒப்புதல்களின் வகைகள் | ஒப்புதல்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | செயன்முறையிலுள்ளவை | வழங்கப்பட்டவை |
| **திறத்தல் மற்றும் நிறுவுதல்** | 1,281 | 1,251 |
| கிளைகள் | 66 | 50 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் | 146 | 136 |
| மாணவர் சேமிப்பு அலகுகள் | 231 | 231 |
| காசு வைப்பு இயந்திரங்கள் | 63 | 61 |
| நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் ஊர்திகள் | 560 | 560 |
| செல்லிடத் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் காசு வைப்பு இயந்திரங்கள் | 8 | 8 |
| **வேறிடத்தில் அமைத்தல்** | **149** | **143** |
| கிளைகள் | 137 | 131 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் காசு வைப்பு இயந்திரங்கள் | 12 | 12 |
| கிளைகள் மற்றும் ஏனைய பணி நிலையங்களை மூடிவிடுதல் மற்றும் இரத்துச் செய்தலுக்காக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் | 25 | 23 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் ஏனையவற்றை நிறுத்திவிடுவதற்கும் இரத்துச் செய்வதற்குமாக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் | 102 | 102 |
| **மொத்தம்** | **1,557** | **1,519** |

**(இ) ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில், உரிமம்பெற்ற வங்கிகளின் புதிதாக நியமிக்கப்படுகின்ற/ தொடர்ந்திருக்கின்ற பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுப் பணிகளை மேற்கொள்கின்ற அலுவலர்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதிடைமையை மதிப்பிடல், வெளியாரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகள், சந்தைப் பெறுமதிக்குக் குறைவாக சொத்துக்களை விற்றல், அடுக்கு 2 மூலதனத்தில் தொகுதிக் கடன்களை உள்ளடக்குதல், உயர்ந்தபட்சக் கடன்வழங்கலை விஞ்சுதல், கைவிடப்பட்ட சொத்துக்களின் பணத்தினை மீளச்செலுத்துதல், வங்கிகளின் மற்றும் ஏனையோரின் உரிமையாண்மையில் பொருண்மிய ஈடுபாடுகளைக் கையேற்றல் என்பன தொடர்பில் மொத்தமாக 442 ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. (அட்டவணை II-2)

**அட்டவணை II - 2**

**ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

| விடயம் | ஒப்புதல்களின் எண்ணிக்கை |
|---|---|
| புதிய/ தொடர்ந்திருக்கின்ற பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ அலுவலர்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பிடல் | 220 |
| வெளியாரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகள் | 51 |
| சந்தைப் பெறுமதிக்குக் குறைவாகச் சொத்துக்களை விற்றல் | 21 |
| அடுக்கு 2 மூலதனத்தில் தொகுதிக் கடன்களை உள்ளடக்குதல் | 9 |
| உயர்ந்தபட்சக் கடன்வழங்கலை விஞ்சுல் | 7 |
| கைவிடப்பட்ட சொத்துக்களின் மீளச்செலுத்தல் | 7 |
| உரிமையாண்மையில் பொருண்மிய ஈடுபாட்டைக் கையேற்றல் | 1 |
| ஏனைய சொத்துக்கள் | 126 |

**2.4 ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்**

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில், வங்கித்தொழில் சட்டம் மற்றும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமை தொடர்பிலான 24 சம்பவங்கள் பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**2.5 தொடர்ச்சியான மேற்பார்வையினை நடாத்துதல்**

(அ) தொடர்ச்சியான மேற்பார்வை என்பது தனிப்பட்ட வங்கிகளின் அலுவல்கள் மீது இடம்பெற்று வருகின்ற கண்காணிப்புப் பொறிமுறையாக இருப்பதுடன் இது முழு வங்கித்தெரில் தொழில்துறையினதும் தொழிற்பாட்டிற்கு வினைத்திறனையம் நீண்ட கால உறுதிப்பாட்டுத் தன்மையினையும் கண்டறிவதற்கானதொரு நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் முறைமையாகவும் செயற்படுவதுடன் தேவையானவிடத்து வைப்பாளர்களின் நிதிப் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு சரிசெய்யும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனையும் இயலச்செய்கிறது.

(ஆ) இணைய அடிப்படையிலான பின்நெற் சிஸ்டம் மூலம் வங்கிகள் சமர்ப்பித்த காலாந்தர நிதித் தகவல்களின் அடிப்படையில் தொடர்ச்சியான மேற்பார்வை நடைபெற்றது. நிதி மற்றும் முன்மதியுடைய தகவல்களை உள்ளடக்கிய பின்நெற் அமைப்பு மூலம் ஒவ்வொரு வங்கியிலும் ஏறத்தாழ 70 சட்ட ரீதியான கூற்றுக்கள் வாராந்தா/ மாதாந்த/ காலாண்டு/ ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதேவேளை, 18 கூற்றுக்கள் கையால் சமர்ப்பிக்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் பராமரிக்கப்படும் தரவுத்தளத்தை மறுசீரமைக்கும் முயற்சி சிறந்த அறிக்கை உருவாக்கத்திற்காக 2019இலும் தொடர்ந்தது. மேலும், 8 புதிய பின்நெற் கூற்றுக்கள் உருவாக்கப்பட்டது. அதேவேளை தற்போதுள்ள 2 கூற்றுக்கள் திருத்தப்பட்டது.

(இ) வங்கிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைச் செயற்பாட்டில் வங்கிகளுக்கு மற்றும் கூட்டுறுதித் தொடர்மாடிமனை மற்றும் கட்டுமானத் துறைக்கான வெளிப்படுத்துகைகளுக்கு விதிக்கப்பட்ட வைப்பு மற்றும் கடன் உச்சவரம்பு தொடர்பாக வட்டி விகிதங்களை நகர்த்துவது குறித்து சிறப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மேலதிகமாக, கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும் அறிக்கைகள் தயாரிப்பதற்கும் வசதியாக இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களுடனும் மற்றும் வெளி அரச நிறுவனங்களுடனும் வங்கித்தொழில் துறையின் மொத்தத் தரவும் பகிரப்பட்டது. மேலும், பல்வேறு முறைகளுக்காக வங்கித்தொழில் துறையின் செயற்றிறன்

குறித்த 15 சமர்ப்பிப்புக்கள் தயாரிக்கப்பட்டன மற்றும் காலாண்டு அடிப்படையில் வங்கித்தொழில் துறையின் செயற்றிறனைப் பற்றி நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்டது.

(இ) 2019ஆம் ஆண்டில் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கைகள் உட்பட சுமார் 661 வாடிக்கையாளர் புகார்கள்/ கோரிக்கைகள் கையாளப்பட்டன. இந்தப் புகார்கள் கடன் வட்டி வீதங்கள், மீளமைக்கப்பட்ட கடன்கள், கடனட்டைகள், நகை அடகுபிடித்தல், அங்கீகரிக்கப்படாத நிதி மீளப்பெறுதல், தானியங்கி ரெலர் இயந்திரங்களில் கட்டணங்கள் மற்றும் கட்டணங்களைக் குறைக்க முற்படுதல் தொடர்பானவையாகக் காணப்பட்டன.

(ஈ) காலாண்டு அடிப்படையில் மூத்த பிரசைகளுக்கான சிறப்பு வட்டித் திட்டம் தொடர்பான வட்டி திருப்பிச் செலுத்தல் தகவல்களைச் சேகரித்து நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வழங்குகிறது.

(ஊ) காலாண்டு அடிப்படையில் குறிப்பிட்ட நேர இலக்குகள் வங்கிகளின் சட்ட ரீதியான பரீட்சிப்பின் போது அடையாளம் காணப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளை நிவர்த்தி செய்யும் முன்னேற்றத்தை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்து கண்காணிக்கின்றது. மேலதிகமான தொடர்ச்சியான மேற்பார்வையின் போது அடையாளம் காணப்பட்ட ஒழுங்குமுறைக் கரிசனைகள் குறித்து விவாதிக்க உரிமம்பெற்ற வங்கிகளுடன் 17 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 2.6 காலாந்தரப் பரீட்சிப்புக்களை நடத்தல்

(அ) 2019ஆம் ஆண்டில், தெரிந்தெடுக்கப்பட்ட 14 வங்கிகளின் கடன் முகாமைத்துவம் குறித்த ஒரு கரும்பொருள் ஆய்வு உட்பட 27 சட்ட ரீதியான பரீட்சிப்புக்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நடத்தியது மற்றும் முன்னைய ஆண்டிலிருந்து தொடர்ந்த 05 பரீட்சிப்புக்கள் முடிந்தது. உரிமம்பெற்ற 26 வங்கிகளின் சட்ட ரீதியான தேர்வுகள் 2019ஆம் ஆண்டில் அந்தந்த வங்கிகளின் நிர்வாகத்துடன் முறையான கலந்துரையாடல்கள் மூலம் தொடங்கப்பட்டு முடிக்கப்பட்ட 13 சட்ட ரீதியான பரீட்சிப்புக்கள் தொடர்பான நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதேநேரத்தில் 13 பரீட்சிப்புக்கள் நிறைவடைந்துள்ளன. சில பரீட்சிப்புக்களில் எழுப்பப்பட்ட முக்கிய கரிசனைகள் அதிகரித்த பலயீனமான கடன்களின் அடிப்படையிலான மோசமான சொத்துத்தரம், பலயீனமான கடன்களின் கணக்கீட்டில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் இதன் மூலமான பலயீனமான கடன்களின் தவறான சதவீதம், குறைந்த மூலதனம் மற்றும் செயற்றிறன், கம்பனி ஆளுகை மற்றும் நிர்வாகத்தில் குறைபாடுகள், தொழில்நுட்ப இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வை முகாமை செய்வதிலுள்ள குறைபாடுகள் மற்றும் திறைசேரி நடவடிக்கைகள் தொடர்பான கரிசனைகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலதிகமாக, மீளமைக்கப்பட்ட கடன் வசதிகள், பணிப்புரைகள் மற்றும் கம்பனி ஆளுகைகளைக் கடைப்பிடித்தல், வாடிக்கையாளர் புகார்கள், திரவத்தன்மை இடர்நேர்வு, கிளை மோசடிகள், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் கணக்கு கொடுக்கல்வாங்கல்களைச் சரிபார்த்தல் போன்ற துறைகளில் வரையறுக்கப்பட்ட நோக்கத்துடன் பல பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன.

(ஆ) மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கி உறுதிப்பாட்டுத் தரமிடல் குறிகாட்டி எனும் மேற்பார்வை தரமிடல் மாதிரி ஒன்றை உருவாக்கியுள்ளது. அது நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்டு உரிமம்பெற்ற வங்கிகளின் இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வைக் கட்டமைப்பிற்கு வசதியளிப்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகளின் வளர்ந்துவரும் அபிவிருத்திகள் மற்றும் மூலோபாய மாற்றங்கள் என்பவற்றால் எழக்கூடிய முக்கியமான இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு முன்கூட்டியே தலையிட்டு உடனடி நடவடிக்கைகளை எடுக்க உதவுகிறது. 2019ஆம் ஆண்டில், முன்மொழியப்பட்ட வங்கி உறுதிப்பாட்டுத் தரமிடல் குறிகாட்டி மாதிரி அனைத்து அளவீடுகளைப் மதிப்பாய்வு மூலம் மற்றும் அனைத்து வங்கிகளில் வங்கி உறுதிப்பாட்டுத் தரமிடல் குறிகாட்டி கட்டமைப்பின் நிலையான பயன்பாட்டை நிலைநிறுத்த ஒரு விரிவான மேற்பார்வை வழிகாட்டல் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமும் முன்மொழியப்பட்ட வங்கி உறுதிப்பாட்டுத் தரமிடல் குறிகாட்டி மாதிரி மேலும் மேம்படுத்தப்பட்டது.

### 2.7 வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல்

#### (அ) திறன் மேம்பாடு

இணங்குவிப்பு அலுவலர்கள், முதன்மை தகவல் அலுவலர்கள் மற்றும் முதன்மை இடர்நேர்வு அலுவலர்களுக்கான அறிவுப் பகிர்வு அமர்வுகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நடத்தியது. மேலும், பல்வேறு மன்றங்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குழு கலந்துரையாடல்களுக்கு வங்கி மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்கள் வளவாளர்களாகப் பணியாற்றினர். கொழும்பு நிதியியல் நகரத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இடர்நேர்வு தொடர்பான செயற்குழு, அரச பிணையங்கள் சந்தை மற்றும் முதனிலை வணிகர்களின் தொழிற்பாடுகள் தொடர்பான முன்மதியுடைய பணிப்புரைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்களுக்கான செயற்குழு, டிஜிட்டல் பேரேட்டுத் தொழில்நுட்பத்திற்கான செயற்குழு, நிதியியல் துறை கணனிப் பாதுகாப்பு நிகழ்வு மறுமொழி குழுவினுடைய வழிகாட்டல் குழு, இலங்கையில் மெய்நிகர் நாணயத் திட்டங்களைப் படிப்பதற்கான பணிக்குழு, நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்காகக் கொடுப்பனவுகளை டிஜிட்டல் மயமாக்குவதை ஊக்குவிக்கும் குழு மற்றும் நிலையான நிதி தொடர்பான மற்றும் தேசிய கொடுப்பனவு வழிகாட்டல் குழு ஆகியவற்றில் வங்கி மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்கள் தொடர்ந்து குழு உறுப்பினர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்களது இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் 2019இலும் தொடர்ந்ததுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்கள் இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை முன்கூட்டிய அழுத்தங்களைப் பரீட்சித்தல், தகவல் பகுப்பாய்வு, கம்பனி ஆளுகை மற்றும் நெறிமுறைகள், ஒருங்கிணைந்த மேற்பார்வை மற்றும் இடர்நேர்வு ஒருங்கிணைப்பு, நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நிலையான நிதியியல் தொடர்பான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றினர்.

#### (ஆ) வங்கிகள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடனான கூட்டங்கள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் கூட்டங்களுக்கான செயலகமாகத் தொடர்ந்தும் பணியாற்றியதுடன் இது இலங்கைப் பொருளாதாரம் மற்றும் வங்கித்தொழில் துறை போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு தொடர்புபட்ட விடயங்களில் மத்திய வங்கிக்கும் வங்கித்தொழில் துறைக்குமிடையில் கலந்துரையாடல்களை உருவாக்குவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதற்கு, மேலதிகமாக வங்கித்தொழில் துறையின் செயலாற்றம், பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்கள் தொடர்பாக மதிப்பிடும் விதத்தில் வங்கிகளின் தலைவர்களுடன் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விவாதிக்க, சரியான மேற்பார்வை மற்றும் சரியான நேரத்தில் சரியான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதை உறுதி செய்வதற்கும் வங்கித்தொழில் துறையின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்வதற்கு சம்பந்தப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர்களால் நியமிக்கப்பட்ட குழுக்களுடனும் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. மேலும், இலங்கையின் பட்டயக் கணக்காளர்

நிறுவனத்துடன் கூட்டங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் புதிய இலங்கை நிதியியல் அறிக்கையில் நியமங்களைப் பின்பற்ற வங்கிகள் மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளுக்கு வசதி செய்தது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிதியியல் முறைமையின் வினைத்திறன், ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக அங்கத்துவ நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பிற்கு வசதியளிக்கும் விதத்தில் மைய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தும் தலைவர்களை உள்ளடக்கிய நிதியியல் துறை மேற்பார்வைக் குழுவின் கூட்டங்களை காலாண்டுக்கொரு தடவை நடாத்தியது.

### இணைப்பு II - 1
### உரிமம் பெற்ற வங்கிகளின் பட்டியல்

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா பாங்க் பிஎல்சி
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. இலங்கை வங்கி
4. பாங்க் ஒவ் சீனா லிமிடெட்
5. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
6. சிற்றி பாங்க் என்.ஏ
7. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
8. டொயிஷ் பாங்க் ஏஜி
9. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
10. ஹபீப் பாங்க் லிமிடெட்
11. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
12. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
13. இந்தியன் பாங்க்
14. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
15. எம்சிபி பாங்க் லிமிடெட்
16. நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
17. நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
18. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
19. மக்கள் வங்கி
20. பப்ளிக் பாங்க் பெர்காட்
21. சம்பத் பாங்க் பிஎல்சி
22. செலான் பாங்க் பிஎல்சி
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
25. த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
26. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

27. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
28. தேசிய சேமிப்பு வங்கி
29. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
30. சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
31. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
32. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

**வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்கள்**

1. டோகா பாங்க் கியுபிஎஸ்சி
2. ஜேபி மோர்கன் ஷேஷ் வங்கி என் ஏ
3. எம்யுஎவ்ஜே பாங்க் லிமிடெட்

* இலங்கை மத்திய வங்கி அக்சிஸ் வங்கி லிமிடெட் மற்றும் ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் ஆகிய வங்கிகளின் வணிக நம்பிக்கைகளை நிறுத்துவதற்கு அவர்களின் தாய் வங்கியின் கோரிக்கையின் பேரில் சில நிபந்தனைகளை விதித்து அனுமதி வழங்கியுள்ளது. அதற்கிணங்க இந்த இரு வங்கிகளும் வங்கித்தொழில் வியாபாரத்தில், பொதுமக்களிடம் வைப்புக்களை ஏற்றல் உட்பட ஈடுபடமுடியாது. மூடுதல் நடவடிக்கைகள் நிறைவடையும் போது உரிமம் பெற்ற இவ்வங்கிகளுக்கு கொடுக்கப்பட்ட உரிமம் இரத்துச் செய்யப்படும்.

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம்

இலங்கை மத்திய வங்கியின் பயிற்சியளித்தல் பிரிவாக விளங்கும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் இலங்கையிலுள்ள நிதியியல் துறையின் தொழில்சார் நிபுணர்களுக்கும் இப்பிராந்தியத்திலுள்ள மத்திய வங்கியாளர்களுக்கும் ஆயுள்காலப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குகின்ற உபாயம்மிக்க பங்காளராக விளங்கி வருகிறது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் நிதியியல் துறை நிறுவனங்களும் கம்பனிகளும் மக்களினூடாகப் போட்டித்தன்மைமிக்க அநுகூலங்களை உருவாக்குவதற்கான மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்ய உதவுகிறது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் தேவையான அறிவுத் தேர்ச்சி மற்றும் பிரச்சனைகளை எதிர்நோக்கும் தன்மை என்பனவற்றுடன் நிதியியல் துறை தொழில்சார் நிபுணர்களின் ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயலமர்வுகளையும் ஆய்வரங்குகளையும் ஒழுங்குசெய்து நடத்தியதன் மூலம் அதன் கடப்பாடுகளை எடுத்துக்காட்டியது. இதன்படி, வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் நிதியியல் துறை தொழில்சார் நிபுணர்களின் வளர்ச்சியடைந்துவரும் தேவையினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வரங்குகள், செயலமர்வுகளை வடிவமைத்து, இணைந்து நடத்துவதில் கவனத்தினைச் செலுத்திய வேளையில் உயர்மட்ட பயிற்சி வசதிகளுடன் கூடிய உயர்தரத்திலான பயிற்சியையும் உறுதிப்படுத்தியது. மேலும், இயலாற்றலலைக் கட்டியெழுப்புகின்ற உபாயக் குறிக்கோள்களுடனும் வங்கியின் உதவிக் கொத்தணியுடனும் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்குப் பயிற்சியை வழங்குவதில் விசேட வலியுறுத்தல்களை மேற்கொண்டது.

2019இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் வங்கித்தொழில் மற்றும் நிதி, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு, திறைசேரி தொழிற்பாடுகள், கணக்கீடு மற்றும் நிதியியல் முகாமைத்துவம், சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள், ஆராய்ச்சி மற்றும் தரவுப் பகுப்பாய்வு, பொருளாதாரம், மனிதவளம் மற்றும் பொதுவான முகாமைத்துவம், கிராமியத் துறை அபிவிருத்தி மற்றும் நுண்பாக நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பனவற்றை உள்ளடக்கிய துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியது. இப்பல்வேறு துறைகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் இலங்கை மத்திய வங்கியின் வளஆளணியினர் மற்றும் தொழில்சார் தகைமைகளையும் பன்னாட்டு அனுபவங்களுடன் கூடிய நிதியியல் துறை, கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் துறை நிபுணர்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மூலவள ஆட்களைக் கொண்ட குழுவினரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொண்டது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 2019இல் 50 கலண்டர் நிகழ்ச்சித்திட்டங்கள், 62 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், 20 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், 12 பகிரங்க விரிவுரைகள் உள்ளிட்ட 144 நிகழ்ச்சித்திட்டங்களை இவ்வாண்டு காலப்பகுதியில் வெற்றிகரமாக நடாத்தியது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களது தகுதிகளை உயர்த்துவதற்காக இயலளவினைக் கட்டியெழுப்பும் 26 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதில் 1,052 அலுவலர் உறுப்பினர்கள் பங்கேற்றுக் கொண்டனர். இயலளவினைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் இந்திய றிசேர்வ் வங்கியின் றிசேர்வ் வங்கி அலுவலர் கல்லூரி மற்றும் ஜேர்மனியின் டொய்ச் புண்டஸ் வங்கி என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிக் காணப்பட்டன. மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் உள்நாட்டு வர்த்தக வங்கிகள், சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் வர்த்தக வங்கிகளின் கோரிக்கையின் மீது இவ்வாண்டுப்பகுதியில் 17 தேவைக்கேற்றவாறான

நிகழ்ச்சித்திட்டத்தினை நடத்தியது. பொருளாதார அறிவையும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் என அறியப்படும் அனைத்து மக்களும் குறைந்த செலவில் நிதியியல் பணிகளை பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவினையும் மேம்படுத்தும் நோக்குடன் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் பல்வேறு தலைப்புக்களில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்திலும் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலும் 8 பகிரங்க ஆய்வரங்குகளையும் பிரதேச மட்டத்தில் 4 பகிரங்க ஆய்வரங்குகளையும் நடத்தியது. இவ்வாண்டு முழுவதிலும் 8,378 உள்நாட்டு பங்கேற்பாளர்களும் வங்காளதேசம், மாலைதீவு, நேபாளம், மலேசியா, ஓமான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளிலிருந்து 131 வெளிநாட்டவர்களும் பங்கேற்றனர். மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் க.பொ.த.உ.யர்தரத்தில் பொருளாதாரத்தினைக் கற்கின்ற மாணவர்களை இலக்காகக் கொண்டு சிங்களத்திலும் தமிழிலும் “தக்சிலாவ” மற்றும் “அறிவூற்று” என்ற தலைப்பில் சிங்களத்திலும் தமிழிலும் இரண்டு தொலைக்காட்சித் தொடர்களைத் தொடர்ந்தும் ஒருங்கிணைத்தது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் நிகழ்ச்சித்திட்ட மாதிரி முறையியல், விரிவுரைகளை வழங்குதல் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பணிகள் என்பனவற்றை மேம்படுத்தவதற்காக நிகழ்ச்சிகளின் பின்னரான ஆழமான மதிப்பீட்டுச் செயன்முறைகளை மேற்கொண்டது. 2020 இற்கான நிகழ்ச்சித்திட்டக் கலண்டரானது மத்திய வங்கி மற்றும் நிதியியல் துறையின் தற்போதைய மற்றும் எதிர்காலப் பயிற்சித் தேவைகளை கவனமாக மதிப்பீடு செய்ததுடன் டிஜிட்டல் வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவுகளிலான தோற்றம்பெற்று வருகின்ற தொழில்நுட்பவியல் மீதான புதிய நிகழ்ச்சித்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் அனைத்து அம்சங்களிலும் உயர்தரத்தினைப் பேணுவதற்கு கடுமையாக உழைத்தது.

## 4. தொடர்பூட்டல்

2019இல், தொடர்பாடல் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நாணய கொள்கை, நிதியியல் முறைமை உறுதிப்பாடு, முகவர் தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன துணைப்பணிகள் தொடர்பான தகவல்களை நேரகாலத்துடன் தொடர்பூட்டல் செய்து இலங்கை மத்திய வங்கியின் கடமைப்பாடுடைய குறிக்கோள்களான விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்கின்ற குறிக்கோள்களை அடைந்து கொள்வதில் தனது ஆதரவின் வகிப்பாகத்தினைத் தொடர்ந்து வழங்கியது. உரைகள், விரிவுரைகள், கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் என்பன ஊடான நேரடித் தொடர்பூட்டலுக்கு மேலதிகமாக, தொடர்பூட்டல் திணைக்களமானது அதனுடைய ஆர்வலர்களுடன் தொடர்புகொள்வதற்கு வங்கியினுடைய www.cbsl.gov.lk என்ற கூட்டுரு வெப்தளம், சமூக வலைத்தள வழிகள், வெளியீடுகள், செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் காணொலிகள் போன்ற பல்வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்தியது.

### வெளிவாரித் தொடர்பூட்டல்

தொழில்சார் நிபுணர்கள், பொதுமக்கள், ஊடகங்கள் மற்றும் மாணவர்கள் போன்ற வெப்தள பயன்பாட்டாளர்களுக்காக சிறந்த உலாவி அனுபவத்தினை வழங்கும் நோக்குடனும் நடமாடும் தொலைபேசி உலாவி இசைவுத்தன்மை உள்ளடங்கலாக பயன்பாட்டாளர் சிநேகமிக்க இடைமுகங்களுடன் தகவலுக்கான வினைத்திறன்மிக்கதும் விரைவானதுமான அணுகுவழியினை உறுதிசெய்வதற்கு தொடர்பூட்டல் திணைக்களம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அதன் வெப்தளத்தினூடாக தகவல்களைத் தொடர்ந்தும் பொதுமக்களுக்கு வழங்கியது.

2019இல் தொடர்பூட்டல் திணைக்களமானது ‘நாணயக் கொள்கை மீளாய்வு’ மற்றும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் தொடர்பான நாணயச் சபையினுடைய தீர்மானங்கள் போன்ற முதன்மையான பத்திரிகை வெளியீடுகள் உள்ளடங்கலாக 1,202 பத்திரிகை வெளியீடுகளை வெளியிட்டது. 2019 காலப்பகுதியில் ‘நாணயக் கொள்கை மீளாய்வு’ மீதான 8 ஊடக மாநாடுகள் நடாத்தப்பட்டதுடன் நவெம்பர் தொடக்கம் இலங்கை மத்திய வங்கி உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்கள் ஊடாக நேரலை பத்திரிகை ஊடக மாநாடுகளை தொடர்பூட்டல் திணைக்களம் ஆரம்பித்தது. அதேவேளை, 2019இல் 11 விளம்பரங்கள் மற்றும் 5 வர்த்தமானி அறிவித்தல்கள் உட்பட 107 ஊடக அறிவித்தல்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன. தந்தி மாற்றல் (செலாவணி) வீதங்கள், இலங்கை வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதங்கள் மற்றும் கொள்கை வீதங்கள் தொடர்பில் 494 குறுந்தகவல் விழிப்பூட்டல்களையும் இலங்கை மத்திய வங்கி அனுப்பியது.

ஆர்வலர்களுடன் தொடர்பூட்டலை மேலும் வசதிப்படுத்துவதற்காக டுவிட்டர், முகநூல் மற்றும் யூரியூப் போன்ற அதனுடைய கூட்டுரு சமூக வலைத்தள கணக்குகளைத் தொடர்பூட்டல் திணைக்களம் நிர்வகித்து கண்காணிக்கிறது. 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளின் வங்கியினுடைய சமூக வலைத்தள கணக்குகள் தொடர்பான செயலாற்ற ஒப்பீடொன்று கீழே அட்டவணை II - 2இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 3**
**சமூக வலைத்தளங்களினூடான இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல்**

| ஊடக வகை | 2018 | 2019 |
|---|---|---|
| யூரியூப் (காணொளி தரவேற்றம்) (YouTube) | 37 | 54 |
| யூரியூப் பார்வைகள் (வருடத்தினுள்) (YouTube) | 64,996 | 83,786 |
| முகநூல் விருப்பங்கள் (வருடத்தினுள்) (Face Book) | 5,221 | 7,266 |

பாடசாலை மாணவர்களுக்கிடையில் பொருளாதாரம் மற்றும் மத்திய வங்கி தொடர்பான அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2019 சனவரி 22 அன்று நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட 16 சிங்கள மொழி மற்றும் 16 தமிழ் மொழி மூலமான பாடசாலைகளினதும் ஒளிபரப்பு சுற்றுக்களுடன் கூடிய “ஈகோன் ஐகோன் பருவம் IV” தொலைக்காட்சி வினாடி வினாப்போட்டி நிகழ்ச்சியினை தொடர்பூட்டல் திணைக்களம் நடாத்தியது. தொலைக்காட்சி வினாடி வினாப்போட்டி நிகழ்ச்சியின் இறுதிப்போட்டி 2020 சனவரியில் நடைபெற்றது.

வங்கியின் முக்கிய நிகழ்வுகளையும் தொடர்பூட்டல் திணைக்களம் வசதிப்படுத்தியது. இவற்றுள் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் லீ குவான் யூ பொதுக் கொள்கை பாடசாலையின் வருகைதரு இணைப் பேராசிரியர் கலாநிதி ரசீன் சாலி அவர்களினால் “எமது காலகட்டத்தில் அரசியல் பொருளாதாரம் மற்றும் பொருளாதார கொள்கை என்பவற்றிற்கிடையிலான இணைப்பு” என்ற தலைப்பில் வங்கியின் 69வது ஆண்டு நிறைவு உரை, வழிகாட்டல் 2019, 12ஆவது வருடாந்த சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, தென்னாசியாவில் வெளிபுற பாதிக்கப்படும் தன்மைகள் மீதான பிராந்திய செயலமர்வு, “SEACEN -BIS உயர்மட்டக் கருத்தரங்கு மற்றும் 18ஆவது SEACEN நிறைவேற்றுக் குழுக்கூட்டம்” மற்றும் BIMSTEC பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் துணைக் குழுக்களின் செயலமர்வு என்பனவும் இடம்பெறுகின்றன.

2019ஆம் ஆண்டு செத்தெம்பர் 20 தொடக்கம் 29 வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற “கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி” இல் தொடர்பூட்டல் திணைக்களம் பங்குபற்றியதுடன் இலங்கை மத்திய வங்கியினுடைய வெளியீடுகள் இந்நிகழ்வில் விற்பனை செய்யப்பட்டன/ பகிர்ந்தளிக்கப்பட்டன.

“சனாதிபதிக்குத் தெரிவியுங்கள்” குறைகளைக் கையாளுகின்ற முறைமையூடாக இலங்கை மத்திய வங்கிக்கு வழிப்படுத்தப்பட்ட பொதுமக்களின் குறைகளைத் தொடர்பூட்டல் திணைக்களம் கையாண்டதுடன் வங்கியிலுள்ள தொடர்பான திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் 2019 இல் 234 குறைகளுக்குப் பதிலிறுத்தியது.

**உள்ளகத் தொடர்பூட்டல்**

பொருளாதாரத்திலுள்ள நடப்பு விடயங்கள் பற்றி மூத்த முகாமைத்துவத்தினர் சிறந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை இயலச் செய்வதற்காக நிதியியல் துறை மற்றும் வங்கி தொடர்பான ஏனைய விடயங்கள் பற்றி ஆண்டினுள் மும்மொழிகளிலும் 15 தேசிய நாளிதழ்களில் வெளியிடப்பட்டு சேகரிக்கப்பட்ட 3,983 செய்தி நறுக்குகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் போன்றவை மூத்த முகாமைத்துவத்தினரிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. வெளியிடப்பட்ட முக்கிய பத்திரிகை வெளியீடுகளும் இலங்கை மத்திய வங்கி அச்சகத்திற்கு அனுப்பப்பட்டன.

டிஜிட்டல் வடிவில் மாத்திரம் வெளியிடப்படுகின்ற அலுவல்சார் உள்ளகச் செய்தி மடல் “கவுளுவ” (கருத்து “யன்னல்”) அலுவலர் உள்ளக வெப்தளத்தில் (மன்சல) பதிவேற்றம் செய்யப்பட்டது.

**பொதுமக்கள் விழிப்புணர்வு**

அட்டவணை II - 3இல் காட்டப்பட்டவாறு, “இலங்கை மத்திய வங்கியினுடைய குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள்”, “இலங்கைப் பொருளாதாரம்” போன்ற பல்வேறு தலைப்புக்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை 8,306 பங்குபற்றுனர்களுக்காக தொடர்பூட்டல் திணைக்களமானது ஒருங்கிணைத்தது.

**அட்டவணை II - 4**
**2019இல் நடாத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாடசாலைகள் | 87 | 7,558 |
| பல்கலைக்கழகங்கள் | 6 | 491 |
| இலங்கை ஆயுதப் படைகள் மற்றும் பாதுகாப்பு பல்கலைக்கழகங்கள் | 6 | 216 |
| வெளிநாட்டு பேராளர் குழுக்கள் | 1 | 41 |
| நடமாடும் நிகழ்ச்சிகள் (இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு வெளியே நடாத்தப்பட்டது) | 3 | வி.கி |

மேலும், பிரதேச அலுவலகங்களினால் முன்னெடுக்கப்பட்ட மூன்று நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொடர்பூட்டல் திணைக்களம் வளவாளர்கள் மற்றும் வெளியீடுகளை வழங்கி உதவியது. தொடர்பூட்டல் திணைக்களமானது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2019ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பத்திரிகையாளர்களுக்காக கல்விசார் நிகழ்ச்சித் திட்டமொன்றினை வெற்றிகரமாக நடாத்தியது.

தொடர்பூட்டல் திணைக்களமானது இவ்வாண்டு காலப்பகுதியில் ரூ.6.9 மில்லியன் பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியினுடைய வெளியீடுகளை விற்பனை செய்தது. பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிசாலை விற்பனை கருமபீடம், ராஜகிரியவில் உள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் மற்றும் பிரதேச அலுவலகங்களிலுள்ள விற்பனை கருமபீடங்கள் மற்றும் கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி என்பவற்றினூடாக இவ்விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்பூட்டல் திணைக்களமானது நாடு முழுவதிலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது நூலகங்களுக்கு இடையில் 11,613 எண்ணிக்கையான பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளை இலவசமாக விநியோகித்தது.

**தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள்**

இலங்கை மத்திய வங்கியானது தமிழ் மொழியில் தொடர்பூட்டலை மேற்கொள்ளுவதற்கு இயலச்செய்யும் வகையில் தொடர்பூட்டல் திணைக்களமானது அதனுடைய தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகளை தொடர்ந்தும் வழங்கியது. இதில் சில முக்கியமான வெளியீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனூடாக தொடர்பூட்டல் திணைக்களமானது தேசிய மொழிக் கொள்கைகளுக்கு இசைவாக மூன்று மொழிகளிலும் தகவல்களை வழங்குதல் என்ற அதனுடைய குறிக்கோள்களை அடைந்தது.

**புகைப்படமெடுத்தல் மற்றும் காணொளிப் பதிவு வசதி**

தொகுப்பாக்கம் செய்தல், புகைப்படங்களை அச்சிடல், புகைப்படத் தொகுப்புகள் மற்றும் இறுவெட்டுக்களைத் தயாரித்தல் உள்ளிட்ட அனைத்து தொடர்பான பணிகளையும் வழங்கியதன் மூலம் தொழில்சார் நிபுணத்துவத் தரத்தினைப் பேணியதுடன் உரிய நேரத்தில் பதிவுகளை இலங்கை மத்திய வங்கியினுடைய வெப்தளத்திலும் மன்சலவிலும் (உள்ளக வலையமைப்பு) பதிவேற்றம் செய்யும் அதேவேளை, 2019இல் இலங்கை மத்திய வங்கியினுடைய 669 இற்கு மேற்பட்ட நிகழ்வுகளை புகைப்படக்கருவி மூலம் படம் பிடித்துள்ளன.

**அச்சகம்**

தொடர்பூட்டல் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியினுடைய அச்சகத் தேவைப்பாடுகளை உயர்தர நியமத்துடன் நிறைவு செய்வதற்கு வடிவமைத்தல், தட்டச்சு ஒழுங்கமைப்பு மற்றும் அச்சிடல் போன்ற பணிகளை வழங்கியது. இது தொடர்பில் 2019 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் அச்சகத்தினால் 114 எண்ணிக்கையிலான அச்சிடல் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. இவை சட்டகன (6 தொகுதிகள்), நியூஸ் சேர்வே (06 தொகுதிகள்), வைப்பகம் (07 தொகுதிகள்) போன்ற காலாந்தர வெளியீடுகளையும் மற்றும் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட இலங்கை மத்திய வங்கி குறிக்கோள்கள், தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன ரீதியான அமைப்பு என்ற தலைப்பிலான வெளியீட்டினை “இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் - 2019”, மற்றும் “சமூக பொருளாதாரத் தரவு ஏடுகள்” போன்ற தலைப்பிலான வெளியீடுகளை உள்ளடக்கியுள்ளன. மேலும், வர்ணச் சுவரொட்டிகள், கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள், கடிதத் தலைப்புக்கள், சான்றிதழ்கள், வங்கி அலுவலர்களுடைய அட்டைகள், பல்வேறு படிவங்கள் மற்றும் வாழ்த்து அட்டைகளை அச்சிடல் போன்ற பணிகள் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

**நூலகம் மற்றும் தகவல் நிலையம்**

தொழில்சார் நிபுணத்துவ வகிபங்கினை ஏற்கத் தயாராகுவதற்கு அறிவினை திரட்டிக் கொள்ளுதல், விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல், இன்று வரையான பொருளாதார அபிவிருத்தி பற்றி தெரிந்திருத்தல் மற்றும் சீரான ஆளுமைகளை விருத்தி செய்தல் போன்றவற்றினூடாக இலங்கை மத்திய வங்கியினுடைய அலுவலர்களுக்கு உதவும் நோக்குடன் நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொழிற்படுகின்றது.

நூலகம் மற்றும் தகவல் நிலையம் 38,194 புத்தகங்கள், 19,600 அறிக்கைகள் மற்றும் 2,080 இறுவெட்டுக்கள் மற்றும் 49,000இற்கு மேற்பட்ட சஞ்சிகை வெளியீடுகள் போன்ற சேகரிப்புக்களை வைத்திருக்கின்றது. இவை இவ்வாண்டு காலப்பகுதியில் 260 புதிய புத்தகங்களின் பதிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன. பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் நிதியியல் தொடர்பான தலைப்புக்களில்

பரந்தளவிலான வெளியீடுகளினுடைய சேகரிப்புக்களின் அணுகலை வழங்குகின்ற 'சயன்ஸ் டிரெக்ட்' (scienceDirect), 'ஈகோன்லிட்' (Econlit), மற்றும் 'வைலி ஒன்லைன் ஜேனல்ஸ்' (wiley online Jonuals) போன்ற அதேநேர கணனி வழி தரவுத்தளங்களுக்கு நூலகமும் தகவல் நிலையமும் சந்தா தொகையைச் செலுத்துகின்றது. மேலும், மத்திய வங்கித் தொழில் தொடர்பான விடயங்களில் பல்வேறு ஏனைய அதேநேர கணனிவழி மூல வளங்களுக்கு நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தா செலுத்தப்பட்டது. உதாரணமாக www.centralbanking.com, www.risk.net மற்றும் www.ft.com என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் இத்தகைய வளங்களுக்கு அலுவலா் அணுகலைத் தொடர்ச்சியாக வழங்கியது. வங்கியினுடைய அலுவலா்கள் தமது அலுவலகங்களிலிருந்தே சஞ்சிகைக் கட்டுரைகளை அணுகுவதற்கான வசதியை வழங்குகின்ற 'ஓபன்ஏதன்ஸ்' (open athens) இற்கு நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொடர்ச்சியான சந்தாவினைச் செலுத்தியது. நூலகமும் தகவல் நிலையமுமானது அச்சிட்ட வடிவத்தில் 84 வெளிநாட்டு சஞ்சிகைகள் மற்றும் 18 உள்நாட்டு சஞ்சிகைகளுக்கு சந்தாவினை செலுத்துகின்றது.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது "அண்மையில் புதிதாக சேர்க்கப்பட்டவை" (அதாவது புதிய நூல்கள்)," நடைமுறை விடயங்களின் உள்ளடக்கம்", "பன்னாட்டு செய்தி விழிப்புக்கள்", "உள்நாட்டு அச்சிடல் திரட்டுக்கள் மற்றும் பொருளாதாரம், வங்கியியல் மற்றும் நிதியியல் குறிப்புக்கள் தொடர்பான அறிக்கைகள் போன்ற இலத்திரனியல் செய்தி அறிக்கைகளைத் தொடர்ந்தும் தொகுத்ததுடன் அவற்றை உள்ளக வலையமைப்பினூடாக பரவச் செய்தது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவல்களைப் பரப்பும் பணிகளும் வழங்கப்பட்டன.

மேலும், நூலகம் மற்றும் தகவல் நிலையமானது மின்னஞ்சல் மற்றும் நூல்களை இரவல் வழங்கியதனூடாக பயனுள்ள தகவல்களை வழங்கியதன் மூலம் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் மற்றும் பொருளாதார நூலகங்களுக்கு அதனுடைய பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. மேலும், தகவல் வளங்களையும் அனுபவங்களையும் உலகளாவிய மத்திய வங்கிகள் மற்றும் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களுக்கிடையில் பகிர்ந்து கொண்டதனூடாக நூலக மற்றும் தகவல் நிலையமானது உலகளாவிய மத்திய வங்கி, நிதியியல் நிறுவன நூலக மற்றும் தகவல் தொழில்சார் நிபுணத்துவ வலையமைப்பில் (CBFA பட்டியல்) ஒரு செயற்படும் அங்கத்தவர் என்ற நிலையைப் பெற்றுக் கொண்டது. நூலகத்தின் உள்ளக வெப்தளத்தின் ஊடாக வங்கி அலுவலா்கள் நூலகத்தை அணுகுவதற்கான வசதியை வழங்கியதன் மூலம் டிஜிட்டல் நூலகப்பணி தொடர்ந்தும் பேணப்பட்டது. நூலகம் மற்றும் தகவல் நிலையமானது 2019ஆம் ஆண்டின் போது இலங்கை விஞ்ஞான மற்றும் தகவல் வலையமைப்பின் உறுப்பினா் ஒருவராக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.


## 5. நாணயம்

இலங்கை மத்திய வங்கியின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இலங்கையில் நாணயத்தினை வெளியிடுகின்ற ஏகபோக உரிமையினையும் அதிகாரத்தினையும் கொண்டுள்ளது. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களமானது நாணயத் தொழிற்பாடுகள் மீதான நாணயச் சபையின் நியதிச்சட்ட பொறுப்புடன் தொடர்புடைய கருமங்களை கையாளுகின்றது. 2019ஆம் ஆண்டின் போது, நாணயத் தாள்களை வடிவமைத்தல், அச்சிடுதல், குற்றிகளை வார்த்தல் மற்றும் பொதுமக்களின் கேள்வியைப் பூர்த்திசெய்வதற்காக நாணயத் தாள்களையும் குற்றிகளையும் விநியோகித்தல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், பொருத்தமற்ற நாணயத் தாள்களையும் குற்றிகளையும் சுற்றோட்டத்திலிருந்து புறக்கீடு செய்தல், சட்ட ரீதியான நாணயம் என்ற ரீதியில் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் சந்தர்ப்பங்களில் அதனைக் கையாள சட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களுக்கு உதவுதல் மற்றும் தரத்தினைப் பேணும் விதத்தில் நாணயத்தினைச் சரியாகப் பயன்படுத்துவது தொடர்பில் பொதுமக்களின் அறிவினை அதிகரிப்பதற்காக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் ஆகியவற்றுடன் தொடர்பான பல பணிகளைத் தொடர்ந்தும் செயலாற்றியது. 2019ஆம் ஆண்டில் நாணயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 5.1 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

நாணயத்தாள்கள் மற்றும் குற்றிகளுக்கான கேள்வியானது உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளின் சுருக்கத்தின் பிரதான காரணமாக 2019ஆம் ஆண்டின் மே தொடக்கம் யூலை வரையிலான காலப்பகுதியில் மிதமடைந்ததைத் தவிர வரைபடம் 11-1 இல் காட்டப்பட்டவாறு 2019இல் தொடர்ந்தும் அதிகரித்தது.

**வரைபடம் II - 1**
**சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2015-2019**




அதற்கமைய, ஆண்டின்போது சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பெறுமதியானது 2019 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு அட்டவணை II-5 இல் காட்டப்பட்டவாறு ரூ.677.4 பில்லியனாக 5.8 சதவீதத்தினால் அதிகரித்தது.


**அட்டவணை II- 5**
**2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

| | பெறுமதி (ரூ.பில்லியன்) | | | | | மாற்றம் (%) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
| தாள்கள் | 482.0 | 541.5 | 585.3 | 627.1 | 663.1 | 17.9 | 12.3 | 8.1 | 7.1 | 5.7 |
| குற்றிகள்(அ) | 9.1 | 10.7 | 12.1 | 13.2 | 14.2 | 21.3 | 17.3 | 13.1 | 9.0 | 7.6 |
| மொத்தம் | 491.1 | 552.2 | 597.4 | 640.3 | 677.4 | 18.0 | 12.4 | 8.2 | 7.2 | 5.8 |


(அ) சுற்றோட்டத்திலற்ற ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் நீங்கலாக

2019இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் பெறுமதி 663.1 பில்லியனாக 5.7 சதவீதத்தினால் அதிகரித்தது. நாணயத்தாள்களிடையே ரூ.5,000 மற்றும் ரூ.1,000இன் வகை நாணயத்தாள்கள் இரண்டும் ஒன்றுசேர்ந்து சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் மொத்தப் பெறுமதியில் ஏறக்குறைய 87 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்த (வரைபடம் II-2) அதேவேளை ரூ.20 வகை நாணயத்தாள் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் மொத்தப் அளவுகளில் 31 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது (வரைபடம் II-3).

**வரைபடம் II - 2**
**2019ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் பெறுமதி**





**வரைபடம் II - 3**
**2019ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் அளவு (துண்டுகள்)**




மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சுற்றோட்டத்திலுள்ள நாணய விகிதம் 2019 ஆம் ஆண்டில் 4.5 சதவீத நிலையான விகிதத்தில் இருந்தமையானது நாட்டில் முக்கியமான கொடுப்பனவு முறையாக நாணயம் காணப்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது (வரைபடம் II-4).

**வரைபடம் II - 4**
**சுற்றோட்டத்திலுள்ள நாணயம்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி**




குறிப்பு: வரைபடமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (தற்போதைய சந்தை விலைகளில்) 2019 தரவுகளுக்கமைய இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

### 5.2 நாணய முகாமைத்துவம்

நாணய முகாமைத்துவச் செயற்பாடுகளில் முக்கியமாக புதிய நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை புழக்கத்தில் விடுவதோடு, தகுதியற்ற (பயன்படாத) நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் புழக்கத்தில் இருந்து திரும்பப் பெறுதல் ஆகியவை மூலம் நாட்டில் பணம் செலுத்தும் பொறிமுறையை எளிதாக்குகின்றது. பயனுள்ள நாணய முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்காக, நாணயத் திணைக்களம் 2019ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்ததும் முன்னெடுத்தது.

#### (அ) நாணய அச்சிடுதலும் வார்த்தலும்

2019ஆம் ஆண்டில், பொதுமக்களின் கேள்வியினைப் பூர்த்திசெய்யப் போதுமான இருப்பு இருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு 175 மில்லியன் எண்ணிக்கையிலான புதிய நாணயத்தாள்களுக்கான கட்டளைகளை முன்வைத்தது. 2017ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட 970 மில்லியன் எண்ணிக்கையிலான நாணயக்குற்றிகளின் ஒரு பகுதியாக 639.4 மில்லியன் எண்ணிக்கையிலான புதிய நாணயக்குற்றிகளையும் நாணயத் திணைக்களம் பெற்றுக்கொண்டது.

#### (ஆ) நாணய வழங்கல்

ஆண்டின் போது, புதிய நாணயத் தாள்களுக்கான செலவைக் குறைப்பதற்காக பயன்படுத்தத்தக்க (பொருத்தமானது) நாணயத்தாள்களை மீண்டும் புழக்கத்தில் விடுவதில் நாணயத் திணைக்களமானது கவனம் செலுத்தியது. அதன்படி, 2019ஆம் ஆண்டில், நாணயத் திணைக்களம் ரூ.775.2 பில்லியன் பெறுமதியுடைய நாணயத் தாள்களை சுற்றோட்டத்தில் விட்டது. இது ரூ.526.5 பில்லியன் கொண்ட பயன்படுத்தக்கூடிய நாணயத் தாள்களையும் ரூ.248.7 பில்லியன் கொண்ட புதிய நாணயத் தாள்களையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், நாணயத் திணைக்களமானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் புறக்கோட்டை, இலங்கை வங்கி கிளையில் நிறுவப்பட்டுள்ள விசேட பொதுமக்கள் கருமபீடம் என்பனவற்றிற்கு ரூ.1 பில்லியன் பெறுமதியான நாணயக் குற்றிகளையும் வழங்கியது (அட்டவணை II-6). முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019ஆம் ஆண்டில் நாணயத் தாள் வழங்கலில் வீழ்ச்சிக்கு வேண்டுமென்றே சேதப்படுத்தப்பட்ட மற்றும் மாற்றம்செய்யப்பட்ட நாணயத் தாள்கள் மீதான கண்டிப்பாக செயற்படுத்தப்பட்ட தூய நாணயத் தாள் கொள்கையினைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய தாள்களின் அதிக எண்ணிக்கையே முக்கிய காரணமாகும். பொதுமக்களிடையே நாணயக் குற்றிகளுக்கான கேள்வி குறைந்துள்ளமையை பிரதிபலிக்கும் வகையில் நாணயக் குற்றிகளின் வழங்கல் 2019 இல் சற்றுக் குறைவடைந்துள்ளது.

**அட்டவணை II - 6**
**வழங்கப்பட்ட நாணயத் தாள்களும் குற்றிகளும்**

| வழங்கல் | பெறுமதி (ரூ.பில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
| தாள்கள் | 503.4 | 594.0 | 627.9 | 795.4 | 775.2 |
| குற்றிகள் (அ) | 1.6 | 1.6 | 1.4 | 1.1 | 1.0 |
| மொத்தம் | 505.0 | 595.6 | 629.3 | 796.5 | 776.2 |

(அ) ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் நீங்கலாக

#### (இ) நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்

நாணயத் திணைக்களமானது முக்கியமாக இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்படும் நியதிச்சட்ட ஒதுக்கீட்டு தேவைப்பாட்டினைப் பேணுவதற்காக உரிமம்பெற்ற வர்த்தக

வங்கியிடமிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றது. மேலும், சிறந்த தரமிக்க நாணயத் தாள்கள் சுற்றோட்டத்தில் உள்ளதனை உறுதி செய்கின்ற நோக்குடன் சேதமடைந்த நாணயத் தாள்களை சுற்றோட்டத்திலிருந்து நீக்குவதற்கு பயன்படுத்தமுடியாத மற்றும் சேதமடைந்த நாணயத் தாள்கள் உள்ளடங்கலாக நாணயத் தாள்களை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து ஏற்றுக்கொள்கின்றது. 2015-2019 காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச்செய்யப்பட்ட நாணயத் தாள்களின் பெறுமதி, அட்டவணை II-7 இல் தரப்பட்டுள்ளது.

வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட, மாற்றம்செய்யப்பட்ட அல்லது உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களை வைப்புச்செய்ய 30.09.2018 அன்று வரை விதிக்கப்பட்ட காலக்கெடு காரணமாக, முன்னெப்போதும் இல்லாத அளவு 2018 காலப்பகுதியின் போது அதிகரித்துக் காணப்பட்ட வைப்புத்தொகையுடன் ஒப்பிடும்போது, பயன்படுத்தமுடியாத (பொருத்தமற்றது) நாணயத் தாள்களின் வைப்பு 2019இல் குறைவடைந்துள்ளது.

**அட்டவணை II - 7**
**வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள்கள்**

| வைப்புகள் | பெறுமதி (ரூ.பில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
| பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்கள் | 331.9 | 433.8 | 464.2 | 524.1 | 606.9 |
| பயன்படுத்தமுடியாத நாணயத் தாள்கள் | 98.3 | 100.7 | 119.9 | 229.6 | 132.1 |
| மொத்தம் | 430.2 | 534.5 | 584.1 | 753.7 | 739.0 |

குறிப்பு: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நாணயக் குற்றிகளின் பெறுமதி குறிப்பிடத்தக்களவானவையல்ல.

**(ஈ) நாணயத் தாள்களை அழித்தல்**

நாணயத் திணைக்களமானது பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதன் நியதிச்சட்ட அதிகாரத்தினைப் பிரயோகித்து 2019 ஆம் ஆண்டின் போது ரூ.139.8 பில்லியன் பெறுமதியான 235 மில்லியன் எண்ணிக்கையிலான நாணயத் தாள்களை அழித்துள்ளது (அட்டவணை II-8).

**அட்டவணை II - 8**
**பொருத்தமில்லாத நாணயத் தாள்களை அழித்தல்**

| தாள்கள் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை (மில்லியன்) | 182.7 | 179.2 | 177.1 | 343.8 | 235.0 |
| பெறுமதி (ரூ.பில்லியன்) | 88.8 | 57.4 | 94.2 | 252.2 | 139.8 |

**5.3 ஏனைய நடவடிக்கைகள்**

**(அ) நாணயக் கருமபீடங்களை தொழிற்படுத்தல்**

1996ஆம் ஆண்டில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலின் பின்னர் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாணயப் பரிமாற்று வசதியினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கருமபீடத்தினை இலங்கை மத்திய வங்கி 2019.03.27 அன்று மீள்திறந்துள்ளது. மேலும், சேதமடைந்த நாணயத்தாள்களை மாற்றிக்கொள்வதற்கான கருமபீடம், தொடர்ந்தும் இயங்கியதுடன் 2019ஆம் ஆண்டில் ரூ.116 மில்லியன் பெறுமதியான நாணயத்தாள்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

**(ஆ) பொருளாதார வரலாற்று அரும்பொருட் காட்சிச்சாலையை செயற்படுத்தல்**

பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையானது நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் மீது ஆர்வம் கொண்ட வெளிநாட்டினர் உட்பட பொதுமக்களுக்கு பரந்த அளவிலான அறிவை வழங்குகிறது. ஞாபகார்த்த நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகள் மற்றும் சேகரிப்பாளர் பொருட்களின் விற்பனை மற்றும் வருகைதருநர்களுக்கான விளக்கவுரை நடத்துதல் போன்றன பொருளாதார வரலாற்று அரும்பொருட் காட்சிச்சாலை மேற்கொள்ளப்படுகின்ற முக்கிய தொழிற்பாடுகளாகும். அதன்படி, 2019ஆம் ஆண்டில் 9,060 நபர்களுக்கு இவ் அரும்பொருட்காட்சிச்சாலை சேவையினை வழங்கியுள்ளது. இதில் 2,301 உள்நாட்டவர்களும் 511 வெளிநாட்டினரும் மற்றும் 100 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 6,248 மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

**(இ) நாணயத்தில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்தல்**

நாணயத் திணைக்களமானது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணய பணியகத்தின் ஒத்துழைப்புடன் போலி நாணயத்தாள் நிகழ்வுகளைக் குறைப்பதற்கும் நாணயத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும் தொடர்ந்து பணியாற்றியது.

அதற்கமைய, கண்டுபிடிக்கப்பட்டு சான்றிதழ் பெற இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்ட 2,266 போலி நாணயத்தாள்கள் பற்றி சான்றிதழ்களுக்கு நாணயத் திணைக்களம் வசதியளித்தது. சுற்றோட்டத்தில் உள்ள ஒரு மில்லியன் நாணயத் தாள்களுக்கு கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணயத் தாளின் எண்ணிக்கை 2 ஆகக் காணப்படுகின்றமை பல நாடுகளுடன் ஒப்பிடும்போது போலி நாணயத்தாள் நிகழ்வு கணிசமானளவில் குறைந்து காணப்படுவதனைக் குறித்துக்காட்டுகின்றது.

ஆண்டின் போது நாணய விதிச்சட்டத்தின் 59ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் போலி நாணயத் தாள்களுக்கான முடிவுச் சான்றுகளாக 127 சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் போலி நாணயத்தாள் தொடர்புபட்ட வழக்குகளில் சாட்சியமளிப்பதற்காக நாணயத் திணைக்களம் 7 நீதிமன்ற வழக்குகளில் கலந்து கொண்டது.

**(ஈ) தூய நாணயத்தாள் கொள்கையை ஊக்குவித்தல்**

நாணயத்தாள்களை வேண்டுமென்று சேதப்படுத்துதல், மாற்றம்செய்தல் மற்றும் உருச்சிதைத்தல் மீதான சட்டத்தினை கடுமையாக நடைமுறைப்படுத்தியமை பெரியளவில் வெற்றி கரமானதாகத் தென்படுகின்றது. வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட அத்துடன்/ அல்லது உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்கள் இப்போது புழக்கத்தில் அரிதாகவே உள்ளது என்பதை முக்கிய ஆர்வலர்களும் பொதுமக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். நாணயத்தாள்களை நன்கு கையாளுதல் மூலம் நாணயத் தாள்களின் ஆயுட்காலத்தை அதிகரிக்கலாம் என்பதனால் நாணயத் திணைக்களமானது நாணயத் தாள்களைச் சிறப்பாகக் கையாளும் நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்குத் தொடர்ச்சியாக அறிவூட்டியதுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மத்தியில் தூய நாணயத் தாள் கொள்கையை சரியாகப் பின்பற்றப்படுவதையும் கண்காணித்தது.

**(உ) பொதுமக்கள் விழிப்புணர்வை ஊக்குவித்தல்**

நாணயத் திணைக்களமானது சமூகத்தின் பல்வேறு துறைகளை இலக்காகக் கொண்டு, நாணயத்தாள்களின் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் போலி நாணயத் தாள்களை அடையாளம் காணுதல், சிறப்பாகக் கையாளும் நடைமுறைகள் மற்றும்

தூய நாணயத் தாள் கொள்கை, நாணய முகாமைத்துவம் தொடர்பான ஒழுங்குவிதிகள் போன்றன பற்றி விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாக 16 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. மேலும், நாணயத் திணைக்களமானது போலி நாணயத்தாள்களை அடையாளம் காண்பது குறித்து தேசிய செய்தித்தாள்கள் ஊடாக விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மேற்கொண்டது. நாணயத் திணைக்களமானது நாணயத்தாள்கள் மற்றும் நாணயக்குற்றிகள் குறித்த பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக நடமாடும் நாணய அரும்பொருட்காட்சிச்சாலையை அமைத்து 3 கண்காட்சிகளில் பங்கேற்றது.

**(ஊ) 10ஆவது ஆசிய பணச் சுழற்சிக் கருத்தரங்கு**

கொழும்பில் இடம்பெற்ற 34 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 180 பிரதிநிதிகள் பங்கேற்ற 10ஆவது ஆசிய பணச் சுழற்சி கருத்தரங்கு - 2019 (சர்வதேச வணிக பணத் தொழிற்பாடுகள் கருத்தரங்கு என முன்னர் அறியப்பட்ட) நிகழ்வினை இலங்கை மத்திய வங்கி இணைந்து நடாத்தியது. இந்நிகழ்வானது நாணய முகாமைத்துவத்தின் வினைத்திறனையும் உகப்பாக்கத்தினையும் மேம்படுத்துவதற்கான செலவுச் சிக்கன தொழில்நுட்பங்கள், உபாயங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் மீதான நோக்குகளையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளவும் மற்றும் உலகளாவிய ரீதியில் கொடுப்பனவு செலுத்தும் மாற்று முறைகளில் விரைவாக மாறிவரும் முன்னேற்றங்களைக் காண்பிக்கவும் ஒரு தளமாக அமைந்தது.

**(எ) நாணயக் குற்றிகளின் விநியோகம்**

சுற்றோட்டத்தில் போதுமான இருப்பு இருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாணயத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் ஊடாக நாணயக் குற்றிகளை விநியோகித்ததுடன் 2019 செத்தெம்பர் 07-10 வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ‘என்டர்ப்ரைஸ் ஸ்ரீலங்கா தேசிய கண்காட்சி’ இல் ஒரு பரிமாற்று கருமபீடத்தை நிறுவியது.

**(ஏ) நாணயத் தாள்களின் மீள் உற்பத்திக்கான அனுமதிகள்**

நாணயத் தாள்களின் மீள் உற்பத்தி மீதான நாணயச் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கை நியதிகளுக்கமைவாக, 2019ஆம் ஆண்டின்போது நாணயத் தாள்களை மீள உற்பத்தி செய்வதற்கான 7 கோரிக்கைகள் நாணயத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டது.

**5.4 அபிவிருத்திகள் மற்றும் புதிய திட்டங்கள்**

**(அ) நாணயத் தாள்கள் பற்றிய அளவீடு**

ஏற்கனவேயுள்ள நாணயத் தாள் தொடரிற்கு அவசியமான மேம்பாடுகள் மற்றும் திருத்தங்களை இனங்காண்பதற்கும் புதிய நாணயத் தாள் தொடர்களுக்கான தேவையை மதிப்பிடுவதற்கும் பொதுமக்களுடைய கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2019ஆம் ஆண்டில், அளவீடொன்றினை நாணயத் திணைக்களம் நடத்தியது. அளவீட்டின் முடிவுகளின் அடிப்படையில் அதிக பெறுமதியான நாணய தாள்களை புதிய முன்னேற்றகரமான பாதுகாப்பு அம்சங்களுடன் மேம்படுத்தும் அதேவேளை, நாணயத் தாளின் அதே தொடரைத் தொடர்ந்தும் முன்னெடுக்க நாணயச் சபை தீர்மானித்தது. இச்செயன்முறையை ஆரம்பிப்பதற்கு ரூ.2000 பெறுமதியான தாளை மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் தற்போது இருக்கும் வடிவமைப்பிற்கு சிறிய திருத்தம் செய்து 11 ஆவது தொடரின் கீழ் அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) நாணய முகாமைத்துவம் மீதான கொள்கை மாற்றங்கள்**

செயல்திறன்வாய்ந்த மற்றும் வினைத்திறன்மிக்க நாணய முகாமைத்துவ செயன்முறையை உறுதிப்படுத்த 2019ஆம் ஆண்டில் நாணயத் திணைக்களம் பின்வரும் கொள்கை மாற்றங்களை முன்வைத்தது.

i. வினைத்திறன்மிக்க நாணய முகாமைத்துவத்திற்காக மிகையான பணத்தினை தங்களுக்குள்ளேயே பரிமாறிக் கொள்வதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய வங்கியில் வைப்பிலிடப்படும் பயன்படுத்தக்கூடிய நாணயத் தாள்கள் மீதான சேவைக் கட்டணத்தை அதிகரித்தல்.

ii. நாணயத்தின் மீதான அதிகரித்துவரும் பொதுமக்களின் கேள்வியை மிகவும் திறம்பட பூர்த்தி செய்யும் பொருட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அவசரப்பணம் மீளப்பெறும் எல்லையை அதிகரித்தல்.

**(இ) நாணய தொழிற்பாடுகளை மறுசீரமைத்தல்**

தானியங்கு முறைமையொன்றின் ஊடாக நாணயத் தாள் செயன்முறைப்படுத்தலின் செயல்திறனை அதிகரிப்பதற்கும் நாணயத் தாள் செயன்முறைப்படுத்தல் இயலளவினை அதிகரிப்பதற்கும் நாணயத் திணைக்களம், 2019ஆம் ஆண்டில் நாணயத் தொழிற்பாடுகளை மறுசீரமைக்கும் கருத்திட்டத்தை இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலக கட்டடத்தில் தொடங்கியது. மறுசீரமைப்பு கருத்திட்டத்திற்கு அவசியமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நாணயத் திணைக்களம் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் அமைச்சரவையின் ஒப்புதலையும் பெற்றுக்கொண்டது.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

### 6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

நாணயவிதிச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களை அடைவதற்குத் துணையளிப்பதற்கு பல முக்கிய தொழிற்பாடுகளை மேற்கொண்டது. அவை, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துதல்,உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தல்,வர்த்தக வங்கிகளின் வங்கியாளராகச் செயற்படுதல், அரசாங்கத்தின், அரசாங்க முகவராண்மைகளின் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வங்கியாளராகவும் அலுவல்சார் வைப்பகமாகவும் செயற்படுதல்,அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குதல், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை பங்கேற்பாளர்களுக்காக தீர்ப்பனவுக் கணக்குகளைப் பேணுதல்,அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பங்கேற்பாளர்களுக்கு ஒருநாளுக்குள்ளேயான திரவத்தன்மையினை வழங்குதல் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களை ஒழுங்குபடுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

மத்திய வங்கியின் தற்பொழுது நிலவும் நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் குறுங்கால வட்டி வீதங்களைப் பேணும் குறிக்கோளுடன் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், நாணயக் கொள்கையைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. குறைவான தளம்பல்மிக்க சூழலொன்றுடன் கூடிய விரும்பத்தக்க மட்டமொன்றினை நோக்கி நடப்பிலுள்ள மேம்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்படுகின்ற இலக்காகப் பணியாற்றுகின்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை சமிக்ஞை செய்வதிலும் வழிநடாத்துவதிலும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீது உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் பிரதானமாக தங்கியுள்ளது. அதேவேளை, ஓரிரவு அடிப்படையில் திரவத்தன்மைத் தேவைகளை

தீர்த்துக்கொள்வதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களுக்காக துணைநில் வசதிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டன. அதற்கமைய, 2019இல் நாணயக் கொள்கைத் தொழிற்படுத்தல் நடைமுறையானது சிறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் தன்மை மற்றும் பயன்படும் காலஇடைவெளி, கொள்கை வீதங்கள், செயல்திறன் வாய்ந்த கொள்கைச் சமிக்ஞைப்படுத்தல், அதிகரித்த வெளிப்படைத்தன்மை போன்றவற்றில் சில மாற்றங்களுடன் தொடர்ந்தும் உருவாக்கப்பட்டது.

திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் சமிக்ஞைப்படுத்தல் தாக்கத்தின் வினைத்திறனைப் பாதிக்கின்ற தனியான முதனிலை வணிகர்கள் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு வசதிகள் மீது அளவுக்கதிகமாகத் தங்கியிருப்பதனால், தனியான முதனிலை வணிகர்களின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களுக்கான அணுகுவழி, 2018 செத்தெம்பர் 25 தொடக்கம் இலங்கை மத்திய வங்கியினால் மட்டுப்படுத்தப்பட்டது. எனினும், தனியான முதனிலை வணிகர்களுக்காக ஓரிரவு திரவத்தன்மை துணை வழங்கும் நோக்குடன் திரவத்தன்மை பற்றாக்குறை காலப்பகுதியின் போது சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் மீதான மிதமிஞ்சிய அழுத்தத்தினை இல்லாதொழிப்பதற்கும் உள்நாட்டு பணச்சந்தையின் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கு 2019 செத்தெம்பரில் இலங்கை மத்திய வங்கியினால் திரவத்தன்மை துணை வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் சமிக்ஞைப்படுத்தல்களை மேம்படுத்துவதற்கும் திரவத்தன்மை துணை வசதி உதவியது.

உள்நாட்டுப் பணச்சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்ட அசைவுகளையும் திறைசேரி உண்டியல் ஏலங்களின் உடனடிக் கொள்வனவுக்கான குறைவான கேள்வியினையும் கருத்திற்கொண்டு மத்திய வங்கியானது 2019 செத்தெம்பரின் நடுப்பகுதியிலிருந்து உள்நாட்டு பணச் சந்தைக்கு நிலைத்துநிற்கக்கூடிய திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கு திறைசேரி முறி ஏலங்களின் உடனடிக் கொள்வனவினை அறிமுகப்படுத்துவதன் மூலம் தகைமையுடைய சாதனங்களுக்கான உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தியது.

### 6.2.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

#### (அ) திரவத்தன்மை எதிர்வுகூறல்கள்

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பொருத்தமான சந்தைத் தொழிற்பாடுகளூடாக திரவத்தன்மைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாளாந்த அடிப்படையில் உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மையின் வேறுபட்ட நோக்குகளை மதிப்பிடுகிறது. இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் தொடங்கப்பட்ட நாணயத் தொழிற்பாடுகளின் தாக்கம் அதேபோன்று சுற்றோட்டத்திலுள்ள நாணயம், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள், வர்த்தக வங்கி ஒதுக்கு நிலைமைகள் மற்றும் அரசாங்கத்துடனான இலங்கை மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை உள்ளடக்கி மதிப்பீட்டில் உயர்வான நிச்சயமின்மைகளைக் கொண்டுள்ள சுயாதீனக் காரணிகளும் பரிசீலனையில் கொள்ளப்பட்டன.

#### (ஆ) சந்தைத் தொழிற்பாடுகள் குழு

நாளாந்த நாணயத் தொழிற்பாடுகளினுள் நாணயச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த நாணயக் கொள்கை கரிசனைகளை மாற்றுகின்ற பணச் சந்தைத் தொழிற்பாடுகள் குழுவிற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு பண மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படும் நாளாந்த சந்தை அபிவிருத்திகளை மீளாய்வு செய்து சந்தைத் தொழிற்பாடுகள் குழுவானது மதிப்பிடப்பட்ட திரவத்தன்மை நிலைமை தொழிற்பாட்டு இலக்கின் விரும்பப்பட்ட மட்டம், சந்தைப் பங்கேற்பாளர்கள் மத்தியில் திரவத்தன்மைப் பரம்பல், பொருத்தமான சந்தைச் சமிக்ஞைகளுக்கான தேவை போன்றவற்றைப் பரிசீலனையில் கொண்டு திரவத்தன்மை முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கை மீது தீர்மானம் மேற்கொள்ளுகின்றது.

#### (இ) ஏலங்கள்

திரவத்தன்மைஈர்த்துக்கொள்ளல் மற்றும் திரவத்தன்மை உட்செலுத்தல் ஏலங்களை பொருத்தமானவாறு நடாத்துவதன் மூலம் விரும்பப்பட்ட மட்டத்தில் தொழிற்பாட்டு இலக்கினைப் பேணுவதற்காக வங்கி ஒதுக்குகளின் தொகையினை வழிநடாத்துவதற்கு திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகளில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் ஈடுபடுகின்றது.

##### (i) மீள்கொள்வனவு ஏலங்கள்

2019இல் உள்நாட்டுப் பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்கு உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது தேவைக்கேற்ற அடிப்படையில் ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்டகால மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. இதன்படி, பணச் சந்தை திரவத்தன்மை மிகையாகக் காணப்பட்ட பொழுது திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்காக ஓரிரவு அடிப்படையொன்றில் ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன. குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள் அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்ளும் உபாயமொன்றாக ஒரு வாரம் வரையில் மேற்கொள்ளப்பட்டன. கணிசமான காலப்பகுதிக்கு மிகையான திரவத்தன்மை தொடர்ந்து காணப்படும் என எதிர்பார்க்கப்படும் பொழுது மிகையான சந்தைத் திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்ளும் நோக்குடன் அடுத்த வேலைநாளன்று தீர்ப்பனவுடன் கூடிய நீண்டகால ஏலங்கள் நடத்தப்பட்டன.

அட்டவணை II - 9
**2019இன் போது நடாத்தப்பட்ட மீள்கொள்வனவு ஏலங்கள்**

| மீள்கொள்வனவு ஏலங்களின் வகை | ஏலங்களின் எண்ணிக்கை | ரூ.பில்லியன் | |
|---|---|---|---|
| | | முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை |
| ஓரிரவு | 47 | 903.4 | 661.1 |
| குறுங்காலம் | 35 | 515.0 | 327.4 |
| நீண்ட காலம் | 14 | 282.0 | 103.2 |

##### (ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

சந்தைக்கு திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்காக ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடாத்தப்பட்டன.இதற்கு மேலதிகமாக, அவர்களது ஓரிரவு நிதியளித்தல் தேவைகளை நிறைவுசெய்வதற்கு 2019 செத்தெம்பரில் தனியான முதனிலை வணிகர்களுகென திரவத்தன்மை துணை வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

அட்டவணை II - 10
**2019இன் போது நடாத்தப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

| நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களின் வகை | ஏலங்களின் எண்ணிக்கை | ரூ.பில்லியன் | |
|---|---|---|---|
| | | முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை |
| ஓரிரவு | 132 | 2,343.0 | 2,042.8 |
| குறுங்காலம் | 70 | 805.0 | 566.4 |
| நீண்ட காலம் | 39 | 616.6 | 396.8 |
| திரவத்தன்மை துணை வசதி | 13 | 33.5 | 22.6 |

##### (iii) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்

2019இன் போது, பிணையங்களின் சொத்துடமையினை மாற்றல் செய்வதன் மூலம் பணச் சந்தையில் நிரந்தரமானதிரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கு பங்கேற்கின்ற நிறுவனங்களுடன் உடனடி ஏலங்கள் நடத்தப்பட்டன. திறைசேரி

உண்டியல்கள் மற்றும் முறிகள் இரண்டினதும் கொள்வனவிற்கான ஏலங்கள் 2019இல் நடாத்தப்பட்டன. எவ்வாறாயினும்,திரவத்தன்மைப் பற்றாக்குறைச் சூழலொன்றில் நிரந்தர அடிப்படையில் திறைசேரி உண்டியல்கள் போன்ற தமது திரவத்தன்மைப் பிணையங்களை விற்பனை செய்வதற்கு சந்தைப் பங்கேற்பாளர்கள் தயங்குகின்ற நிலைமை அவதானிக்கப்பட்டது. உடனடி ஏலங்களில் திறைசேரி உண்டியல்களுக்கான குறைவான கேள்விக்கு மத்தியில் சந்தைக்கு நிரந்தரமான திரவத்தன்மையினை வழங்கும் நோக்குடன் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு திறந்த சந்தைத் தொழிற்பாட்டு சாதனங்களை விரிவுபடுத்துவதன் மூலம் 2019 செத்தெம்பர் 06ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவினை அறிமுகப்படுத்தியது.

**அட்டவணை II - 11**
2019இன் போது நடாத்தப்பட்ட உடனடி ஏலங்கள்

| உடனடி ஏலங்களின் வகை | ஏலங்களின் எண்ணிக்கை | ரூ.பில்லியன் | |
|---|---|---|---|
| | | முன்வைக் கப்பட்ட மொத்தத் தொகை | ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை |
| திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனை (திரவத்தமையினை ஈர்ப்பதற்கு) | - | - | - |
| திறைசேரி உண்டியல்களின் உடனடி கொள்வனவு (திரவத் தன்மையினை உட்செலுத்து வதற்கு) | 182 | 647.0 | 41.8 |
| திறைசேரி முறிகள் உடனடி விற்பனை (திரவத் தன்மையினை ஈர்ப்பதற்கு) | - | - | - |
| திறைசேரி முறிகள் உடனடிக் கொள்வனவு (திரவத் தன்மையினை உட்செலுத்து வதற்கு) | 23 | 96.0 | 47.7 |

**6.2.2 துணைநில் வசதி**

கொள்கை வீத வீச்சினுள் ஓரிரவு பணச் சந்தை வீதங்களை பிணிக்கின்ற அதேவேளை,பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வைப்பு வசதி வீதத்திலும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்திலும் ஆண்டு முழுவதும் துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. பங்கேற்கும் நிறுவனங்களின் ஓரிரவு திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியாமல் இருக்கும்போது அவற்றின் மிகையான திரவத்தன்மையினை ஏற்றுக்கொள்வதற்கு துணைநில் வைப்பு வசதி வழங்கப்பட்ட அதேவேளை பங்கேற்கும் நிறுவனங்களுக்குதிரவத்தன்மையினை வழங்குவதற்கு துணைநில் கடன் வழங்கல் வசதி கிடைக்கப்பெறச் செய்யப்பட்டன.

**அட்டவணை II - 12**
**2019இன் போது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் துணைநில் வசதிகள்**

| வசதி | ரூ.பில்லியன் | |
|---|---|---|
| | மொத்த அளவு | நாளாந்த சராசரி |
| துணைநில் வைப்பு வசதி | 7,488.6 | 30.8 |
| துணைநில் கடன் வழங்கல் வசதி | 4,796.6 | 19.7 |

**6.2.3 நியதி ஒதுக்கு விகிதம்**

நியதி ஒதுக்கு விகிதமானது,மத்திய வங்கியுடனான கணக்கினைத் தீர்ப்பனவு செய்வதில் நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கிணங்க, தொடர்புடைய வங்கியின் மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கான ஒரு பகுதியினை ஒவ்வொரு வர்த்தக வங்கியும் வைத்திருக்க வேண்டுமென்ற குறைந்தபட்ச ஒதுக்குத் தொகையினை நிர்ணயிக்கின்றது. இது தொடர்பில் நியதிஒதுக்கு விகிதத்திற்கு அமைவாக நியதி ஒதுக்குகளைப் பேணுவதனை நிருவகித்தல் மற்றும் வர்த்தக வங்கிகளின் இணங்குவித்தலினை கண்காணித்தல் என்பவற்றுக்கு உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் பொறுப்புடையதாகும். வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கு ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதம் 2019 மாச்சு 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 6.00 சதவீதத்திலிருந்து 5.00 சதவீதமாக 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது.

**6.2.4 வங்கி வீதம்**

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ், மத்திய வங்கியால் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுங்கால முற்பணங்கள் மீதான வட்டி வீதம் வங்கி வீதம் ஆகும். 2019 காலப்பகுதியில் வங்கி வீதமானது 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், 2019 காலப்பகுதியில் மத்திய வங்கி எந்தவொரு வர்த்தக வங்கிக்கும் இவ்வீதத்தில் நிதியினை வழங்கவில்லை.

**6.3 வர்த்தக வங்கிகளுக்கான மற்றும் அரசாங்கத்திற்கான வங்கியாளர்**

**6.3.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்**

மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்குகளினூடாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தனியான முதனிலை வணிகர்களும் நாணய முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களிடையேயான பத்திரங்களற்ற பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு என்பனவற்றிற்கு வசதியளிப்பதற்காக இக்கணக்குகள்,உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்றன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், வங்கி ஒதுக்குகளைப் பேணுவதற்காக இக்கணக்குகளைப் பயன்படுத்துகின்றன. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் நாளாந்த அடிப்படையில் அதன் 18 அமர்வுகளின் போது உருவாக்குகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பல்புடைத் தேறிய தீர்ப்பனவு மீதிகளைக் கணக்கிடுவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினை இற்றைப்படுத்துவதற்கு உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் பொறுப்புடையதாகும். உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பல்புடைத் தேறிய தீர்ப்பனவுகள் காசோலை பிம்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொதுவான விற்பனை மைய ஆளி போன்ற தேறிய தீர்ப்பனவுகளை உள்ளடக்குகின்றனது.2019 இறுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் 08 தனியான முதனிலை வணிகர்களினதும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்குகளைப் பேணியது.

**அட்டவணை II - 13**
**பல்புடைத் தேறிய தீர்ப்பனவு மீதிகள் கொடுத்துத் தீர்த்தல் நாளாந்த அமர்வுகள்**

| பல்புடை தேறிய தீர்ப்பனவு மீதி தொகுதிக் கோவைகள் | வேலை நாளொன்றுக்கான அமர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 பிரதான தீர்ப்பனவு (காசோலை பிம்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு) | 03 |
| 2 இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 03 |
| 3 பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளி | 04 |
| 4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி | 04 |
| 5 பொதுவான விற்பனை மைய ஆளி | 04 |
| மொத்த அமர்வுகள் | **18** |

### 6.3.2 அரச கணக்குகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், அரச திணைக்களங்கள், முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் சார்பாக சில வெளிநாட்டு நிறுவனங்கள் என்பனவற்றுக்கு தொடர்ந்தும் வங்கித்தொழில் வசதிகளை வழங்கி அரசாங்கத்தின் வங்கியாளர் என்ற மத்திய வங்கியின் வகிபாகத்துடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளைச் செயலாற்றியது. 2019 இறுதியில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் 46 அத்தகைய கணக்குகள் பேணப்பட்டதுடன் அரசாங்கம் சார்பில் ஆண்டின்போது ரூ.17,617.3 பில்லியன் கொண்ட 15,307 கொடுக்கல்வாங்கல்களைக் கையாண்டது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் 85 சதவீதத்திற்கும் கூடுதலானவை திறைசேரிக் கணக்குகளுக்கான துணைச் செயலாளர், பொதுப்படுகடன் திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கு,உண்ணாட்டரசிறை ஆணையாளர், பெறுமதி சேர்வரி மீளளிப்புக் கணக்கு மற்றும் சனாதிபதி நிதியக் கணக்கு என்பனவற்றுடன் தொடர்பானவையாகக் காணப்பட்டன.

நாணயவிதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு இறையாண்டில்,பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம் என்ற உச்சமட்ட வரையறைகளுக்குட்பட்டு, கட்டணங்களெதுவுமின்றி அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குகின்றது. 2019இன் தொடக்கத்தில், 2019ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மற்றும் அரச அரசிறையின் அடிப்படையில், தற்காலிக முற்பணங்களின் தொகை 2018ஆம் ஆண்டில்ரூ.225.0 பில்லியன் கொண்ட தற்காலிக முற்பணங்களிலிருந்து ரூ.238.06 பில்லியனாக ரூ.13.06 பில்லியனால் அதிகரிக்கப்பட்டது.

**அட்டவணை II - 14**
**2019இல் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பேணப்பட்ட கணக்குகளின் விபரங்கள்**

| கணக்குகளின் வகைகள் | கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 26 |
| தனியான முதனிலை வணிகர்கள் | 08 |
| அரசாங்கத் திணைக்களங்கள் | 32 |
| அரசாங்க முகவராண்மைகள் மற்றும் நிறுவனங்கள் | 14 |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளகத் திணைக்களங்களின் கணக்குகள் | 38 |
| வெளிநாட்டு முகவராண்மைகள் (உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட) | 09 |
| மொத்த அமர்வுகள் | **127** |

### 6.4 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாடு

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்,அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியினூடாக ஒரு நாளுக்குள்ளேயான நிதியளித்தலைக் கிடைக்கச்செய்வதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சீரானதும் வினைத்திறன்மிக்கதுமான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கு தொடர்ந்தும் பங்களித்தது. இவ்வசதியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பிணைய உறுதிகளுக்கெதிராக கட்டணமெதுவுமின்றி வழங்கப்பட்டதுடன் இவை அதேநாளன்று சந்தை விலைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகளைஈர்த்துக்கொள்வதற்கேதுவாகப் போதுமான உச்சத்துடன் அவற்றின் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்தப் பெறுமதியும் முறையே ரூ.15,241 பில்லியனாகவும் ரூ.62.72 பில்லியனாகவும் காணப்பட்டன. இது முன்னைய ஆண்டின் ரூ.55.31 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரியுடன் ரூ.13,275 பில்லியன் மொத்தத் தொகையாகவிருந்த ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் பயன்பாடில் அதிகரிப்பொன்றினைக் காண்பிக்கின்றது.

### 6.5 அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களை மேற்பார்வை செய்தல்

உள்நாட்டு பணச் சந்தையில் வினைத்திறன்மிக்கவாறு விலை கண்டறிதலினை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கையில் பணத்தரகர்களின் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்து கண்காணிப்பதற்கு உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு வலுவூட்டுகின்ற 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 10(இ) இன் கீழ் 2013 பெப்புருவரி 15ஆம் நாளன்று நடைமுறைக்குவரும் விதத்தில் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்கு விதியினால் திருத்தப்பட்டவாறான 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளை இரத்துச்செய்யும் விதத்தில் 2018 மாச்சு 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத்தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. மேலும், 2019 பெப்புருவரி 14ஆம் திகதி நடைமுறைக்குவரும் வகையில் பல புதிய சேர்த்தல்களை அதாவது பொருத்தமான மற்றும் முறையான தேவைப்படுத்தல்களை மேம்படுத்தல், பணத்தரகு தொழில் மீதான கட்டுப்பாட்டினை மட்டுப்படுத்தல், உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தல், அறிக்கையிடும் தேவைப்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் ஏடுகளைப் பரீட்சித்தல் போன்றவற்றை கூட்டிணைத்து 2019இன் 01ஆம் இலக்க பணத்தரகு ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன. தரவு பதிதல்/ கணித்தல் மீது இ-ஆவணங்கள் மற்றும் கைகளினால் கையாளல், குறைத்தல் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற நிர்வாகச் செலவில் குறைப்பொன்றுக்கு இட்டுச்செல்லுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களுக்கான மாதாந்த செயலாற்றல் அறிக்கையினை தரவேற்றம் செய்வதற்கான புதிய முறைமையொன்று மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பாளர் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் டப்ளியூஎன்ற மென்பொருள் ஊடாக அறிக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

2019 மாச்சு இறுதியிலுள்ளவாறு, இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஒன்பது கம்பனிகளுக்கு “அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்” என குறித்துரைக்கும் “அதிகாரமளித்தல் சான்றிதழ்” வழங்கப்பட்டிருக்கின்றது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களிடம் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 9 தலத்திலான பரீட்சிப்புக்களை நடாத்தியதுடன் பணத்தரகு ஒழுங்குவிதிகளின் மீறுகைக்கெதிராக குறித்த அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களுக்கெதிராக ஒழுங்கு முறைப்படுத்தப்படல் நடவடிக்கையினை எடுத்தது.

**2019.12.31இல் உள்ளவாறு பணத் தரகர்களின் பட்டியல்**

1. பார்ட்லீட் மெகலய் அன்ட் றோய் (பிறைவேற்) லிமிடட்
2. பெர்ஸ்ட் அலையன்ஸ் மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
3. ஜோர்ச் ஸ்ருவர்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
4. எம்விஎஸ் மணி புறோக்கர்ஸ் லிமிடட்
5. சென்றல் பெறேக்ஸ் அன்ட் மணி புரோக்கர்ஸ் லிமிடட்
6. பிக்கொட் சாப்மான் அன்ட் கம்பனி (பிறைவேற்) லிமிடட்
7. எஸ்எம்பி மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
8. தப்றோபேன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
9. விஷ்வின் மணி அன்ட் எக்ஸ்சேன்ஜ் புறோக்கர்ஸ் லிமிடட்

## 7. பொருளாதார ஆராய்ச்சி

கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுவதில் நாணயச்சபை மற்றும் ஆளுநரை வழிநடாத்துவதற்கும் பொதுமக்களுக்களுக் தகவல்களை வழங்குவதற்காகவும் தரவுகளின் திரட்டல் மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகளை நடாத்துதல் போன்ற செயற்பாடுகள் என்பன 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்ட பணிகளாகும். இதற்கேற்ப, ஆண்டுப்பகுதியில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை பேணுவற்காக ஆராய்ச்சி கொள்கை அறிவுரைகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து வழங்கியது. இவ்வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணயக் கொள்கை வடிவமைத்தல் மற்றும் பகுப்பாய்வுக் கட்டமைப்பின் மேம்படுத்தலில் ஈடுபட்டதுடன் ஆராய்ச்சி அடிப்படையிலான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கியதுடன் அவை 2019இல் கொள்கை வடிவமைப்பிற்கு வசதியளித்திருந்தன. மேலும், சமகால பேரண்டப்பொருளாதார விடயங்கள் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வூட்டலை மேம்படுத்தல் மற்றும் பன்னாட்டு முகவராண்மைகளுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிக்கொள்வதற்கு வசதியளித்ததுடன் அதேவேளை நாணயக்கொள்கை தொடர்பூட்டலை மேம்படுத்துவதற்காக வழிமுறைகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் முன்னேடுத்தது.

ஓர் செயற்றினான நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை அறிமுகஞ்செய்வது மற்றும் ஓர் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையின் நடைமுறைப்படுத்தல் என்ற 2018 - 2020 காலப்பகுதிக்கான மத்திய வங்கியின் பரந்த உபாயரீதியான இரு பொறுப்புக்களின் நடைமுறைப்படுத்தலில் தலைமைத் திணைக்களமாக செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் முன்னதாகக் காணப்படுவது தொடர்பில், ஆண்டின் பின்னைய பகுதியில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புதிய இலங்கை மத்திய வங்கி மசோதாவின் வரைதல் தொடர்பில் கொள்கை மட்ட கலந்துரையாடல்களில் தீவிரமாக ஈடுபட்டு முன்னணி வகிபாகத்தினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வகித்துள்ளது. வங்கித்தொழில் துறை மூலமாக எல்லைகளுக்கிடையிலான மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் உள்நாட்டு கொடுக்கல்வாங்கல்கள் இரண்டினையும் கண்காணிக்கும் நோக்குடனான பன்னாட்டு கொடுக்கல்வாங்கள் அறிக்கையிடல் முறைமையை அமுல்படுத்தல் தொடர்பிலான ஆரம்பக்கட்ட செயன்முறையை ஆண்டுப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்டது.

### 7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்காக முன்கூட்டிய மற்றும் காலக்கிரமமான நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கு வசதியளிப்பதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உண்மை, வெளிநாட்டு, இறை மற்றும் நாணயத் துறைகளின் போக்குகள் மற்றும் அபிவிருத்திகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தது. இதன்படி, நாணயக் கொள்கைக் குழவின் செயலகமாக அதன் கடமைகளை நிறைவேற்றும் வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மாதிரியுரு அடிப்படையிலான பேரண்டப் பொருளாதார எறிவுகளினால் ஆதரவளிக்கப்பட்ட முன்னோக்கிய பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய பொருளாதார மற்றும் நாணய நிலைமைகள் தொடர்பில் அனைத்தையுமுள்ளடக்கிய அறிக்கைகளை நாணயக்கொள்கை செயற்குழுவிற்குச் சமர்ப்பித்துள்ளது. இது நாண்யக் கொள்கை செயற்குழு மத்திய வங்கியின் பொருத்தமான நாணயக்கொள்கை நிலைப்பாடு தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் முன்கூட்டிய கொள்கைப் பரிந்துரைகளை நாணயச் சபைக்கு வழங்குவதற்கும் இயலச்செய்தது. கல்விமான்கள் மற்றும் தனியார் துறைப் பிரதிநிதிகளின் கருத்துக்களை உள்ளடக்குவதனூடாக நாணயக்கொள்கைத் தீர்மானமெடுத்தல் செயன்முறையினை வலுப்படுத்தும் நோக்குடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணயக் கொள்கைக் கலந்தாலோசனைக் குழுவின் கூட்டங்களை தொடர்ச்சியாக வசதிப்படுத்தியிருந்தது. மேலும், *2020இற்கும் அதற்கு அப்பாலுக்கமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்* என்ற வருடாந்த கொள்கை அறிக்கையின் தயாரிப்பினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்தது. இவ்வறிக்கையினூடாக மத்திய வங்கி நடுத்தர காலத்தில் அதன் நாணய மற்றும் நிதித் துறைக் கொள்கையினை அறிவித்திருந்ததுடன் முன்னோக்கிய காலப்பகுதியில் மத்திய வங்கியின் கொள்கைப் போக்கு தொடர்பில் வெளியக ஆர்வலர்களுக்கு தகவல்களை வழங்கியிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பேரண்டப் பொருளாதாரத்திலிருந்து எழும் இடர்நேர்வுகள் மற்றும் இத்தகைய இடர்நேர்வுகள் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் மீது ஏற்படுத்தும் சாத்தியமான தாக்கத்தினையும் தொடர்ந்து மதிப்பீடு செய்து வந்துள்ளது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வெவ்வேறுபட்ட பொருளாதார பிரச்சனைகள் மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு அவசியமான பொருத்தமான கொள்கை வழிமுறைகளையும் மூத்த முகாமைத்துவத்திற்கு அறிவூட்டியிருந்தது. கொள்கை தீர்மானமெடுக்கும் செயன்முறையை ஆதரவளிக்கும் நோக்கில் முன்மொழியப்பட்ட இறைவழிமுறைகள் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் மீதான அவற்றின் தாக்கம் என்பன தொடர்பிலும் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு மூத்த முகாமைத்துவத்திற்கு அறிவித்திருந்தது. மேலும், நாணயக்கொள்கை தீர்மானித்தல் மற்றும் தொடர்பாடல் வழிமுறைமை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தனது உள்ளக மாதிரியுருவமைத்தல் மற்றும் எறிவுகூறல் உள்ளாற்றல் மற்றும் உட்கட்டமைப்பினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் மேம்படுத்தியது. நடுத்தர காலத்தில் எறிவுசெய்யப்பட்ட பணவீக்கப் பாதையுடன் இணங்கிச்செல்லும் வகையில் பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதிநிலைப்படுத்தவும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியக தொடர்பூட்டல் மற்றும் பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் மத்தியில் விழிப்புணர்வினை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறுபட்ட வழிமுறைகளை மேற்கொண்டிருந்தது. நாணயச் சபையின் நிலைப்பாடு தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு நாணயக் கொள்கை மீளாய்வு தொடர்பிலான பத்திரிகை வெளியீட்டினை தொடர்ந்தும் பிரசுரித்திருந்தது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் ஏனைய மூத்த அலுவலர்களின் தலைமையில் அதன் ஆர்வலர்களுக்கு முதல் நிலைத் தகவல்களை வழங்குவதற்கு மற்றும் நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பிலான தெளிவுபடுத்தல்களை பெறுவதற்கான தளத்தினை வழங்கும் நாணயக் கொள்கை பத்திரிகை மாநாட்டில் முன்னனி வகிபாகத்தினை வகித்தது. மேலும், நேரடியாக அதேநேரத்தில் பரந்தளவிலான மக்களை சென்றடையச் செய்யும் வகையில் 2019இல் நாணயக் கொள்கை பத்திரிகை மாநாட்டுச் செயன்முறைகளை நேரலையாக வழங்குவதனை ஆரம்பிப்பதிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஓர் முன்னனி வகிபாகத்தினை வகித்தது.

### 7.2 வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டைப் பேணுவதற்காக பன்னாட்டு வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நிதி தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றின் மூலம் உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக அனைத்தையுமுள்ளடக்கிய கண்காணிப்பினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்டதுடன் பொருத்தமான கொள்கை மதியுரைகளையும் விதந்துரைப்புக்களையும்

நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் வழங்கியது. அதன்படி, ரூபாவின் மீதான ஏதாவதொரு அழுத்தத்தினை அடையாளம் காண்பதற்கும் செலாவணி வீதத்தின் மிதமிஞ்சிய தளம்பலைக் குறைப்பதற்குமான பரிகார வழிமுறைகளை முன்மொழிவதற்கும் ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாயின் ஒப்பீட்டுரீதியான அசைவுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து மதிப்பிட்டது. பல்வேறு வெளிநாட்டுத் துறை தொடர்பான விடயங்களில் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவதானிப்புக்களை வழங்குதல் என்பனவற்றிற்கு அப்பால் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயவிதிச் சட்ட ஏற்பாட்டின் கீழ் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பல வெளிநாட்டு கடன்களின் நாணயத் தாக்கத்தினைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்திருக்கின்றது. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் மூன்றாண்டு கால விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணியம்சார் செயலாற்றல் பிரமாணங்கள் மற்றும் குறிகாட்டி இலக்குகள் மற்றும் அமைப்பியல் ரீதியான அடித்தள அளவுக் குறிகாட்டிகள் தொடர்பிலான முன்னேற்றங்களினைக் கண்காணித்தது. பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவு அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக வெளிநாட்டுத் துறைத் தரவுகளைத் தொகுத்தல் மற்றும் பரப்புதல் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புக்களைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்ட அதேவேளை சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்கள் மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலை புள்ளிவிபரங்களைச் சென்மதி நிலுவைக் கையேடு 6 வடிவமைப்பின் கீழ் காலாண்டு அடிப்படையிலும் பன்னாட்டு ஒதுக்குத் தரவு முன்வரைவினை மாதாந்த அடிப்படையிலும் பிரசுரிப்பதனை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்த வேளையில் காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களை உலக வங்கிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீட்டிற்கு நேரடி முதலீட்டுத் தரவினையும் காலக்கிரமத்தில் சமர்ப்பித்தது. வெளிநாட்டுத் துறைத் தரவின் துல்லியத்தினை மேம்படுத்துவதற்கும் காலந்தவறாமையை உறுதிப்படுத்தும் வகையில் தனியார் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்கான வருடாந்த பன்னாட்டு முதலீட்டு அளவீடு மற்றும் வதிவிட மற்றும் வதிவிடமற்ற வானூர்திகள், கப்பற்படுத்தல் நிறுவனங்கள், தொலைத்தொடர்பூட்டல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதித் துறைகளை உள்ளடக்கிய பணிகளிலுள்ள வர்த்தகத்துடன் தொடர்புடைய பகுப்பாய்வுகள் மற்றும் உள்நோக்கிய தொழிலாளர்களின் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய மாதாந்த பகுப்பாய்வினையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. மேலும், பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையை அமுல்படுத்தும் முன்னணித் திணைக்களமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது முறைமைத் தேவைப்பாடுகளை அடையாளங்காணல், திணைக்களங்களுக்கிடையிலான தரவு தேவைப்பாடுகள், சட்டரீதியான கட்டமைப்புக்கள் மற்றும் தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு போன்ற அடிப்படை வேலைகளை ஆரம்பித்திருந்தது.

### 7.3 முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை வழங்குதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது முக்கியமாக நாணயக் கொள்கை, செலாவணி வீதக் கொள்கை, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் இறைத்துறை தொடர்பான விடயங்களில் அரசாங்கம் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு முன்கூட்டிய கொள்கை மதியுரைகளைத் தொடர்ந்தும் வழங்கியது. 2019இற்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் சமர்ப்பிப்பு பிற்போடப்பட்டமையை கருத்திற்கொண்டு பொருளாதாரத்திலான அபிவிருத்திகள் மற்றும் தொடர்புடைய இடர்களைக் கொண்ட சுருக்கத்திரட்டு என்பது வரவுசெலவுத்திட்ட அறிவிப்பிற்கு முன்னராக 2019 மார்ச்சில் கௌரவ நிதி அமைச்சரிற்கு வழங்கப்பட்டது. நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 116(1) இற்கேற்ப, பொருளாதாரத்தின் அபிவிருத்திகள் மற்றும் தொடர்புடைய இடர்களை விவரிக்கும் இரகசிய அறிக்கையான செத்தெம்பர் 15ஆம் திகதி அறிக்கை கௌரவ நிதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தேசிய பொருளாதார சபைக்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியதுடன் வெவ்வேறுபட்ட பேரண்டப் பொருளாதார விடயங்கள் தொடர்பில் சுயாதீனமான அவதானிப்புக்களை அரசிற்கு வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2019 காலப்பகுதியில் எட்டு நாணயக் கொள்கைக் குழுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாணயக் கொள்கைக் குழுவின் உறுப்பினராகச் சேவையாற்றுவதற்கு மேலதிகமாக சந்தைத் தொழிற்பாடுகள் குழு, நிதி முறைமை உறுதிப்பாட்டுக் குழு, உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக் குழு, அரச பிணையங்கள் வழங்குவதற்கான கேள்விக்கோரல் சபை, பயிற்சிக் குழு, நூலக ஆலோசனைக் குழு, இலங்கை அரசாங்கத்தின் பன்னாட்டு முறிகளுக்கான கேள்விக் கோரலுடனான ஆலோசனைக்குழு மற்றும் மத்திய வங்கியின் 70வது வருடாந்த கொண்டாட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்தும் ஆலோசனைக் குழு போன்ற பல்வேறுபட்ட உள்ளகக் குழுக்களில் உறுப்பினராகத் தொடர்ந்தும் பணியாற்றினார். மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் உள்ளக முதலீட்டு மேற்பார்வைக் குழு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார். பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சமகால விடயங்களை உள்ளடக்கிய வெளிபடுத்துகைகளை நாணய சபை மற்றும் நிதியியல் நிறுவனத் தலைவர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளுக்கான குழுமங்களில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த உறுப்பினர்கள் வழங்கினர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மேலும் பல உள்ளக குழுக்களில் சேவையாற்றினர்,

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் ஹெக்டர் கொபேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய அறிவியல் நிறுவனம் மற்றும் நிதியமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சு மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு போன்றவற்றால் நியமிக்கப்பட்ட பல்வேறுபட்ட செயற்குழுக்கள் மற்றும் சபைகளில் மத்திய வங்கியை பிரதிநிதித்துவம் செய்திருந்தனர். கெரவலப்பிட்டி மின் உற்பத்தி செய்யும் திட்டம் குறித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, ஆனையிறவின் வடக்குப் பகுதி புனர்வாழ்வு தொடர்பான திட்டக் குழுக்கள், பரந்தன் இரசாயன வரையறுக்கப்பட்ட கம்பனியின் மறுசீரமைப்பு, இலங்கை கனியவள வரையறுக்கப்பட்ட கம்பனியின் மறுசீரமைப்பு, மோட்டார் வாகனங்களின் ஒருங்கிணைப்பு கைத்தொழில் மீதான பகுப்பாய்வொன்றை மேற்கொள்கின்ற செயற்குழு மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயத்திற்கான முதன்மை தொழில்நுட்ப செயற்குழு, தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் செயற்குழு, அரசாங்கத்தின் நிதிப்புள்ளிவிபர ஒருங்கிணைப்பு செயற்குழு, இலங்கை போக்குவரத்து மற்றும் எரிசக்தி துறைகளுக்கான காபன் விலையிடல் கருவிகளை வடிவமைப்பதற்கான தொழில்நுட்ப செயற்குழு, இலங்கையின் கல்வி முறைமையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதக் கொள்கையை அமுல்படுத்தல் மீதான கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி மீதான துறைரீதியான கண்காணிப்பு செயற்குழு, வர்த்தக மேம்படுத்தல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தகவல் என்பவற்றின் மீதான ஆலோசனைச் செயற்குழு மற்றும் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ தந்திரோபாய உருவாக்கல் தொடர்பான இணைந்த செயற்குழு போன்ற தேசிய மட்டத்திலான ஏனைய செயற்குழுக்கள் என்பன 2019இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் சேவையாற்றிய ஏனைய வெளியக செயற்குழுக்களாகும். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் ஊழிய இடம்பெயர்வு தொடர்பான பணிக்குழுக்கள் மற்றும் தேசிய கணக்கீடு மற்றும் தொகுத்தல் முறைமையை மேம்படுத்தல், முன்மொழியப்பட்ட வங்காளதேசம் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் சாத்தியப்பாட்டு கற்கைகள் மற்றும் ஒருங்கிணைந்த சுற்றுலா டிஜிட்டல் தளத்தை செயற்படுத்தும் செயற்குழுக்கள் என்பவற்றிற்கும் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

### 7.4 நியதிச்சட்ட வெளியீடுகளும் தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதலும்

நாணயவிதிச் சட்டத்தின் கீழ் உள்ள சட்டரீதியான தேவைகளை நிறைவேற்றும் வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் 2018ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை வங்கியின் ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 2019 ஏப்பிறல் இறுதிக்குள் கௌரவ நிதியமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் வெளியிடப்பட்டது. அரையாண்டு அறிக்கையான *அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2019இன் முக்கிய பண்புகள் மற்றும் 2020இற்கான வாய்ப்புக்கள்* மற்றும் மாதாந்த குறிப்பேடுகள் என்பவையும் 2019இல் வெளியிடப்பட்டன. மேலும், *வழிகாட்டி 2020 - 2020 மற்றும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக்கான கொள்கைகள்* என்ற மத்திய வங்கியின் கொள்கைக் கூற்றானது பதின்மூன்றாவது ஆண்டாகவும் மத்திய வங்கியின் கொள்கைகளின் எதிர்வுகூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் தயாரிக்கப்பட்டதுடன் இது முன்னோக்கிய காலப்பகுதியில் ஆர்வலர்கள் தங்களது சொந்த திட்டங்கள் மற்றும் தந்திரோபாயங்களை வடிவமைத்துக்கொள்வதற்கும் சிறந்த முறையில் அளவீடுசெய்வதற்கும் துணைபுரியக்கூடுவதுடன் 2020 சனவரி 6ஆம் திகதி ஆளுநரால் அறிவிக்கப்பட்டது. இவற்றுக்கு அப்பால், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது ஊடகங்களில் வெளியிடப்பட்ட நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த குறிக்காட்டிகள் மற்றும் மத்திய வங்கியின் வெப்தளத்தில் கிடைக்கத்தக்க இணையத்தரவு நூலகம் என்பவற்றின் ஊடாக தொடர்ச்சியாக பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை பரப்பியிருந்தது. மேலும், பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக சமீபத்திய நாணயத் துறை புள்ளிவிபரங்கள், வட்டி வீத புள்ளிவிபரங்கள், சென்மதி நிலுவை மற்றும் ஏனைய வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்கள் உள்ளடக்கிய நாணயக்கொள்கை மீளாய்வு மற்றும் வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள் தொடர்பில் காலக்கிரம அடிப்படையிலான ஊடக அறிக்கைகள் வெளியிடப்பட்டன. சிறப்பு தரவு பரவல் நியமங்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்க பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய புள்ளிவிபரங்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பரப்பப்பட்டன.

### 7.5 கொள்கை ஆராய்ச்சியில் ஈடுபடுதலும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதலும்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெவ்வேறுபட்ட ஆராய்ச்சி மற்றும் அறிவுப்பகிர்வு நடவடிக்கைகளின் ஊடாக ஆராய்ச்சிக் கலாசாரத்தை திணைக்களம் மற்றும் மத்திய வங்கிக்குள் தொடர்ச்சியாக ஊக்கப்படுத்தியிருந்தது. முக்கிய ஆராய்ச்சி விடயங்களுக்கு பொறுப்பானதும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் உள்ளக செயற்குழுவானதுமான ஆராய்ச்சி ஆலோசனைக் குழு ஆண்டுகாலப்பகுதியில் அதனது நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தது. முக்கியமாக பொருளாதாரத்தில் பொருத்தமான முறையியல் அடித்தளங்கள் மற்றும் கல்விசார் ஆராய்ச்சியின் நுட்பங்கள் என்பவற்றுடன் ஆராய்ச்சி நோக்குநிலையை அபிவிருத்தி செய்வதற்கும் மத்திய வங்கிக்குள்ளும் ஏனைய வெளியக நிறுவனங்களுக்குள்ளும் பங்குபற்றுனர்களுக்கு அறிமுகம் செய்வதற்காக வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தின் உதவியுடன் பொருளாதாரத்தில் ஆராய்ச்சி என்ற பயிற்சிப்பாடநெறியை ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவானது தொடர்ச்சியாக வெற்றிகரமாக ஒருங்கிணைத்திருந்தது. இத்துடன் பேரண்டப்பொருளியல், நுண்பாகப்பொருளியில் மற்றும் பொருளியலுக்கான கணிதம் என்ற துறைகளில் மத்தியவங்கியில் மேற்பட்டப்படிப்பு ஆர்வலர்களின் பயிற்றுவிப்பையும் முன்னெடுத்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது மத்திய வங்கியின் வருடாந்த முக்கிய ஆராய்ச்சி நிகழ்வான சர்வதேச ஆராய்ச்சிக் கருத்தரங்கை பன்னிரெண்டாவது தடவையாக 2019 திசம்பரில் ஒழுங்கமைத்திருந்தது. கருத்தரங்கானது வெவ்வேறுபட்ட சமகால பொருளாதார பிரச்சினைகள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் அனுபவரீதியான ஆய்வுகளை தூண்டும் நோக்கில் அமைந்திருந்ததுடன் வெவ்வேறுபட்ட பின்னனியிலிருந்தான ஆய்வாளர்களுக்கு வெவ்வேறுபட்ட பின்னனியிலிருந்து அவர்களின் கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் அனுபவங்களை கலந்துரையாடுவதற்கு களத்தினை வழங்கியிருந்தது. அண்மைக்கால நாணயக்கொள்கை பிரச்சினைகள் மற்றும் சவால்கள் எனும் தலைப்பில் உரையாற்றிய ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவனத்தின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் வருகைதரு புலமையாளரும் யப்பான் வங்கியின் கொள்கைச் சபையின் முன்னைய அங்கத்தவரும் கியோ பல்கலைக்கழகத்தின் பேராசியருமான சயுரி சிராய் மற்றும் மத்திய வங்கி: ஆய்விலிருந்து பொருளாதார மற்றும் நிதியியல் இலக்கியம் என்ற தலைப்பில் உரையாற்றிய பிரான்ஸ் வங்கியின் முன்னைய பிரதான பொருளியலாளரும் கௌரவ பணிப்பானர் நாயகமுமான திரு. மார்க்-ஒலிவர் ஸ்ரோஸ்-கான் ஆகிய இரண்டு பிரபல சர்வதேச பொருளாதார வல்லுனர்கள் முன்னிலையில் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு 2019 நடைபெற்றது. மிகக் கடுமையான இரண்டடுக்கு மீளாய்வுச் செய்முறைகளினூடாகத் தெரிவுசெய்யப்பட்ட நாணயக்கொள்கை, பொது முதலீடு, உற்பத்தித்திறன் மற்றும் வரியீடு போன்ற சமகால தலைப்புக்களிலான ஏழு ஆய்வுக்கட்டுரைகள் ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆராய்ச்சியாளர்கள் உள்ளடங்கலாக இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பங்குபற்றிய ஆராய்ச்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கான *முனைவர் டி. எஸ். விஜேசிங்க ஞாபகார்த்த விருது* ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஓர் அலுவலருக்கு வழங்கப்பட்டது

மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது உலக வங்கியின் தென்னாசிய அலுவலகம், கொள்கைக் கற்கைகள் நிறுவனம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம் என்பவற்றுடன் இணைந்து தெற்காசியாவில் வெளிநாட்டுத்துறையின் பாதிக்கப்படும் தன்மை எனும் தொனிப்பொருளில் 2019ஆம் ஆண்டு பெப்புருவரி 28 தொடக்கம் மாச்சு 01 வரையான காலப்பகுதியில் பிராந்திய மாநாடொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. வளங்களைப் புரிந்துகொள்ளல் மற்றும் சவால்மிகு பூகோள சூழலில் தீர்வுகள் தொடர்பில் சிந்தனை செய்யவும் அவர்களது நாடுகளில் எதிர்கொள்ளப்படும் பேரண்டப் பொருளாதார பிரச்சனைகள் மற்றும் வெளி அச்சுறுத்தல்கள் தொடர்பில் கலந்துரையாடுவமற்காக ஆறு தென்னாசிய நாடுகளிலிருந்து பல கல்வியாளர்களும் பயிற்சியாளர்களும் வருகை தந்திருந்தனர். இம்மாநாட்டில் கல்வி மற்றும் கொள்கை ஆகிய இரண்டினையும் மையப்படுத்திய பதினாறு ஆராய்ச்சிக் கட்டுரைகள் முன்வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். மாநாட்டின் போது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர் உட்பட மத்திய வங்கியின் அலுவலர்களினால் இரண்டு கட்டுரைகள் முன்வைக்கப்பட்டன.

மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ ஆராய்ச்சி வெளியீடான அலுவலர் கற்கையானது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களின் அலுவலர்கள் ஆராய்ச்சி வெளியீடுகளை ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் 2019ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வெளியீடுகளிலும் அவர்களது ஆய்வுகளைப் பிரசுரித்து வந்துள்ளனர். பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு மற்றும் தென்னாசியாவில் நடைபெற்ற வெளியகப் பாதிப்புக்கள் எனும் பிராந்திய மாநாட்டிற்கு மேலதிகமாக பொருளாதார மாதிரியிடலில் மூன்றாவது தென்னாசிய வலையமைப்பு, வாஷிங்டன், ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற உலக வங்கி வட அமெரிக்க கலந்துரையாடல் மற்றும் இந்தோனேஷியா வங்கி மற்றும் இந்தோனேசியா பாலியிலுள்ள ஆசிய - பசுபிக் பிரயோக பொருளாதார அமைப்பு ஏற்பாடு செய்திருந்த 13ஆவது நாணயப் பொருளாதார

அறிக்கை மற்றும் வங்கியியல் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டிலும் இந்தியாவின் புதுடெல்லியில் நடைபெற்ற டெல்லி பேரண்டப் பொருளாதார செயலமர்வில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்திருந்தார்கள்.

அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது தொடர்பூட்டல் திணைக்களம், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்களுடன் இணைந்து பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிலுள்ள அலுவலர்கள் மற்றும் மத்திய வங்கிக்கு வருகை தரக்கூடிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பயன்பெறும் வகையில் அறிவைப் பரப்பும் செயன்முறையில் வினைத்திறனாக ஈடுபட்டுள்ளது. *2018ஆம் ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு இலங்கைப் பொருளாதாரத்தின் நிலை* தொடர்பில் மூன்று மொழிகளிலும் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் பொது விரிவுரையை வங்கித்தொழில் கற்கைகள் நிறுவனத்தில் நடாத்தியிருந்த அதேவேளை இதனை மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்களிலுள்ள மூத்த அலுவலர்களும் நடாத்தியிருந்தனர். மத்திய வங்கியின் நோக்கு மற்றும் தொழிற்பாடு, நாணயக் கொள்கை, இறைக் கொள்கை, வெளிநாட்டுத் துறை மற்றும் அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் போன்ற விடயப்பரப்புக்களில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாடளாவிய ரீதியில் பல்வேறுபட்ட கல்விசார் நிகழ்ச்சிகளை மேற்கொண்டிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய வங்கியின் பட்டப்பின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர ஆர்வம் கொண்டுள்ளவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மதிப்பீடு செய்துள்ளது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற ஆராய்ச்சி முன்மொழிவுகளையும் ஏனைய வெளியக ஆய்விதழ்களில் பிரசுரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மீளாய்வு செய்தார்கள். உயர்தர மாணவர்கள் பயன்பெறும் வகையில் *தக்ஷிலாவ* மற்றும் *அறிவூற்று* போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்துவதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பல மூத்த அலுவலர்கள் வளவாளர்களாக தமது பணியை வழங்கியிருந்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெற்ற *ஈகோன்-ஐகோன் சீசன் IV* எனும் பாடசாலைகளுக்கிடையிலான வினா விடைப் போட்டியினை ஏற்பாடு செய்வதில் தொடர்பூட்டல் திணைக்களத்திற்கு உதவியிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள்தின் ஓர் மூத்த அலுவலர் வினாவிடைப் போட்டியின் தலைவராக செயற்பட்டதனால் 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் வங்கிகளுக்கிடையிலான வினா விடைப் போட்டிகள் பயன்பெற்றன.

### 7.6 பன்னாட்டு உறவுகளைப் பேணல்

2019இல் அரசாங்கம் மற்றும் ஏனைய முக்கிய பன்னாட்டு அபிவிருத்தி வங்கிகள், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற முகவர்களுக்கிடையிலான இணைப்புக்கு ஆதரவளிக்கும் அதேவேளை அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் சார்பாக பன்னாட்டு நாணய நிதியம், சார்க் நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், தென்கிழக்காசியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மத்திய வங்கிகள் உள்ளடங்கலாக பல்புடை நிதிய பன்னாட்டு அமைப்புக்களுக்கான மத்திய தொடர்பு மையமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொழிற்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் முகவர்கள் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு பேரண்ட பொருளாதாரப் புள்ளிவிபரங்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களைத் தொடர்ந்தும் வழங்கி வந்திருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2019 பெப்புருவரி மற்றும் செத்தெம்பர் மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த பன்னாட்டு நாணய நிதிய தூதுக்குழுக்களை ஒருங்கிணைத்ததுடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான மீளாய்வுகளில் பன்னாட்டு நாணய நிதியத்துடன் நெருங்கிப் பணியாற்றியுள்ளது. மேலும், 2019 ஒத்தோபர் மாதம் மத்திய வங்கியின் எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையின் ஒரு பாகமாக காலாண்டு எதிர்வுகூறல் மாதிரியின் மேம்பாட்டினை மையப்படுத்தி தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைந்திருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையத்தின் ஆளுநர் சபை மற்றும் நிறைவேற்றுக் குழு என்பவற்றின் தலைவர் என்ற வகையில் செத்தெம்பர் மாதம் 26-28ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் மற்றும் பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கியின் உயர்மட்ட கருத்தரங்கு மற்றும் 18ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தினை நடாத்துவதற்கும் வசதியளித்திருந்தது.

## 8. ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியமானது 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின் படி, சட்டத்தின் பொது நிருவாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் நிதிய முகாமைத்துவத்தின் அனைத்து அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேம நிதியத்தின் பிரிவு 5 இன் படி, நாணயச் சபை அதன் தொழிற்பாட்டினை ஆற்றுதல், அதன் அதிகாரங்களைப் பிரயோகித்தல் மற்றும் அதன் கடமைகளைச் செயற்படுத்துவதற்குமாக ஒரு தொழிற்பாட்டு சக்தியாக செயற்படுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திற்கு (ஊ.சே.நி. திணைக்களம்) வழங்கியுள்ளது.

### 8.1 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திடம், உறுப்பினர் பங்களிப்புகளையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளையும் பேணுதல் (தனிப்பட்ட கணக்குகள்), உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், நிதியத்தின் பயனாளிகளுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல், மிகையான நிதியை முதலீடு செய்தல், மற்றும் நாணயச் சபையும், தொழில் ஆணையாளரும் தமது கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளும்போது ஏற்படும் செலவினங்களை விதித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது தொழில் ஆணையாளருடன் நெருக்கமான விதத்தில் ஒத்துழைப்பை வழங்கிய அதேவேளையில், ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின் படி மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**(அ) பங்களிப்புகளைப் பெறுதலும் உரித்துடையவர்களுக்கு நன்மைகளைச் செலுத்துதலும்**

2019இல், உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்ட மொத்த மீளளிப்புக்கள் ரூ.126.3 பில்லியனாகக் (அட்டவணை II-15) காணப்பட்ட போதிலும், உறுப்பினர்களின் மொத்த பங்களிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.145.0 பில்லியனிலிருந்து ரூ.157.2 பில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த மீளளிப்புகள் 2018ஐ விட 17.0 சதவீதமான ஒரு அதிகரிப்பினை காட்டியது. இதற்கு இணங்க 2019இற்கான தேறிய பங்களிப்பானது 2018இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.37.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூ. 30.9 பில்லியனுக்கு குறைவடைந்துள்ளது.

**(ஆ) நிதியத்தின் பொதுக்கணக்கு மற்றும் உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல்**

பெறப்பட்ட தேறிய பங்களிப்புகள் (பங்களிப்புகளில் இருந்து மீளளிப்புகளை கழித்த பின்னர்) மற்றும் முதலீடுகளால் உழைக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் காரணமாக நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2018இன் இறுதியில் உள்ளவாறான ரூ.2,289.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் ரூ.2,540.4 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு (உறுப்பினர் நிலுவைகள்) 2019இன் இறுதியில் ரூ.2,497.6 பில்லியனாக விளங்கி 2018இன் இறுதியில் உள்ளவாறான ரூ.2,254.2 பில்லியனிலிருந்து 10.8 சதவீத அதிகரிப்பு ஒன்றினைப் பதிவுசெய்துள்ளது. (அட்டவணை 01)

**அட்டவணை II - 15**
**நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல்**

| விடயம் | 2018 | 2019(அ) | % |
|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | 2,289.4 | 2,540.4 | 11.0 |
| உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு (ரூ.பில்) | 2,254.2 | 2,497.6 | 10.8 |
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 18.7 | 19.0 | 1.5 |
| பங்களிப்புச் செய்யும் உறுப்பினர் கணக்குகள் (மில்) | 2.8 | 2.5 | (11.6) |
| பங்களிப்புச் செய்யாத உறுப்பினர்களின் கணக்குகள் (மில்) | 15.8 | 16.5 | 3.9 |
| மொத்தப் பங்களிப்புகள் (ரூ.பில்) | 145.0 | 157.2 | 8.4 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 108.0 | 126.3 | 17.0 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 37.0 | 30.9 | (16.4) |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 241,190 | 241,581 | 0.2 |

(அ) தற்காலிகமானவை மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(இ)** நிதியத்தின் முதலீட்டுச் செயற்பாடுகள்

(i) முதலீட்டுச் சொத்துப் பட்டியல்

2019 இல் ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது, நீண்ட காலத் திறைசேரி முறிகள் மற்றும் கம்பனி பத்திரங்களில் அதனுடைய நிதிகளை முதலீடு செய்வதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியல் (ஏட்டுப்பெறுமதி) 2018இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,298.8 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ரூ.2,548.7 பில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது (அட்டவணை II-16). மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் நிதியத்தினுடைய ஏனைய செலவுகளை எதிர்கொள்ளுவதற்கான திரவத்தன்மையின் ஒரு போதுமான அளவினை பேணுவது மற்றும் நிதியத்தின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற அதேவேளை நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு ஒரு நீண்ட கால நேர்கணிய உண்மை வருவாய் வீதம் ஒன்றினை வழங்குவதை இதனுடைய நோக்கமாகக் கொண்டிருந்தது.

இதற்கிணங்க 2019இன் இறுதியில் முதலீட்டுச் சொத்துப் பட்டியலானது 93.8 சதவீதமான அரச பிணையங்களையும், 3.0 சதவீதமான பங்குகளையும், 1.7 சதவீதமான நிறுவனத் தொகுதிக் கடன் பத்திரங்கள் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்களையும், 0.9 சதவீதமான நிலையான வைப்புக்களையும் மற்றும் மிகுதியான 0.6 சதவீதமான நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தத்தையும் உள்ளக்கியதாகக் காணப்படுகின்றது. 2019இன் இறுதியிலுள்ளவாறான விளைவு வீதங்களுடன் சேர்த்து அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு அட்டவணை II-17 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 16**
**முதலீட்டுச் சொத்துப் பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2018 இறுதி | | 2019 இறுதி | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | பங்கு (%) | தொகை (ரூ.பில்) | பங்கு (%) |
| திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் | 2,119.2 | 92.2 | 2,390.4 | 93.8 |
| பங்குரிமை மூலதனம் | 74.9 | 3.3 | 75.4 | 3.0 |
| கம்பனி படுகடன்கள் | 44.8 | 1.9 | 42.2 | 1.7 |
| நிலையான வைப்புக்கள் | 33.6 | 1.5 | 25.0 | 0.9 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 26.4 | 1.1 | 15.6 | 0.6 |
| மொத்தம் | **2,298.8** | **100.0** | **2,548.7** | **100.0** |

மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II - 17**
**அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு**
**(2019 இறுதியிலுள்ளவாறு)**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதி (ரூ.பில்) | பங்கு (%) | நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு(%)(அ) |
|---|---|---|---|
| 1 ஆண்டுக்குக் குறைந்தது | 117,804.5 | 4.9 | 7.96 |
| 1-2 ஆண்டுகள் | 174,652.7 | 7.3 | 8.74 |
| 3-4 ஆண்டுகள் | 293,388.2 | 12.3 | 9.52 |
| 5 ஆண்டுகளுக்கும் கூடியது | 1,804,331.7 | 75.5 | 10.09 |
| மொத்தம் | **2,390,177.1** | **100.0** | **9.82** |

அ) ஒவ்வொரு முதிர்ச்சிக் கால எல்லைக்குமான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமானது, தனிப்பட்ட பிணையங்களுக்கான நடைமுறை விளைவு வீதத்தினை ஒரு முதிர்ச்சிக் கால எல்லையினுள் பிணையங்களினுடைய மொத்தப் பெறுமதியினால் நிறையளிக்கப்பட்டதாகும்.

மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(ii) முதலீட்டு வருமானம்

2019 காலப்பகுதியில், நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானமானது முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 16.5 சதவீதமான ஒரு அதிகரிப்பினைப் பதிவுசெய்து,ரூ. 259.0 பில்லியனாகக் காணப்பட்டது. வட்டி வருமானமானது நிதியத்தின் பிரதான வருமான மூலமாகக் காணப்பட்டதுடன், இது 2018இல் ரூ.229.4 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.254.7 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. பங்கு முதலீட்டு சொத்துப் பட்டியலிருந்து பெறப்பட்ட பங்கிலாப வருமானம், 2018இல் உழைக்கப்பட்ட ரூ.3,887.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.6,247.5 மில்லியனுக்கு 60.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்தமாக, நிதியத்தின் முதலீடுகளில் இருந்தான வருமானம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 10.4 சதவீதத்துடன் ஒப்பிடுகயைில் 2019இல் 10.7 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

அட்டவணை II - 18
முதலீடுகள் மீதான வருமானம்

| வருமானத்தின் மூலம் | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | பங்கு (%) | தொகை (ரூ.பில்) | பங்கு (%) |
| வட்டி மற்றும் மதிப்பிறக்க இலாபம் | 229,446.0 | 103.1 | 254,681.0 | 98.3 |
| பங்குகளிலிருந்தான சந்தைப்படியான இலாபம்/ இழப்புக்கள் | (10,901.3) | (4.9) | (1,890.0) | (0.7) |
| பங்குகளிலிருந்தான மூலதன இலாபம் | 7.2 | - | - | - |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | - | - | 0.1 | - |
| பங்கிலாபங்கள் | 3,887.6 | 1.7 | 6,247.5 | 2.4 |
| நிதியியல் சொத்துக்களின் சேத இழப்பு | 0.6 | - | 0.3 | - |
| மொத்தம் | 222,440.1 | 100.0 | 259,038.8 | 100.0 |

மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(iii) செலவீனம்

நிதியத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவீனம் 2018இன் ரூ.1,505.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 இல் ரூ.1,581.8 மில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்ததுடன், மொத்த வருமானத்தின் ஒரு விகிதமாக 2018இல் 0.68 சதவீதத்திலிருந்து 2019இல் 0.61 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது அட்டவணை II-19. இவ்வாண்டுகளில், நிதியானது அதன் தொழிற்பாட்டுச் செலவீனத்தினை மொத்த வருமானத்தின் ஒரு சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் பேணக்கூடியதாகவிருந்தது.

அட்டவணை II - 19
தொழிற்பாட்டுச் செலவினங்கள்

| விடயம் | தொகை (ரூ.மில்) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2018 | 2019 | |
| ஆளணிச் செலவினங்கள் | 967.3 | 1,062.6 | 9.8 |
| நிர்வாகச் செலவினங்கள் | 470.0 | 450.7 | (4.1) |
| ஏனைய செலவினங்கள் | 68.0 | 68.5 | 0.8 |
| மொத்தம் | 1,505.3 | 1,581.8 | 5.1 |
| மொத்த வருமானத்தின் %ஆக மொத்தச் செலவினங்கள் | 0.68 | 0.61 | |

மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(ஈ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக்கொடுப்பனவு

கடந்த ஆண்டுகளில், ஊழியர் சேம நிதியமானது அதன் உறுப்பினா்களுக்கு ஒரு உயர்ந்த வட்டி வீதத்தை தொடர்ந்தும் செலுத்தக்கூடியதாக இருந்தது அட்டவணை II-20. அத்தியாயம் 8இல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II - 20
உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%) |
|---|---|---|
| 2009 | 13.75 | 13.92 |
| 2010 | 12.50 | 12.65 |
| 2011 | 11.50 | 11.58 |
| 2012 | 11.50 | 11.62 |
| 2013 | 11.00 | 11.14 |
| 2014 | 10.50 | 10.60 |
| 2015 | 10.50 | 10.57 |
| 2016 | 10.50 | 10.51 |
| 2017 | 10.50 | 10.51 |
| 2018 | 9.50 | 9.54 |
| 2019(அ) | 9.25 | 9.27 |

(அ) தற்காலிகமானவை மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

[1] பயனுறு வட்டிவீதம் = (உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி)/ [(வருட ஆரம்பத்தில் உறுப்பினர் நிலுவை + வட்டி வரவு வைப்பதற்கு முன்பு வருட இறுதியில் உறுப்பினர் நிலுவை)/2]

(உ) உறுப்பினர் பணிகளில் ஈடுபடுதல்

(i) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்

2019 காலப்பகுதியில், ஊ.சே.நிதியத்தின் செயற்பாட்டு உறுப்பினா்களுக்கு அவர்களது தொழில்தருநர்கள் ஊடாக வழங்கப்பட்ட 2018இன் முதலரைப்பகுதி மற்றும் பின்னரைப்பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களானது அட்டவணை II-21 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II - 21
உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்

| காலப்பகுதி | தொழில் தருநர்களின் எண்ணிக்கை | கூற்றுக்களின் எண்ணிக்கை (செயற்படும் உறுப்பினர்கள் |
|---|---|---|
| 2018 முடலரையாண்டு | 70,180 | 2,201,077 |
| 2018 இரண்டாமரையாண்டு | 78,651 | 2,730,561 |

மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(ii) வீடமைப்பு கடன்களைப் பெறுவதற்கான வசதிப்படுத்தலுக்கு உறுப்பினர்களுக்கு உத்தரவாத சான்றிதழ்களை வழங்குதல்.

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆகிய பங்கேற்கும் கடன்வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக்கடன்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோள்களுடன் 1988 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டத்தினை 2019இல் தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ், 2019 காலப்பகுதியில், ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது,ரூ.5,097 மில்லியனை (அட்டவணை II-22) வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேம நிதிய நிலுவைகளுக்கெதிராக அவர்களுக்கு 10,022 உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கியது. மேலும், 2019 காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட உறுப்பினர் கணக்குகளில் இருந்து ஏறத்தாழ ரூ.3,164 மில்லியன் கழிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக 2019 இல் பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II - 22
வீடமைப்புக் கடன் உத்தரவாத வசதி

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக் கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்.) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்.) |
|---|---|---|---|
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |
| 2015 | 13,132 | 5,489 | 2,522 |
| 2016 | 12,780 | 5,414 | 2,541 |
| 2017 | 10,998 | 4,946 | 2,485 |
| 2018 | 10,036 | 4,974 | 2,759 |
| 2019(அ) | 10,022 | 5,097 | 3,164 |

(அ) தற்காலிகமானவை மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(iii) **ஓய்வுபெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்**

2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் என்பவற்றின் அடிப்படையில் 30 சதவீத ஊழியர் சேம நிதியம் ஓய்வுபெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள், 2015 யூலை 1 இலிருந்து தொழிற்பாட்டில் இருக்கின்றது. இத்திட்டமானது, நன்மைபெறுபவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் 2019இன் இறுதியளவில் 155,000 இற்கு மேற்பட்ட நன்மை பெறுநர்களுக்கு ரூ.88.3 பில்லியனை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. 2019 காலப்பகுதியில், இத்திட்டத்தின் கீழ் 29,646 நன்மைபெறுநர்களுக்கு ரூ.15.2 பில்லியன் விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

(iv) **ஊழியர் சேம நிதிய நடமாடும் பணிகள் நிகழ்ச்சித் திட்டம்**

உறுப்பினர் பணிகளின் விநியோகத்தை அவர்களின் வசதிக்கேற்ப மேம்படுத்தல் மற்றும் ஊழியர் சேம நிதியத்தின் தொழிற்பாடுகள் சம்பந்தமான பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்தல் என்பவற்றினை நோக்காகக் கொண்டு 2019ஆம் ஆண்டில் ஊ.சே.நிதிய நடமாடும் பணிகள் நடத்தப்பட்டன. இதற்கிணங்க, இந்த ஆண்டில் ஊ.சே.நிதியத் திணைக்களமானது 16 நடமாடும் பணிகளையும் 2 பிரதான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியுள்ளது. இந்த நடமாடும் பணிகளில் சில, தொழில் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், தலைமைப் பதிவாளர் திணைக்களம், காவல்துறை திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட∴ பிரதேச செயலகங்கள் என்பவற்றுடன் இணைந்து வழங்கப்பட்டது. பங்கேற்பாளர்களுக்கு ஊ.சே.நிதியத்துடன் தொடர்புடைய பணிகளையும் விழிப்புணர்வையும் வழங்குவதற்கு ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அல்லது அமைச்சுக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட நடமாடும் பணிகளுக்கு அவர்களின் அழைப்பை ஏற்று ஊ.சே.நிதியத் திணைக்களமும் பங்குபற்றியது. ஒரு உறுப்பினர் கொழும்பில் அமைந்துள்ள ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு வருகை தந்து பெறுகின்ற பெரும்பாலான அனைத்து பணிகளையும் தமது சொந்த இடத்தில் அல்லது வேலைத்தளத்தில் இருந்து கொண்டே நடமாடும் பணிகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பணிகளானது, ஊ.சே.நிதிய நிலுவைக் கூற்றுகளை வழங்குதல், ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் விபரங்களைத் திருத்துதல்,போலி இலக்கங்களை அகற்றுதல், ஊ.சே. நிதியக் கணக்கு திருத்தங்கள், இலத்திரனியல் ஊடகம் மற்றும் நேரடிப் பற்றுமுறைமை பற்றித் தொழில்தருநர்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல், உறுப்பினர் தகவல்களினுடைய மீள்பதிவு, குறுந்தகவல் பணிகளையும் இணையத்தள உறுப்பினர் தகவல்களையும் ஊக்குவித்தல் மற்றும் முழு மொத்த ஊ.சே. நிதிய நடைமுறைகள் சம்பந்தமான ஆலோசனை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இத்துடன், மின்னஞ்சல், சுவரொட்டிகள், துண்டுபிரசுரங்கள், காணொளிகள் மற்றும் விளக்கக்காட்சிகள் போன்றதொரு கூட்டுத்தொடர்பாடல் ஊடகத்தினைப் பயன்படுத்தி ஊ.சே. நிதியத்தினால் வழங்கப்படுகின்ற பணிகள் சம்பந்தமாக இலக்கிடப்பட்ட உறுப்பினர்கள், தொழிலாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கும் நடமாடும் பணிகளுக்கு இணையாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இது சம்பந்தமாக ஒவ்வொரு நடமாடும் பணிகள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு முன்னர், நடமாடும் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் சம்பந்தப்பட்ட தொழில்தருநர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொடர்புடைய தொழில்தருநர்களின் ஏனைய நிர்வாக அலுவலர்கள் ஆகியோருக்காக ஒரு விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

(v) **இலத்திரனியல் ஊடகத்தினூடாக ஊ.சே.நிதியத்தின் பங்களிப்பு**

ஊ.சே.நிதியத்தின் பங்களிப்புகளின் சேகரிப்பையும், இலத்திரனியல் ஊடகத்தில் தொடர்பான உறுப்பினர்களின் விபரங்களையும் வசதிப்படுத்துகின்ற இலத்திரனியல் கூற்றுமுறையானது ஒரு பத்திரங்களற்ற தொழிற்பாட்டுச் சூழலில் இதனுடைய தொழிற்பாட்டுத் திறனை மேம்படுத்துகின்ற நோக்கத்துடன் ஊ.சே.நிதியத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட சட்டவாக்கம் அதாவது 2012ஆம் ஆண்டு 2ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் (திருத்தம்) சட்டம் நடைமுறைக்குவரும் வரையில் இந்த முறைமை ஒரு சுயவிருப்பு அடிப்படையில் செயற்படுத்தப்பட்டது. இதற்கிணங்க, இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் ஊ.சே.நிதியத்தின் பங்களிப்பு விபரங்களை சமர்ப்பிப்பதானது தொழில்தருநர்கள் அவர்களுடைய தொழிலில் 50 இற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வைத்திருக்கின்ற போது அவர்களுக்கு கட்டாயமானதாக்கப்பட்டது. 2011இல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் சொந்த அதேநேர வழிமூலம் ஊ.சே.நிதியத்தின் பங்களிப்புக்களைச் சேகரிப்பதை எளிதாக்குபவர்களாக இந்தமுறைமையில் இணைந்தன. இது தொழில்தருநரின் பங்கேற்பு மற்றும் விரைவான உறுப்பினர் கணக்குகளை புதுப்பித்தல் செயன்முறை என்பவற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தியது. அதேவேளை அதன் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு தொழிற்பாடுகளை வலுப்படுத்தியிருந்தது. உறுப்பினர் கணக்குகளை நியம நேரத்தில் புதுப்பித்தலையும் 100 சதவீத தன்னியக்க செயன்முறையையும் கொண்டுவந்த அதேநேர அங்கத்தவர்களின் தகவல் செல்லுபடியாகும் ஒரு பொறிமுறையின் அறிமுகப்படுத்தலுடன், 2016இல் இ-கூற்று முறையானது அதனுடைய உயர்ந்த தொழில்நுட்ப திருப்புமுனையை அடைந்தது. இதற்கிணங்க, 8 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஆனது ஊ.சே.நிதியத்தின் அதேநேர கொடுப்பனவுகளை வசதிப்படுத்துகின்ற அதேவேளை இவற்றில் 4 அதேநேர உறுப்பினர் தகவல்களை செல்லுபடியாக்குதல் மற்றும் அதனுடைய வாடிக்கையாளர்களுக்கான நியம நேர உறுப்பினர் கணக்குகளைப் புதுப்பிக்கின்ற வசதியையும் வழங்குகின்றது.

இத்துடன், இ-கூற்று சமர்ப்பிக்கும் நடைமுறை மற்றும் ஊ.சே.நிதியத்தின் ஆர்வலர்களுக்கான அதனுடைய பயன்கள் சம்பந்தமாக தொழில்தருநர்களுக்கு மேலும், விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதற்கிணங்க, இ-கூற்று சமர்ப்பிக்கும் முறையில் தொழில்தருநர்களின் பங்களிப்பானது 8,540 இலிருந்து 9,267 இற்கு அதிகரிக்கப்பட்டது. இது செயற்படுகின்ற உறுப்பினர் கணக்குகளில் ஏறத்தாழ 79 சதவீதத்தையும் மொத்த மாதாந்த ஊ.சே.நிதியத்தின் பங்களிப்பில் கிட்டத்தட்ட 88 சதவீதத்தையும் 2019 முடிவில் உள்ளடக்கியுள்ளது.

மேலும், ஊ.சே.நிதியத்தைச் செலுத்துவதற்கான புதிய முறைமைகளின் அறிமுகக் கண்ணோட்டத்துடன், ஏதேனும் பங்கேற்கும் வங்கிகளிடமிருந்து மாதாந்த பங்களிப்புகளை செலுத்துவதற்கு தொழில்தருநர்களுக்கு வசதிப்படுகின்ற லங்கா கிளியரினுடைய பொது இலத்திரனியல் நிதியியல்

மாற்றல் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கும், வெப்தளத்தினூடாக அவற்றினுடைய இ-கூற்றுகளைச் சமர்ப்பிப்பதற்கும் தொழில்தருநர்களை வழிப்படுத்துகின்ற ஊ.சே.நிதியத்தின் அதிகாரபூர்வ வெப்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

(vi) **ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு**

ஊ.சே.நிதியத் திணைக்களமானது தொழில் திணைக்களத்துடன் இணைந்து தொழில்தருநர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகிய இரண்டு தரப்பினருக்கும் ஒரு வினைத்திறன் மிக்க பணியை வழங்குவதற்கு அதனுடைய உறுப்பினர்களை மீள்பதிவுசெய்வதற்காக 2010இல் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட திட்டமானது தொடரப்பட்டது. இதற்கிணங்க, தேசிய அடையாள அட்டையின் தகவல்களின்படி உறுப்பினர் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் தேசிய அடையாள அட்டையிற்கு இணங்க அந்த உறுப்பினர்களை மீள்பதிவு செய்தல் போன்றவற்றிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதானது ஒரு பொது உறுப்பினர் மையத்தரவுத் தளத்தினை நிறுவுவதற்கு ஊ.சே.நிதியம் மற்றும் தொழில் திணைக்களம் ஆகிய இரண்டையும் வசதிப்படுத்துவதற்கு ஒரு தனித்துவமான அடையாளப்படுத்தலுடன் உறுப்பினர்களுடைய அடையாளம் காணலை வசதிப்படுத்துகின்றது. இறுதியாக, இந்நிகழ்ச்சித் திட்டமானது அங்கத்தவர் தகவல்களின் மேம்படுத்தப்பட்ட தரத்தினூடாக அதனுடைய ஆர்வலர்களிற்கு வினைத்திறனான பணிகளை வழங்குவதற்கு ஊ.சே.நிதியத் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களம் ஆகிய இரண்டிற்கும் உதவுகின்றது.

2019 இறுதியளவில், ஏறத்தாழ 1.98 மில்லியன் செயற்பாட்டிலுள்ள ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர்களின் (பங்களிப்புச் செய்கின்ற உறுப்பினர்கள்) தேசிய அடையாள அட்டை தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதற்கிணங்க, செயற்பாட்டில் உள்ள உறுப்பினர்கள் கணக்குகளில் 81 சதவீதத்திற்கு 1.62 மில்லியன் தனித்துவமான அடையாளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, மீதமுள்ள உறுப்பினர்களின் விபரங்களைச் சரிபார்க்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மாதாந்த அடிப்படையில், முதலாவது தடவையாக உறுப்பினர் பங்களிப்புக்கள் பெறப்பட்ட அனைத்து புதிய உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டைத் தகவல்களின் தவறுகளற்ற இற்றைப்படுத்தலை கண்காணிப்பதற்கு ஒரு முறைமையும் நிறுவப்பட்டது. மேலும், ஆட்பதிவுகள் திணைக்களத்தின் தரவு தளத்தினை பயன்படுத்துவதன் மூலம் மீள்பதிவு முறையை வலுப்படுத்துவதற்கு ஆட்பதிவுகள் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கான நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன.

(vii) **ஏனைய பணிகள்**

ஊ.சே.நிதியத் திணைக்களமானது அதனுடைய உறுப்பினர்களுக்கு வினைத்திறனும் காத்திரமானதுமான பணிகளை வழங்குவதற்காக பாடுபடுகின்றது. இன்றைய விரைவான சூழலில், உறுப்பினர்கள் மிகச்சிறந்த பணி வழங்கலைக் கோருகின்றனர். இதனால், ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் மக்கள் தொடர்பு மற்றும் விசாரணைகள் பீடமானது 2019இல் சவால்மிக்க ஆண்டொன்றை நிறைவுசெய்துள்ளது. 2019இல் திணைக்களத்திற்கான அங்கத்தவர் அல்லது தொழில்தருநர்களின் வருகைகளின் எண்ணிக்கையானது 156,898 ஆகப் பதிவுசெய்திருக்கின்ற அதேவேளை திணைக்களமானது அழைப்புக்கள் ஊடாக 77,310 உறுப்பினர் விசாரணைகளையும், மின்னஞ்சல் ஊடாக 8,713 உறுப்பினர் விசாரணைகளையும் பெற்றுக்கொண்டது. 2019இல் திணைக்களமானது உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் மூலம் 84,550 கடிதங்களையும் பெற்றுக்கொண்டது.

உறுப்பினர் கணக்குகளின் திருத்தம் அல்லது சரிபார்த்தல் செய்வதற்காக திணைக்களத்திற்கு உறுப்பினர்களின் வருகை மூலமாகவும் கடிதங்கள் ஊடாகவும் ஒரு அதிக எண்ணிக்கையான அங்கத்தவர் வேண்டுகோள்கள் திணைக்களத்தால் பெறப்பட்டும் இருந்தன. 2019இல், ஊ.சே. நிதிய உறுப்பினர் கணக்குகளில் சுமார் 72,313 திருத்தங்கள் திணைகளத்தால் செய்யப்பட்டது. ஊ.சே. நிதிய அங்கத்தவர் கணக்குளில் செய்யப்பட்ட திருத்தங்கள் பிரதானமாக இரண்டு கூறுகளாக வகைப்படுத்தலாம். அவையாவன, ஒரு உறுப்பினரின் கணக்கிற்கு வரவிடப்பட்டிருக்கின்ற பங்களிப்புக்களின் திருத்தங்கள் மற்றும் ஒரு ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர் கணக்கின் பெயர் அல்லது தேசிய அடையாள அட்டைத் தகவல்களில் பிழை திருத்தம் என்பனவாகும். 2019 காலப்பகுதியில், திணைக்களமானது, 67,083 பெயர் அல்லது தேசிய அடையாள அட்டைத் திருத்தங்களையும் 5,230 கணக்குத் திருத்தங்களையும் செய்துள்ளது. மேலும், விம்பப்படுத்தல் ஸ்கேனிங் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் ஊ.சே.நிதிய உறுப்பினர் கணக்கு திருத்தங்களின் செயலாற்றத்திற்கான வசதியானது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதற்கிணங்க, ஆண்டுகாலப்பகுதியில், திணைக்களமானது வங்கியினுடைய பிரதேச அலுவலகங்களில் இருந்து கோரப்பட்ட 12,944 ஊ.சே.நிதிய உறுப்பினர் கணக்குகளுக்கு திருத்தங்களைச் செய்துள்ளது.

**(ஊ) ஏனைய தொழிற்பாடுகள்**

மேலும், உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்பாட்டின் கீழ் ஊ.சே.நிதியமானது அதன் முதலீட்டு தந்திரோபாயம் மற்றும் கட்டமைப்பை மீளாய்வு செய்தல் மற்றும் மறுசீரமைப்புச் செய்யும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. மேலும், உலக வங்கியானது ஊழியர் சேம நிதியத்திற்கான ஒரு விரிவான தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி உதவியை வழங்கிவருகின்றது. இதனை கருத்திற் கொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் இலங்கை அரசாங்கத்தினதும் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் ஒரு வியாபாரச் செயன்முறை மீளாய்வு நடத்தப்பட்டுவருகிறது.

## 9. வசதிகள் முகாமைத்துவம்

கட்டடத்தின் உட்பகுதி, பொறிகள் மற்றும் கருவிகள் பாரிய திருத்த வேலைகள் எதிர்பார்க்கப்படுகின்ற தலைமை அலுவலகக் கட்டடத்திற்கு புதிய தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2019இல் செயற்றிட்ட ஆலோசனையாளரின் உதவியுடன் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் பூர்வாங்க மதிப்பீட்டு வேலைகளையும் விலைக்கோரல் ஆவணங்களைத் தயாரிக்கும் வேலைகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. இக்காலப்பகுதியில் கட்டடத்தின் அமைப்பியலின் ஆற்றல்வாய்ந்த தன்மை நிறைவுசெய்யப்பட்டதுடன் சுத்திகரிப்பு வசதிகளை புதுப்பிப்பதற்கான கொள்வனவுச் செயன்முறைகளும் நீர் வழங்கல் மற்றும் தீயணைப்பு முறைமைகளுடன் தொடர்பான இலத்திரனியல், எந்திரவியல் கருவிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை புகுத்தும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக துணைநில் மின் உருவாக்கக் கட்டுப்பாட்டு முறைமை,

ஐபியை அடிப்படையாகக் கொண்ட சிசிரிவி முறைமை மற்றும் தலைமை அலுவலக கட்டடத்திலுள்ள அவசரகால படிகளைத் திருத்தம் செய்தல் என்பனவற்றினைப் பதிலீடு செய்யும் வேலைகள் நிறுவப்பட்டன. தலைமை அலுவலகக் கட்டடத்தின் பாதுகாப்பினை பலப்படுத்துமொரு வழிமுறையாக, பிரதான நுழைவாயிலில் நிலையான பாதுகாப்பு வேலியும் பாதுகாப்பு வாயில் கதவுகளும் பொருத்தப்பட்டன.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது பிரதேச அலுவலகங்கள் மற்றும் இராஜகிரியவில் அமைந்துள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் என்பனவற்றின் கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் அநுராதபுர பிரதேச அலுவலகமும் ஏற்கனவேயுள்ள பயணிகள் மின் உயர்த்திகளை பதிலீடு செய்வதற்கான திட்டமொன்றினை வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது ஆரம்பித்து வைத்தது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் கழிவுநீா் அகற்றும் முறைமையின் பதிலீடு, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் கேட்போர்கூடத்தில் குளிரூட்டிகளுக்கான பதிலீடு மற்றும் மாத்தளை பிரதேச அலுவலகத்தில் வலுவழங்கல் முறைமையினை மேம்படுத்தல் போன்ற புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பாடநெறிப் பங்குபற்றுனர்களுக்கான உள்ளகத் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் அது தொடர்பான முயற்சியாக வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் விடுதித் தொகுதியின் ஒரு பகுதியைப் புதுப்பிக்கும் வேலைகள் 2019இல் பூர்த்தி செய்யப்பட்டன. ஊழியர் சேம நிதியத் திணைக்களம் அமைந்திருக்கின்ற லொயிட்ஸ் கட்டடத்தின் அமைப்பியல் ரீதியான திருத்தங்களை மேற்கொள்வதற்கான திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடமை மற்றும் விடுமுறை போன்றவற்றிற்கு வெளியிடங்களுக்குச் செல்லுகின்ற இலங்கை மத்திய வங்கியின் அலுவலா்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் கிடைக்கப்பெறுகின்ற விடுமுறைக்கால விடுதி வசதிகளை தரமுயா்த்துவதற்கு வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்தது. அநுராதபுரத்தில் புதிய விடுமுறைக்கால விடுதி வசதிக்காக முன்மொழியப்பட்ட கட்டடக்கலை தொடா்பான வடிவமைப்பு 2019இல் இறுதிப்படுத்தப்பட்டன. அத்துடன் பணிமனைகளில் கதிா்காமத்தில் உள்ள பழைய விடுமுறைக்கால விடுதியினது ஆற்றல் வாய்ந்த தன்மையினை மதிப்பிடும் பொருட்டு ஆலோசகா் ஒருவருடைய உதவியுடன் கட்டமைக்கப்பட்ட ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. வங்கி இல்ல நிலத் தோற்றங்களில் மெருகூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் திருத்தியமைத்தல் பணி என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் கதிா்காம விடுமுறைக்கால விடுதி மற்றும் வங்கி இல்ல பணிமனைகளின் அவசரகால வலுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காகப் புதிய துணைநில் மின் உருவாக்கத்தினை நிறுவுவதற்கான கொள்வனவு செயன்முறைகளும் நிறைவடைந்தன.

வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது 2019இல் அதனுடைய வசதிகள் முகாமைத்துவச் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக பல்வேறு நிருவாக வழிமுறைகளை மேற்கொண்டது. ஊழியா்களினதும் ஓய்வூதியம் பெறுனா்களினதும் வசதிக்காக விடுமுறைக்கால விடுதிகளை ஒதுக்கீடு செய்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தளமூடான முறைமையானது கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மையை விருத்தி செய்வதற்கும் பயன்பெறுநா்களினுடைய வசதிக்குமாக சம்பள முறைமையுடன் இணைக்கப்பட்டது. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது அலுவலக போக்குவரத்தின் பொருட்டு வாடகை ஊா்திகளை பயன்படுத்துவோருக்காக இணையத்தள வண்டி பற்றுச்சீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தப்படுவதற்கான வழிவகைகளை ஆரம்பித்து வைத்தது. அலுவலா்களினுடைய தற்போதைய ஊா்தி தரிப்பிடத் தேவைப்பாட்டினை நிவா்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது நகர அபிவிருத்தி அதிகார சபையினுடைய உதவியுடன் மேலதிக தரிப்பிட வசதிகளை வழங்கக் கூடியதாகவிருந்தது. புதிய திட்டங்களின் மேம்படுத்தல் மற்றும் விரிவாக்கத்தில் பங்கெடுக்கும் அதேவேளை, வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது அதன் பிரதான பொறுப்புக்களின் ஒரு பகுதியான போக்குவரத்து மற்றும் தொலைத்தொடா்பாடலில் அவசியமான ஆதரவுப் பணிகளை வழங்கியதுடன் கட்டடங்களின் மிக முக்கியமான பணிகள் பராமரிப்பினை தொடா்ந்தும் முன்னெடுத்தது.

## 10. நிதி

நிதித் திணைக்களம், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் தொடா்பான ஏற்பாட்டு நியதிகள் என்பனவற்றிற்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. 2002 தொடக்கம் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களும் பின்பற்றப்படுகின்றன. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளியகத் தரப்பினருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், கொடையாளா் நிதியங்களை பகிா்ந்தளித்தல் மற்றும் அரச வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தல், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணுதல், 17 உள்ளக நிதியங்களின் முதலீட்டுச் சொத்துப் பட்டியலை முகாமைப்படுத்தல், மத்திய வங்கியின் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் அலுவலா் கடன்களின் தரவுத்தளத்தைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 10.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

**அ) மாதாந்த ஐந்தொகை:** 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, 2018 திசெம்பா் மற்றும் 2019 சனவரி - நவெம்பா் காலப்பகுதிக்கான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டு அரச வா்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

**ஆ) காலாண்டு ரீதியான அறிக்கைகள்:** நிதியியல் செயலாற்றம் மற்றும் நிதியியல் நிலைமை என்பன காலாண்டு ரீதியாக நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன.

**இ) வருடாந்த நிதியியல் கூற்றுக்கள்:** கணக்குகளைத் தயாரிப்பதற்காக கணக்கீட்டு முறைமைகளும் நடவடிக்கை முறைகளும் தொடா்பான கணக்கீட்டு நியமங்களுடனும் தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்காக 2019 ஆண்டு காலப்பகுதியில் தொடா்ச்சியான அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டன. 2019 திசெம்பா் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் பகுதி II இன் தொடக்கத்தில் காட்டப்பட்டுள்ளன.

### 10.2 வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல்

2020ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருடாந்த வருமானம் மற்றும் செலவின வரவு செலவுத்திட்டமும் மூலதன வரவு செலவுத்திட்டமும் மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்தின் கீழான நடவடிக்கைத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் “அதேநேர வெப்தள வரவு செலவுத்திட்ட முறைமை” இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் 2020இன் வரவுசெலவுத் திட்டத்திற்கான நாணயச் சபையின் ஒப்புதல் 2019 திசெம்பரில் பெறப்பட்டதுடன் வரவுசெலவுத் திட்டம் 2020இன் முதல் வேலை நாளன்று திணைக்களங்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. அதேவேளை, வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாட்டின் காத்திரமான கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2019ஆம் ஆண்டிற்கான காலாண்டு ரீதியான வரவுசெலவுத் திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் நாணயச் சபைக்கு சமா்ப்பிக்கப்பட்டன.

10.3 உள்ளக மற்றும் வெளியகத் தரப்பினருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்

அ) ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்ற அனைத்து உள்ளகக் கொடுப்பனவுகளும் 2019இல் நேர இலக்குகளுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளியகக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் கட்டளைகளின்கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த கொடுப்பனவுகள் 6,198ஆகக் காணப்பட்டதுடன் இதில் 5,929 உள்நாட்டு வழங்குநர்களுக்கானதாகவும் 269 வெளிநாட்டு வழங்குநர்களுக்கானதாகவும் காணப்பட்டது.

இ) 2019ஆம் ஆண்டுப்பகுதியில் பொதுத் திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக ரூ.1,231.9 பில்லியன் பெறுமதியான 3,027 பகிர்ந்தளிப்புக்களும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவு தொடர்பான ரூ.1,411.7 பில்லியன் பெறுமதியான 821 தவணைக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பல்வேறு செயற்றிட்டங்களுக்காக இரண்டு வெளிநாட்டு வங்கிகளுடன் 4 வங்கித்தொழில் ஒழுங்குபடுத்தல்களும் கையொப்பமிடப்பட்டன.

10.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்

அ) நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களின் (ஊ.சே.நிதியம் தவிர்ந்த) முதலீடுகளை மத்திய ரீதியில் முகாமை செய்வதற்காக நிதித் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டு 2016 மாச்சில் தொழிற்பாடுகளை தொடங்கிய தனியலகானது இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 8 ஓய்வூதிய நிதியங்கள், நிதித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 4 ஏனைய நிதியங்கள், தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 3 நிதியங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 13 செயற்றிட்ட நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கி 17 உள்ளக நிதியங்களை முகாமை செய்கின்றது. அனைத்து நிதியங்களும் நிதித் திணைக்களத்தினால் பொது முதலீட்டுக் கொள்கையொன்றின் கீழ் முதலிடப்பட்டதுடன் தொடர்பான உரிமைத் திணைக்களங்கள் அத்தகைய நிதியங்களின் நிர்வாகதாரராகவும் செயற்படுகின்றன. நிதிய முகாமைத்துவ செயற்பாடானது, நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைக் கூற்று/ வழிகாட்டல்கள் மற்றும் உபாயச் சொத்து ஒதுக்கீட்டு வழிகாட்டல்களினால் ஆளுகைப்படுத்தப்படுகின்றது. மேலும், இது சுயாதீனமாகத் தொழிற்படுகின்ற ஒரு முன் அலுவலகம் மற்றும் பின் அலுவலகம் போன்றவற்றை உள்ளடக்குவதுடன், நிதியங்களின் முதலீடுகளைக் கண்காணித்து ஆலோசனை வழங்குவதற்காக 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 12 தடவைகள் சந்தித்துக் கொண்ட நிதியியல்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கொத்தணிக்குப் பொறுப்பாக உள்ள துணை ஆளுநரின் தலைமையிலான உள்ளக முதலீட்டுக் கண்காணிப்புக் குழுவினால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. முதலீடுகளின் செயலாற்றமானது தகவல் நோக்கங்களுக்காக நாணயச் சபைக்கு மாதாந்தம் அறிக்கையிடப்பட்டன.

ஆ) நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், நிலையான வைப்புக்கள், உயர் தரமிடப்பட்ட கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவுகள் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டன. 2018ஆம் ஆண்டிற்கான ஆறு ஓய்வூதிய நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இந்நிதியங்களின் விதிகளுக்கிணங்க நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2019 இறுதியிலுள்ளவாறு, மொத்த நிதியத்தளம் ரூ.130.87 பில்லியனுக்கு அதிகரித்தது.

அட்டவணை II - 23
நிதிய முகாமைத்துவத்தின் செயலாற்றம் - 2019

| | | (ரூ. பில்லியன்) |
|---|---|---|
| திணைக்களம் | 31 திசெம்பர் 2019இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) | 31 திசெம்பர் 2018இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) |
| நிதி | 59.96 | 55.16 |
| தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் | 64.06 | 53.96 |
| பிரதேச அபிவிருத்தி | 6.07 | 3.64 |
| அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 0.08 | 0.08 |
| மொத்தம் | **130.17** | **112.84** |

10.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்

நிதித் திணைக்களம் பொதுப் பேரேட்டு முறைமையின் நிலையான சொத்து மாதிரியிலுள்ள நிலையான சொத்து பதிவேட்டில் மத்திய வங்கியின் நிலையான சொத்துக்களின் அனைத்துப் பதிவுகளையும் பேணுகின்றது. 2019 காலப்பகுதியில் புதிய கொள்வனவுகள், அமைவிடங்களின் மாற்றங்கள், மீள்மதிப்பீடுகள், தேய்மானங்கள் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. 2019இல் இப்பதிவேடானது 1,559விடயங்களின் கொள்வனவுடனும் 338 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

10.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நிதித் திணைக்களம், 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களின் அறவிடல் பதிவு செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தியது. 2019 காலப்பகுதியில் ரூ.2.17 பில்லியன் பெறுமதியான 2,055 கடன்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

10.7 ஏனைய தொழிற்பாடுகள் - கொள்வனவுச் செயன்முறை

மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களமானது, பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் நிலையான சொத்துக்களின் அகற்றலுக்கான அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொண்டது. 2019 காலப்பகுதியில் கொள்வனவுகள் தொடர்பான ஏறத்தாழ 192 விலைக்கோரல் சபைகள் மற்றும் 61 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும், நிலையான சொத்துக்களின் அகற்றல் தொடர்பான ஒரு அளவீட்டுச் சபையிலும் ஒரு ஊர்தி அகற்றல் சபையிலும் நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

## 11. நிதியியல் உளவறிதல் பிரிவு

இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் பற்றிய செயல்திறன்வாய்ந்த கட்டமைப்பொன்றினைத் தாபிக்கும் குறிக்கோளினை எய்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவானது அது தொடங்கப்பட்டதிலிருந்து தேசிய மற்றும் பன்னாட்டு அதிகாரசபைகளுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் அதன் நாட்டத்தினை தொடர்ச்சியாக எடுத்துக்காட்டிவருகின்றது. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவு, சுயாதீன நியதிச்சட்ட அதிகாரசபையொன்றாக தொழிற்படுவதுடன் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலுக்கான முன்னணி ஒழுங்குமுறைப்படுத்துநராகச் செயற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் நடவடிக்கைகள் செயலணியினால்வெளியிடப்பட்டு பணம் தூயதாக்கல் மீதான ஆசியப் பசுபிக் குழுவுடன் இணைந்து நிதியியல் நடவடிக்கைகள் செயலணி மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதற்கு நாட்டின் நிதியியல் மற்றும் நிதிசாரா நிறுவனங்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய செயற்பரப்பொன்றினை வழங்கியுள்ளது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள், பணம் தூயதாக்குதல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் மற்றும் நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட வேறு தொடர்புடைய சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுடன் சாத்தியமான தொடர்புகளைக் கண்டுபிடிக்கும் நோக்கத்திற்காக நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளல்,மேற்குறித்த சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுடன் தொடர்புபடுகின்ற சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் பற்றி பகுப்பாய்தல் மற்றும் அத்தகைய பகுப்பாய்வுகள் பற்றிய தகவல்களை புலனாய்வுகளுக்காக தொடர்புடைய அமுலாக்க அதிகாரிகளுக்கு பரவச்செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. நாட்டின் பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை ஒடுக்குதல் கட்டமைப்பு வேறு பிரதான சட்டவாக்கங்களையும் உள்ளடக்குகின்றது. அதாவது, 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்குதல் தடுத்தல் சட்டம், 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாயம் என்பனவாகும். இதில் நிதியியல் உளவறிதல் பிரிவு அவற்றின் ஏற்பாடுகளை செயல்திறன்மிக்கவாறு நடைமுறைப்படுத்துவதில்ஈடுபடுகின்றது.

### 11.1 தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரவச்செய்தல்

பொறுப்பாணை தேவைப்படுத்தல்களின் பிரகாரம், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றி அறிக்கையிடுவதில் உதவுவதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட “லங்காபின்” என்ற வெப்தளத்தின் அடிப்படையிலமைந்த முறைமையொன்றின் ஊடாகஅறிக்கையிடும் நிறுவனங்களிடமிருந்தான சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய தகவல்களை அறிக்கையிடும் நிறுவனங்கள் தொடர்ந்தும் சமர்ப்பிக்கப்படுகின்றன. உரிமம்பெற்றவர்த்தக வங்கிகள்,உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், பங்குத்தரகர்கள் மற்றும் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள், ஒவ்வொன்றும் 1.0 மில்லியன் அத்துடன் அதற்குமேல் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமனான (உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும்) காசுக்கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் பற்றி நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு தொடர்ந்தும் அறிக்கையினைச் சமர்ப்பித்தனர். அதற்கமைய, 2019இன் போது கிட்டத்தட்ட 4.9 மில்லியன் காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளையும் 6.6 மில்லியன் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் அறிக்கைகளையும் அறிக்கையிடும் நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ளன. இதற்கு மேலதிகமாக,நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிக்கைகள் அறிக்கையிடும் நிறுவனங்களினால் நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. தொழிற்பாட்டு மற்றும் உபாய பகுப்பாய்வுகளின் பின்னர் மேலதிக விசாரணைக்காக சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டன. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2,806 சந்தேகத்திற்கிடமாக கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைக்காக நிதியியல் உளவறிதல் பிரிவு மொத்தமாக 1,478 சந்தேகத்திறிகிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கைகளை சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் பரப்பியது.

### 11.2. அறிக்கையிடும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல்

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை ஒடுக்குதல் மேற்பார்வைச் செயன்முறையினையும் நிறுவனம்சார் இணங்குவித்தலையும் வலுப்படுத்தும் நோக்குடன் நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் நிறுவனங்களுக்கும் அதேபோன்று பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாத் வியாபாரங்களுக்கும் மற்றும் தொழில்களுக்கும் ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குகின்றது. அதற்கமைய, 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல், இடர்நேர்வு அடிப்படையில் தொடர்ச்சியான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தினை நடாத்துதல், அதிகரித்த உரிய விழிப்புக்கவனம், பயன்பெறும் சொத்தாண்மையினை இனங்காணல் மற்றும் அரசியல் ரீதியாக முகங்கொடுக்கவேண்டிய ஆட்களை அடையாளப்படுத்தல் என்பன மீது பல விதிகளை மற்றும் வழிகாட்டல்களை நிதியியல் உளவறிதல் பிரிவு வழங்கியது. செயல்திறன் வாய்ந்த கண்காணிப்பு மற்றும் அமுலாக்கம், தளத்திலான மற்றும் தளம்தாண்டிய கண்காணிப்பு, அறிக்கையிடும் நிறுவனங்களுக்காக பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான கருத்தரங்குகள் மற்றும் இணங்குவித்தல் மீளாய்வு கூட்டங்களை நடத்துவதன் ஊடாக விழிப்புணர்வினை அதிகரித்தல் என்பன மூலம் அறிக்கையிடும் நிறுவனங்களின் இணங்குவித்தலினை அதிகரிப்பதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எடுத்தது. இதற்கு இசைவாக நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்துடனான இணங்குவித்தல், வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் மற்றும் வழங்கப்பட்ட வேறு ஒழுங்குவிதிகள் அத்துடன் விதிகள் போன்றவற்றுடன் அத்தகைய நிறுவனத்தின் இணங்குவிப்பினை மதிப்பிடுவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லாவியாபாரங்களுக்கும் மற்றும் தொழில்களுக்கும் முறையே 32 மற்றும் 36 இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த தளத்திலான பரிசோதனைகளை நடாத்தியது. மேலும் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு தவறிய நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லாவியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்கான தடைகளை விதித்தல், எச்சரிக்கை கடிதங்களை வழங்குதல் மற்றும் பின்தொடர் கலந்துரையாடல்களை தொடங்கி வைத்தல் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவு மேற்கொண்டது.

### 11.3. உள்நாடு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பு

#### அ) புரிந்துணர்வு ஒப்பந்தம்

2019இல் மாலைதீவின் நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் பப்புவா நியூகினியாவின் நிதியியல் பகுப்பாய்வு மற்றும் மேற்பார்வைப் பிரிவு என்பவற்றுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் கைச்சாத்திட்டு வெளிநாட்டு இணைத்தரப்புகளுடனான

மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையை 39 ஆக அதிகரித்துக் கொண்டது. மேலும், தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளும் நோக்குடன் ஆண்டின் போது இரத்தினக்கல் தேசிய ஆபரண அதிகாரசபை, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் இலங்கைக்கான இன்டர்போல் தேசிய மத்திய பணியகம் ஆகிய உள்நாட்டு முகவராண்மைகளுடன் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு உள்நாட்டு முகவராண்மைகளுடன் கைச்சாத்திடப்பட்ட மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையினை 11 ஆக அதிகரித்தது.

**(ஆ) எக்மன்ட் குழுமம்**

விசாரணைகளை கொண்டு நடாத்துவதற்கும் தமது விசாரணைகளில் மதிநுட்பத்தினைச்திரட்டுவதற்காக உறுப்பு நாடுகளுடன் கூட்டிணைக்கும் பொருட்டும் உலகளவில் 164 உறுப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளை உள்ளடக்குகின்ற நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் அமைப்பான எக்மனட் குழும உறுப்பினர்களிடமிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவு உதவியினைப் பெற்றுக்கொண்டது. 2019 காலப்பகுதியின் போது இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் 40 கோரிக்கைகளுக்கு இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு பதிலிறுத்தி இருந்ததுடன் முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகள் தொடர்பில் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக இது இணைதரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிடம் 58 கோரிக்கைகளையும் முன்வைத்தது. மேலும், 2019 சனவரியில் இந்தோனேசியாவின் ஜகார்ட்டா நகரில் நடைபெற்ற எக்மன்ட் நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் குழுமக் கூட்டத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்றதுடன் நெதர்லாந்தின் ஹேக் நகரில் இடம்பெற்ற எக்மனட் முழுநிறைவான கூட்டத்தில் இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் திரு.டி.எம்.ரூபசிங்க எக்மன்ட் குழுமத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். எக்மன்ட் குழுமத்தின் ஆசிய மற்றும் பசுபிக் குழு பிராந்தியத்தில் 28 நிதியியல் உளவறிதல் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பிராந்தியத்திலுள்ள நிதியியல் உளவறிதல் பிரிவுகளில் இருந்து இரு மூத்த அலுவலர்கள் எக்மன்ட் குழுமத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நியமிக்கப்படுகின்றனர்.

**(இ) பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழு**

முக்கிய நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையின் அலுவலர்களைக் கொண்ட அணியொன்று அவுஸ்திரேலியாவில் 2019 ஓகத்து 18-23 வரை இடம்பெற்ற 22வது ஆசிய பசுபிக் குழுவின் வருடாந்த கூட்டத்திலும் தொழில்நுட்ப உதவி மன்றத்திலும் பங்கேற்றது. கூட்டத்தின் போது இலங்கையின் 4ஆவது பின்தொடர் அறிக்கை கலந்தாராயப்பட்டது. ஆக்கபூர்வமான விவாதத்தின் பின்னர் முன்னர் இணங்காமை அல்லது பகுதியளவில் இணங்குகின்றமையாக தரப்படுத்தப்பட்ட 4 பரிந்துரைகளின் இணங்குவித்தல் தரப்படுத்தலினை தரமுயர்த்துவதற்கு உறுப்பாண்மை ஒப்புதல் அளித்தது. அதற்கமைய, 40 நிதியியல் நடவடிக்கை செயலணி பரிந்துரைகளில் இலங்கையின் நடப்பு தரப்படுத்தல் 2019 இறுதியில் 7 இணங்குகின்றது, 24 பாரியளவில் இணங்குகின்றது, 7 பகுதியளவில் இணங்குகின்றது மற்றும் 2 இணங்கவில்லை ஆக காணப்பட்டது.

**(ஈ) பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான பிம்ஸ்டெக் துணைக்குழு (BIMSTEC SG -CFT)**

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் 40 பேராளர்களின் பங்கேற்புடன் 2019 நவெம்பர் 27-29 வரை "கள ஆய்வுகள் ஊடாக பயங்கரவாதத்தையும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலையும் ஒடுக்குதல் அனுபவம்" என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பில் இடம்பெற்ற பயங்கரவாத நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான பிம்ஸ்டெக் துணைக்குழு செயலமர்வினை நிதியியல் உளவறிதல் பிரிவு வெற்றிகரமாக நடாத்தியது. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தினை ஒடுக்குதலில்இலங்கையின் அனுபவத்தினை ஏனைய பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளுவதற்கு இச்செயலமர்வு வாய்ப்பளித்தது. மேலும் 2019 செத்தெம்பரில் தாய்லாந்தில் இடம்பெற்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை ஒடுக்குதல் மீதான பிம்ஸ்டெக் துணைக்குழுவின் 11ஆவது கூட்டத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**(உ) ஏனைய நிதியியல் உளவறிதல் பிரிவுகளுடன் அறிவினைப் பகிர்ந்துகொள்ளல்**

2019 திசெம்பர் 2 - 5 காலப்பகுதியின் போது மாலைதீவுகளின் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்களைக் கொண்ட அணியின் நான்கு நாட்கள் ஆராய்ச்சி விஜயமொன்றுக்கு நிதியியல் உளவறிதல் பிரிவு வசதியளித்தது இவ்வாய்வு விஜயமானது பிரதானமாக பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை ஒடுக்குதல் இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த மேற்பார்வை, சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் பற்றிய பகுப்பாய்வு மற்றும் பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மீதான பரஸ்பர மதிப்பீடு மற்றும் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு மீதான இலங்கையின் அனுபவத்தினை பகிர்ந்துகொள்ளுதல் என்பவற்றை மையப்படுத்தியிருந்தது. நிதியியல் உளவறிதல் பிரிவுகளுக்கு மத்தியில் ஒத்துழைப்பினை மேலும் வலுவூட்டும் பொருட்டு பிராந்தியத்தில் உள்ள ஏனைய உளவறிதல் பிரிவுகளுடனான தொடக்க முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு எதிர்பார்க்கின்றது.

**11.4. நிறுவனசார் இயலளவைக் கட்டியெழுப்புதலும் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களும்**

பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்களை கண்டுபிடித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் மீதான விழிப்புணர்வினை அதிகரிக்கின்ற தொடர்ச்சியான முயற்சிகளில் ஆண்டின் போது 3,688 பங்கேற்பாளர்களுக்கு இடமளித்து 55 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. பன்னாட்டு நாணய நிதியத்தின் 6ஆவது மற்றும் 7ஆவது தொழில்நுட்ப உதவிக் குழுக்கூட்டம் முறையே 2019 மாச்சு மற்றும் ஒத்தோபர் மாதங்களில் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபுணர்களால் நடாத்தப்பட்டது. இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த மேற்பார்வை, நிதியியல் உளவறிதல் பிரிவின் இயளலவு அபிவிருத்திகள் மற்றும் சட்டவாக்கத் திருத்தங்கள் போன்ற துறைகளில் இலங்கையில் பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை ஒடுக்குதல் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியினை இக்குழு தொடர்ந்தும் வழங்கியது. மேலும், ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரி திணைக்களத்தின் வதிவிட ஆலோசகர், நிதியியல் உளவறிதல் பிரிவின் தொழிற்பாட்டு செயல்திறன், நிதியியல் துறை மேற்பார்வை மற்றும் பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை ஒடுக்குதல் விடய அபிவிருத்தி அத்துடன் சொத்து முகாமைத்துவம் ஆகிய விடயப்பரப்புகளில் தொடர்ந்தும் அவரது தொழில்நுட்ப உதவியினை வழங்கினார்.நிதியியல் உளவறிதல் பிரிவானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தாராள அனுசரனையுடன் நிதியியல் பழயுஆடு விண்ணபத்தினை உருமாற்றல் மீதான இரண்டுவார ஆலோசனை பணியொன்றுக்காக பின்லாந்தின் நிதியியல் உளவறிதல் பிரிவின் நிபுணர் ஒருவரிடமிருந்து தொழில்நுட்ப உதவியினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

**11.5. பன்னாட்டு ஒத்துழைப்பு மீளாய்வுக் குழுவின் மீளாய்வு**

பன்னாட்டு ரீதியாக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நியமங்கள் தொடர்பில் இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் இணங்குவிப்பு தொடர்பானவற்றை மதிப்பிடும் நோக்குடன் ஆசிய பசுபிக் குழுமத்தினால் 2014/15 காலப்பகுதியின் போது 02 ஆவதுபரஸ்பர மதிப்பீடொன்று நடைபெற்றது. 2015 செத்தெம்பரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கை, ஆசிய பசுபிக் குழுமத்தின் 'விரைவுபடுத்தப்பட்ட

மேம்பட்ட பின்தொடர்' செயன்முறையின் கீழ் இலங்கையினால் நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு தொகுதி நடவடிக்கைகளை விதந்துரைத்தது. 2016 ஒத்தோபரில், நிதியியல் நடவடிக்கைச் செயலணி, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஒடுக்குதலின் காத்திரமான முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கு நிதியியல் நடவடிக்கை செயலணியின் பன்னாட்டு ஒத்துழைப்புமீளாய்வுக் குழுவின் மீளாய்வுக்கு இலங்கை உட்படுத்தப்படும் என தெரிவித்தது. பல எண்ணிக்கையான கலந்துரையாடல்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பின்னர் இலங்கை 4 விடயப் பரப்புக்களில் அதாவது, பன்னாட்டு ஒத்துழைப்பு, மேற்பார்வை, சட்ட ரீதியான ஆட்கள் மற்றும் ஒழுங்குகேற்பாடுகள், ஆயுதப்பெருக்கம், (வடகொரியா மற்றும் ஈரான்) மீதான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் என்பவற்றில் போதியளவு முன்னேற்றமடையவில்லை என நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழு தெரிவித்தது. இதன் விளைவாக, 2017 ஒத்தோபரில் ஆஜன்ரீனாவின் புவனஸ் அயர்ஸில் இடம்பெற்ற அதன் முழு நிறைவான சமவாயத்தில் நிதியியல் நடவடிக்கை செயலணி,நிதியியல் நடவடிக்கை செயலணியின் இணங்குவித்தல் ஆவணத்தில் உபாய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்குநிதியளித்தலை ஒடுக்குதல் குறைபாடுகளுடன் கூடிய ஆட்சிப்பிரதேசமொன்றாக இலங்கையினை அட்டவணைப்படுத்தியது. இவ்வாவணம் பொதுவாக "சாம்பல் பட்டியல்" என அறியப்படுகின்றது. அட்டவணைப் படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, இனங்காணப்பட்ட உபாயக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நேரக் கட்டமைப்பிற்குட்பட்ட நடவடிக்கைத் திட்டமொன்று இலங்கைக்கு வழங்கப்பட்டது.

2017 நவெம்பரில் பட்டியலிடப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கை அதிகாரிகள், 2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் (திருத்த) சட்டம், 2018ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க குற்றவியல் விடயங்கள் தொடர்பில்பரஸ்பர உதவிகள் (திருத்த) சட்டம் என்பனவற்றை நிறைவேற்றியமை உட்பட, கொரிய சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் ஈரான் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மீதான ஒழுங்குவிதிகள்/ பணிப்புரைகள்/ வழிகாட்டல்களை வழங்குதல், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் வாடிக்கையாளருக்குரிய விழிப்புக்கவன விதிகளை விடுத்தல் மூலம் தொழில்சார் தன்மையினை மேம்படுத்தல், இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை நடைமுறைப்படுத்தல், நடைமுறைக்கிடும் மேற்பார்வை நடவடிக்கைகள்மற்றும் நிதி நிறுவனங்கள் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லாவியாபார மற்றும் தொழில்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மூலம் செயற்பரப்பு விரிவுபடுத்தப்பட்டது.

நிதியியல் நடவடிக்கைச் செயலணி ஆசிய பசுபிக்கூட்டுக் குழுவினூடாக நடவடிக்கைத் திட்டத்தின்நடைமுறைப்படுத்தலில் காணப்படும் இலங்கையின்முன்னேற்றத்தினை மதிப்பிட்டது. 2019 பெப்புருவரியில் இலங்கை அதன் நடவடிக்கைத் திட்டத்தினை கணிசமாக நிறைவுசெய்துள்ளது என நிதியியல் நடவடிக்கைச் செயலணி ஆரம்பத் தீர்மானத்தினை மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து 2019 செத்தெம்பர் 16-17 காலப்பகுதியின் போது நிதியியல் நடவடிக்கைச் செயலணி நடவடிக்கைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலினை சரிபார்ப்பதற்கு ஆசிய பசுபிக் கூட்டுக் குழுவினால் தளத்தினாலான மதிப்பீடொன்று நடாத்தப்பட்டது. ஆசிய பசுபிக் கூட்டுக் குழு பிரதிநிதிகள், பொருத்தமான விதத்தில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தலினை நோக்கிய இலங்கையின் அரசியல் மற்றும் நிறுவனசார் கடமைப்பொறுப்பினை உறுதிப்படுத்துவதற்காக தனியார் துறை மற்றும் நிதி அமைச்சு உள்ளடங்களாக அனைத்து தொடர்புடைய ஆர்வலர்களுடனும் நேரடி கூட்டங்களை நடாத்தியிருந்தது. இலங்கையின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு அணியினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் 2019 ஒத்தோபரில் இடம்பெற்ற நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் முழு நிறைவான கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் சாம்பல் பட்டியலிருந்து இலங்கையினை அகற்றுவதற்கான தீர்மானத்தினை அனைத்து உறுப்பினர்களும் ஆதரித்தனர். அதற்கமைய, 2019 ஒத்தோபர் 18 அன்று இலங்கை நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் கண்காணிப்பு செயன்முறைக்கு இனிமேலும் உட்படுத்தப்படாது என நிதியியல் நடவடிக்கைச் செயலணி அறிவித்தது. நிதியியல் நடவடிக்கைச் செயலணியினால் சாம்பல் பட்டியலிருந்து நீக்கப்பட்டமை இலங்கை மீது சாதகமான பொருளாதார மற்றும் நிதியியல் தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 12. வெளிநாட்டுச் செலாவணி

இலங்கை அரசாங்கத்தின் முகவராகவுள்ள இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேம்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்தும் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 02இன் கீழ் 2017 நவெம்பர் 20ஆம் நாளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் நிறுவப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் முக்கிய கடமைகள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் மாண்புமிகு நிதியமைச்சரினால் விதந்துரைக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியினை கையாள்வதற்கான வேறு ஆட்களை நியமித்தல், ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் வடிவமைத்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளையும் கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொள்வதற்கான பணிப்புரைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்,வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான ஒப்புதல்களில் உள்ளடக்கப்படாத குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக சிறப்பு அனுமதிகளை வழங்குதல், தற்போதுள்ள கொள்கைகளின் வினைத்திறனை தீர்மானிப்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியுடன் இணங்குகின்ற வகையில் புதிய கொள்கைகளுக்கான தேவைப்பாடுகளை அடையாளம் காண்பதற்கும் கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதனைக் கண்காணித்தல், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை தொடர்பில் விசாரணைகளை நடத்துதல், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான விசாரணைகளுக்கான விளக்கங்களை வழங்குதல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளில் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகள் தொடர்பான பிரிவுகளைத் தயாரித்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

இதன்படி திணைக்களமானது, கொள்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, மூலதனக் கொடுக்கல்வாங்கல் பிரிவு மற்றும் புள்ளிவிபரங்கள், கண்காணிப்பு மற்றும் விசாரணைப் பிரிவு என மூன்று பிரிவுகளாகத் தொழிற்படுகின்றது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் தொகுப்பு கீழே தரப்படுகிறது.

**12.1 வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் மற்றும் அதன்கீழ் 2017இல் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகளினை மீளாய்வு செய்து புதிய ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளினை வெளியிடுவதனை வசதிப்படுத்தல்.**

**அ) ஒழுங்குவிதிகளின் வழங்கலினை வசதியளித்தல்**

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் மாண்புமிகு நிதியமைச்சரின் மூலம் மூன்று ஒழுங்குவிதிகளின் வழங்கலினை வசதிப்படுத்தியது. இம்மூன்று அரச வர்த்தமானி அறிவித்தல்களும் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளதுடன் அதன் தொகுப்பு கீழே தரப்படுகிறது.

- **2019.02.27 திகதியிடப்பட்ட இல. 2112/17 கொண்ட அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தல்:** நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை 2019இல் வழங்குவதற்கும் தொடர்பான வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு அத்தகைய வழங்கல் தொடர்பான ஏதேனும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் இலங்கை அரசாங்கத்தை அனுமதித்தல்.
- **2019.02.28 திகதியிடப்பட்ட இல. 2112/25 கொண்ட அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தல்:** இலங்கை அரசாங்கத்தினையும் இலங்கை அரசாங்கத்தின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளையும் கடன் வழங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக கடன் பெறுகைகள் எதுவும் வழிப்படுத்தப்படாமல் தொடர்பான அமைச்சினதும் மற்றைய தொடர்பான அதிகாரசபைகளினதும் ஒப்புதலுக்குட்பட்டு, இலங்கைக்கு வெளியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கடன்பெறுவதற்கு (50 சதவீதத்திற்கும் அதிகமான பங்கு மூலதனம் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருத்தல்) அனுமதியளித்தல்.
- **2019.10.17 திகதியிடப்பட்ட இல. 2145/49 கொண்ட அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தல்:** முக்கியமாக ஏற்றுமதியாளரின் கரிசனைகளை பரிசீலனையில் கொண்டும் ஏனைய பிராந்திய வர்த்தகப் பங்காளர்களுடன் அதிகரித்த போட்டிக்கு அவர்களை இயலச்செய்வதற்காகவும் ஏற்றுமதி பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பி வைப்பதற்காக பொருட்களின் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட காலத்தினை அத்தகைய ஏற்றுமதி திகதியிலிருந்து 120 நாட்களிலிருந்து 180 நாட்களுக்கு அதிகரித்தல்.

**ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகளினை வழங்கல்**

இவ்வாண்டின் தொடக்கப்பகுதியில், முற்பணக் கொடுப்பனவு நியதிகளின் கீழ் (காசாக முற்பணம்) அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இலங்கை ரூபாவின் மாற்றல்களுடன் தொடர்புபடுகின்ற பொருட்களின் இறக்குமதியாளர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுப்பதன் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் 2018 ஒத்தோபர் 10 திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் புறக்கீடு செய்யப்படுவது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிப்பதற்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது. இப்பணிப்புரை இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளது.

**12.2 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான அனுமதியினை வழங்குதல்.**

**அ) கீழேயுள்ள அட்டவணை II - 24இல் தெளிவுபடுத்தப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விசேட அனுமதிகள் வழங்கப்பட்டன.**

அட்டவணை II - 24
வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விசேட அனுமதிகள்

| நோக்கம் | ஒப்புதலின் எண்ணிக்கை | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியனில் |
|---|---|---|
| நாட்டிற்கான உத்தரவாதங்களை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு | 1 | 175.00 |
| வெளிநாட்டில் முதலிடுவதற்காக வதிவிடக் கம்பனிகளுக்கு | 3 | 7.87 |
| இலங்கைக்கு வெளியே வதிபவர்களின் சார்பில் வங்கி/ கம்பனி உத்தரவாதங்களை வழங்குவதற்கு வதியும் கம்பனிகளுக்கு | 6 | 13.05 |
| விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறக்கவும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு | 20 | பொ.அ |
| வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதிகளில் உள்ளடக்கப்படாத குறிப்பிட்ட பல்வகை வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை செயன்முறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு | 305 | பொ.அ |

பொ.அ. - பொருத்தமானது அல்ல

**ஆ) நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் அத்தகைய தொழிற்பாடுகளை நிறுத்தவும்/ விட்டுவிடவும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியினை வழங்குதல்.**

- 2019ஆம் ஆண்டுப்பகுதியில் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளுக்கு (அதாவது நாணய மாற்றுநர்) 10 புதிய நாணய மாற்று அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதில் 08 அனுமதிப்பத்திரங்கள் வெளிநாட்டு நாணயங்களை வாங்குவதற்கும் பரிமாற்றுவதற்கும் மாத்திரம் வழங்கப்பட்ட அதேவேளை 02 அனுமதிப்பத்திரங்கள் வெளிநாட்டு நாணயங்களை வாங்கவும், விற்கவும் பரிமாற்றவும் வழங்கப்பட்டன.
- மேலும், ஏற்கனவேயுள்ள 03 நாணய மாற்றுநருக்கு புதிதாக 03 கிளைகளைத் திறப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
- அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான ஒப்புதலளிக்கப்பட்ட பிரமாணங்களை எய்துவதற்கு தவறியமையினால் 03 நாணய மாற்றுநர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் 2019இல் புதுப்பிக்கப்படவில்லை. மேலும், 02 சுற்றுலா விடுதிகள் 2019இல் அவற்றின் தொழிற்பாடுகளை முழுமையாக நிறுத்திக் கொண்டன.
- நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக ஒவ்வொரு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் விபரங்கள் கீழே அட்டவணை II - 25இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 25**
**நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிகள் - 2019.12.31இல் உள்ளவாறு**

| நிறுவனங்களின் வகை | அனுமதிக்கப்பட்ட வியாபாரம் | வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாணயமாற்று வியாபாரத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ள வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கூறும் கம்பனிகள் (நாணய மாற்றுநர்கள்) | வெளிநாட்டு நாணயத்தினை வாங்க மற்றும் பரிமாற்றம் செய்ய | 65* |
| | வெளிநாட்டு நாணயத்தினை வாங்க, விற்க மற்றும் பரிமாற்றம் செய்ய | |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | வெளிநாட்டு நாணயத்தினை வாங்க, விற்க மற்றும் பரிமாற்றம் செய்ய | 09 |
| சுற்றுலா விடுதிகள் | வெளிநாட்டு நாணயத்தினை வாங்க | 03 |
| **மொத்தம்** | | **77** |

* 76 நாணயமாற்று நிலையங்கள்/ கிளைகளை உள்ளடங்கலாக 65 கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அந்த 76 நிலையங்களில், 64 நிலையங்கள் வெளிநாட்டு நாணயத்தினை வாங்கவும் பரிமாற்றம் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்த அதேவேளை வெளிநாட்டு நாணயத்தினை வாங்க, விற்க மற்றும் பரிமாற்றம் செய்ய எஞ்சிய 12 நிலையங்கள் அனுமதிக்கப்பட்டன.

இதன்படி, 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு 26 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் 79 மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களும் (எம்எம்பிஎல் மணி ரான்ஸ்வர் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உட்பட) தொழிற்பாட்டிலிருந்ததுடன், அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் வணிகம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தொடர்பான அதிகாரவரம்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் வணிகத்தினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் பட்டியல் முறையே இணைப்பு II - 2 இலும் இணைப்பு II - 3 இலும் தரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, 2019 திசெம்பரில் 65 நாணய மாற்றுநர்களுக்கும் 03 சுற்றுலாவிடுதிகளுக்கும் 2020ஆம் ஆண்டிற்கான நாணயமாற்று அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட தற்போதுள்ள உரிமங்களின் செல்லுபடியாகும் காலம் 2020 சனவரி 31.

**இ) புலம்பெயர்ந்தோர் நிதியங்களின் மாற்றல்**

புலம்பெயர் இலங்கையர்களுக்கான புலம்பெயர் முற்பணங்களை விடுவித்தல் மற்றும் இலங்கையரல்லாதவர்களுக்கு மரபுவழியில் கிடைத்த நிதிகளை வெளியில் அனுப்புவதனை வசதியளித்தல் நோக்கங்களிற்காக இவ்வாண்டுப்பகுதியில் 1,353 மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்கினைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

### 12.3 வதியும் முதலீட்டாளர்களுக்கு இசைவுக் கடிதங்களை வழங்குதல்

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் வதியும் முதலீட்டாளர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் குறிப்பிடப்பட்டவாறு வெளிமுக முதலீடுகளைச் செய்வதற்கு அவர்களை இயலுமைப் படுத்துவதற்காக வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக விசாரணைகள் எதுவும் நிலுவையில் இல்லை என்பதனை உறுதிப்படுத்தி 355 இசைவுக் கடிதங்களை (2018இன் 429 கடிதங்களுடன் ஒப்பிடுகையில்) வழங்கியது.

### 12.4 வெளிநாட்டுச் சொலவணிக் கொடுக்கல்வாங்கல்களை கண்காணித்தல் மற்றும் விசாரணை செய்தல்

**அ) தலத்திலான விசாரணைகள்**

மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட தொடர்பான அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் இணங்குவிப்புக்களினது நிலையினைக் கண்டறியும் பொருட்டு 22 தலத்திலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆ) விசாரணைகள்**

- வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகளின் கீழ் இணங்கியொழுகாமை தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய ஆட்கள் தொடர்பில் (மேலே சொல்லப்பட்ட தலத்திலான விசாரணைகளுக்கு புறம்பாக) 34 விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- இதில் 28 விசாரணைகள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விசாரணை நடைமுறைகளைத் தொடர்ந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னர் இவ்வாண்டுப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டன.

**இ)** மேலும், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்பான விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிபுணத்துவச் சான்றுகள்/ சத்தியச் சான்றிதழ்கள் மூலம் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் வழக்காடல்களிலும் சட்ட ஒழுங்குமுறைப்படுத்தல்களிலும் வழிநடத்தப்பட்டனர்.

### 12.5 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமையினை ஆரம்பித்தல்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து தரவுகளை சேகரிக்கும் பொருட்டு அனைத்தையுமுள்ளடக்கிய எல்லை கடந்த மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமையொன்றினை (அதாவது பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை) நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வுத்தேசப் பொறிமுறையானது வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் கொள்வனவுகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கான மற்றும் சந்தையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் மீதான அனைத்து தரவுகளையும் பெற்றுக்கொள்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளின் தொடர்ச்சியான கண்காணிப்பினையும் இயலுமைப்படுத்தும் என எதிர்பார்க்கிறது.

### 12.6 வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மீதான விழிப்புணர்வினை அதிகரித்தல்

அ) இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் இலங்கை வங்கியாளர் நிறுவகம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்காக தற்போதுள்ள வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மீது 8 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. அத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கம் யாதெனில், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளையும் கொடுக்கல்வாங்கல்களையும் வினைத்திறனாக வசதியளிப்பதற்கு அவர்களை இயலச்செய்வதற்காக உரிமம்பெற்ற வர்த்தக

வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் அலுவலா்களுக்கு தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் தொடா்பில் அவா்களது அறிவினையும் இயலாற்றலினையும் கட்டியெழுப்புவதாகும்.

ஆ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏற்கனவேயுள்ள வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மீதான அறிவினை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வங்கி ஊழியா்கள், நாணய மாற்றுநா்கள் மற்றும் ஏனைய ஆா்வலா்களுக்கு மேல் மாகாணத்திற்கு வெளியே 05 ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன.

இ) ஒன்றுடன் ஒன்று தொடா்புபட்ட கொள்கை விடயங்களில் முரண்பாடற்ற ஒத்த தீா்மானங்களை எடுப்பதற்கு உதவும் நோக்குடனும் அதேவேளை வெளிநாட்டுச் செலாவணிச் சட்டவாக்கத்திற்கிணங்க நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கலுடன் தொடா்புபட்ட இடைவெளியினை அடையாளம் காண்பதற்கும் ஆா்வலா் நிறுவனங்களிலிருந்தான (அதாவது வா்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் - நிதியமைச்சு, இலங்கைச் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், உண்ணாட்டரசிறைத் திணைக்களம், வா்த்தகத் திணைக்களம், இலங்கை முதலீட்டுச் சபை, கொழும்பு பங்குப் பரிவா்த்தனை மற்றும் பிணையங்கள் பரிவா்த்தனை ஆணைக்குழு) முதன்மை அலுவலா்களின் பங்களிப்புடன் 02 பொதுவான கொள்கை ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன.

ஈ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள் தொடா்பான பொதுமக்களின் விழிப்புணா்வினை அதிகரிப்பதற்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் அலுவல்சாா் வெப்தளம் (www.dfe.lk) சரியான முறையில் இற்றைப்படுத்தப்பட்டதுடன் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடா்பான விசாரணைகளுக்கு மின்னஞ்சல், தொலைபேசி என்பன ஊடாகவும் நேரடியாகவும் தேவையான விளக்கங்களைத் தொடா்ந்தும் அளித்து வருகிறது.

## இணைப்பு II - 2
## 2019.12.31இல் உள்ளவாறான அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்களின் பட்டியல்

| உரிமம்பெற்ற வா்த்தக வங்கிகள் | |
|---|---|
| 1 | அமானா பாங்க் பிஎல்சி |
| 2 | அக்சிஸ் பாங்க் லிமிடெட்* |
| 3 | இலங்கை வங்கி |
| 4 | பாங்க் ஒவ் சைனா லிமிடெட் |
| 5 | காா்கில்ஸ் பாங்க் லிமிடெட் |
| 6 | சிற்ரி பாங்க்,என்.எ |
| 7 | கொமா்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 8 | டொய்ச் பாங்க் எஜி |
| 9 | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி |
| 10 | ஹபிப் பாங்க் லிமிடெட் |
| 11 | ஹற்றன் நசனல் பாங்க் பிஎல்சி |
| 12 | ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்* |
| 13 | இந்தியன் வங்கி |
| 14 | இந்தியன் ஓவசீஸ் பாங்க் |
| 15 | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 16 | நசனல் டிவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |
| 17 | நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 18 | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 19 | மக்கள் வங்கி |
| 20 | பப்ளிக் பாங்க் பொ்ஹெட் |
| 21 | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 22 | செலான் பாங்க் பிஎல்சி |
| 23 | ஸ்ரான்டோட் சாா்ரட் பாங்க் |
| 24 | ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா |
| 25 | த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் |
| 26 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| **உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்** | |
| 27 | தேசிய சேமிப்பு வங்கி |
| 28 | சனச டிவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |

* வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் தொழிற்பாடுகளை முழுமையாக நிறைவுசெய்யும் போது அவா்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் இரத்துச்செய்யப்படும் என்பதனால் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் உட்பட இலங்கையில் வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு அக்சிஸ் பாங்க் லிமிடெட் மற்றும் ஐசிஐசி பாங்க் லிமிடெட் என்பன தற்பொழுது அனுமதிக்கப்படவில்லை.

## இணைப்பு II - 3
## 2019.12.31இல் உள்ளவாறான மட்டுப்படுத்தப்பட்ட வணிகா்களின் பட்டியல்

| வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்வதற்கும் பரிமாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகா்கள் | |
|---|---|
| நாணய மாற்றுநா்கள் | |
| 1 | எ. ஓ. லக்ஸ்மி ஜுவல்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 2 | அப்டீன் மணி சேஞ்சோ்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 3 | அபிலாஸ் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 4 | ஆரியவன்ச என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 5 | அருணா பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 6 | ஏசியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 7 | பிரேசியா கிராமின் (பிறைவேற்) லிமிடெட் |
| 8 | புள்ளியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 9 | கப்பிட்டல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 10 | காலோ இன்ரனசனல் (பிறைவேட்) லிமிடெட் |
| 11 | சென்றல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 12 | கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01 |
| 13 | கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 06 |
| 14 | டெடிகம குறூப் (பிறைவேற்) லிமிடெட் |
| 15 | டேற்றா எக்ஸ்சேஞ் இன்ரநசனல் (பிறைவேற்) லிமிடெட் |
| 16 | டயா ஒதோரைஸ்ட் மணி சேஜ்சோ் (பிறைவேற்) லிமிடெட் |
| 17 | டெல்ரா சரத் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 18 | கோல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - காலி |

| | |
|---|---|
| 19 | கோல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - காலி துறைமுகம் |
| 20 | ஜோர்ஜ் மைக்கல் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 21 | ஜேக்ஸன் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 22 | குளோபல் ரஸ்ட் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 23 | குளோபல் விலேஜ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 24 | கோல்டன் மணி சேஜ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 25 | ஹய்வா ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 26 | இன்ரநசனல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 27 | ஜேயஸ் இன்வெஸ்ட்மென்ற் லிமிடெட் |
| 28 | ஜுவல் லங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 29 | ஜெயா பொறக்ஸ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 30 | கமல் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 31 | கெயிசர் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 32 | குடாமடு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 33 | எம்.பி மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 34 | மாருதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - யாழ்ப்பாணம் |
| 35 | மயூரி மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 36 | மிட்னா மினி மார்க்கட் (பிறைவேற்) லிமிடெட் |
| 37 | மிலானோ மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 38 | நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் - யாழ்ப்பாணம் |
| 39 | நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் - கிளிநொச்சி |
| 40 | நியு நட்டாசா (பிறைவேற்) லிமிடெட் |
| 41 | நியு றீகல்ஸ் மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 42 | பேர்ள் எக்சி (பிறைவேற்) லிமிடெட் |
| 43 | றபீக் ஜெம்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 44 | றிம்ஹா ஜுவல்லறி (பிறைவேற்) லிமிடெட் |
| 45 | றிவின்டு என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 46 | றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01 |
| 47 | றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 06 |
| 48 | றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - அளுத்கம |
| 49 | றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01 |
| 50 | சலாக்கா ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ற் (பிறைவேற்) லிமிடெட் |
| 51 | சாரங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 52 | சிபாஸ் மணி எக்சேஞ்சிங் (பிறைவேற்) லிமிடெட் |
| 53 | சொர்ணம் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 54 | எஸ்எஸ்டிடி மணி எக்சேஞ்ஜிங் (பிறைவேற்) லிமிடெட் |
| 55 | சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 01 |
| 56 | சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06 |
| 57 | தமஸா பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 58 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 02 |
| 59 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 03 |
| 60 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கண்டி |
| 61 | யுனிக் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 62 | வசந்தாஸ் இன்ரநசனல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 63 | வெஸ்ரேன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 64 | வின்சர் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |

| **வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்** | |
|---|---|
| நாணய மாற்றுநர்கள் | |
| 65 | அர்ஜுனா ஜுவலரி (பிறைவேற்) லிமிடெட் |
| 66 | கிறவுன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 67 | சிட்டி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 68 | தேவி பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 69 | மாருதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06 |
| 70 | மேர்க்கன்டைல் மேர்ச்சன்ட் பாங்க் லிமிடெட் |
| 71 | மெட்ரோ பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 72 | பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 01 |
| 73 | பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06 |
| 74 | புஸ்பா மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட் |
| 75 | ரவி பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 76 | தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் |
| உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் | |
| 77 | ஏசியா அசற் பினான்ஸ் பிஎல்சி |
| 78 | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி |
| 79 | சிற்றிசன்ஸ் டெவலப்மென்ற் பிசனஸ் பினான்ஸ் பிஎல்சி |
| 80 | லங்கா கிரடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் |
| 81 | எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி |
| 82 | எல்பீ பினான்ஸ் பிஎல்சி |
| 83 | செங்கடகல பினான்ஸ் பிஎல்சி |
| 84 | சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி |
| 85 | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி |
| **வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்** | |
| சுற்றுலா விடுதிகள் | |
| 86 | பேள் சிற்றி ஹோட்டல் |
| 87 | சங்கிரி-லா ஹோட்டல் கொழும்பு |
| 88 | சங்கிரி-லாஸ் அம்பாந்தோட்டை றிசோட் அன்ட் ஸ்பா |
| ஏனைய நிறுவனங்கள் | |
| 89 | எம்.எம்.பீ.எல்.மணி ரான்ஸ்வர் (பிறைவேட்) லிமிடெட் |
| 90 | இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |

### 13. மனித வளங்கள்

மனித வளங்கள் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் மனித வளங்கள் முகாமைத்துவக் கொள்கைகளை அபிவிருத்தி செய்வதும் தனிப்பட்டவர்களின் உள்ளார்ந்த ஆற்றலைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதன் மூலம் சிறந்த திறமைகளைக் கொண்டவர்களைக் கவர்ந்து கொள்வதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் மத்திய வங்கியை இயலுமைப்படுத்தும் விதத்தில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதும் வழங்கும் பணிகளின் பெறுமதியினை அதிகரித்துக் கொள்வதுமேயாகும். மேற்குறிப்பிட்டவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில்,

தோற்றம்பெற்றுவரும் சவால்களுக்கு மத்தியிலும் மத்திய வங்கியின் ஒட்டுமொத்த குறிக்கோள்களை எய்துவதற்குப் பங்களிக்கக்கூடிய உயர் உற்பத்தித்திறனும் செயலூக்கமும் திருப்தியும் கொண்ட ஊழியர் குழாம் வங்கியில் கிடைப்பதனை உறுதிப்படுத்துகின்ற அதன் உபாயக் குறிக்கோளினை எய்துவதற்காக 2019ஆம் ஆண்டுப்பகுதியில் மனித வளங்கள் திணைக்களம் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. மனித வளங்கள் திணைக்களம் அதன் உபாயக் குறிக்கோளினை எய்தும் விதத்தில் செயலாற்ற மதிப்பீடு, வேலைச் சுழற்சி, தொடர்ந்து இடம்பெறும் வகையிலான திட்டமிடல், பதவி உயர்வுகளை வழங்குதல், புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர்களுக்கு உளவள அளவைப் பரீட்சையினை நடத்துதல், ஏற்கனவேயுள்ள அலுவலர்களுக்கும் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கும் ஆலோசனை வழங்கும் மற்றும் கற்பிக்கும் செயலமர்வுகளை நடத்துதல், தொழில்நிலை ஈடுபாட்டு அளவீட்டினை நடத்துதல் மற்றும் மத்திய வங்கியின் உபாயத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மனித வளத் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் சிறந்த தொழில்தருநர் - ஊழியர் உறவுகளைப் பேணுவதற்காக தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்கும் விதத்தில் கைத்தொழில் சகவாழ்வினைப் பேணுதல் என்பனவற்றை மேற்கொண்டது.

### 13.1 மனித வளங்கள் கட்டமைப்பு

2019இன் இறுதியிலுள்ளவாறு, இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,366 ஆக விளங்கி 650 உயர்தர வகுப்பு அலுவலர்களையும் 561 முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு அலுவர்களையும் 155 அலுவலக உதவியாளர் வகுப்பு ஊழியர்களையும் உள்ளடக்கி முறையே மத்திய வங்கியின் மொத்த அலுவலர்களில் 48 சதவீதம், 41 சதவீதம் மற்றும் 11 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. மத்திய வங்கியின் மொத்த அலுவலர்கள் 754 ஆண் ஊழியர்களையும் 612 பெண் ஊழியர்களையும் உள்ளடக்கி முறையே 55 சதவீதத்தினையும் 45 சதவீதத்தினையும் பிரசன்னப்படுத்தியது. 2019ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய வங்கியின் ஊழியர்களின் சராசரி வயது 39 ஆகக் காணப்பட்டது.

2019 இறுதியில் அலுவலர்களினது வயது மற்றும் பால் அடிப்படையிலான தொகுப்பு வரைபடம் II-5இல் காட்டப்பட்டுள்ளது.

### 13.2 ஊழியர்களின் கல்விசார் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

அட்டவணை II - 26 இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு, உயர்தர கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் கூடிய பன்மைத்துவ மற்றும் திறன்வாய்ந்த மனித வளங்கள் குழுவை வங்கி கொண்டிருக்கிறது.

### 13.3 மனித வள முகாமைத்துவம்

#### (அ) ஆட்சேர்ப்பு

மனிதவளத் திணைக்களம் மத்திய வங்கியின் பல்வேறு ஊழியர் வகைகளுக்கும் அலுவலர் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக பொதுவான ஆட்சேர்ப்பு செய்முறையொன்றினை மேற்கொண்ட வேளையில் ஆட்சேர்ப்பு மத்திய வங்கியின் குறித்துரைக்கப்பட்ட தேர்ச்சித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2019இல் சிவில் மற்றும் மின்னியல் துறைகளில் பேணல் மற்றும் செயற்றிட்டப் பொறியியலாளர்கள், சிவில்/ மின்னியல் இயந்திரவியல் துறையில் தொழில்நுட்ப அலுவலர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் (தொலைபேசி மற்றும் செவிப்புல), அரும்பொருட்காட்சிச்சாலை மேற்பார்வையாளர் மற்றும் முதன்மை நூலகர் ஆகியோர் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். மேலும், பொதுவான ஆட்சேர்ப்புச் செயன்முறைகளின் கீழ் உதவி பாதுகாப்பு அலுவலர்கள் (பயிற்சி) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதுடன் கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்கள் மற்றும் முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (ஆ) செயலாற்றல் முகாமைத்துவம்

மத்திய வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது ஊழியர்களின் வேலை விபரணங்களைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், தனிப்பட்ட ஊழியர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்தல், ஊழியர்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் செயலாற்றத்தினை மதிப்பிடுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறையின் கீழ், ஒவ்வொரு ஊழியரினதும் செயலாற்ற மட்டமானது மதிப்பீட்டு பிரமாணத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுவான மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளின் அடிப்படையில் எய்தப்பட்ட செயலாற்றத்திற்குத் தரமிடல்களை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. ஊழியர்களின் இறுதிச் செயலாற்ற புள்ளியிடலானது பதவி உயர்வுப் பிரமாணத்தின் தேவைப்பாடுகளில் ஒன்றாகப் பயன்படுத்தப்படுகிறது.

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் திட்டமிட்டவாறு ஊழியர்களின் செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறைகளை மேற்கொண்டது. இதற்கமைய, 2018ஆம் ஆண்டிற்கான செயலாற்ற மதிப்பீட்டுப் புள்ளி வழங்கல் நிறைவுசெய்யப்பட்டதுடன் அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் தொடர்பான அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. மேலும், மனித வளத் திணைக்களம், திணைக்களங்களினது நடுவாண்டு செயலாற்ற மீளாய்வுச் செயன்முறைகளையும் மீளாய்வு செய்தது. இது, தொடர்புடைய அனைத்துத் தரப்பினர்களுக்கும் இவ்வாண்டின் முதலரை காலப்பகுதியின் அலுவலர் உறுப்பினர்களது செயலாற்ற மட்டத்தினை புரிந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.

#### (இ) பதவி உயர்வுகள்

ஏற்புடைய பதவி உயர்வுப் பிரமாணங்களுக்கு இசைந்து செல்லும் வகையில், மனித வளங்கள் திணைக்களமானது, அவர்களது தொழில் முன்னேற்றங்களை உறுதிப்படுத்தும் விதமாக ஊழியர்களிற்கான பதவி உயர்வினை வழங்கியதுடன், அதன் காரணமாக 2019இல் மொத்தமாக 103 அலுவலர்களுக்கு அவர்களது வகுப்பு மற்றும் தரப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இதனடிப்படையில், இரண்டு (2) திணைக்களத் தலைவர்கள் உதவி ஆளுநர்களாகவும் நான்கு (4) திணைக்களத் தலைவர்கள் மூத்த திணைக்களத் தலைவர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டனர். மேலும் ஏழு துணை திணைக்களத் தலைவர்கள், மேலதிகத் திணைக்களத் தலைவர்களாகப் பதவி உயர்த்தப்பட்டதுடன் 82 அலுவலர்களுக்கு அவர்களது தரப் பதவி உயர்வு வழங்கப்பட்ட வேளையில் 8 அலுவலர்கள் முகாமைத்துவ அலுவலர் வகுப்புக்களிலிருந்து உயர் பதவி வகுப்புக்களுக்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

#### (ஈ) வேலைச் சுழற்சி


வங்கியின் செயன்முறையில் பல்வேறு துறைகளிலும் அனுபவத்தினைப் பெற்று தம்மை வளர்த்துக் கொள்வதற்காக ஊழியர்களுக்கு வாய்ப்பினை வழங்கும் குறிக்கோளுடன் மனித வளங்கள் திணைக்களமானது, வங்கியின் வருடாந்த வேலைச் சுழற்சிக் கொள்கையின் கீழ் 2019 சனவரி 14ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 15 உயர் வகுப்பு அலுவர்களையும் 54 முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு அலுவலர்களையும் மற்றும் 19 அலுவலக உதவியாளர் வகுப்பினரையும் இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

#### (உ) தொழில்துறை ஐக்கியம்


மனித வளத் திணைக்களம் முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நெருக்கமான கலந்துரையாடல்களைப் பேணுவதற்கான வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன்

வரைபடம் II - 5
2019.12.31இல் உள்ளவாறு அலுவலர்களின் உள்ளமைப்பு

(அ) வகுப்பு ரீதியான வயதுப் பங்கீடு




(ஆ) வகுப்பு ரீதியான பால் பங்கீடு




வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதற்கமைய, 2019ஆம் ஆண்டில் ஊதியம், பதவி உயர்வுகள், பயிற்சி, நலன்புரி, ஆட்சேர்ப்பு மற்றும் வங்கியின் பொது நிர்வாகம் தொடர்பாக சில பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களிற்கும் வாய்ப்பினை வழங்கி எட்டு கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தது.

**13.4 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ஆளுநர் வெளிநாட்டில் பங்குபற்றிய கூட்டங்கள்**

(அ) 2019 சனவரி 14ஆம் 15ஆம் நாட்களில் வாஷிடங்கன், டி.சி. இல் ப.நா.நிதியத்தின் மூத்த அலுவலர்களுடனான கூட்டத்திலும் ஐக்கிய அமெரிக்காவின் அரச அலுவலர்களுடனான கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

(ஆ) 2019 ஏப்பிறல் 09 - 19 வரையான காலப்பகுதியில் வாஷிடங்கன், டி.சி. இல் இடம்பெற்ற 2019ஆம் ஆண்டிற்கான ப.நா.நிதிய/ உலக வங்கியின் இளவேனில் காலக் கூட்டங்களிலும் நியுயோர்க், பொஸ்ரன் மற்றும் லொஸ்ஏஞ்சல் ஆகிய இடங்களில் இடம்பெற்ற முதலீட்டாளர் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

(இ) 2019 மே 9 - 10 வரையான காலப்பகுதியில் இலண்டனில் இடம்பெற்ற இலங்கை அரசாங்கத்தின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பட்டியலிடும் அலுவல்சார் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

அட்டவணை II - 26
2019.12.31இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் உறுப்புரிமைகள்

| ஊழியர்களின் வகுப்புகள் | முனைவர் பட்டம் பெற்றோர் | கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் உறுப்புரிமை பெற்றவர்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முதுமானிப் பட்டம், முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள் | முதுமானிப் பட்டம் மற்றும் முதற்பட்டம் | முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள் | முதுமானிப் பட்டம், தொழில்சார் உறுப்புரிமைகள் | முதுமானிப் பட்டம் மட்டும் | முதற் பட்டம் மட்டும் | தொழில்சார் உறுப்புரிமைகள் மட்டும் | மொத்தம் |
| அலுவலர் தர வகுப்பு | 20 | 125 | 158 | 69 | 29 | 2 | 143 | 15 | 561 |
| முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு | - | 12 | 27 | 16 | 17 | 23 | 66 | 37 | 198 |
| அலுவலர் உதவியாளர் வகுப்பு | - | - | - | - | - | - | 7 | - | 7 |
| **மொத்தம்** | **20** | **137** | **185** | **85** | **46** | **25** | **216** | **52** | **766** |

(ஈ) 2019 மே 21ஆம் நாள் சிங்கப்பூரில் நடைபெற்ற "இலங்கையில் முதலீடு செய்யுங்கள் முதலீட்டாளர் அரங்கம்" இல் பங்குபற்றினார்.

(உ) 2019 யூலை 21 - 25 காலப்பகுதியில் யப்பான் ரோக்கியோவில் நடைபெற்ற முதலீட்டாளர் கூட்டத்தில் பங்குபற்றினார்.

(ஊ) 2019 ஒத்தோபர் 17 - 21 காலப்பகுதியில் வாஷிங்கடன் டி.சி. இல் இடம்பெற்ற ப.நா.நிதியம்/ உலக வங்கியின் வருடாந்தக் கூட்டத்தில் பங்குபற்றினார்.

(எ) 2019 நவெம்பர் 13 - 14 காலப்பகுதியில் சிங்கப்பூரில் இடம்பெற்ற 55ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர் மாநாடு/ உயர்மட்ட ஆய்வரங்கிலும் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் சபையியன் 39ஆவது கூட்டத்திலும் பங்குபற்றினார்.

(ஏ) 2019 நவெம்பர் 24 - 25 காலப்பகுதியில் சிங்கப்பூரில் இடம்பெற்ற "இலங்கை கம்பனி அணுகுமுறை நாட்கள்" என்ற நிகழ்விலும் பங்குபற்றினார்.

### 13.5 பதவி உயர்வுகள்/ நியமனங்கள்

(அ) உயர் அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்டவர்களின் விபரங்கள் வருமாறு

i. திரு. ஏ.ஏ.எம். தாசிம் மற்றும் திரு. சி. என் விஜேயசேகர ஆகியோர் 2019 திசெம்பர் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டனர்.

ii. திருமதி. கே. தசநாயக்கா, திரு. ஏ.எம்.என். குணவர்த்தன திரு. டி.எம் ரூபசிங்க மற்றும் திரு. ஏ.ஆர்.கே விஜயசேகர ஆகியோர் 2019 திசெம்பர் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மூத்த திணைக்களத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

(ஆ) வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஆர். எம். ஜெயவர்த்தன 2019 சனவரி 4ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(இ) நாணயத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. ஏ. ஜி. யு. திலகரத்ன, 2019 சனவரி 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2019 மாச்சு 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஈ) மனிதவளத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. கே.எம். அபயகோன் 2019 மாச்சு 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(உ) ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் திருமதி. கே.என்.என்.எம். பண்டார 2019 மாச்சு 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் மனித வளத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஊ) வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பணிப்பாளர் திருமதி. எச்.பி.ரி. விஜயசூரிய 2019 மாச்சு 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் நாணயத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(எ) பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர் திருமதி. ஆர்.டி.ரி. குணசேகர 2019 மாச்சு 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2019 மாச்சு 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் 2019 யூலை 22ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஏ) ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளரான திருமதி. எஸ்.சி. குணதீர 2019 மாச்சு 01 நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 2019 மாச்சு 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஐ) தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. டபிள்யு. ஆர். எம். கே. பர்னாந்து 2019 யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிகப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். .

(ஒ) பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி. டபிள்யு. ஏ. டில்ருக்சினி 2019 யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஓ) வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. டி. எம். டி. பீ. திசநாயக்கா 2019 யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் 2019 யூலை 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஔ) பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. எம். எஸ். கே. தர்மவர்த்தன 2019 யூலை 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(க) தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. பீ.எல்.ஜெ.எஸ் பாலசூரிய 2019 யூலை 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ங) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர் சி அமரசேகர 2019 ஒத்தோபர் 31ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஞ) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. சி. பி. எஸ். பண்டார 2019 நவெம்பர் 10 நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ட) வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஜே. பி. கமலத் 2019 நவெம்பர் 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் அதனைத் தொடர்ந்து அவர் 2019 திசெம்பர்

20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

(ண) பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி. டி. எஸ். டபிள்யு. சமரதுங்க 2019 திசெம்பர் 19 நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(த) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி வி.எ.எ. என். டி சில்வா 2019 திசெம்பர் 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் வங்கி மேற்பார்வைத்தின் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

### 13.6 விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்

(அ) துணை ஆளுநர் திரு. எஸ்.ஆர் ஆட்டிக்கல நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) உயர் அலுவலர் வகுப்பு தரம் IV அலுவலரான முனைவர் (திருமதி) வை. எம். இந்திரரத்ன மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

(இ) உயர் அலுவலர் வகுப்பு தரம் II அலுவலரான திருமதி. எஸ். ரத்னாயக்கா நிருவாக உதவியாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

(ஈ) செல்வி எஸ். அமிதா, உயர் பதவி அலுவலர் தரம் II பொருளியலாளராக, பன்னாட்டு நாணய நிதிய இலங்கை வதிவிட பிரதிநிதி அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

### 13.7 ஓய்வுபெறல்கள்/ இராஜினாமாச் செய்தல்

2019இல் ஒரு துணை ஆளுநர், ஒரு மூத்த திணைக்களத் தலைவர், ஒன்பது திணைக்களத் தலைவர்கள் உட்பட மொத்தமாக 63 அலுவலர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுவெற்ற வேளையில் மொத்தமாக ஒன்பது அலுவலர்கள் மத்திய வங்கிப் பணியிலிருந்து இராஜினாமாச் செய்தனர்.

**அட்டவணை II - 27**
**2019இல் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் ஓய்வுபெறல் மற்றும் இராஜினாமாச் செய்தலின் தொகுப்பு**

| ஊழியர் வகுப்பு | ஓய்வு பெற்றவர்கள் | இராஜினாமாச் செய்தவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| உயர் பதவி வகுப்பு | 48 | 5 | 53 |
| முகாமைத்துவ உதவி வகுப்பு | 15 | 3 | 18 |
| அலுவலக உதவியாளர் வகுப்பு | - | 1 | 1 |
| மொத்தம் | 63 | 9 | 72 |

## 14 தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது மத்திய வங்கியின் மைய குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் வெற்றிகரமாக பங்களித்த அதே வேளையில் நிறுவன அளவிலான ஒருங்கிணைந்த பிரயோகங்களை வழங்குவதில் இயக்கவாற்றல்மிக்க அதன் வகிபாகத்தை தொடர்ந்தும் வழங்கியது.

வங்கியின் தந்திரோபாய மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது ஐந்து பரந்துபட்ட துறைகளில் தனது பங்களிப்பினைச் செய்தது. அவையாவன, அ) செலவுச் சிக்கனமாக வியாபார தீர்வுகளை வழங்குதல் ஆ) வங்கியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல் இ) தேசிய கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்துவதற்கு பங்களித்தல் ஈ) தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் மீளாற்றல் மற்றும் உ) ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்தல்.

### அ) செலவுச் சிக்கனமாக வியாபார தீர்வுகளை வழங்குதல்

புதிய ஆட்சேர்ப்பு செயல்முறையை பூர்த்தி செய்வதற்காக முகாமைத்துவ பயிலுனர் ஆட்சேர்ப்பு முறைமை புதுப்பிக்கப்பட்டது, இதன் விளைவாக மனிதவளத் திணைக்களத்தின் 1000 க்கும் மேற்பட்ட மனித மணித்தியாலங்கள் மீதப்படுத்தப்பட்டன. இந்த முறைமை இணையவழி விண்ணப்ப சமர்ப்பிப்பு மற்றும் நிகழ்நேர சரிபார்ப்புகளுக்கு வழிவகுத்தது, இதன் விளைவாக மனித பிழைகள் குறைக்கப்பட்டன, இடத்தையும் செலவையும் மிச்சப்படுத்தின, இதனால் குறுகிய காலத்தில் மனிதவள திணைக்களத்தின் அதிகரித்த செயல்திறனுக்கு பங்களித்தது.

லங்கா செக்யூர் சிஸ்டம், அரசாங்கப் பிணைகளை தீர்த்து வைக்கும் மற்றும் மத்திய பிணையங்கள் வைப்பகமாக செயற்படுகின்ற முறைமை, நிகழ்நேரத்தில் உரிமையாளர் மாற்றங்களை முதலீட்டாளர்களுக்கு தெரிவிக்கும் வகையில் குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் அறிவிப்புகளுடன் மேம்படுத்தப்பட்டது. இந்த அபிவிருத்தி மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையின் மூலம் அதிக முதலீட்டாளர்களை சந்தைக்கு ஈர்க்க வழி வகுத்தது. இதேபோல், அரசு பிணையங்களுக்கான திறைசேரி முறி ஏல முறைமை, PDOffice, ஏலம் எடுப்பதற்கான தன்னார்வ கட்டமான கட்டம் 2, ஆரம்பத்தினை அறிவிக்கும் வகையில், குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் அறிவிப்புகளுடன் மேம்படுத்தப்பட்டது, இது ஏலத்தில் பங்கேற்பாளர்களுக்கு சிறந்த வெளிப்படைத்தன்மையை வழங்குகிறது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், இலங்கை வைப்புத்தொகை காப்பீடு மற்றும் பணப்புழக்க ஆதரவு திட்டத்தின் கீழ் வைப்பாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் விரைவாக்குவதற்கும் ஒருங்கிணைந்த iGLAS கணக்கியல் செயல்பாட்டுடன் கூடிய இழப்பீட்டு கொடுப்பனவு முறைமையை தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்துக்காக உருவாக்கியது.

நாடு பூராவுமான தரவு சேகரிப்புக்கு (CWDCS) பயன்படுத்தப்படுகின்ற முறைமை தரவு திருத்துதலுக்கான இணைய இடைமுகத்துடன் மாற்றப்பட்டது மற்றும் பயனரினால் இயக்கப்படும் அறிக்கையிடலுக்கான வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டது. பூஜ்ஜிய பரிமாற்ற தாமதங்களுடன் நிகழ்நேர தரவு பதிவேற்றத்தை இயலச்செய்யக்கூடிய வகையில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் மேலும் மேம்படுத்தப்பட்டது.

புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் தரவு நூலகம் பொதுப்படுகடன் திணைக்களத்தின் இரண்டாம் நிலை சந்தை மேற்கோள்களை இணைப்பதன் மூலம் மேம்படுத்தப்பட்டது, இதன் மூலம் பொது மக்களுக்கு பல்வேறு வகையான தேசிய தரவுகளுக்கான அணுகலை வழங்கியது.

வங்கியால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களால் அறிக்கையிடப்பட்ட தகவல்களை கண்காணிக்க பல்வேறுபட்ட திணைக்களங்களினால் பயன்படுத்தும் மத்திய தரவுத்தள அமைப்பு (FinNet) ஒரு தரவு பகுப்பாய்வு கருவியை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயனர்கள் தாங்களாகவே அறிக்கையை உருவாக்க இயலச்செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்டது. துறை சார்ந்த தரவுத்தொகுப்புகளுடன் தரவு பகுப்பாய்வு கருவியைப் பயன்படுத்துவதற்கு பயனர்கள் வழிநடத்தப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டனர்.

சபை செயலகத்திற்கான பணி கண்காணிப்பு முறையை அமல்படுத்துவதன் மூலம் நாணயச் சபை முடிவுகளின் பின்தொடர்தல் செயல்முறை நெறிப்படுத்தப்பட்டது.

அந்நிய செலாவணி திணைக்களத்தால் பயன்படுத்தப்படும் அந்நிய செலாவணி அமைப்பு, வெளிநாட்டு நாணய விற்பனை மற்றும் கொள்முதல் கண்காணிப்பு தொகுதிக்கு அறிக்கையிடல் செயல்பாட்டினை அறிமுகப்படுத்தி மறுசீரமைப்பதன் மூலம் மேலும் மேம்படுத்தப்பட்டது. மேலும், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது மின்னணு நிதி பரிமாற்ற அட்டைகள் (EFTC) கண்காணிப்பு முறையை வெளிநாட்டு நாணயத்தைப் பயன்படுத்தவும் கூடுதல் வகை கடனட்டைகள் மற்றும் வரவட்டைகளின் கீழ் வழங்கப்பட்ட புதிய அட்டைகளின் எண்ணிக்கையும் சேர்க்கவும்கூடிய விதத்தில் மாற்றியமைத்தது. கூடுதலாக, கூறப்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப அறிக்கைகளை மாற்றியமைத்தல் மேற்கொள்ளப்பட்டது.

உள்நாட்டு பணச் சந்தையில் கட்டமைப்பு பணப்புழக்கத்தை நிவர்த்தி செய்ய உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தை அனுமதிக்கும் முறிகள் கொள்முதலுக்கு இடமளிக்கும் வகையில் திறந்த சந்தை செயல்பாடுகள் (OMO) பிணையங்கள் ஒதுக்கீடு முறை மேம்படுத்தப்பட்டது.

பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தின் 4P (பொது-தனியார்-தயாரிப்பாளர் கூட்டாண்மை) கடன் திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக பிராந்திய அபிவிருத்தி கடன் மேலாண்மை அமைப்பின் மைய செயல்பாடு உருவாக்கப்பட்டது.

நாணயத் திணைக்களம் விதித்த புதிய விதிமுறைகளை இணைக்க உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் (LCB) அவசர நாணய திரும்பப் பெறும் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்படும் நாணய மேலாண்மை முறைமையின் (CMS) மின்னணு தரவு பரிமாற்ற இடைமுகம் மேம்படுத்தப்பட்டது.

வங்கியின் இடர் குறைப்பு செயல்முறையை தானியங்குபடுத்துவதற்கும் நெறிப்படுத்துவதற்கும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களத்திற்கு இடர் பதிவேடு மற்றும் வகைகளுடன் ஒரு இடர் அறிக்கை முறைமை உருவாக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், புதிய PAYE வரித் திட்டத்தை அதன் உள்ளக முறைமைகளுடன் நிதியாண்டின் இறுதியில் வெற்றிகரமாக இணைத்தது மற்றும் பணியாளர் வரி அறிக்கைகளை உள்நாட்டு வருவாய் திணைக்களத்திற்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்க நிதித் திணைக்களத்திற்கு உதவியது.

புதிய ஆவண மேலாண்மை முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், 300,000க்கும் மேற்பட்ட ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு எளிதில் அணுகக்கூடியதாக செய்யப்பட்டது, இது பௌதிக ஆவணங்களைக் கையாள்வதில் உள்ள சவால்களை நீக்கியது.

**ஆ) வங்கியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல்**

மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்திற்குள் வங்கியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு தொடர்ந்து அதன் தகவல் முறைமைகளின் மீளாற்றலை வலுவூட்டுவதற்காக மற்றும் சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இணையாக பேணும் வகையில் மேம்படுத்தப்பட்டது.

வணிக ரீதியில் முக்கியமான முறைமைகளை அணுகுவதற்காக பங்கேற்பாளர் நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கியின் முதன்மைத் தளம் மற்றும் பேரிடர் மீட்புத் தளத்துடன் தொடர்புபடுத்துகின்ற மெய்நிகர் தனிப்பட்ட வலையமைப்பான சிபிஎஸ்எல் நெட் ஆனது, உயர் கிடைப்பனவு மற்றும் பழுதின் போது மாற்றீடு ஆகியவற்றை நிறுவுவதற்காக இரண்டு தொலைத்தொடர்பூட்டல் பணி வழங்குநர்கள் மூலமாக இரட்டை இணைப்புகளை அமல்படுத்தியதன் மூலம் மேம்படுத்தப்பட்டது. மேலும், வலையமைப்பின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, மெய்நிகர் தனிப்பட்ட வலையமைப்பில் முடிவிலிருந்து முடிவிற்கு மறைகுறியாக்கம் அமல்படுத்தப்பட்டது.

ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தற்போதுள்ள தலைமை அலுவலக தரவு மையத்தை நவீன TIA942 மதிப்பீடு 3 இணக்க நிலைக்கு மாற்றியமைக்கத் தொடங்கியது. கூறப்பட்ட தரநிலைகளின்படி, ஒரு தரவு மையத்தினை தரவு மைய வசதி உள்கட்டமைப்பின் பல்வேறு நிலைகளின் நெகிழ்ச்சியினை சார்ந்து நான்கு வெவ்வேறு மதிப்பீடுகளில் வகைப்படுத்தலாம். இந்த வகைப்பாடு அதன் உள்கட்டமைப்பின் நான்கு பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது, அதாவது தொலைத்தொடர்பு, மின், கட்டடக்கலை மற்றும் இயந்திரவியல். புதிய தரவு மையம் மேலே உள்ள அனைத்து பகுதிகளிலும் 99.982% கிடைப்பனவினை கொண்டிருக்கும். பாதுகாப்பு நிகழ்வு மற்றும் நிகழ்வு மேலாண்மை (SIEM) பகுப்பாய்வியினை செயல்படுத்தவும், பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தை (SOC) நிறுவுவதற்கான கூடுதல் தேவைகளைப் படிக்கவும் மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இ) தேசிய கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்துவதற்கு பங்களித்தல்**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தேசிய நலனுக்கான செயற்றிட்டங்களுக்கு ஒரு ஆலோசகராக தனது சேவைகளை விரிவுபடுத்தியது மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கியது. தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அதிகாரிகள் ஆண்டு காலப்பகுதியில் பல தேசிய செயற்றிட்டங்களுக்கு தங்கள் நிபுணத்துவத்தை வழங்கினர்.

அரசாங்கப் பிணையங்களின் இரண்டாம் நிலை சந்தையை வலுப்படுத்துவதற்காக, மின்னணு வர்த்தக தளம் மற்றும் மத்திய எதிர் தரப்பு (CCP) தீர்வை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. திட்டத்தை செயல்படுத்த பொருத்தமான ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டு செயல்முறைக்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அதிகாரிகள் பங்களித்தனர்.

பொருத்தமான ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அதிகாரிகள் கொள்முதல் குழுக்கள் (PC) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் (TEC) மூலம் தொழில்நுட்ப உதவிகளை வழங்கினர் மற்றும் நாட்டின் நிகழ்நேர மொத்த தீர்ப்பனவு முறையை நவீனமயமாக்க ஆலோசகரின் தேர்வை நிறைவு செய்தனர். மேலும், நிகழ்நேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்பாளராகக் கருதப்படுவதற்கான தொழில்நுட்ப தயார்நிலையை மதிப்பிடுவதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அதிகாரிகளால் தேசிய சேமிப்பு வங்கியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஏற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் நிதி புலனாய்வு பிரிவு (FIU) க்கான goAML முறைமையை வாங்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது, இது பயங்கரவாத நிதியுதவி மற்றும் பண மோசடியைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய முயற்சியாகும்.

இதற்கு மேலதிகமாக, தேசிய கொடுப்பனவுச் சபையினால் நியமிக்கப்பட்ட பின்டெக் அபிவிருத்தி குழு மற்றும் தொடரேடு தொழில்நுட்ப வேலைக்குழு ஆகிய இரு குழுக்களிற்க்கும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கியது.

**ஈ) தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் மீளாற்றல்**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் ஏதேனும் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தலிருந்து வங்கியின் தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்க்கும் பல நடவடிக்கைகளை எடுத்தது. முற்செயற்பாடு அணுகுமுறையொன்றாக பாதிக்கப்படக்கூடிய தன்மையினை இனங் காண்பதற்கு தொழில் வெற்றிக்கான தகவல் தொழில்நுட்ப முறைமையின் மீது பாதிக்கப்படக்கூடிய தன்மை மதிப்பீடுகள் தொடர்ச்சியாகக் கொண்டு நடாத்தப்பட்டதுடன் அவற்றைக் குறைப்பதற்கும் இணையத் தாக்குதல்களின் தோற்றப்பாடுகளைக் குறைப்பதற்கும் அவசியமான இடங்களில் தேவையான பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும், எந்தவொரு உடனடி அச்சுறுத்தல்களிலிருந்தும் வங்கியின் வலையமைப்பை மேலும் பாதுகாக்க புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட வலையமைப்பு பாதுகாப்புசுவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**உ) ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் திறமைகளைமேம்படுத்தல்**

வங்கியிலுள்ள அனைத்து ஊழியர்களினதும் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது விழிப்புணர்வுப் பதாதைகளை உள்ளக வலையமைப்பில் தொடர்ந்து வெளியிட்டதுடன் பாதுகாப்பு ஆலோசனை விழிப்பூட்டல்களை மின்னஞ்சல்களினூடாக அனுப்பியது.

கூடுதலாக, தகவல் தொழில்நுட்பத் திணைக்கள ஊழியர்கள் தொடர்புடைய துறைகளில் அவர்களின் அறிவையும் திறமையையும் உயர்த்துவதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறுகிய கால பயிற்சியில் கலந்து கொண்டனர்.

## 15. உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு 1951ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றது. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் ஊழியர்களின் பணி, வேலையின் செயற்பரப்பு,அதிகாரம், பொறுப்பாண்மை,பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் சுயாதீனம்என்பன நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணக்காய்வினை மேற்கொள்கையில் உலகளாவிய நியமங்கள் பின்பற்றப்படுகின்றன. 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சாராம்சம் கீழே தரப்படுகின்றது.

### 15.1 உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

2020-2022 கணக்காய்வுத் திட்ட தந்திரோபாயம் மற்றும் 2020ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களானது நாணயச் சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அதற்கு நாணயச் சபையின் ஒப்புதலும் பெறப்பட்டது.

### 15.2 கணக்காய்வு பொறுப்புக்களை மேற்கொள்ளுதல்

**அ. செயன்முறை மற்றும் முறைமைக் கணக்காய்வுகள்**

2019இல்,வங்கியில் செயன்முறைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பனவற்றை உள்ளடக்கியவாறு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கணக்காய்வு ஈடுபாடுகளும் திட்டமிடல், செயற்படுத்தல், கணக்காய்வுப் பெறுபேறுகளைத் தொடர்பூட்டல் மற்றும் தீர்மானம் எடுத்தல் நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய நான்கு தொடர்ச்சியான படிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. கணக்காய்வு அவதானிப்புக்களைச் சரிபார்த்துக் கொள்வதற்காக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திணைக்களத்துடன் நெருக்கமான கூட்டங்களை நடாத்துதல், வரைபு கணக்காய்வு அறிக்கையினை வழங்குதல் மற்றும் இறுதி அறிக்கையினை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கிய மூன்று படிமுறைகள் கணக்காய்வுப் பெறுபேறுகளின் தொடர்பூட்டலுக்கு பின்பற்றப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலானது செயன்முறை உரிமையாளர்களால் காலாண்டு அடிப்படையில் பின்பற்றப்பட்டது.

**ஆ. விசேட செயற்றிட்டங்கள்**

ஆண்டு காலப்பகுதியில் ஊழியர் சேம நிதியம், பொதுப்படுகடன், வங்கி மேற்பார்வை மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களங்கள் தொடர்பான கோவைகள் மற்றும் பத்திரங்களை பாதுகாப்பதற்காக நாணயச் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதனை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மேற்கொண்டது.

**இ. கணக்காய்வுகளை மேற்கொள்வதில் அடையப்பட்ட முன்னேற்றங்களை அறிக்கையிடல்**

கணக்காய்வு பொறுப்புக்களை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றமானது மதியுரைக் கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்டது. நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் வழங்கப்பட்ட அறிக்கைகள் பற்றிய செயற்பாட்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 15.3 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஏற்பாடுகள்

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது "உள்ளகக் கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டல்கள்" தொடர்பில் கணக்காய்வு இணைப்பு அலுவலர்களுக்காக காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரையொன்றினைமேற்கொண்டது. மேலும்,மனிதவளத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது ஆண்டு காலப்பகுதியில் பட்டதாரி மாணவர்களுக்கு உள்ளகக் கணக்காய்வு மற்றும் அத்துறைசார்ந்த பயிற்சிகளை தொடர்ந்து வழங்கியது.

### 15.4 நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு வசதியளித்தல்

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது, நாணயச் சபையின் உப குழுவாக காணப்படுவதுடன் இக்குழுவானது நிதியியல் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும், இணங்குவிப்பு, தகவல் தெரியப்படுத்தல்,மோசடி, உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரி கணக்காய்வு மற்றும் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏனைய விடயங்கள் போன்றவை தொடர்பாக நாணயச்சபைக்கு ஆலோசனை வழங்குகின்றது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கும் செயலாளராக இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராக இருப்பார். இதன்படி, ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான பத்து கலந்துரையாடலினை நடாத்துவதற்காக செயலகப் பணி வசதிப்படுத்தல்களையும் வழங்கியது.

## 16. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

நாணய விதிச்சட்டத்தின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளினை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கிறது. வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாட்டினை ஆற்றுகின்ற மற்றும் அதன் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை கண்காணிக்கின்ற பொறுப்புக்கள் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாணய விதிச் சட்டமானது, பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம் மற்றும் உள்ளமைப்பு, ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான நடவடிக்கைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளின் செயற்பரப்பு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பான நாணயச் சபையின் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பினை வழங்குகின்றது. இவ்விடயத்தில் சொத்துவகைகள், இணைத்தரப்பினர்கள், சாதனங்கள் மற்றும் வழங்குநர்கள் என்பன தொடர்பான அளவீடுகளை நாணய விதிச்சட்டத்தின் 67ஆவது பிரிவு கையாள்கிறது. ஒதுக்கு முகாமைத்துவத்தின் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமானக் குறிக்கோள்கள் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக, நடவடிக்கைகளின் நோக்கெல்லையினை மேலும் விரிவுபடுத்துவதற்கு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பில் நாணயச் சபை பணிப்புரைகளை விடுக்க முடியும்.

### 16.1 பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமான குறிக்கோள்களின் பெறுபேறு என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையினால் திருத்தப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கு இணங்க பன்னாட்டு ஒதுக்குகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பன்னாட்டு ஒதுக்குகள் பல முக்கிய நாணயங்களில் குறித்துரைக்கப்படுவதுடன் அவை முக்கியமாக நிலையான வருமானப் பிணையங்கள், பணச்சந்தை முதலீடுகள் மற்றும் தங்கம் என்பனவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. நிலையான வருமான பிணையங்களின் சொத்துப்பட்டியல், உயர்ந்த வீதங்களைக் கொண்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப் பிணையங்கள், அரச முகவர்கள் மற்றும் உயர் தேசிய நிறுவனங்களின் பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. ஒதுக்கு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், மத்திய வங்கிகள், உயர் வீதத்தினைக் கொண்ட வர்த்தக வங்கிகள் மற்றும் முதலீட்டு இல்லங்கள் என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், இவற்றின் வலுவான தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மூலமான அவசியமான வரையறை ஒதுக்கீடுகளுக்குட்பட்டு இணைத்தரப்பு கடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையில் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களுக்கமைவாக வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களாகக் காணப்பட்டனர்.

#### (அ) அமைப்பியல் ஒதுக்கு முகாமைத்துவம்

2016 இலிருந்து இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் மற்றும் ஏனைய முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தினை இயலுமைப்படுத்துவதற்காக அலுவல்சார் துறை முதலீட்டு முகாமையாளர்களுக்கு ஆலோசனைப் பணிகளையும் பயிற்சியையும் வழங்கும் உலக வங்கியின் ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்டிருந்தது. இதன்படி, மூலதனப் பாதுகாப்பு திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், வருமான உருவாக்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வினைத் தாங்கிக் கொள்ளும் தன்மை ஆகிய குறிக்கோள்களை முக்கிய பரிசீலனையில் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பு அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு புதிய மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட உபாயச் சொத்து ஒதுக்கீடொன்று உருவாக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் குறிக்கோள் அடிப்படையில் மூன்று முக்கிய தொகுதிகளாக பிரிக்கப்பட்டு இவை வேறுபட்ட சொத்துப்பட்டியல்களை உள்ளடக்கியிருந்ததுடன் முதலீட்டுக் காலம், நாணய உள்ளமைப்பு மற்றும் சொத்து உள்ளமைப்பு என்பனவும் வழங்கப்பட்டிருந்தன. இத்தொகுதிகளின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஒவ்வொரு சொத்துப்பட்டியலுக்கும் தொடர்பான அடிப்படை அளவுக்குறியீடொன்று வழங்கப்பட்டது. இதன்படி, செயலாற்ற மீளாய்வில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் சொத்துப்பட்டியலின் செயலாற்றம் தொடர்பான அடிப்படை அளவுக்குறியீட்டிற்கெதிராக மீளாய்வு செய்யப்படுகின்றது.

#### (ஆ) இலங்கை மத்திய வங்கி ஒதுக்குகளுக்கான வெளிவாரி முகாமையாளர்

2016 இலிருந்து ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உயர்தர அரசாங்க, அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் உயர் தேசியப் பிணையங்களில் மூன்று வருட காலமொன்றுக்கு முதலிடுவதற்கு வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்து ஐ.அ.டொலர் 200 மில்லியனை ஒதுக்கீடு செய்ததன் மூலம், உலக வங்கித் திறைசேரியானது இலங்கை மத்திய வங்கிக்கான ஒதுக்கு முகாமைத்துவத்திற்கான வெளிவாரி முகாமையாளரொருவராக நியமிக்கப்பட்டது.

#### (இ) உலக வங்கியிலிருந்தான தொழில்நுட்ப உதவி

2019 காலப்பகுதியில் உலக வங்கியின் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியில் உள்ளகப்பயிற்சியாக, வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம் தொடர்பில் தொழில்நுட்ப உதவிக்கான இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. உலகின் தற்போதைய அதிநவீனத்துவம் வாய்ந்த ஒதுக்கு முகாமைத்துவ முறைமைகள் பற்றிய விழிப்புணர்வினை வழங்குவதன் மூலம் ஒதுக்கு முகாமைத்துவ முறைமையொன்றுக்கான கொள்வனவு செயற்பாட்டிலும் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கான பணிகளை வழங்குவதற்காக பொருத்தமான பணிவழங்குநரைத் தெரிவுசெய்வதற்கான வழிகாட்டலை வழங்குவதன் மீதும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

### 16.2 செயலாற்றப் பகுப்பாய்வு மற்றும் வசதிப்படுத்தல் நடவடிக்கைகள்

செயலாற்றப் பகுப்பாய்வு மற்றும் நடவடிக்கைகளை வசதிப்படுத்தலின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத்துடன் தொடர்பான பின்வரும் முக்கிய தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) ஒதுக்கு முகாமைத்துவத்தின் செயலாற்ற அளவுமுறை

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது, மொத்த வருமான அணுகுமுறை மீது அதன் ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கையின் செயலாற்றத்தினை நாளாந்தம் மதிப்பிடுவதுடன் மாதாந்த, அடிப்படையில் அதனை வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவிற்கும் காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கும் ஒதுக்கு நிலைமை மற்றும் அதன் போக்கு என்பனவற்றின் பகுப்பாய்வுடன் சேர்த்து சமர்ப்பிக்கின்றது. நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உபாய சொத்து ஒதுக்கீட்டின்படி, நிலையான வருமான பிணைகளின் முதலீடுகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமானம் தெரிவுசெய்யப்பட்ட அடித்தள அளவீட்டு குறியீடுகளுக்கு எதிராக அளவிடப்படுகின்றன. வணிகர்களினால் எடுகோள் கொள்ளப்படுகின்ற மேலதிக இடர்நேர்வு மேலதிக வருமானத்தினை போதுமானளவிற்கு எதிரீடு செய்கின்றதா என்பதனைக் காட்டுவதன் மூலம் அடிப்படை அளவுக்குறியீடுகளுக்கு எதிரான ஒப்பீட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ உபாயத்தின் காத்திரமான தன்மையினை நிர்ணயிக்க உதவுகிறது. இவ்வணுகுமுறையானது, ஒப்புதலளிக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக முதலீட்டின் மூலம் நியாயமான அளவொன்றில் எய்தப்பட்ட முகாமைத்துவ ஒதுக்குகளின் வருமானக் குறிக்கோள் என்பதனை அடையாளம் காண்பதற்கு பயன்மிக்கதாக இருக்கும். தகவல் விகிதம் மற்றும் தவறுகளைக் கண்டறிதல் போன்ற இடர்நேர்வு சீராக்கப்பட்ட சொத்துப்பட்டியல் செயலாற்ற வழிமுறைகள் சொத்துப்பட்டியலின் பன்முகப்படுத்தலின் காத்திரமானதன்மையினை அளவிடப் பயன்படுகிறது. இச்செயன்முறையானது இடர்நேர்வுக் காரணிகளின் பல்வேறு மூலங்களினால் உருவாக்கப்பட்ட அளவீட்டுக் கூற்றுக்களினால் சொத்துப்பட்டியலின் செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்கு உதவும் என்பதுடன், செயலாற்ற பண்பு மதிப்பீட்டினை பயன்படுத்தி வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தினூடாக ஈட்டப்பட்ட மொத்த வருவாய்களை மேலும் விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் 2019இலும் தொடர்ந்தது. கண்டறியப்பட்ட பெறுபேறுகளை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ உபாயத்தின் பெறுமதிகூட்டப்பட்ட உள்ளீடுகளாகப் பயன்படுத்த முடியும்.

**(ஆ) பன்னாட்டு ஒதுக்குகளைக் கணித்தல் மற்றும் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளின் மீதான தரவுத்தளத்தினைப் பேணுதல்**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்குகளையும் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்கு எண்தொகைகளையும் நாளாந்தம் கணிப்பதற்கு பொறுப்புடையதாக இருப்பதுடன் ஒதுக்கு எண்தொகை மீதான தொடர்பான தகவல்களையும் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு வழங்கியது. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் நிதித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மாத இறுதியிலுள்ள ஒதுக்கு நிலைமையினை மத்திய வங்கியின் ஐந்தொகையிலுள்ள ஒதுக்குப் பெறுமதியுடன் மீளிணக்கப்படுத்தியது.

**(இ) திறைசேரி முகாமைத்துவ முறைமையின் நிருவாகம்**

திறைசேரி முகாமைத்துவ முறைமையின் பிரதான பயன்படுத்துநரான பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் முறைமையின் பொது நிருவாகத் தொழிற்பாட்டிற்கு பொறுப்பாகவிருப்பதுடன் ஏனைய பயன்பாட்டாளர் திணைக்களங்கள், மென்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் உள்ளூர் பங்காளர் என்போரிடையே பொருத்தமான ஒருங்கிணைப்பினையும் உறுதி செய்கின்றது. அதற்கிணங்க, திறைசேரி முகாமைத்துவ முறைமையானது தொடர்புடைய திருத்தங்கள்/ இணைப்புகளுடன் இற்றைப்படுத்தப்படுகின்றமையினையும் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக சுவிப்ற், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பொதுப்பேரேடு போன்ற உள்ளக முறைமைகளுடனும் புளும்பேர்க் மற்றும் றொயிட்டர் போன்ற வெளிவாரி இடைமுகங்களுடனும் முழுமையாக இணைக்கப்பட்டிருப்பதனையும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உறுதிப்படுத்துகிறது. 2019இல் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தற்போதுள்ள திறைசேரி முகாமைத்துவ முறைமைகளின் உரிமம் 2021இன் பிற்பகுதியில் காலாவதியாக இருப்பதனால் புதிய ஒதுக்கு முகாமைத்துவ முறைமையினை கையேற்பதற்கான கொள்வனவு செயன்முறையினை ஆரம்பித்துள்ளது.

**(ஈ) பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் என்பன தொடர்பில் தற்போதைய இணைத்தரப்பினர்கள் அதனைப் பின்பற்றியமை/ இணங்கிக் கொண்டமை பற்றிய வருடாந்த மீளாய்வுகள்**

இலங்கை மத்திய வங்கியின் அனைத்து இணைத்தரப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் தொடர்பில் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், பன்னாட்டு சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, 2019இல் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் "இலங்கை மத்திய வங்கி மற்றும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுக்காக உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் விதிகள்" இனை மேற்கொண்டது. உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் மீளாய்வு தொடர்பில் பன்னாட்டு நியமங்களைப் பின்பற்றுமொரு வழிமுறையாக, இலங்கை மத்திய வங்கி, பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் தரவு பதிவகமாக விளங்கி "சுவிப்ற்" உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்களுடன் பதிவுசெய்யும் செயன்முறையில் ஈடுபட்டிருக்கிறது.

## 16.3 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

இவ்வாண்டில், கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதிக்கின்ற அதேவேளையில் செலாவணி வீதத்தில் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டது.

**(அ) உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான தலையீடுகள்**

செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 2019 காலப்பகுதியில் ஒழுங்கற்ற சந்தை நிலைமைகளின் போது மத்திய வங்கி தேவையான வேளைகளில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டது. 2018இல் அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பீடு செய்வதற்கான கோரிக்கை என அழைக்கப்படும் பொறிமுறையினூடாக தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது, சந்தை வெளிப்படைத் தன்மையினையும் அதேபோன்று வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கின் கடன்படாத பங்கினையும் மேம்படுத்த உதவும்.

**(ஆ) தகவல்களைப் பரப்புதல்**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாவின் குறியீட்டுச் செலாவணி வீதத்தினை ஐம்பத்தாறு உலக நாணயக்களுக்கான குறியீட்டுச் செலாவணி வீதங்களுடனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் தந்தி மாற்றலுக்காக வழங்கப்படும் ஒன்பது முக்கிய நாணயங்களுக்கெதிரான இலங்கை ரூபாவின் வாங்கல் மற்றும் விற்றல் வீதத்தின் சராசரியினையும் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் நாளாந்த அடிப்படையில் வெளியிட்டது. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரச நிறுவனங்களுக்கும் பொதுமக்கள் உட்பட பல்வேறுபட்ட மற்றைய தரப்பினருக்கும் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் செலாவணி வீத தரவுகளை வழங்குவதன் மூலம் தகவல்களை பரப்பும் அதன் கடமைகளை மேற்கொண்டது.

**(இ) தேறிய ஆரம்ப நிலைமைக்கான திருத்தம்**

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான எதிர்பார்க்கப்படாத கணிசமான பாய்ச்சல்கள் செலாவணிச் சந்தையில் நியாயமற்ற அழுத்தங்களைத் தோற்றுவித்து மிகையான தளம்பல்களுக்கு வழிவகுக்கும். சில உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணித் தெழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான தேறிய ஆரம்ப நிலைமை வரையறைகள் 2019 காலப்பகுதியில் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையிலும் திருத்தப்பட்டன.

**(ஈ) சந்தைப் பங்கேற்பாளர்களுடனான இணைப்பு**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தை அபிவிருத்திகள் தொடர்பான அவர்களின் கரிசனைகளைக் கலந்துரையாடுவதற்காக அரையாண்டு அடிப்படையில் திறைசேரி கூட்டங்களை அவர்களுடன் நடத்தியதுடன், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடன் அத்தகைய பிரச்சனைகளை வெற்றி கொள்வதற்கு பல வழிமுறைகளையும் முன்னெடுத்தது. இது தொடர்பில் நாளாந்த அடிப்படையில் பெறப்பட்டு வெளியிடப்படுகின்ற தந்தி மாற்றல் வீதங்கள் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு முறைமை மற்றும் பன்னாட்டு தொழிற்பாடுகள் முகாமைத்துவ முறைமை என்பனவற்றுடனான இணைப்பின் மூலம் தன்னியக்கப்பட்டுத்தப்பட்டது.

(உ) சந்தை மனோபாவங்கள் மீதான அவதானிப்பு

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளின் கண்காணிப்பிற்குப் பொறுப்பான முக்கிய திணைக்களம் என்ற ரீதியில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2019ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களினாலும் வெளிவாரி நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு முன்மொழிவுகள், ஒழுங்குவிதிகள், திருத்தங்கள் மற்றும் கொள்கை விடயங்கள் தொடர்பில் செலாவணி வீத அசைவுகள் மீதான அத்தகைய முன்மொழிவுகளின் சாத்தியமான தாக்கங்கள் பற்றி அதன் கருத்து, அவதானிப்பு மற்றும் விதந்துரைப்புக்களை வழங்கியது.

## 17. சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம்

சட்டம் மற்றும் நடைமுறை அம்சங்களில் மத்திய வங்கியின் ஆளுகை தரங்களை அதிகரிப்பதனை வசதிப்படுத்தும் கடமை சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் மைய நியதிச்சட்ட குறிக்கோள்களை அடையும் நோக்கில் புதிய சட்டங்களை உருவாக்குதல், மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் ஏலவே நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வருதல் மற்றும் அதன் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்கான பொறுப்பு சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது 2019ஆம் ஆண்டில் சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் இணக்கத்தன்மை சர்வதேச தரங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் உடன்படுவதை உறுதிசெய்து பரந்தளவிலான செயற்பாடுகளை நிறைவேற்றியது.சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரதான செயற்பாடுகள் கீழ்வருமாறு:

2018ஆம் ஆண்டிலிருந்து சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது புதிய இலங்கை மத்திய வங்கி சட்டத்தை, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தினை இரத்துச் செய்து, அறிமுகம் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டது. நிதியமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் போன்ற அத்தகைய பல்வேறு பங்குதாரர்களின் உதவியுடன், சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது மேலதிக ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை அதிகாரங்கள் மற்றும் அதிகரிக்கப்பட்ட ஆளுகை தரங்களுடன் கூடிய இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பான வர்த்தமானியின் பிரசுரம் வரையிலான நடைமுறையை வழிநடாத்தியது.

மத்திய வங்கியின் சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பினை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன், வங்கித்துறைக்கு உறுதியான சட்ட அடித்தளத்தை வழங்கக்கூடிய கருத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய வங்கிச் சட்டமானது உருவாக்கத்திலுள்ளது.வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான மத்திய வங்கியின் மேற்பார்வை அதிகாரங்களை விரிவாக்கம் செய்யும் நோக்குடன், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்திற்கு தேவையான திருத்தங்களை அறிமுகம் செய்வதில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. மேலும், நிதியியல் சந்தை உட்கட்டமைப்பினை விருத்தி செய்வதற்காக 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் ஆகியவற்றுக்கான திருத்தங்களை சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் முன்மொழிந்துள்ளது.

மத்திய வங்கியின் இணங்குவிப்பு செயற்பாடாக, மத்திய வங்கியின் ஆளுகைத் தரங்களை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகித்ததுடன் வெளிநாட்டு எதிர்தரப்பினர் வங்கியுடன் வெளிநாட்டு செலாவணி செயற்பாடுகளில் ஈடுபட்டபோது காணப்பட்ட இணங்குவிப்பு தேவைப்பாடுகளில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் பாரியளவில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. மேலும், 2019ஆம் ஆண்டிலிருந்து, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் மத்திய வங்கியின் தகவல் அலுவலரினால் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் தகவல் கோரிக்கைகளை அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்கிணங்க கையாண்டு வருவதோடு, அத்தகைய தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகளைத் தொடர்ந்து மூன்றாம் தரப்பினரால் ஆரம்பிக்கப்படும் விசாரணைகள்/ வழக்கு நடவடிக்கைகளில் மத்திய வங்கியினைப் பாதுகாத்து வருகிறது. மேலும், கணக்காய்வு ஆணைக்குழு மற்றும் சபை இடர்நேர்வு கண்காணிப்பு குழு ஆகியவற்றில் செயலூக்கத்துடன் ஈடுபட்ட அதேவேளை தகவல் தெரியப்படுத்தும் கொள்கை, நாணயச்சபை மற்றும் மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான நடத்தைக் கோவை போன்ற ஆளுகையுடன் தொடர்புடைய கொள்கைகளுக்கு திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகளை சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது நாணயச்சபை, மத்திய வங்கி அல்லது அதன் ஊழியர்களின் நலவுரித்துகளை பாதுகாத்து மத்திய வங்கியால் அல்லது மத்திய வங்கிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை வெற்றிகரமாக கையாண்டது. மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படும் தவறிழைத்துள்ள குறித்த சில நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் இயக்குநர்களுக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளை சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச்சட்டம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய சட்ட அமுலாக்க முகவர்களின் உதவியுடன் அதிகாரமளிக்கப்படாத நிதி நிறுவனங்கள், தடுக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நிதித்துறையில் காணப்படும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகளை அத்தகைய கம்பனிகளின் வைப்பாளர்கள் மற்றும் கடன்கொடுநர்களின் நலவுரித்துகளைப் பாதுகாக்கும் நோக்குடன தொடர்ந்து நடாத்தி வந்தது.

மத்திய வங்கியின், தற்போது நடைமுறையிலுள்ள ஒழுங்குபடுத்தல் அதிகாரங்களை அதிகரிக்கும் நோக்குடன் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது வங்கியின் தொடர்புடைய திணைக்களங்களுடன் அவற்றின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், வழிகாட்டல்கள், செயற்பாட்டு அறிவுறுத்தல்கள், உடன்படிக்கைகள், சுற்றறிக்கைகள் போன்றவற்றை உருவாக்குவதற்கும் திருத்தம் செய்வதற்கும் ஒத்துழைத்து செயற்பட்டது. வெளியகத் தரப்பினரால் வரையப்பட்ட சர்வதேச நிதியியல் மைய மசோதா, தரவுக் காப்பு மசோதா, இணையப் பாதுகாப்பு மசோதா போன்ற பல புதிய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு தனது அவதானிப்புக்களை சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் வழங்கியதுடன் அத்தகைய கருவிகள் சட்டத்தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை நிச்சயப்படுத்திக்கொள்வதற்காக் உடன்படிக்கைகளை ஆய்வு செய்தல், மத்திய வங்கியினால் பல்வேறு சட்டங்களின் கீழ் வெளியிடப்பட்ட துணைச்சட்டங்களை சரிபார்த்து திருத்தியமைத்தல் போன்ற செயற்பாடுகளில ஈடுபட்டது.

மேலே கூறப்பட்டதற்கமைவாக, முக்கிய உத்தரவாதமுடைய செயற்பாடுகளில் ஒன்றாக சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் செயலாக்கமானது, 2019ஆம் ஆண்டின்போது மத்திய வங்கியின் மைய குறிக்கோள்களையும் மூலோபாய முன்னுரிமைகளையும் அடைவதற்கும் மற்றும் சட்டம், செயற்பாடுகள் மற்றும் இணங்குவிப்பு இடர்நேர்பாடுகளை வெற்றிகரமான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கும் வழிசமைத்தது.

## 18. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

மத்திய வங்கியின் இரண்டு அடிப்படைக் குறிக்கோள்களில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுதல் என்பதும் ஒன்றாகும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக மத்திய வங்கியானது நுண்பாக முன்மதியுடைய மேற்பார்வையையும் பேரண்ட முன்மதியுடை கண்காணிப்பையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நாட்டின் நிதியியல் முறைமையில் உருவாகின்ற முறைமைசார் இடர்நேர்வை அளவிடுவதற்காக பரந்தளவிலான பகுப்பாய்வுகளை மேற்கொள்கிறது. இப்பகுப்பாய்வுகளில் சில நுண்பாக முன்மதியுடை மேற்பார்வைக்கும் உதவுகின்றது. மேலும் உள்நாட்டு நிதியியல் முறைமையிலும் அதன் உறுதிப்பாட்டிலும் பேரண்ட பொருளாதார அபிவிருத்திகள் செலுத்தும் தாக்கத்தை அடையாளம் காண்பதற்காக பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பேரண்ட நிதியியல் தொடர்புகளை மதிப்பிடுகின்றது. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பானது ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களால் அறிக்கையிடப்பட்ட தரவுகள் மற்றும் பிற மூலங்களிலிருந்து திணைக்களத்தால் திரட்டப்பட்ட தரவுகள் ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. மத்திய வங்கியின் கொள்கை உருவாக்கச் செயற்பாட்டிற்கு இவ்வாறான மதிப்பீட்டு வெளிப்பாடுகள் வழியமைப்பதோடு முறைசார் இடர்நேர்வைத் தவிர்ப்பதற்கான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதிலும் துணைநிற்கிறது. 2019 ஆண்டு காலப்பகுதியில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் கீழே வழங்கப்படுகிறது.

### அ. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

நிதித் துறையில் ஏற்படுகின்ற முறைசார் இடர்நேர்வை அடையாளம் காண்பதற்கும் அவ்வாறான அபாயங்களிற்கெதிராக நிதியியல் முறைமையின் விரிதிறனை மதிப்பிடுவதற்குமே பேரண்டப் பொருளாதாரக் கண்காணிப்பானது மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கண்காணிப்புக் கட்டமைப்பானது உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், நிதியியல் சந்தைச் செயற்பாடுகள் மற்றும் நிதி நிறுவனங்கள் துறை ஆகியவற்றின் மூலம் தோன்றுகின்ற அபாயங்களை உள்ளடக்கியது. மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற நிதி நிறுவனங்கள் மற்றும் வெளியக மூலங்களினூடாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் முறைமைசார் இடர்நேர்வு வெளிப்படையானது ஆய்வு செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டாண்மை மற்றும் வீட்டுப்பணித் துறை ஆகிய இரண்டின் அபிவிருத்தியால் நிதியியல் முறைமை மீது ஏற்படுத்தப்பட்ட அபாயங்களை அளவிடுவதற்கு பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பேரண்ட முன்மதியுடை கண்காணிப்புக் கட்டமைப்பை விரிவுபடுத்தியது. வீட்டுப் பணித்துறை மற்றும் வீட்டுப்பணித் துறையல்லா துறைகளிற்கு முறைசார் நிதியியல் துறையின் வெளிப்படுத்தலை அளவிடுவதற்கு வெளியக மூலங்களிலிருந்தான தரவுகள் வழிகோலியது. குறித்த மதிப்பீடுகளானது வீட்டுப்பணித்துறை மற்றும் வீட்டுப்பணித்துறையல்லாத துறைகளின் கடன் நிலை தொடர்பாக முன்னணி குறிகாட்டிகளை வழங்கியது. கூட்டாண்மைத் துறை மூலம் நிதியியல் முறைமை உறுதித்தன்மைக்கு ஏற்படும் இடர்நேர்வு தொடர்பாக ஒரு முழுமையான மதிப்பீட்டை விபரிக்கும் நோக்கில் கூட்டாண்மைத் துறையின் அபாய அலகுகளை மதிப்பிடுவதற்கு பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் அபிவிருத்தி ஆகியன கூட்டாண்மைத் துறையின் செயற்பாடு மற்றும் அதன் ஐந்தொகைகளைப் பாதிக்கின்ற அதேவேளை, கூட்டாண்மைத் துறையின் ஒத்திசைவான அணுகுமுறை அல்லது முறைமையாக முக்கியப்படுத்தப்பட்ட கூட்டாண்மைத் துறையின் அணுகுமுறைகள் ஆகியவற்றால் பேரண்டப் பொருளாதாரத்தையும் நிதியியல் முறைமையையும் செல்வாக்குச் செலுத்த முடியுமாக இருந்தது. மேலும், வங்கித்தொழில் துறையின் பரந்து விரியும் இடர்நேர்வுகளை அடையாளப்படுத்துகின்ற இணைப்புத்தன்மை பகுப்பாய்வுகளிலும் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஈடுபட்டது. நிதியியல் முறைமையின் கடன்வழங்கும் தரத்தையும் அதன் வளர்ச்சியையும் கண்காணிக்க வேண்டிய தேவையிருப்பதால், நிதியியல் முறைமையின் சொத்துத் தரத்தைச் சீரழிக்கின்ற எச்ச இடர்நேர்வு அதிகரிப்பிற்கான சாத்தியப்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்ற நிகழ்தகவு அடர்த்தி சூத்திரங்களை பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் செயற்படாக் கடன்கள் மீது பிரயோகித்தது. ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் முறைமையின் மீதான விகாரத்தினால் அதன் இடைநிலைப் பணிகளை முடக்குகின்ற காலங்களை அறிவதற்காக பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நிதியியல் அழுத்தச் சுட்டெண்ணைக் கட்டமைத்தது. இச்சுட்டெண்ணானது வங்கித்தொழில், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை, முறிகள் சந்தை மற்றும் பங்குச் சந்தை போன்றவற்றின் குறிகாட்டிகள் இணைந்த கலப்புச் சுட்டெண்ணாக அமைந்து நிதியியல் முறைமையின் அழுத்தத்தன்மையை அளவிடுகிறது. மேலும், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பல எண்ணிக்கையான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு குறிகாட்டிகளை உள்நாட்டு நிதியியல் துறையின் வேறுபட்ட துணைத் துறைகளின் அடிப்படையில் தொடர்ந்தும் கணித்துவரும் அதேவேளையில் இக்குறிகாட்டிகளின் நம்பகத்தன்மையை மெருகூட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. தனித்தனி வங்கிகளினதும் வங்கித்தொழில் துறையினதும் கொடுகடன் இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு என்பவற்றின் தாக்கத்தை மூலதனத்தின் மட்டத்தின் அடிப்படையில் அளவிடுவதற்கு கீழான அழுத்தப் பரிசோதனையை தொடருவதற்கு மேலதிகமாக பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் அழுத்தப் பரிசோதனையினை கடன் இடர்நேர்வு மற்றும் வட்டிவீத இடர்நேர்வை உள்ளடக்கியதாக விரிவாக்கியுள்ளது. 2019 ஆண்டு காலப்பகுதியில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய சாத்தியமான அச்சுறுத்தல்களை இனங்காண்பதை அனுமதிக்கக்கூடிய வகையில் இடர்நேர்வு அளவீடுகளை உள்ளடக்கியதும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான ஏனைய சமகால கரிசனைகளைக் கொண்டதுமான பல எண்ணிக்கையான பத்திரங்கள் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### ஆ. கணக்கெடுப்பு மற்றும் தகவல் சேகரிப்பு

முறைசார் இடர்நேர்வுக் கணக்கெடுப்பு: பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் 2017ஆம் ஆண்டில் ஆரம்பித்த முறைசார் இடர்நேர்வுக் கணக்கெடுப்பை ஆண்டிற்கு இருமுறை மேற்கொண்டு வருகிறது. முறைசார் இடர்நேர்வுக் கணக்கெடுப்பு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்குள்ள காத்திரமான இடர்நேர்வு மீதான சந்தைப் பங்கேற்பாளர்களின் கருத்தை அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்விடர்நேர்வுகள் நிகழ்ந்தால் ஒழுங்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிதியியல் நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் கொடுப்பனவு முறைமை அடங்கலாக நிதியியல் இடைநிலைப் பொறிமுறை பாதிக்கப்படும் அதேவேளையில் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான பொதுமக்களின் நம்பகத்தன்மையும் பாதிக்கப்படும். இக்கணக்கெடுப்பின் முடிவுகள் நிதியியல் முறைமைக்கான முன்னறிந்திருக்காத முறைசார் இடர்நேர்வுகளிற்கான ஆரம்ப எச்சரிக்கை சமிக்ஞைகளை வழங்குதல், வளர்ந்துவரும் இடர்நேர்வுகளை மட்டுப்படுத்துவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தலை வசதிப்படுத்தல் மற்றும் பொருத்தமான கொள்கை நடவடிக்கைகளை உருவாக்குதல் என்பவற்றிற்குப் பயன்படுகிறது.

வீட்டலகுத் துறை கொடுகடன் நம்பகத்தன்மைக் கணக்கெடுப்பு: வீட்டலகுத் துறை கொடுகடன் நம்பகத்தன்மை கணக்கெடுப்பானது வீட்டலகுத் துறையின் கண்காணிப்பை அதிகரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வீட்டலகுத் துறை கடன் நம்பகத்தன்மை கணக்கெடுப்பின் உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்கும் வீட்டலகுத் துறையிலிருந்து தோன்றும் இடர்நேர்வுகள் மற்றும் பாதிப்புக்களை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான அதன் தாக்கத்தையும் இனங்காண்பதற்காக இலங்கை முழுமைக்குமான கணக்கெடுப்பின் தரவுச்சேகரிப்பை மூன்றாந்தரப்பிற்கு வழங்குவதற்கு ஒப்பந்த நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. 2020இல் கணக்கெடுப்பு முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தரவு சேகரித்தல்: பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வெளிப்புற நிறுவனங்களிடமிருந்து கீழ்மட்ட விரிவான தரவுகளைத் தொடர்ந்தும் சேகரித்து தனது தரவுத் தளத்தை வளப்படுத்தியுள்ளது. திணைக்களம் தொடர்ந்தும் கிரமமாக வெளிப்புற நிறுவனங்களான கொழும்புப் பங்குச் சந்தை, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், தொழிற் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, சனச கூட்டமைப்பு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக்குழு, கொடுகடன் தகவல் பணியகம், இலங்கைச் சுங்கம் மற்றும் இலங்கை கூறுநம்பிக்கை சங்கம் ஆகியவற்றிலிருந்து தரவுகளைச் சேகரித்து வருகிறது.

### இ. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வினை வெளியிடல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நியதி அறிக்கைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளுக்குமான பங்களிப்பு

2019இன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு: 2019 திசெம்பரில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வானது இலங்கை நிதியியல் துறையினால் முகங்கொடுக்கப்பட்ட இடர்நேர்வு மற்றும் பாதிப்புக்களின் சுயாதீனமான மதிப்பீடு மற்றும் இடர்நேர்வை மட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தெரியப்படுத்தும் அளவீடுகளை நோக்காகக் கொண்டு வெளியிடப்பட்டது. 2019இன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு ஐந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. அவையாவன, பேரண்ட நிதியியல் நிலைமைகள்; நிதியியல் சந்தைகள்; நிதியியல் நிறுவனங்கள்; வீட்டலகுத் துறையும் கூட்டாண்மைத் துறையும் மற்றும் நிதியியல் முறைமை உட்கட்டமைப்பு. அத்துடன், 2019இல் நிதியியல் துறைக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் முக்கிய கொள்கை மாற்றங்கள் உள்ளடக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் என்பவற்றுடன் இரண்டு சிறப்புத் தகவல் குறிப்புக்களான 2019இன் முறைசார் இடர்நேர்வு கணக்கெடுப்பு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கம் என்பவற்றை இவ்வறிக்கை உள்ளடக்கியுள்ளது.

ஏனைய வெளியீடுகள்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2018இன் நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதிப்பாடு எனும் அத்தியாயம் மற்றும் அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் 2019 ஆகியவற்றை பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஒருங்கிணைத்து தொகுத்தது. மேலும், திணைக்களம் நிதி அமைச்சருக்கு அனுப்பப்பட்ட செத்தெம்பர் 15 அறிக்கையின் நிதியியல் துறை அபிவிருத்திகள் எனும் அத்தியாயத்திற்கும் பங்களிப்புச் செய்துள்ளது. இந்த அறிக்கைகள் நாட்டின் நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் சந்தைகள் மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு தொடர்பான செயலாற்றம், இடர்நேர்வு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம், மூலவள கிடைப்பனவு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் மீதான குறிப்பிட்ட வலியுறுத்துகைகள் ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்பானவை விரிவாக ஆய்வுசெய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. மேலும், திணைக்களம் மத்திய வங்கியின் ஏனைய வெளியீடுகளிற்கு நிதியியல் துறை தரவு தொகுத்தல் மற்றும் நிதியியல் முறைமையின் உபதுறைகளின் மீதான ஆய்வை வழங்கியும் பங்களிப்புச் செய்துள்ளது.

### ஈ. நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பான குழுக்களின் ஒருங்கிணைப்பு

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு: பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்குச் செயலகமாகப் பணியாற்றியது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவானது உள்ளக திணைக்களங்களிற்கிடையேயான பேரவையாக அமைவதுடன் நிதியியல் துறையைப் பாதிக்கும் இடர்நேர்வை அடையாளம் காணுவதற்காகவும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான அளவீடுகளைக் கலந்துரையாடுவதற்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியாகவும் இருக்கின்றது. 2019 காலப்பகுதியில் ஐந்து கூட்டத் தொடர்கள் நடைபெற்றிருக்கின்றன. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தனது இடர்நேர்வு ஆய்வு அறிக்கைகளை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்கு பங்கேற்பாளர்களின் அபிப்பிராயத்தை நாணயச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்குமுன் பெறுவதற்காக வழங்கியுள்ளது.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு: நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு மத்திய வங்கிக்கு நிதியியல் துறை பிரச்சனைகள் தொடர்பாக அறிவுரை மற்றும் நோக்கினை வழங்குகிறது. இது இலங்கையின் நிதியியல் துறையின் பிரதானமான நிறுவனங்களிலிருந்து முக்கியமான அலுவலர்களைக் கொண்டுள்ளது. இக்குழுவிற்கான உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவதுடன் தற்போதைய குழு பதினேழு அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. ஆண்டு காலப்பகுதியில் ஐந்து கூட்டத் தொடர்கள் இடம்பெற்றுள்ளன. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்கு செயலக பணியை வழங்குகின்றது.

### உ. பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்தான தொழில்நுட்ப உதவியின் மூலமான திறன் அபிவிருத்தி

நிதியியல் துறை உறுதிப்பாட்டு நிதியத்தால் நிதியிடப்படட தொழில்நுட்ப உதவிச் செயற்றிட்டம்: இச்செயற்றிட்டம் மத்திய வங்கிக்கு அதனது நிதியியல் இடர்நேர்வு மற்றும் அதிர்ச்சிகளிற்கான நிதியியல் நிறுவனங்களின் விரி திறனை முட்டுக்கொடுக்கும் திறனை வலுவூட்டுவதற்கு ஆதரவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2019இல் இறுதியாக்கப்பட்ட தொழில்நுட்ப உதவிக்கான பணித் திட்டத்தில் கீழ்வரும் நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளன, அவையாவன, பேரண்ட முன்மதியுடைய கட்டமைப்பை விரிவுபடுத்தல், அழுத்தப் பரிசோதனைச் செயற்பாடுகளின் திறன் அபிவிருத்தி வலுப்படுத்தல் மற்றும் நிதியியல் சந்தை உட்கட்டமைப்பு தொடர்பான ஆய்வுகளை முன்னேற்றல் என்பனவாகும். 2020 காலப்பகுதியில் தொழில்நுட்ப உதவிச் செயற்பாடு ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் முக்கிய தொடர்பு அலுவலகமாக இருப்பதுடன் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களை ஒருங்கிணைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றது.

## 19 கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது நிதியங்களின் மாற்றல்களுக்கான முறைமைகளை நிறுவுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறைமை விதிகளை வழங்குவதற்குமாக மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்குகின்ற நாணய விதிச்சட்டத்தின் 62அ பிரிவின் கீழ் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக நிறுவப்பட்டது. மேலும், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யும் சட்ட ரீதியான பொறுப்பாணை இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு, வினைத்திறன், போட்டித்தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றினை உறுதிப்படுத்தும் நோக்குடன் தேசிய கொடுப்பனவு முறைமைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடு, நிதியியல் கொடுக்கல்வாங்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்குதல், சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் கொடுப்பனவு உட்கட்டமைப்பின் அபிவிருத்திகளுக்கும் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வைகளுக்கும் வசதியளித்தல் என்பன காணப்படுகின்றன. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ஆற்றப்பட்ட தொழிற்பாடுகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### 19.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள்

(அ) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களமானது தொடர்ந்து அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினைத் தொழிற்படுத்தியது. இது பங்கேற்பாளர்களிடையேயான நேர முக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதிகளைக் கொண்ட கொடுப்பனவுகளையும் அதேபோன்று அதேநேர மொத்த அடிப்படையில் வாடிக்கையாளர் கொடுப்பனவுகளையும் தீர்ப்பனவு செய்கிறது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மேலதிக நிதியினைக் கோருகின்ற பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒருநாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குகின்ற ஏற்பாடுகளுக்கு வசதியளிப்பதுடன் கண்காணித்தும் வருகிறது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களாக மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை என்பன காணப்படுகின்றன.

(ஆ) 2019இன் இறுதியில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 37 ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ரூ.117,151 பில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட 428,161 கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது. நாளொன்றுக்கு தீர்ப்பனவு செய்யப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களின் சராசரி அளவும் பெறுமதியும் முறையே 1,762 ஆகவும் ரூ.482 பில்லியன்களாகவும் காணப்பட்டன. ஒருநாளுக்குள்ளேயான திரவ வசதிகளின் தொழிற்பாடுகளைப் பொறுத்தவரையில் சராசரியாக நாளொன்றுக்கு ரூ.63 பில்லியன் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டது. சிறந்த பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற விதத்தில் லங்காசெட்டில் முறைமையின் கிடைப்பனவுத் தன்மை இவ்வாண்டுப்பகுதியில் மிக உயர்ந்த மட்டமான 99.8 சதவீதத்தில் பேணப்பட்டது.

### 19.2 மத்திய வங்கியின் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்கல்

**(அ) வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

2019ஆம் ஆண்டுப்பகுதியில், மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்ட பின்னரங்க அலுவலகப் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

i. 2019ஆம் ஆண்டுப்பகுதியில், வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச்சந்தை நடவடிக்கைகள், நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் மற்றும் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு என்பவற்றுடன் தொடர்பான ஐ.அ.டொலர் 226.1 பில்லியன் தொகை கொண்ட 11,982 கொடுக்கல்வாங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

ii. பின்னரங்க அலுவலகம் உதவுதொகை செலுத்தப்பட்டு 2019 திசெம்பர் 13ஆம் நாளன்று புதிய யூரோக் கிளியர் ஈசிவே முறைமையில் இணைந்து கொண்டது. யூரோ கிளியர் EUCLIDPC முறைமையானது 2020 சனவரி 12ஆம் நாளன்று நிறுத்தப்பட்டது.

iii. பின்னரங்க அலுவலகம் புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது.

**(ஆ) திறந்த சந்தை தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனான திறந்த சந்தை தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவானது சந்தை திரவத்தன்மையின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.1,092 பில்லியன் பெறுமதியான 467 மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.7,489 பில்லியன் பெறுமதியான 3,854 துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்களையும் 7,818 பில்லியன் பெறுமதியான 7,472 நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் கடன்வசதி கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.89 பில்லியன் பெறுமதியான 214 உடனடி கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் வசதியளித்து மேற்கொண்டது. உடனடி விற்பனைக் கொடுக்கல்வாங்கல் எதுவும் காணப்படவில்லை.

### 19.3 சுவிப்ற் தொடர்பூட்டல் வலையமைப்பு முகாமைத்துவம்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அதன் நிதியியல் தொழிற்பாடுகளின் தொடர்பூட்டல்களுக்காக சுவிப்ற் பணிகளைப் பயன்படுத்துவதுடன் மத்திய வங்கியின் அனைத்துப் பயன்படுத்துநர்களின் சார்பில் சுவிப்ற் முறைமையினை முகாமைப்படுத்துகின்றது. மென்பொருள், வன்பொருள், செயற்கிரமங்கள், நடவடிக்கைமுறைமைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டுப்பாடுகள் தொடர்பாக சுவிப்ற் தலைமையகத்தினால் வரையறுக்கப்பட்ட நியமங்களுக்கமைவாக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது முறைமையினைப் பேணுகின்றது. உத்வேகம் மிக்க தொடர்புறுத்தல்களைப் (உலகளாவிய மற்றும் உள்நாட்டு இரண்டும்) பேணுவதற்காகவும் வினைத்திறனும் பாதுகாப்பும் மிக்க நிதியியல் செய்தி அனுப்பல் பணிகளை வழங்குவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி, லங்கா பினான்சியல் சேர்விஸ் பீறு லிமிடெட் ஊடாக சுவிப்ற் வலையமைப்புக்கான தொடர்புறுத்தலினைப் பேணுகின்றது.

2019இல் சுவிப்ற் முறைமை புதியதொரு பதிப்பிற்கு (பதிப்பு 7.4.20) இற்றைப்படுத்தப்பட்டதுடன் காலாண்டு பாதுகாப்பு இற்றைப்படுத்தலுடன் தொடர்ந்தது. சுவிப்ற் பயன்பாட்டாளர்களுக்காக உயர்ந்தளவு பாதுகாப்பினையும் கூடியளவு வினைத்தினையும் வழங்குவதற்காக புதிய பொறுப்பாண்மையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் சைபர் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் பின்னணியில் சுவிப்ற் இடைமுகம், கருவிகள் மற்றும் மென்பொருட்களை வலுப்படுத்துவதற்காக காலாண்டு பாதுகாப்பு இற்றைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, சுவிப்ற் பணிகளினால் வழங்கப்படும் வசதிகளுக்காக பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்லத்தக்க அனைத்து தரமுயர்த்தப்பட்ட பதிப்புக்களையும் மத்திய வங்கி வெற்றிகரமாக நிறுவியிருக்கிறது. மத்திய வங்கி, ஆண்டு முழுவதும் சுவிப்ற் பிரிவில் உயர்மட்ட பாதுகாப்புக்களைப் பேணி வருகிறது.

### 19.4 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தல்

2019ஆம் ஆண்டுப்பகுதியில் பல்புடை தேறிய அடிப்படையொன்றில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் அங்கத்துவ மத்திய வங்கிகளுக்கிடையேயான தகைமையுடைய வர்த்தகம் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் தீர்ப்பனவிற்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 6,523 ஆகவும் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.559.7 பில்லியனாகவும் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ.460.6 பில்லியனாகக் காணப்பட்டது.

துணைநில் தொழில்நுட்பக் குழுவின் பூர்வாங்க ஏற்பாட்டுக் கூட்டம் 2019 யூனில் நேபாளத்தில் நடைபெற்றதுடன் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் செயலாளர் நாயகமும் மத்திய வங்கிகள் மற்றும் நாணய அதிகார சபைகளின் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்றும் இக்கூட்டத்தில் பங்கேற்றது. பணிப்பாளர் சபையினதும் துணைநில் தொழில்நுட்பக் குழுவினதும் 48ஆவது கூட்டம் 2019 யூலையில் பூட்டான் திம்புவில் நடைபெற்றது. மூத்த துணை ஆளுநரும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளரும் மேற்குறிப்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

### 19.5 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்புத் தன்மை மற்றும் செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் புதிய கொடுப்பனவுத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கும் தனது ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நடவடிக்கைகளுக்கும் தொடர்ந்தும் வசதியளித்தது. இதன்படி, 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு

(அ) கொடுப்பனவு அட்டை விற்பனை மைய முனைக்கோடிகளில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு அட்டைக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஆளியினையும் தீர்ப்பனவு வசதிகளையும் வழங்குகின்ற பொதுவான விற்பனை மைய ஆளி 2019 யூனில் அதன் நேரலைத் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. விற்பனை மைய ஆளி லங்காபே தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளுக்கான ஆளிப்படுத்தலையும் தீர்ப்பனவு வசதிகளையும் வழங்குகிறது.

(ஆ) டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பத்தினை ஆய்வுசெய்வதற்கான குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களின்படி நியமிக்கப்பட்ட டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பத்திற்கான தொழிற்பாட்டுக் குழு டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையாகக் கொண்ட பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் தீர்விற்கு வசதியளிப்பதற்கு விதந்துரைத்தது. இதன்படி, பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் தீர்விற்காக நிருபிக்கும் கோட்பாடொன்றினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

(இ) வாடிக்கையாளர் மற்றும் வணிகர்களுக்கு குறைந்த செலவு, வசதி மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் கொடுப்பனவுத் தேர்வுகளுக்கான வழிவகைகளை வழங்கும் குறிக்கோளுடன் 'லங்கா கியுஆர்' என வர்த்தக நாமம் சூட்டப்பட்ட தேசிய விரைவு பதிலிறுப்புக் குறியீட்டு மாதிரியொன்று விடுக்கப்பட்டது. 2019இல், 'லங்கா கியுஆர்' பின்பற்றப்படுவதனை ஊக்குவிப்பதற்காக வருமானப் பங்கீடு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் அநேக நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்காக 'லங்கா கியுஆர்' இனை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுச் சாதனங்களை வெளியிட்டன.

(ஈ) புத்தாக்கங்களைக் கண்டுபிடிப்போர் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை மீறாதவாறு அவர்களது சாதனங்களையும் பணிகளையும் பரிசோதிப்பதற்கான கட்டுப்பாடான சூழ்நிலையொன்றில் பாதுகாப்பான இடமொன்றினை வழங்கும் பொருட்டு பின்டெக்ஸ் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்காக செயற்கிரமங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்படி, பின்டெக்ஸ் ஒழுங்குமுறைப்படுத்தல், பரிசோதனைக் கட்டமைப்பின் வேலைகள் 2019இல் இறுதிப்படுத்தப்பட்டன.

(உ) 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுகடன் அட்டைகள் மற்றும் செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவுகள் முறைமைகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாட்டு நியதிகளில், கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோராக பற்று அட்டைகளை வழங்குவதற்கு நிதியியல் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மூன்று நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. மேலும், கொடுப்பனவு அட்டைகளின் உரிமம்பெற்ற பணிகள் வழங்குநராக கொடுப்பனவு அட்டைகளை வழங்கும் ஒருவராகத் தொழிற்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றிற்கு கொடுப்பனவு அட்டைகளின் நிதியியல் கையேற்பாளராகத் தொழிற்படுவதற்கு உரிமம் வழங்கப்பட்டது.

(ஊ) புதிய கொடுப்பனவுப் பொறிமுறைகளுக்காக நிதியியல் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பல முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இது, வாடிக்கையாளர் வசதிகளை அதிகரிக்கும் என்பதுடன் வினைத்திறன் மிக்க தீர்ப்பனவுகளையும் வணிகர்களுக்கு வழங்கும்.

(எ) குறிப்பிட்ட முறைமைகளின் நம்பகமானதும் சுமூகமானதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு செய்யப்பட்ட விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக இ-பண முறையினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடத்தொலைபேசிகளின் உரிமம்பெற்ற தொழிற்பாட்டாளர்களின் மீது தளத்திலான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது. மேலும், இ-பணக் கணக்குகள் தனிப்பட்ட பெறுமதி சேமிக்கப்பட்ட வரையறைகள் நாளாந்த வரையறைகள் மற்றும் இ-பணக் கணக்குகளுக்கான வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடைத்தான கொடுக்கல்வாங்கல் வரையறைகள் என்பனவற்றின் எண்ணிக்கையைக் குறித்துரைப்பதற்கான சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(ஏ) இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்கள்/ பொறிமுறைகளூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக அதேநேர அறிவித்தல்களை வழங்குவதற்கு நிதியியல் நிறுவனங்களை அறிவுறுத்துகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(ஓ) எதிர்பாராத சூழ்நிலையொன்றில் வியாபாரத் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கான லங்கா செட்டில் பங்கேற்பாளர்களினதும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினது இயலாற்றலினை உறுதிப்படுத்தும் பொருட்டு லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் மதிப்பீடு செய்யப்பட்டது.

### 19.6 தேசிய கொடுப்பனவுச் சபை

கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான தொழிற்துறை ஆலோசனை மற்றும் கண்காணிப்பு குழுவாக விளங்கும் தேசிய கொடுப்பனவுச் சபை, கொடுப்பனவு உட்கட்டமைப்பு மற்றும் புத்தாக்க கொடுப்பனவுச் சாதனங்கள் மற்றும் இ-கொடுப்பனவுகளை ஊக்குவித்தல் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதனூடாக காசுப் பயன்பாட்டினை குறைக்கும் குறிக்கோளுடன் 2020-2022 இற்கான அதன் வழிகாட்டலை இறுதிப்படுத்தியது. வழிகாட்டலானது வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு உட்கட்டமைப்பின் உள்ளார்ந்த வளத்தினை விரிவுபடுத்தல், கொடுப்பனவு முறைமைகளுக்கான புத்தாக்கங்கள், நிதியியல் பணிகளை ஊக்குவிக்கின்ற இ-கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கிக் காணப்பட்டது. மேலும், கொடுப்பனவு முறைமை தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல், நிதிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பின்பற்றப்பட வேண்டிய சிறந்த நடைமுறைகள், தகவல் மற்றும் முறைமைகள் ஆகிய விடயங்களும் வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. தேசிய கொடுப்பனவுச் சபையானது நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதற்காக டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம், சிறந்த பிரயோக நிகழ்ச்சித்திட்ட இடைமுகம், திறந்த வங்கித்தொழில், மறைகுறி நாணய வங்கித்தொழில் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல் கொடுப்பனவுகளை ஊக்குவித்தல் போன்ற புதிய தொழில்நுட்பங்களிலும் கருதுகோள்களிலும் கவனம் செலுத்துவதற்காக பின்டெக் அபிவிருத்தி மீது குழுவொன்றினை நியமித்திருக்கிறது.

தேசிய கொடுப்பனவுச் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மத்திய வங்கி டிஜிட்டல் கொடுப்பனவுத் திட்டங்களை பிரபல்யப்படுத்தல், டிஜிட்டல் கொடுப்பனவு தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டல், குறைந்தளவிற்கு காசைப் பயன்படுத்தும் சமூகத்தினைக் கட்டியொழுப்புதல் மற்றும் பொருளாதாரத்தினை உயர்த்துதல் ஆகிய குறிக்கோள்களுடன் 2020ஆம் ஆண்டினை டிஜிட்டல் கொடுக்கல்வாங்கலுக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தி அறிவித்திருக்கிறது. இதற்கமைய, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 2020ஆம் ஆண்டு முழுவதிலும் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கும் பூரணமான கொடுக்கல்வாங்கல்களுக்கு டிஜிட்டல் கொடுப்பனவு மாதிரிகள் பயன்படுத்தப்படுவதனை ஊக்குவிப்பதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது.

### 19.7 விழிப்புணர்வு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் நாட்டில் தொழிற்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் மீதான தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பரப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் “கொடுப்பனவுச் செய்தித் திரட்டு” என்ற காலாண்டு வெளியீட்டினை தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கொடுப்பனவு முறைமைகள் மற்றும் தொடர்பான விடயங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கும் வங்கித்தொழில் சமூகத்திற்கும் அறிவூட்டுவதற்காக தேவையின் அடிப்படையில், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. மேலும், டிஜிட்டல் கொடுப்பனவு பொறிமுறையூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கான அறிவித்தல்களை அதேநேர அடிப்படையில் பெற்றுக்கொள்வதன் நன்மைகள் மற்றும் குறிப்பிட்ட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவித்தல் என்பன தொடர்பில் விழிப்புணர்வினை உருவாக்கும்பொருட்டு செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. மேலும், கொடுப்பனவு அட்டை கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், பத்திரமானதும் பாதுகாப்பானதுமான இலத்திரனியல் கொடுப்பனவு நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் அதேநேர இணையவழி மோசடிகள் பற்றி பொதுமக்களை எச்சரித்தல் மற்றும் வங்கிக் கடவுச்சொற்களையும் தனிப்பட்ட அடையாள இலக்கங்களையும் பாதுகாத்துக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவூட்டுவதற்காக பத்திரிகை வெளியீடொன்று விடுக்கப்பட்டது.

## 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடல் செயன்முறையினை வசதிப்படுத்துவதோடு, இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகளை அடைந்துகொள்வதற்காக திணைக்களச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கின்றது. அதன்படி, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளாக வருடாந்த உபாயத்திட்டமிடல் மீளாய்வுக் கூட்டத்தினை நடாத்துதல், காலாண்டு அடிப்படையில் உபாய முன்னுரிமைகள் மற்றும் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அத்தகைய முன்னேற்றங்களை தேவைப்படுமிடத்து நிறுவன முகாமைத்துவக் குழு மற்றும் நாணயச் சபைக்கு பரிந்துரைகளுடன் அறிக்கையிடுவதன் ஊடாக தொழிற்பாடுகளினை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்கதாகவும் கொண்டு நடாத்துவதனையும் இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்கள் நேரகாலத்துடன் வெற்றிகொள்வதனையும் உறுதிசெய்கின்றது.

### 20.1 நடவடிக்கைத் திட்டம் 2019 மற்றும் உபாய முன்னுரிமைகள் 2018 -2020

இலங்கை மத்திய வங்கியின் 2019இற்கான நடவடிக்கைத் திட்டமானது 2019 சனவரி 01 நடைபெற்ற புத்தாண்டு பணி தொடங்கும் வைபவத்தில் வெளியிடப்பட்டு திணைக்கள மட்டத்தில் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்கள் 2019 மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

2018 - 2020 ஆண்டுக் காலப்பகுதிக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் ஏழு உபாய முன்னுரிமைகளுடன் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்களின் உபாய நடவடிக்கைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

i. காத்திரமான நெகிழ்வுத்தன்மைமிக்க பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தல்,

ii. நிலைபெறத்தக்க வளர்ச்சிக்குத் துணையளிப்பதற்காக இயக்கவாற்றலும் தாக்குப்பிடிக்கும் தன்மையும் மிக்க நிதியியல் துறையினை ஊக்குவித்தல்,

iii. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகளின் உட்கட்டமைப்பினை நவீன மயப்படுத்தல்: குறைந்தளவு பண பயன்பாட்டு சமூகமொன்றினை நோக்கிய பாதையை வகுத்தல்,

iv. படுகடன் நிலைபெறும் தன்மையை உறுதிசெய்கின்ற முன்மதிமிக்க படுகடன் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல்,

v. அனைத்தையுமுள்ளடக்கிய மனிதவள உபாயமொன்றினை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்,

vi. தொழில் முயற்சி முழுவதுமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தி இணங்குவித்தலினை வலுப்படுத்தல் மற்றும்

vii. பன்னாட்டு பரிமாற்றல் அறிக்கையிடல் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தல்.

### 20.2 முன்னேற்ற மீளாய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடல்

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு திணைக்களமானது உபாய முன்னுரிமைகள் மற்றும் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்கள் என்பனவற்றின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதனை உள்ளடக்கிய காலாண்டு அடிப்படையிலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்தியது. திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்கள் 2019இல் உள்ளவாறான முதன்மை செயல்திறன் குறிகாட்டிகளின் அடிப்படையில் உபாய நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றம் மதிப்பிடப்பட்டது. அதன்படி, ஒட்டுமொத்த முன்னேற்றமானது கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் தீர்க்கப்படவேண்டிய இடர்பாடுகளும் நிறுவன முகாமைத்துவக் குழுவின் மீளாய்வுக்குப் பின்னர் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டது. 2019ஆம் ஆண்டின் இறுதியளவில், உபாய நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் அடைதல் மட்டமானது முறையே 93.91 சதவீதம் மற்றும் 94.82 சதவீதமாகக் காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த அடைவாக 94.64 சதவீதத்தினை விளைவித்தது.

மேலும், உள்ளார்ந்த திணைக்களங்களின் நடவடிக்கை ரீதியான இணைப்புக்களுடன் கூடிய 2018இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட உபாய முன்னுரிமைகளின் அடைதலின் முன்னேற்றத்தை கலந்துரையாடுவதற்கும் 2020ஆம் ஆண்டளவில் உபாய முன்னுரிமைகள் சிறப்பான முடிவுறுத்தலினை உறுதி செய்துகொள்வதற்கும் பணிக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 20.3 உபாயத் திட்டமிடலின் மீளாய்வுக் கூட்டம் 2019

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற உபாயத் திட்டமிடலின் மீளாய்வுக் கூட்டமானது வருகின்ற ஆண்டிற்கான திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்களினைப் பற்றி கலந்துரையாடுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவம் கலந்துகொள்கின்ற வருடாந்த ஒன்று கூடலாகும். பதினொன்காவது உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டமானது இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் 2019 நவெம்பர் 02 தொடக்கம் 03 வரை இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையின் உறுப்பினர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பங்கேற்புடன் நடைபெற்றதுடன், இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடைவதற்காக கருத்திற்கொள்ளப்படவேண்டிய, தேவைப்படுகின்ற சமகால அபிவிருத்திகள் மற்றும் அதன் சார்பான இடர்பாடுகள் மீதான விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

உபாயத் திட்டமிடலின் மீளாய்வுக் கூட்டத்தில், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் அவதானிப்புக்கள் உள்ளடங்கலான 2018 சனவரி தொடக்கம் 2019 செத்தெம்பர் வரையிலான உபாய முன்னுரிமைகள் மற்றும் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்கள் 2019 என்பவற்றின் நடைமுறைப்படுத்தலிலான ஒட்டுமொத்த முன்னேற்றங்கள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, ஒவ்வொரு திணைக்களமும் 2019ஆம் ஆண்டிற்குரிய அவற்றின் திணைக்களசார் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தினையும் 2020ஆம் ஆண்டிற்குரிய திட்டத்தினையும் சமர்ப்பித்தது. உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டத்தில், உபாய முன்னுரிமைகள் மற்றும் 2019ஆம் ஆண்டிற்குரிய திணைக்களசார் நடவடிக்கைத் திட்டம் நடைமுறைப்படுத்தலிலான முதன்மையான விளைவுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட தாக்கங்கள் என்பன பற்றியும் கலந்துரையாடப்பட்டன. 2020ஆம் ஆண்டிற்கான திணைக்களசார் நடவடிக்கைத் திட்டங்களானது உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்ட மேம்பாடுகளுடன் ஒன்றிணைத்ததன் மூலம் முடிவுறுத்தப்பட்டன.

## 21. பொதுப்படுகடன்

நாணயவிதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளில் பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்கான அரசின் முகவராக இலங்கை மத்திய வங்கியின் சட்டரீதியான பொறுப்புக்களை ஆற்றுவதற்குப் பொறுப்பாக பொதுப்படுகடன் திணைக்களம் உள்ளது. இத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றும் நோக்குடன் மத்திய வங்கி தொடங்கப்பட்ட 1950 ஓகத்து 28 நாளன்று பொதுப்படுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியங்களைத் திரட்டுதல், அரச படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுதல், அரச பிணையங்களின் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகள் சுமூகமாக தொழிற்படுவதனை வசதிப்படுத்தும் நோக்கில் லங்காசெகுயர் முறைமையினைப் பேணுதல், மத்திய வைப்பக முறைமையில் அரச பிணையங்களின் உரித்துப் பதிவினைப் பேணுதல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான படுகடன் இயக்கவாற்றல் மீதான பகுப்பாய்வு பணிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், பொதுப்படுகடன் திணைக்களமானது அரச படுகடன் சந்தைகளை ஆழமாக்கி அகலப்படுத்துவதிலும் நாட்டின் படுகடன் முகாமைத்துவ உபாயங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதிலும் பொறுப்பு முகாமைத்துவ முன்னெடுப்புக்களுக்கும் பங்களித்தது.

### 21.1 ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, அரசின் மொத்தக் கடன்பாட்டுத் தேவையினைப் பூர்த்திசெய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்

(அ) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் வழங்கல்கள் 2019இல் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளை நிதியிடுவதற்கான பிரதான படுகடன் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

(ஆ) நிதியங்களின் ஒவ்வொரு மூலங்களின் கீழுமான நடவடிக்கைகளின் சுருக்கமான அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை II - 28
கருவிகள் மற்றும் ஏலச் செயலாற்றம் - 2018 மற்றும் 2019

| கருவி | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|
| | வழங்கல்கள் (ரூ.பில்.) | ஏலங்களின் எண். | வழங்கல்கள் (ரூ.பில்.) | ஏலங்களின் எண். |
| திறைசேரி உண்டியல்கள் | 1,653.3 | 51 | 1,719.3 | 52 |
| திறைசேரி முறிகள் | 763.0 | 11 | 798.0 | 12 |
| | வழங்கல்கள் (ஐ.அ.டொ.பில்.) | ஏலங்களின் எண். | வழங்கல்கள் (ஐ.அ.டொ.பில்.) | ஏலங்களின் எண். |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 1,492.1 | 6 | 345.2 | 2 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 2,500.00 | 1 | 4,400 | 2 |

(இ) மேலேயுள்ள நிதி திரட்டும் நடவடிக்கைகள் அனைத்தும் நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் செலவு இடர்நேர்வு ஒன்றுக்கொன்றான விட்டுக் கொடுப்பனவுடன் இசைந்து செல்வதாகக் காணப்பட்டது.

### 21.2 அரச படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

2019 காலப்பகுதியில், ரூ 1,199.11 பில்லியன் கொண்ட உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும், ரூ823.40. பில்லியன் கொண்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய ரூ2022.51 பில்லியன் மொத்தப் படுகடன் தீர்ப்பனவு உரிய நேரத்தில் காத்திரமான முறையில் மேற்கொள்ளப்பட்டது.

### 21.3 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

லங்காசெகுயர் முறைமையானது அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இம்முறையானது தங்கள் சார்பில் அல்லது தங்களது வாடிக்கையாளர்களாக இருக்கக்கூடிய ஏனைய முதலீட்டாளர்கள் சார்பில் கணக்குகளை வைத்துள்ள 34 முகவர் நேரடிப் பங்குபற்றுநர்களையும் (26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 8 முதனிலை வணிகர் கம்பனிகள்) தங்களது சார்பில் மட்டும் கணக்குகளைக் கொண்டுள்ள 3 நேரடிப் பங்குபற்றுநர்களையும் (கொழும்புப் பங்கு பரிவர்த்தனை, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஊழியர் சேமலாப நிதியம்) உள்ளடக்கியுள்ளது. பொதுப்படுகடன் திணைக்களமானது லங்காசெகுயரின் தடங்கலற்ற அதேநேர தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலம் தீர்ப்பனவுகளுக்கு வசதியளிக்கின்ற முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகிறது. 2019 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு பத்திரங்களற்ற பிணையங்களினது உடமைகளின் மொத்த முகப் பெறுமதியானது ரூ.5,584.2 பில்லியனாக விளங்கியது.இது திறைசேரி உண்டியல்களின் ரூ.897.7 பில்லியனையும் திறைசேரி முறிகளின் ரூ.4,686.5 பில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

### 21.4 அரச பிணையங்களின் பதிவினைப் பேணுதல்

பொதுப்படுகடன் திணைக்களத்தில் பேணப்படுகின்ற மத்திய வைப்பக முறைமையிலுள்ள அரச பிணையங்களின் உரித்துப் பதிவுகளை அதேநேர இற்றைப்படுத்தலுக்குட்படுத்தும் வசதி அரச பிணையங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதனை உறுதிப்படுத்துகிறது. ஆண்டு முழுவதும், மத்திய வைப்பக முறைமையில் கணக்குகளை வைத்திருப்போருக்கு அவர்களது உடமைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான காலாந்தரக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. 2019 காலப்பகுதியில் பொதுபடுகடன் திணைக்களம் மத்திய வைப்பக முறைமையில் கணக்கு வைத்திருப்போருக்கு இலத்திரனியல் வடிவில் 1,551 கூற்றுக்களையும் 14,113 உடமைகளின் அரையாண்டு கூற்றுக்களையும் 38,467 கொடுக்கல்வாங்கல்களின் மாதாந்த கூற்றுக்களையும் 16,184 கொடுப்பனவுக் கூற்றுக்களையும் அஞ்சல் மூலமாக அனுப்பி வைத்துள்ளது. 2019 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்ட கணக்கு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 93,911 ஆக காணப்பட்டது. மேலும், அரச பிணையங்களினது முதலீடுகளின் பாதுகாப்புப் பண்புகளை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய வசதிகளுக்கிடையே மத்திய வைப்பக முறைமைக் கணக்கு உடமையாளர்களுக்கு இணையவழியில் கணக்கு விபரங்களைப் பார்வையிடுவதற்கான வசதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

### 21.5 முறைமை சீர்திருத்தங்கள்

அரச பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்யும் நோக்கங்களுக்காக வினைத்திறன், காத்திரமானதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றினை அதிகரிக்கும் பொருட்டு 2019 ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் முறைமைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) தீவிரப் பொறுப்பு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தியமை**

பாராளுமன்றம் 2018 மாச்சில் தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்திற்கு ஒப்புதலளித்தது. இதற்கமைய தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் பொறுப்பு முகாமைத்துவ நோக்கங்களுக்காக ரூ.480 பில்லியன் வரையிலான தொகையினைத் திரட்டுவதற்கு 2019 யூலையில் பாராளுமன்றத்தினால் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. பொறுப்பு முகாமைத்துவ முன்னெடுப்புக்கள் இலங்கை அரசாங்கத்தினை முன்கூட்டிய செயற்பாட்டு முறையில் உரிய காலத்திற்கு முன்னரேயே எதிர்கால மீள்நிதியிடல் தேவைப்பாடுகளின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கு மாறிச்செல்லும் உச்சமட்டங்களைக் குறைத்ததன் மூலமும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் அத்துடன் ஏனைய படுகடன் முதிர்ச்சிகளின் முதிர்ச்சிக் காலத்தினை நீடிப்பதற்கும் அத்துடன்/ அல்லது மீள்கொடுப்பனவு அமைப்பினை சுமூகப்படுத்துவதன் மூலமும் இயலுமைப்படுத்தியது. பொதுவாக, பொறுப்பு முகாமைத்துவமானது முதலீட்டாளர் தளத்தினை பன்முகப்படுத்துவதற்கும் சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு கடன்பாட்டுச் செலவினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கும் சொத்துப்பட்டியலின் காலப்பகுதியினை நீடிப்பதற்கும், அண்மைய காலப்பகுதியில் மீள்நிதியிடல் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் ஏதேனும் புதிய வழங்கல்களுக்கான சாதகமான விலைப் போக்குகளை உருவாக்குவதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவும். இது தொடர்பில் பொதுப்படுகடன் திணைக்களம் 2019 ஒத்தோபரில் அதன் முதலாவது பொறுப்பு முகாமைத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு ரூ.15 பில்லியன் தொகை கொண்ட திறைசேரி முறிகளை வழங்கியதன் மூலமும் 2019 திசெம்பரில் மற்றொரு ரூ.15 பில்லியன் தொகை கொண்ட திறைசேரி முறிகளை வழங்கியதன் மூலமும் உள்நாட்டுச் சந்தையில் நிதியங்களைத் திரட்டி தேவையான தாங்கிருப்புக்களை கட்டியெழுப்பியது. 2019இல் கட்டியெழுப்பப்பட்ட தாங்கிருப்பு 2020இன் தொடக்கப் பகுதியில் படுகடன் தீர்ப்பனவு கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அரசாங்கமும் 2019இன் இறுதிப்பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுக்கான மாற்று சந்தைகளை அணுகுவது தொடர்பில் பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்திருக்கிறது.

**(ஆ) 2019 - 2023 இற்காக நடுத்தரகாலப் படுடன் முகாமைத்துவ உபாயங்களை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

இலங்கை மத்திய வங்கியும் நிதி திட்டமிடல் அமைச்சும் இணைந்து நாட்டிற்கான நடுத்தர காலப் படுகடன் உபாயமொன்றினை உருவாக்கி 2019 ஏப்பிறலில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் அதனை வெளியிட்டது. இவ்வுபாயமானது, முன்மதியுடைய இடர்நேர்வு மட்டங்களுடன் கூடிய சாத்தியமானளவிற்குக் குறைந்தளவு செலவில் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைகளை ஈடுசெய்வதனை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான உள்ளமைப்பொன்றுடன் அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதிகளைத் திரட்டுவதற்கு வசதியளிக்கும். நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயம் முக்கியமாக 2018 இறுதியில் காணப்பட்ட மட்டங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிநாட்டு நாணயப் படுகடன் வெளிப்படுத்துகையினைக் கட்டுப்படுத்துவதன் மீதும் வெளிநாட்டு நாணயப் படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தினை மேம்படுத்துவதன் மீதும் ஓராண்டு படுகடன் முதிர்ச்சியினைக் குறைப்பதன் மீதும் முக்கிய கவனத்தினைச் செலுத்தியது. இலங்கை மத்திய வங்கியும் இலங்கை அரசாங்கமும் 2019இல் நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்துப் படுகடன் இயக்கவாற்றல்களிலும் குறிப்பாக, வெளிநாட்டு நாணயத்தின் முதிர்ச்சிக்கான சராசரி காலத்திலும் ஓராண்டிற்கும் குறைவான படுகடன் முதிர்ச்சிக் காலத்திலும் மேம்பாடுகளைத் தோற்றுவித்தது.

**(இ) லங்கா செகுயரின் மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அதேநேர குறுஞ்செய்தியை அல்லது/ அத்துடன் மின்னஞ்சல் அறிவித்தல்களையும் வழங்குதல்**

ஒவ்வொரு பிணையங்கள் கணக்கிலும் மேற்கொள்ளப்பட்ட லங்காசெகுயர் முறைமையிலுள்ள பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு பற்று மற்றும் வரவு பதிவுகளுக்காக அதேநேர அறிவித்தலை குறுஞ்செய்தி வாயிலாக அத்துடன்/ அல்லது மின்னஞ்சல் எச்சரிக்கை முறைமையில் லங்காசெகுயர் முறைமையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கும் முறை 2019 மாச்சு 25ஆம் நாளன்று நடைமுறைக்கிடப்பட்டது.

**(ஈ) முதலாந்தர ஏலச் செயன்முறைகளின் ஊகத்தன்மையினையும் வெளிப்படைத்தன்மையினையும் அதிகரித்தல்**

காலாண்டு ரீதியாக மாறிச்செல்கின்ற ஏலக் கலண்டரின் செயற்பரப்பானது 2019ஆம் ஆண்டுப்பகுதியின் ஆறு மாதங்களை உள்ளடக்கும் விதத்தில் மேலும் விரிவாக்கப்பட்டவிடத்து முன்கூட்டிய திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் ஏலக் கலண்டரானது 2019 யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியை உள்ளடக்கும் விதத்தில் அரசாங்கப் பிணையங்களின் முதலாந்தர ஏலச் செயன்முறைகளின் ஊகத்தன்மையினையும் வெளிப்படையான தன்மையினையும் மேலும் அதிகரிக்கும் நோக்குடன் நிதித் திட்டமிடல் அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டது.

**21.6 முன்னோக்கிப் பயணித்தல்**

(அ) உள்நாட்டுச் சந்தையிலிருந்தான அரச கடன்பாடுகளின் வெளிப்படைத்தன்மையினையும் வினைத்திறனையும் மேலும் மேம்படுத்துவதற்காக திறைசேரி உண்டியல்களுக்கான ஆரம்ப வழங்கல் முறைமையினையும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் ஆரம்ப வழங்கலுக்காக இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு ஒழுங்குகளையும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறிதல். திறைசேரி முறிகளுக்கான புதிய ஆரம்ப வழங்கல் முறைமையின் சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஏற்பாடுகளையும் திறைசேரி முறி உதவுதொகைகளில் சந்தைப் பங்கேற்பின் ஏற்புடைத்தன்மையினையும் மேலும் அதிகரித்தது.

(ஆ) அரச பிணையங்கள் சந்தையில் முன்மதியுடைய சட்டவாக்கங்களை நடைமுறைப்படுத்தும் நோக்குடன், பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழான ஒழுங்குவிதிகளுக்கும் பணிப்புரைகளுக்கும் தேவையான திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

(இ) இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வது தொடர்பான வெளிப்படைத்தன்மையினை அதிகரிப்பதற்காக, 2020 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களினதும் தீர்ப்பனவுப் பெறுமதி, விலை மற்றும் வட்டி வீதம் போன்ற முக்கிய காரணிகளை உள்ளீடு செய்வதற்காக 2019 ஒத்தோபர் 01ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையிலுள்ள அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(ஈ) இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களை அகலப்படுத்தி ஆழப்படுத்துவதற்காக பூர்வாங்க வழிமுறைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன் தேவைப்படுத்தப்பட்ட சட்ட சீர்திருத்தங்களுடன் தனித்துவமான இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளமொன்றினையும் அரச பிணையங்களுக்காக மத்திய இணைத்தரப்பு ஏற்பாடுகளையும் சேர்ந்து தரமுயர்த்தப்பட்ட மத்திய பிணையங்கள் வைப்பகத்தினை ஏற்படுத்துவதிலும் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் முன்னேற்றங்கள் அடையப்பட்டன.

**21.7 நாட்டிற்கான தரமிடல் மீளாய்வுக் குழுக்களையும் நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல்களையும் ஒருங்கிணைத்தல்**

2019இல், பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கைக்கான நாட்டிற்கான பன்னாட்டு தரமிடலின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் பொருட்டு தரமிடல் முகவர்களுக்கு (பிட்ஜ் றேட்டிங் லிமிடெட், மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ்) வசதிகளை வழங்கியது.

2019இல் நாட்டிற்கான இரண்டு பன்னாட்டு முறிகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டன. 2019 மாச்சில் 5 ஆண்டு முதிர்ச்சியுடன் 6.85 சதவீத வட்டியில் ஐ.அ.டொலர் 1 பில்லியன், 10 ஆண்டு முதிர்ச்சியுடன் 7.85 வட்டியில் ஐ.அ.டொலர் 1.4 பில்லியனும் வழங்கப்பட்ட வேளையில் 2019 யூனில் 5 ஆண்டு முதிர்ச்சிகளுடன் 6.35 சதவீத வட்டியில் ஐ.அ.டொலர் 0.5 பில்லியனும் நீண்ட 10 ஆண்டு முதிர்ச்சியுடன் 7.55 வட்டியில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட முறிகளும் நிதியியல் முன்முயற்சிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வழங்கப்பட்டன.

## 22. பிரதேச அபிவிருத்தி

2019இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், அபிவிருத்தி நிதி முன்னெடுப்புக்கள் தொடர்பான புதிய கொள்கை உபாயங்களை அபிவிருத்தி செய்வதன் மீதும் நடைமுறைப்படுத்துவதன் மீதும் கவனத்தினைச் செலுத்திய வேளையில், பாரம்பரியமான சலுகை கொடுகடன் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற அதன் தொழிற்பாடுகளை மேலும் விரிவாக்கியது. இப்புதிய கொள்கை உபாயங்களும் நடவடிக்கைகளும், நாட்டின் நிதியியல் வசதிகளுக்குட்படுத்தலையும் உறுதியான நிதியியல் முறைமைகளினை அடைவதற்கு சமச்சீரான, சமத்துவமான பொருளாதார வளர்ச்சியினையும் அடையும் விதத்தில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதனை மேம்படுத்துவதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் இயலாற்றலையும் ஒட்டுமொத்தமாக மத்திய வங்கியினது இயலாற்றலையும் வலுப்படுத்தியிருக்கிறது.

2019ஆம் ஆண்டில், அரசாங்கம், மத்திய வங்கி, கொடை முகவர்கள் மற்றும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ந்தும் இணைத்து, வலுப்படுத்தி மற்றும் நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறது. இத்திட்டங்கள் முக்கியமாக நாடெங்கும் பரந்து காணப்படுகின்ற தமது வியாபார முயற்சிகளை அதிகரிப்பதற்கு தேவைப்படுகின்ற நிதியியல் வசதிகளை வேண்டிநிற்கின்ற, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை இலக்காகக் கொண்டிருந்தன. இத்திட்டங்களின் பயன்பெறுநர்கள் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளையும் அதாவது வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளைப் பிரசன்னப்படுத்தினர். மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதற்கும் பொருளாதாரத்திலுள்ள பாதிக்கப்படக்கூடிய குழுக்களிடையேயுள்ள தொழில்முயற்சியாண்மைத் தேர்ச்சியினை ஊக்குவிப்பதற்குமாக பரந்தளவிலான கொடுகடன் துணைநிரப்புப் பணிகளையும் வழங்கியது. இம்முயற்சிகள் ஆண்டு முழுவதும் நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் அறிவூட்டல் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியிருந்தன. இவைதவிர, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியியல் அறிவு மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி என்பனவற்றை அதிகரிப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய, தீவு முழுவதற்குமான விழிப்புணர்வினை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தும் முயற்சியில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை காத்திரமான முறையில் பயன்படுத்திக் கொண்டது.

கொள்கை அடிப்படையில் பார்க்கும்பொழுது, 2019ஆம் ஆண்டு சவால் நிறைந்ததாகக் காணப்பட்ட போதும், நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தும் அம்சங்களை அதிகரிப்பதற்குத் தேவையான முக்கிய கொள்கை மாற்றங்களை இறுதிப்படுத்தப்பட்டு 2020 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தயாராக்கப்பட்டமையினால் இவ்வாண்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்தது. மேலும், இலக்கிடப்பட்ட குழுக்களின் தேவைகளை வலியுறுத்துகின்ற விதத்தில் புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்காகத் அனேக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

**22.1 சலுகை ரீதியான நிதியியல் வசதிகளை வழங்குதல்**

2019இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியியல் வசதிகளின் செயற்பரப்பினை விஸ்தரிப்பதற்காக மூன்று முக்கிய நிதியிடல் மூலங்களின் கீழ் அதாவது அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் கொடை

முகவர்களின் கீழ் 10 மீள் நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலம் அதன் கொடுகடன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. 2019இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2019இல் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் தொகுப்பு அட்டவணை II-29இல் தரப்பட்டுள்ளன.

2019 இறுதியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 8 மீள் நிதியிடல் மற்றும் 2 வட்டி உதவுதொகைத் திட்டங்களின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக ரூ.15,320 மில்லியன் தொகையினை 104,238 பயன்பெறுநர்களுக்கு பகிர்ந்தளித்தமையின் மூலம் பயன்பெறுநர்கள் பலமான நிதியியல் அத்திவாரத்தின் மீது உயர்ந்த சுய நம்பிக்கையுடன் அவர்கள் முன்னேற காணப்பட்ட சவால்களை எதிர்கொள்ளக்கூடிய இயலுமைகளை அவர்களுக்கு ஏற்படுத்தியது. கடன்களில் 68 சதவீதமானவை பகிர்ந்தளிக்கப்பட்டமையின் போது வட்டி உதவுதொகைத் திட்டங்கள் முக்கிய வகிபாகத்தினை ஆற்றியவேளையில், எஞ்சிய சதவீதம் மீள் நிதியிடல் திட்டங்களின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டுப் பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் கொடை முகவர்களினால் நிதியிடப்பட்ட திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியில் முறையே 72.0 சதவீதமாகவும் 23.6 சதவீதமாகவும் 4.4 சதவீதமாகவும் காணப்பட்டன.

2019இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் நிலையும் இக்கடன் திட்டங்கள் தொடர்பான புதிய அபிவிருத்திகளும் கீழே தரப்பட்டுள்ளன.

### 22.1.1 அரசினால் நிதியிடப்பட்ட திட்டங்களின் நடைமுறைப்படுத்தல்

அரசு நான்கு மீள் நிதியிடல் திட்டங்கள் மற்றும் ஒரு வட்டி உதவுதொகைத் திட்டம் உட்பட ஐந்து திட்டங்களுக்கு தொடர்ந்தும் நிதியிட்டதன் மூலம் 2019இல் 11,034 மில்லியன்களை அதாவது மொத்தக் கடனில் 72.0 சதவீதத்தினை பகிர்ந்தளித்ததன் மூலம் 96,220 பயன்பெறுநர்களுக்கு சேவை வழங்கப்பட்டது.

(அ) இக்குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினைத் தொடரும் விதத்தில் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டமான ‘சறுசற’ திட்டத்தின் கீழ் 33 குறுங்கால பயிர் உற்பத்திகளுக்காக 86,301 சிறு அளவு வேளாண்மையாளர்களுக்காக வட்டி உதவுதொகைத் திட்டம் வழங்கப்பட்டது. வட்டி உதவுதொகைத் திட்டமாகவும் கொடுகடன் உத்தரவாதத் திட்டமாகவும் செயற்படும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய திட்டம் மொத்தக் கடன் பகிர்ந்தளிப்பில் 67.7 சதவீதத்திற்கு 2019இல் அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட திட்டங்களின் பகிர்ந்தளிப்பு 94.0 சதவீதத்திற்கும் வகைகூறியது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் அரசாங்கம் ரூ.224 மில்லியன் பெறுமதிகொண்ட வட்டி உதவுதொகைத் திட்டத்தினை வழங்கிய வேளையில் ரூ.10,370 மில்லியன் கொண்ட நிதி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அவற்றின் சொந்த நிதியிலிருந்தும் வழங்கப்பட்டமையானது, நாட்டின் வேளாண்மைத் துறையின் அபிவிருத்தி தொடர்பில் அவை கொண்டிருந்த கணிசமான கடப்பாட்டினை மிகத் தெளிவாகக் காட்டுகின்றமையினை கவனிப்பது ஏற்றமுடைய செயலாகும்.

(ஆ) முன்னர் முன்னிலையிலிருந்த போதும் 2018இல் அம்பாறை மாவட்டத்தின் கடன் பகிர்ந்தளிப்பு செயலாற்றத்தின் காரணமாக பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்ட அநுராதபுர மாவட்டம் மீண்டுமொரு முறை 2019இன் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்பில் உச்ச நிலையினைப் பெற்றது. அநுராதபுர மாவட்டத்திலுள்ள பயன்பெறுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் 13.1 சதவீதமாக (ரூ.1,360 மில்லியன்) காணப்பட்ட வேளையில் அம்பாறை மாவட்டத்தின் பயன்பெறுநர்கள் அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் 12.3 சதவீதத்தினை (ரூ.1,277 மில்லியன்) பெற்று இரண்டாவது மிக உயர்ந்த செயலாற்ற மாவட்டமாகக் காணப்பட்டது. செயலாற்றத்தின் அடுத்த இடத்தில் பொலன்னறுவை மாவட்டமாகக் காணப்பட்டதுடன் திட்டத்தின் 10.8 சதவீதத்தினை (ரூ.1,124 மில்லியன்) பெற்றுக்கொண்டது.

(இ) மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம், சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டம் - கட்டம் II, சுவசக்தி கடன் திட்டம் மற்றும் அத்வெல கடன் திட்டம் ஆகிய 4 மீள்நிதியிடல் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இக்கடன் திட்டங்கள் முறையே வறுமை ஒழிப்பு, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, தொழில் நிலை உருவாக்கம் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிரளித்தல் ஆகிய பரந்த நோக்கங்களை எய்துவதற்காக வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

(ஈ) தேயிலை மீளப் பயிரிடல் மற்றும் இறப்பர் புதிய பயிரிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சிறு உடமை வேளாண்மை வியாபாரிகளுக்கு உதவும் பொருட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி வேளாண்மை அமைச்சு மற்றும் சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு என்பனவற்றின் ஒத்துழைப்புடன் சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம் 2019இல் வடிவமைக்கப்பட்டது. சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தலின் கீழான அவர்களின் புதிய பயிற்செய்கையிலிருந்து வருமானம் உருவாக்கப்படுகின்ற அத்தகைய காலம் வரை அச்சிறு உடமை வேளாண்மையாளர்கள் சுய வேலை வாய்ப்பினை அல்லது குறுங்கால வருமான உருவாக்க நடவடிக்கைகளை நிறுவுகின்றமை வரை சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம் அவர்களுக்கு சலுகை ரீதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

(உ) சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வேளையில், மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் திட்டத்திற்கு அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டது. இது தொடர்பில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்கத்திற்கும் மத்திய வங்கிக்குமிடையில் நிருவாக உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. இதற்கமைய, சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் பங்கேற்கு அந்நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. வட்டி உதவுதொகைத் திட்டத்தின் தொழிற்பாடுகள், பெருந்தோட்ட கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி வேளாண்மை அமைச்சு மற்றும் சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு என்பனவற்றின் ஒத்துழைப்புடன் 2020இன் முதற் காலாண்டில் தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(ஊ) மேலும், அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட என்டபிறைசஸ் சிறிலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ‘றன் அஸ்வென்ன’, ‘கொவி நவோத’, ‘ஜெய இசுற’, ‘திறி சவிய’, ‘தொழிற்படு மூலதனம்’ மற்றும் ‘பசுமைக் கடன்’ கடன் திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களுக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மத்திய வங்கியூடாக அரசாங்க உத்தரவாதங்களை வழங்குவதற்கு புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்றினை நடைமுறைப் படுத்துவதற்காக அரசாங்கத்துடன் நிருவாக உடன்படிக்கையொன்று கையெழுத்திடப்பட்டது.

(எ) மேலும், நீண்டகால அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் மற்றும் இலங்கையிலுள்ள ஏற்றுமதி சார்ந்த தொழில் முயற்சிகளுக்கான தொழிற்படு மூலதன தேவைப்பாடுகள் என்பனவற்றிற்கான நிதியியல் தேவைப்பாடுகளை வழங்குவதற்காக 2019ஆம் ஆண்டுப் பகுதியில் அபிவிருத்தி நிதியுடன் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்காக புதிய அரசாங்க நிதியிடல் மீள் நிதியிடல் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்காக வெளிக்கள அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

(ஏ) ஆரம்ப மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு வளர்ந்துவரும் இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு போதுமான நிதியியல் ஆதரவினை வழங்கும் பொருட்டு, சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் - கட்டம் ஐஐ இல் ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்குத் தொகையான ரூ.390 மில்லியன் ரூ.950 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் உயர்ந்தபட்ச கடன் தொகை கடன்பாட்டாளரொருவருக்கு ரூ.500,000 இலிருந்து ரூ.1,000,000 இற்கு அதிகரித்தது.

(ஐ) விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு கொடுகடன் ஆதரவினை வழங்கும் திட்டத்தின் கீழ், முன்னைய கடன்கள் தற்பொழுது செயற்படாக் கடன் வகையில் இருக்கின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு வழங்கப்படுவதற்காக தொழிற்படு மூலதனக் கடன்களுக்காக புதிய கொடுகடன் உத்தரவாதத்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டது.

### 22.1.2 இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிதியியல் செயற்பரப்பினை விரிவுபடுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி 'சௌபாக்கியா - (சுபீட்சம்) கடன் திட்டம் மற்றும் வர்த்தக அளவுப் பாற்பண்ணை அபிவிருத்திக் கடன்திட்டம் ஆகிய இரண்டு முக்கிய திட்டங்களுக்கு தொடர்ந்தும் நிதியளித்தது. சௌபாக்கியா கடன் திட்டம் மீள் நிதியிடல் திட்டமாக இருந்தவிடத்து வர்த்தக அளவு பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் ஒரு வட்டி உதவுதொகைத் திட்டமாகக் காணப்பட்டது.

(அ) முன்னைய ஆண்டுகளைப் போன்றே, 2019இலும் சௌபாக்கியா கடன்திட்டம் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களிடையே தேவையுடையதும் பிரபல்யம் பெற்றதுமான மீள் நிதியிடல் திட்டமாகக் காணப்பட்டது. 2019 இறுதியிலுள்ளவாறு, சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் ரூ.3,576 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்கள் பயன்பெறுநர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

(ஆ) மிக முக்கியமான விடயம் யாதெனில், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் காரணமாக சுற்றுலாத் தொழில் துறையின் மீது ஏற்பட்ட தாக்கத்தினைத் தொடர்ந்து, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்ட கடன்களுக்காக சட்ட இசைவுத் தளத்தினை வழங்குதவற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட 2019 மே, 08ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சுற்றறிக்கையின் நியதிகளில், இது சுற்றுலாத்தொழில் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட செயலாற்றக் கடன்களும் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையிலும் இம்முயற்சியின் முன்மாதிரியாக சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளைக் கேட்டுக்கொண்டது.

(இ) வர்த்தக அளவு பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ், பாலில் தன்னிறைவினை அடையும் தேசிய குறிக்கோளுடன் பாற்பண்ணையுடன் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கி பாற்பண்ணை வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்காக மத்திய வங்கி, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வட்டி உதவுதொகையினை வழங்கியது.

### 22.1.3 கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட திட்டங்களின் நடைமுறைப்படுத்தல்

(அ) சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடை வழங்குநர் கூறு 2019 காலப்பகுதியில் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட இக்கூறு அரச, தனியார், உற்பத்தியாளர், பங்குடமை (4 பி) மூலதனம், 4 பி பருவகால மற்றும் இளைஞர் கடன் திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டங்கள் 2019ஆம் ஆண்டில் 3,251 பயன்பெறுநர்களிடையே ரூ.672 மில்லியன்களை பகிர்ந்தளித்தது. கொடை வழங்குநர்களினால் நிதியிடப்பட்ட திட்டங்கள், மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடனில் 4.4 சதவீதத்திற்கு வகை கூறியது.

(ஆ) வேளாண்மை மற்றும் ஏனைய தொடர்பான துறைகளின் நன்மைபெறுநர்களின் மாற்றமடைந்து வரும் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு முக்கியமான மீளவமைத்தல் சிறு உடமையாளர் வேளாண் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் ஒத்துழைப்புடன் சிறு உடமையாளர் வேளாண் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டது. இம்மீளளித்தலின் நோக்கம் யாதெனில், சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினை அரசினாலும் கொடை வழங்குநர்களினாலும் நிதியிடப்பட்ட கூறினை கொடுகடன் தொழிற்பாடுகளை இலகுபடுத்துவதும் எளிமையான கொடுகடன் கூறுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழிற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதும் பயன்பெறுநர்களுக்கு சிறந்த பணிகளை வழங்குவதுமேயாகும். மீளமைத்தல் பிரிவான கொள்கைத் திருத்தங்களை தேவைப்படுத்தியமையினால் ஏற்கனவேயுள்ள சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கடன் திட்டங்களின் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கூடியளவிற்கு சந்தை சிநேகபூர்வ தன்மையினையும் நெகிழ்ச்சித் தன்மைவாய்ந்த பண்புகளையும் கொண்ட புதிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற்பட்ட முன்னைய ஆறு கடன் திட்டங்களுக்குப் பதிலாக சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் புதிய கொடுகடன் கூறு இரண்டு 4 பி கடன் திட்டத்தினையும் (அதாவது 4 பி வேளாண்வியாபாரம், 4 பி இளைஞர் கடன் திட்டங்களை) மூன்று சுழலும் நிதி கடன் திட்டங்களையும் (அதாவது சுழலும் நிதிய வேளாண்வியாபாரம் சுழலும் நிதிய இளைஞர் மற்றும் சுழலும் நிதிய வருமான உருவாக்க கடன் திட்டங்கள்) உள்ளடக்கியிருந்தன.

மீளமைத்தல் செயன்முறைக்கும் முன்னரும் பின்னருமான சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறுகளின் அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

கொள்கைப் பக்கத்தில், அரசாங்கத்துடன் சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் நிருவாக உடன்படிக்கையின் இரண்டாவது அனுபந்தத்தினைகையொப்பமிடுவதற்கும் புதிய சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் திட்டத்தினை தொழிற்படுத்துவதனை இயலுமைப்படுத்தும் விதத்தில் புதிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**அட்டவணை II - 29**
**2019இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

| கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டம்/ சலுகைக் கொடுகடன் திட்டம் பற்றிய தகவல்கள் | | | | | | தொகை ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| நிதி மூலம் | பெயர் | குறிக்கோள் | மீள்நிதியளித்தல்/ வட்டி உதவு தொகை | 2019இல் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகள் | கடன் பாட்டாளருக்கான வட்டி வீதம் முடிவில் - ஆண்டு இறுதியில் (ஆ.வீ.) | குறிப்பு |
| இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப் பட்டவை | வறுமை ஒழிப்பு நுண்நிதிக் கருத்திட்டம் - சுழலும் நிதியம் | வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஊக்குவித்தலூடாக வறுமையை ஒழித்தலும் முறையான வங்கித் தொழில் முறைமையுடன் குறைந்த வருமானக் குழுக்களை இணைப்பதற்கு அவர்களை ஒழுங்கமைத்தல் | மீள்நிதியளித்தல் | ரூ.463 மில்லியன் | 12 ச.வீ. | |
| | 'சுவசக்தி' கடன் திட்டம் | நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி துறைகளில் வருமானம் ஈட்டுகின்ற நடவடிக்கைகள் புதிதாக வருகின்றவர்கள் மற்றும் ஏற்கனவே ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் | மீள்நிதியளித்தல் | ரூ.55 மில்லியன் | 5.5 ச.வீ. | |
| | அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீட்பதற்கான 'அத்வெல' கடன் திட்டம் | இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு ஏதேனும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையினை மீளத்தொடங்குவதற்கு சலுகை நிதி வசதிகளை வழங்குதல். | மீள்நிதியளித்தல் | ரூ.88 மில்லியன் | 2 ச.வீ. | |
| | சுய-தொழில் ஊக்குவிப்பு தொடக்க முயற்சி கடன் திட்டம் கட்டம் II | அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனங்களினால் பயிற்றப்பட்ட இளையோருக்கு தமது சொந்த சுயதொழில் கருத்திட்டங்களைத் தாபிப்பதற்காக நிதியுதவியினை வழங்குதல். | மீள்நிதியளித்தல் | ரூ.57 மில்லியன் | 7 ச.வீ. | |
| | 'சறுசார' - அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் | நெல் மற்றும் குறுகிய கால பயிற்செய்கையில் ஈடுபட்டுள்ள நுண்பாக மற்றும் சிறியளவிலான வேளாண்மையாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல். | வட்டி உதவுதொகை மற்றும் கடன் உத்தரவாதம் | ரூ.10,370 மில்லியன் | 7 ச.வீ. | பங்கேற்பு நிதியங்களும் சொந்த நிதியங்களும் இலங்கை அரசாங்கத்தினால் வட்டி உதவு-தொகை |
| இலங்கை மத்திய வங்கியினால் நிதியளிக்கப் பட்டவை | சுபீட்சக் கடன் திட்டம் ('சௌபாக்கியா') | ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை அல்லது அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை தொடங்குவதற்கான விரிவுபடுத்துவதற்கானது. | மீள்நிதியளித்தல் | ரூ.3,576 மில்லியன் | 8 ச.வீ. | |
| | வர்த்தக அளவிலான பால் அபிவிருத்தி கடன் திட்டம் | வர்த்தக அளவிலான பாற்பண்ணைகளை ஊக்குவிப்பதனூடாக பால் மற்றும் பாலுற்பத்திகளில் தன்னிறைவினை அடைந்துகொள்ளுவதற்கு ஆதரவளித்தல். | வட்டி உதவுதொகை | ரூ.38 மில்லியன் | 6 ச.வீ. | பங்கேற்பு நிதியங்களும் சொந்த நிதியங்களும் இலங்கை மத்திய வங்கியினால் வட்டி உதவுதொகை |
| கொடையாளி நிதியளிக் கப்பட்டவை | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- 4பி மூலதனக் கடன் திட்டம் | இலங்கையின் சிறு உடமையாளர்களின் வறுமைக் குறைப்பு மற்றும் போட்டித் தன்மைக்கு பங்களித்தல் அத்துடன் வர்த்தக ரீதியான நோக்குடைய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளில் ஈடுபட்டுள்ள 57,500 சிறு உடமையாளர்களின் வருமானம் மற்றும் உணவுத் தரத்தினை அதிகரித்தல். | மீள்நிதியளித்தல் | ரூ.58 மில்லியன் | 6.5 ச.வீ. | விவசாய அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப் பட்டது. |
| | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- 4பி பருவகால கடன் திட்டம் | | மீள்நிதியளித்தல் | ரூ.600 மில்லியன் | 6.5 ச.வீ. | |
| | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- 4பி இளையோர் கடன் திட்டம் | | மீள்நிதியளித்தல் | ரூ.15 மில்லியன் | 6.5 ச.வீ. | |

### 22.2 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் உபாய முன்னெடுப்புக்கள்

கொள்கை நோக்கில், 2019ஆம் ஆண்டுப் பகுதியில் சமச்சீரான ஏற்றத்தாள்வற்றதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான பொருளாதார வளர்ச்சியை எய்துகின்ற முயற்சியை வலுப்படுத்தும் விதத்தில் பல்வேறு புதிய கொள்கை நெறிப்படுத்தல்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது.

#### 22.2.1 இலங்கையில் முதலாவது தேசிய நிதியியல் வசதிகளுக்குட்படுத்தல் உபாயத்தினை அபிவிருத்தி செய்தல்

கடந்த அண்மைக்காலத்தில், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முயற்சிகள் கணிசமான உபாய ரீதியான மாற்றல்களுக்குட்பட்டதுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அதன் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முயற்சிகளுடன் முதன்மையான வகிபாகத்தினை ஆற்றியது. நிதியியல் வசதிக்குட்படுத்தல், 2019இல் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி வழிகாட்டலில் முக்கியமான கவனத்திற்குரிய துறையாக அடையாளம் காணப்பட்டிருக்கின்ற வேளையில் முதலாவது இலங்கைக்கான தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் 2020 ஆரம்பத்தில் வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் முக்கியமாக, மற்றைய விடயங்களுடன் தேசிய மட்டத்திலான இணைப்பு மற்றும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய செயலகத்துடன் இணைந்து தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான பொறிமுறைகளை நடைமுறைக்கிடல், நிதியியல் நிறுவனங்களின் இயலளவினைக் கட்டியெழுப்புதல் மற்றும் நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நீடித்து நிலைத்திருக்கும் சாதனங்களை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றுடன் தொடர்புபட்டனவாக இருந்தன.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் முக்கியமாக, மத்திய வங்கியின் மற்றைய பல திணைக்களங்கள் உட்பட மற்றும் பல அலுவலர்களினதும், உலக வங்கி குழுமத்தின் உறுப்பினரொருவரான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உறுதியுடனும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. 'சிறந்த

வாழ்க்கைக்காக சிறந்த தரமான நிதியியல் வசதிக்குட்படுத்தல்' என்பது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் தொலைநோக்காகும். இது நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதன் மூலம் இலங்கையரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதன் மீது கவனம் செலுத்தியது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் அபிவிருத்தி தொடர்பான 3ஆவது ஆலோசனைக் கூட்டம் 2019 ஓகத்தில் வெற்றிகமாக நடாத்தப்பட்டதுடன், கூட்டத்தின் பிரதான நோக்கத்தினை நிறைவேற்றுகின்ற விதத்தில் ஆர்வளர்கள் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை இறுதிப்படுத்தக் கூடியவர்களாகவும் இருந்தனர். தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கொள்கை ஆலோசனை செயன்முறையின் போது, உபாயத்திற்கான கொள்கைத் தூண்களாக (i) டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள் (ii) நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதி (iii) வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் (iv) நிதியியல் அறிவு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் என்பன அடையாளம் காணப்பட்டன. மேலும், (i) தரவு (ii) உட்கட்டமைப்பு மற்றும் (iii) கொள்கை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை என்பன தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் முக்கிய இயலுமைப்படுத்துனர்களாக அடையாளம் காணப்பட்டன.

நிதியியல் வசதிக்குட்படுத்தலின் குழுச் செயற்கிரமத்திலும் முக்கியமான ஊக்கியாக நிதியியல் கல்வி அடையாளம் காணப்பட்டிருப்பதன் காரணமாக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ் இத்துறைகளைப் பொறுத்த வரையில் மிகத் தீவிரமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமையளிக்கப்படுகின்ற வேளையில் 'நிதியியல் கல்வியூடாக நுகர்வோர் வலுவூட்டலை மேம்படுத்தல்' என்ற புதிய கூறொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் மத்திய வங்கி தேசிய கல்வி பாட விதானத்தில் நவீன கற்பித்தல் மூலவளங்கள், கருவிகள் மற்றும் நவீன உத்திகளுடன் கூடியளவிற்கு இயக்கவாற்றல்மிக்கதான முறையில் நிதியியல் அறிவு தொடர்பான பாடத்தினையும் உள்ளடக்க வேண்டுமென கல்வி அமைச்சிற்கு விதந்துரைத்தது.

இலங்கை மத்திய வங்கியும் பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் நாடளாவிய முறையில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீட்டினை நடாத்தியது. இவ்வளவீடானது நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டங்களுக்கான பொதுவான தோற்றப்பாட்டினை வழங்கும் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக விளங்கும் தரவு மற்றும் தகவல்களுக்கிடையிலான இடைவெளியினை நிரப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீட்டின் பெறுபேறுகள், இலங்கைக்கான தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை அபிவிருத்தி செய்வதில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அடிப்படைத் தகவல்களாக பயன்படுத்தப்பட்டதுடன் முன்நோக்கிய உபாயக் கட்டமைப்பொன்றில் இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. அளவீட்டின் பெறுபேறுகளை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் வெளியிடப்படுகின்ற 2020இன் தொடக்கப் பகுதியுடன் ஒத்த காலப்பகுதியில் வெளியிடப்படும்.


நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பான அதன் முயற்சியுடன் முன்நோக்கிச் செல்லும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பன்னாட்டு நிதியக் கூட்டுத் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் 2020இல் முதல் தடவையாக நிதியியல் அறிவு அளவீட்டினை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஏதேனும் இடைவெளி, பாடத்தினை பயில்தல், இரட்டித்தல் முயற்சிகள் மற்றும் இயலுமையினைப் பின்னணியாகக் கொண்ட நிதியியல் கல்வியை இணைப்பதற்கான வாய்ப்புக்கள் என்பனவற்றை அடையாளம் காண்பதற்கான பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியியல் கல்வித் திட்டமிடுவதற்கான முன்னெடுப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமைப்படுத்தலும். மேலும், இது நிதியியல் அறிவு நிகழ்ச்சிகளை இணைப்பதற்கான வலுவான இணைப்பு பொறிமுறைகளை நிறுவும் அதேவேளை, நிதியியல் அறிவு தொடர்பில் பொதுவான வரைவிலக்கணமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கும் முக்கிய ஆர்வலர்களின் பங்கேற்புடன் முக்கியமான தகைமைக் கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 22.2.2 நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியுடன் அங்கத்துவத்தினைத் தொடர்தல்


2019ஆம் ஆண்டுப் பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியுடன் மத்திய வங்கியின் அங்கத்துவத்தினை தொடர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் வருடாந்த அங்கத்துவம் மத்திய வங்கி உட்பட அதன் அங்கத்துவ நிறுவனங்களுக்கு அவற்றின் அறிவாற்றலையும் தேர்ச்சியையும் தரமுயர்த்திக் கொள்ளும் விதத்தில் வேறுபட்ட வாய்ப்புக்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. இது மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிதியியல் வசதிக்குட்படுத்தும் முயற்சிகளுக்கு ஒன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

தொடர்பு முறைகளைப் பேணுவது தொடர்பான நிருவாக வகிபாகத்தினை மேற்கொள்ளுதல் மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் தொடர்பூட்டல் குவிவு மையமாக செயற்படுவது என்பனவற்றிற்குப் புறம்பாக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் ஒத்துழைப்புடன் பணியாற்றுகின்ற மத்திய வங்கியின் மற்றைய

**வரைபடம் II - 6**
**சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கொடுகடன் கூறு முன்னைய கட்டமைப்பு**




**வரைபடம் II - 7**
**சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கொடுகடன் கூறு புதிய கட்டமைப்பு**



திணைக்களங்களிடையே, நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் வலையமைப்பின் பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக பங்குபற்றுவதனூடாக தீவிரமான தொழிற்பாட்டாளராகவும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணிக்கான பங்களிப்பாளராகவும் தொடர்ச்சியான முறையில் பணியாற்றி வருகின்றது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அதன் தொழிற்பாட்டு குழுக் கூட்டங்களில் தீவிரமாக பங்கேற்றுவருவதுடன் அதன் தொழில்நுட்ப அறிவினை நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியிலுள்ள அங்கத்துவ நாடுகளுடன் பகிர்ந்து கொள்கின்ற வேளையில் குழும உறுப்பினர்கள் மற்றும் வளவாளர்கள் என்ற ரீதியில் நிபுணத்துவத்தினை வழங்குவதனூடாக நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் அங்கத்துவ நிறுவனங்களுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டது. மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் அங்கத்தவர்கள் மற்றும் நியமங்களை நிர்ணயிக்கப்படும் சபைகள், தனியார் துறையினரிலிருந்தான ஆர்வலர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் ஒன்று கூடுகின்ற கிகாலி, ரூவாண்டாவில் நடைபெற்ற உலகளாவிய கொள்கை அரங்கில், நிதியியல் வசதிகளை அணுகுவதற்கான வழிவகைகளை அதிகரிப்பதற்கான ஒத்துழைப்பு வழிகள் மற்றும் உலகளாவிய ரீதியில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் நிகழ்ச்சி நிரலை மேம்படுத்தல் என்பன பற்றிய கலந்துரையாடுவதற்காக கிரமமான முறையில் பங்கேற்றது. மேலும், நிதியியல் வசதிக்குட்படுத்தல் அணியின் மாயா கடப்பாட்டு பிரகடனப்படுத்தலூடான தனித்துவமான உலகளாவிய குரல் பதிவுத் தளம் காணப்பட்டபோதும் உறுப்பினர் நாடுகளின் உலகளாவிய குரல்ப் பதிவினை உயர்த்துவதற்கு அனேக வாய்ப்புக்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. இளம் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் புலனாகும் தன்மையினை அதிகரிப்பதற்கும் உலகளாவிய வலையமைப்பிற்கான உறுப்பினர் நிபுணத்துவத்தினையும் உயர்த்துவதற்கான தன்மையாகவும் இது பயன்படும்.

### 22.2.3 ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவன கூட்டமைப்பின் 32ஆவது வருடாந்த மாநாட்டிற்கு அனுசரனை வழங்குதல்

2019 ஒத்தோபரில் ‘கொடுகடன் துணைநிரப்பு: நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கி’ என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பில் நடைபெற்ற ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்களின் கூட்டமைப்பின் 32ஆவது வருடாந்த மாநாட்டிற்கு மத்திய வங்கி அனுசரனை வழங்கியது. ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்களின் கூட்டமைப்பு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான பாரிய ஆசிய கூட்டமைப்பாக விளங்குவதுடன், ஆற்றல்வாய்ந்த ஆசிய கொடுகடன் துணைநிரப்பு முறைமைகளை ஊக்குவித்து அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 1987இல் நிறுவப்பட்டது. ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவனங்களின் கூட்டமைப்பு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான பாரிய ஆசிய கூட்டமைப்பொன்றாக விளங்கி, 11 நாடுகளிலிருந்தான 16 உறுப்பு நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது. ஆசிய கொடுகடன் துணைநிரப்பு நிறுவன கூட்டமைப்பின் தற்போதைய உறுப்பு நாடுகளாக இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, மொங்கோலியா, நேபாளம், பிலிப்பைன்சு, இலங்கை, தைவான், மற்றும் தாய்லாந்து என்பன காணப்படுகின்றன.

மாநாடானது இரண்டுநாள் தொழில்நுட்ப அமர்வுகளை உள்ளடக்கியிருந்ததுடன் வெளிநாட்டுப் பேராளர்கள் உட்பட 90 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இது கொடுகடன் துணைநிரப்பு தொடர்பான அறிவினை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குவதுடன் உறுப்பு நாடுகளிடையேயான உறவுகள் ஆழமடைவதற்கான வழிகளையும் ஏற்படுத்தியுள்ள அதேவேளையில், உறுப்பு நாடுகளிடையே இலங்கை பற்றிய சாதகமான நன்மதிப்பினையும் உருவாக்கியிருக்கிறது.

### 22.2.4 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் தொழிற்பாடுகளை தன்னியக்கப்படுத்தல்

சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்ட கடன் திட்டங்களுடன் தொடங்கிய மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் தொழிற்பாடுகளை தன்னியக்கப்படுத்தும் நடவடிக்கைகளை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் முன்னெடுத்தது. இச்செயற்றிட்டத்திற்கு அரசாங்கத்திற்கும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திற்குமிடையிலான சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்ட நிதிய உடன்படிக்கையின் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் கூற்றின் கீழ் இச்செயற்திட்டத்திற்கு அரசாங்கத்தினால் நிறுவப்பட்டது. இச்செயற்றிட்டமானது, மத்திய வங்கி, சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமையாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் 4 பி ஒழுங்குகளுடன் தொடர்புபட்ட தனிப்பட்ட கம்பனிகள் என்பன உட்பட சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட பங்குடமையாளர்களுக்கான தனியான பயன்படுத்துனர் இடைமுகத்தினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2019ஆம் ஆண்டுப் பகுதியில் தன்னியக்கப்படுத்தல் செயற்றிட்டத்திற்காக மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான விற்பனையாளர் தெரிவு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இச்செயற்றிட்டமானது 2020இன் முதலரைப் பகுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சலுகை ரீதியான மீள் நிதியிடல் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்புபட்ட தேவையற்ற இரட்டித்தல் வேலைகளைக் குறைப்பதன் மூலம் கடன் தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடனும் காகிதங்களற்ற, பசுமை அணுகுமுறைகளுடன் கூடிய முறையினை நோக்கி நகரும் விதத்திலும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வட்டி உதவுதொகக் கடன் திட்டம் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் என்பனவற்றிற்கான புதிய தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2020இல் நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

## 22.3 தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்புதல்

அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் வசதிக்குட்படுத்தலை நோக்கிய பயணத்தின் இன்றியமையாத பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட நிதியியல் அறிவு மற்றும் விழிப்புணர்வின் முக்கியத்துவம் கருதி பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் 122 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் முக்கியமாக சமூக முன்னேற்ற நடவடிக்கைகளிலும் மற்றும் நிதியியல் ரீதியில் பின்தள்ளப்பட்டுள்ள சமூகத்தின் அடிமட்டத்திலுள்ளவர்களுக்கு நலன்புரிகளிலும் தொடர்புபடுகின்ற சமூகத்தவர்களுக்கும் ஏனைய பங்குடமையாளர்களுக்கும் அறிவூட்டுவதற்கான நிதியியல் அறிவு, தொழில்முயற்சியாளர்களின் அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி போன்றவற்றில் முக்கிய கவனத்தைச் செலுத்தியது.

அட்டவணை II - 30
**2019ஆம் ஆண்டுப் பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித் திட்டத்தின் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் அறிவூட்டல் | 87 |
| இயலளவினைக் கட்டியெழுப்புதல் | 30 |
| ஊடக ஊக்குவிப்பு | 5 |
| மொத்தம் | 122 |

## 23. பிரதேச அலுவலக முகாமைத்துவம்

நாணய விதிச்சட்டத்தின் 7ஆவது பிரிவின்படி "இலங்கை மத்திய வங்கி தனது பிரதான வியாபார நிலையத்தினை கொழும்பில் கொண்டிருப்பதுடன், வங்கிச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கு அவசியமாகின்ற வகையில் இலங்கையிலுள்ள ஏனைய பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் அதன் கிளைகள், முகவர்கள் மற்றும் நிருபர்களைக் கொண்டிருக்கமுடியும்". இவ்வாறாக இலங்கை மத்திய வங்கி அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளல், உரிய பிராந்தியங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல் போன்ற நோக்கில், 1981 தொடக்கம் மாத்தறை, அனுராதபுரம், மாத்தளை, யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தனது ஏழு பிரதேச அலுவகங்களை நிறுவ படிமுறைகளை எடுத்துள்ளது. கிளிநொச்சி பிரதேச அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய சேவைகள் மற்றும் இப்பகுதியிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி இப்பிரதேச மக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்கும் நோக்கில் யாழ்ப்பாண பிரதேச அலுவலகம் 2017 யூன் மாதத்திலிருந்து கிளிநொச்சி பிரதேச அலுவலகத்துடன் இணைக்கப்பட்டது. தற்பொழுது, பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் தொழிற்பாடுகள் நாட்டின் நிருவாக மாவட்டங்கள் 25 இனையும் உள்ளடக்கியதாக இடம்பெறுகின்றன.

பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களினை நடாத்துவதுடன் தொழில் முயற்சியாளர்களின் நலனை அடிப்படையாகக்கொண்டு வர்த்தகக்கண்காட்சி, தொழில் நுட்பபரிமாற்ற பயிற்சிப்பட்டறைகள், வெளிப்படுத்துகை விஜயங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்துதலுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல் மூலம் அதிக நிலைத்திருக்கக்கூடிய சமச்சீரான பிரதேச அபிவிருத்தியயைடைந்து கொள்வதற்கு பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் ஆகியன பங்களித்துள்ளன. மேலும், மத்திய வங்கியின் சேவைகளை பிரதேச மட்டத்தில் விரிவாக்கம் செய்வதில் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் பிரதான பங்கினையும் வகிக்கின்றன.

### 23.1 அபிவிருத்தி செயற்பாடுகள்

ஆண்டு காலப் பகுதியில், தொழில் முயற்சியாளர்கள், அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போன்ற பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய 15,267 பயனாளிகளை இலக்காகக் கொண்டு பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் முறைசார் மற்றும் தாங்கிக்கொள்ளக் கூடிய நிதியியல் பணிகள் போன்றவற்றின் மீதான 139 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளன. மேலும், பிரதேச அலுவலகங்கள் தொடர்புடைய பிரதேசங்களின் கொடுகடன் வழங்கல் பொறி முறையினை மேம்படுத்தி வெற்றிகரமாக 1,467 கொடுகடன் இணைப்புக்களை ஏற்படுத்தியுள்ளதுடன், பல்வேறு காரணங்களினால் கடன்களினை மீளச்செலுத்துவதில் இடர்பாடுகளை எதிர் நோக்கிய கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் ஆலோசனைப் பணிகளும் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 1,724 பயனாளிகளை இலக்காக கொண்டு கடன்படு நிலை தொடர்பான 15 அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தியுள்ளன.

பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மை உருவாக்கம், திறன் அபிவிருத்தி, தொழில்நுட்ப மாற்றல் மற்றும் வியாபாரத்திலான சிறந்த நடைமுறைகளின் பிரயோகம் போன்ற விடயங்களை உள்ளடக்கி பல்வேறு பயிற்சித்திட்டங்களை நடாத்தியுள்ளன. இந்த வகையில், வியாபாரதிட்டம் தயாரித்தல், கணக்குப்பதிவு, வரிவிதிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு தேவைப்பாடுகளின் மீது 83 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 7,773 தனிநபர்கள் பயனடைவதற்காக நடாத்தப்பட்டன. மேலும், சிறந்த நடைமுறைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக 107 இயலளவைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்கள் 4,564 தொழில் முயற்சியாளர்களுக்கு நடாத்தப்பட்டன. இப்பயனாளிகள், கால்நடை வளர்ப்பு, அலங்கார தாவரங்கள் மற்றும் மலர் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, உணவு உற்பத்தி செயன்முறை, பாதணிகள் தயாரிப்பு, பற்றிக் அச்சிடுதல், ஆடைத்துறை, கைப்பணிப் பொருட்கள் தயாரிப்பு, சுற்றுலாத்துறை என்பவற்றுடன் இணைந்ததாகக் காணப்பட்டன. பிரதேச அலுவலகங்கள் சந்தை இணைப்புக்களை ஒழுங்குசெய்தல், வாங்குநர், விற்பனையாளர் கலந்துரையாடல்கள், பண்டிகைக்கால வர்த்தக கண்காட்சிகள் என்பவற்றினூடாக கடன்பாட்டாளர்களின் சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கு உதவின. இதன்படி, பிரதேச மட்டத்தில் 05 வர்த்தக கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், மொத்தமாக 276 முயற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 07 வெளிப்படுத்துகை விஜயங்கள் 214 தொழில் முயற்சியாளர்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டன.

அதேவேளை, 2019 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதற்கான பலதரப்பட்ட ஆரம்பகட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய தொழில் முயற்சியாளர்களுக்கு பயற்சியளித்தல் மற்றும் கடன் வசதிப்படுத்தல் என்பன மூலம் ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஒவ்வொரு உத்தமமான பொருளாதார துறையினை இனங்காணுதல் மற்றும் அதனை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்படி, பாதணிகள் தயாரிப்பு, அழகுக்கலை, அலங்கார தாவரங்கள் வளர்ப்பு, கைப்பணிப் பொருட்கள் தயாரிப்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் விலையுயர்ந்த கற்கள் மற்றும் நகை கைத்தொழில் போன்றன உள்ளடங்கலாக 2,145 தனிநபர்களை இலக்காகக் கொண்டு 38 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும், பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் நாடு பூராகவும் உள்ள சிலதெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஊடாக நாட்டிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மை துறையினை மேம்படுத்துவதற்கான 32 பயிற்சித் திட்டங்களையும் நடாத்தியுள்ளன. இவ்வாறாக, 2,974 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகளை ஊக்குவிப்பதற்கான மாற்று ஊடகமாக பயன்படுத்தப்படக் கூடியவகையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்டுகாலப்பகுதியில், பிரதேச அலுவலகங்கள் வியாபாரம் சார்பான அண்மைக்கால அறிவினை வழங்குவதுடன் அத்தகைய அறிவினை ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியவகையில் 515 சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு 06 வியாபார நடவடிக்கை முகாம்களின் ஊடாக வியாபார நடவடிக்கைகள் சார் ஆலோசனைப் பணிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தரமுகாமைத்துவம், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான செயன்முறைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான ஒழுங்கு விதிகள் போன்றவற்றிற்கான 22 விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களினூடாக 968 தனிநபர்கள் பயனடைந்துள்ளனர். 222 தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் பிரதேச மட்டத்திலான தொழில் முயற்சியாளர் அமைப்புகளும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

### 23.2. இலங்கை மத்திய வங்கியை பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தல்

பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களின் பல்வேறு வகையான நிகழ்ச்சித் திட்டங்களை பிரதேச மட்டத்தில் நடாத்த உதவியது. பிரதேச அலுவலகங்கள் ஆண்டு முழுவதிலும் 101,366 ஊழியர் சேமநிதி தொடர்பான விசாரணைகள் மற்றும் நினைவு நாணயங்கள், இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகள் தொடர்பான விற்பனை மற்றும் நாடளாவிய தரவுசேகரிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதோடு, மாத்தறை மற்றும் அநுராதபுர பிரதேச அலுவலகங்களில் நாணய அருங்காட்சியகமும் செயற்பட்டு வருகின்றது. மேலும், தூய நாணயதாள் கொள்கை, போலி

நாணயத்தாள்களை அடையாளங்காணுதல், அதிகாரமளிக்கப்படாத நிதி நிறுவனங்கள், தடைசெய்யப்பட்ட திட்டங்கள், அரச பிணையங்கள் சந்தை, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல், கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமை மற்றும் வெளிநாட்டு செலாவணி தொடர்பான ஒழுங்குவிதிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக கல்வியறிவுசார் நிகழ்ச்சி திட்டங்களும் நடாத்தப்பட்டன. இதன்படி பலதரப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதான 103 விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் 22,001 பங்குபற்றுநர்களுக்கு நடாத்தப்பட்டன. 2019 சனவரி காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஈகோன் ஐகோன் வினாடிவினா போட்டிக்கான ஆரம்பகட்ட எழுத்துப் பரீட்சைகள் பிரதேச அலுவலகங்களால் அவற்றிற்குட்பட்ட பிரதேசமட்டத்தில் நடாத்தப்பட்டன. மேலும், இவ் ஆண்டில் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் கடன் கேள்வி ஆய்வு, வாடிக்கையாளர் வரைவு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் நிதியியல் வசதிக்கு உட்படுத்தல் போன்றனவற்றை நடாத்தியது. பிரதேச ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் விசேட நிகழ்ச்சிகளில் பிரதேச முகாமையாளர், ஏனைய அலுவலர்கள் மற்றும் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலர்களும் பங்குபற்றினர்.

### 24. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல்

2017 யூன் 16 ஆம் திகதி இடம் பெற்ற 21/2017ஆம் இலக்க நாணயச்சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தினுள் தொழிற்பட்டு வந்த நடைமுறைப்படுத்தற் பிரிவினை மாற்றியமைத்ததன் மூலம் 2018.01.01 இல் இருந்து நடைமுறைக்கு வரும் விதத்ததில் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் நிறுவப்பட்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் தொழிற்பட்டு வந்த வைப்புக் காப்புறுதிப்பிரிவும் கூட தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது.

இடர்பாட்டு நிலையிலுள்ள நிதியியல் நிறுவனங்களைத் தீர்மானித்தல், அங்கீகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட திட்டங்கள் உள்ளடங்கலாக நிதித் தொழில் சட்டம் மற்றும் வங்கித் தொழிற்சட்டத்தின் தொடர்புடைய ஒழுங்குவிதி ஏற்பாடுகளுக்கு மாறாக நடந்து கொள்ளும் நிறுவனங்களின் அலுவலர்களிற்கு எதிராக விசேட விசாரணைகளை நடாத்துதல் ஆகியன தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களாக உள்ளன. இக்குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு திணைக்களமானது அதற்கு ஒப்படைக்கப்பட்ட மையத் தொழிற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம், நடைமுறைப்படுத்தல் மற்றும் வழக்குத் தொடர்தல், விசேட விசாரணைகள், வைப்புக் காப்புறுதி மற்றும் நிர்வாகம் என 5 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

#### 24.1. இடர்பாட்டு நிலையிலுள்ள நிதி நிறுவனங்கள் பற்றிய தீர்மானங்கள்

தெளிவான சட்ட வலுவூட்டலுடன், மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பிலும் தீர்மானப் பொறிமுறையை உள்ளடக்குவதற்கு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களமானது அனைத்தையும் உள்ளடக்கிய தீர்மானமெடுத்தற் கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்யும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. தீர்மான அதிகாரம் மற்றும் அதன் தீர்மான வலு குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்கனவேயுள்ள ஒழுங்குபடுத்தப்படுத்தல் கட்டமைப்பினுள் இது முதலில் அபிவிருத்தி செய்யப்படும். தற்போது பெரும்பாலும் அனைத்துத் தீர்மான அதிகாரங்களும் தொடர்புடைய ஒழுங்குபடுத்துனர்களுக்கு அதாவது தொடர்பான சட்டவாக்கங்களின் படி உரிமம் பெற்ற வங்கிகள் விடயத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களப்பணிப்பாளர் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் விடயத்தில் வங்கியல்லா மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

#### 24.2. தடை செய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் அங்கீகாரமளிக்கப்படாத வைப்புக்களை எடுக்கும் நிறுவனங்கள் தொடர்பிலான அமுலாக்கல் நடவடிக்கைகள் மற்றும் விசேட விசாரணைகள்

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் அமுலாக்கல் தொழிற்பாடுகள் நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையிலான உள்ளக ஏற்பாடுகள் உள்ளடங்கலாக நாணயச்சபையால் அனுமதியளிக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறைளின் கீழ் நடாத்தப்படுகின்றன. அதன்படி அங்கீகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மீதான விசாரணையை நடாத்துவதற்காக, 2011 ஆம் ஆண்டின் 42 ம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின்42(1) ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் திணைக்களப்பணிப்பாளர் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்களுக்கு அதிகாரமளித்துள்ளார். தடை செய்யப்பட்ட திட்டங்கள் மீதான விசாரணைகளை நடாத்துவதற்கு ஆளுனர் 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் கீழ் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்களை நியமித்திருக்கிறார்.

தடைசெய்யப்பட்ட திட்டமெனக் குறிப்பிட்ட திட்டங்களின் நடத்தை மீது தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்கள் 04 விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்கள். நாணயச்சபையின் தீர்மானத்துடன் இரண்டு விசாரணை அறிக்கைகளும் வழக்குத் தொடுப்பதற்காக சட்டமாஅதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் தடை செய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் ஏனைய இரண்டு விசாரணைகளுக்கு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள அலுவலர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உதவியதோடு நிறைவு செய்யப்பட்ட விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அங்கீகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் ஒரு நிறுவனத்தின் மீதான விசாரணை முடிவடைந்ததைத் தொடர்ந்து நாணயச்சபையின் வழிகாட்டல் மற்றும் தீர்மானங்களுடன் இணங்கிச் செல்வதில் தோல்வி கண்ட கம்பனியின் பணிப்பாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையையும் ஆரம்பித்தது. கம்பனியின் பணிப்பாளர் ஒருவர் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதோடு மேலதிக விசாரணைகளை நடாத்தமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் பணித்தது.

தடுப்பு வழிமுறையொன்றாக அங்கீகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் கிராமிய சமூகங்களிடையிலான நிதிசார் அறிவை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தல் மற்றும் வழக்குத் தொடர்தல் பிரிவு கிரமமான அடிப்படையில் நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகிறது. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பாதுகாப்புப்படையின் உத்தியோகத்தர்கள் என நாடு முழுவதும் 26 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் நடாத்தியது.

அட்டவணை II - 31
விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| இலக்குக்குழு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்கள் | 19 | 2,508 |
| பாடசாலை மாணவர்கள் | 05 | 401 |
| பாதுகாப்புப்படை உத்தியோகத்தர்கள் | 02 | 150 |
| மொத்தம் | 26 | 3,059 |

### 24.3. இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் நிர்வாகம்

2019 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு, இத் திட்டமானது ஏறத்தாழ ரூ 62.03 பில்லியன்கள் (கணக்காய்வு செய்யப்படாத) மொத்த நிதியத்துடன் 74 உறுப்பு நிறுவனங்களை திட்டம் உள்ளடக்கியுள்ளது. அரச பிணையங்களில் நிதியம் மூலமான முதலீடுகள் மற்றும் மறுசீரமைப்புக்கான திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ் 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் என்பவற்றின் ஏட்டுப்பெறுமதிகள் 2019 திசெம்பர் 31இல் முறையே ரூ 65.4 பில்லியன் மற்றும் ரூ 1.9 பில்லியன்களாக இருந்தன. இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் நிதியியலின் முக்கிய பண்புகள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 32**
**இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் நிதியியல் முக்கிய பண்புகள்.**

| விடயம் | தொகை (ரூ.மில்லியன்கள்) | |
|---|---|---|
| | 2018.12.31 இல் உள்ளவாறு | 2019.12.31 இல் உள்ளவாறு* |
| நிதியின் அளவு | 51,875 | 62,030 |
| மொத்த வருமானம் | 14,024 | 15,830 |
| மொத்த செலவினம் | (3,470) | (1,210) |
| வருடத்திற்கான இலாபம் (வரிக்கு முன்னரானது) | 10,554 | 14,620 |
| அரச பிணைகளில் முதலீடு | 49,844 | 65,452 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் (தேறிய ஏற்பாடுகள்) | 1,672 | 1,346 |
| ஏனைய முற்றுமடக்கிய வருமானங்கள் | (1,528) | 2,663 |

* தற்காலிகமானவை

(அ) உடனடியாக முற்போந்த நிதியியல் ஆண்டின் முடிவில் மூலதனப் போதுமை விகிதம் 14 சதவீதத்தினை அல்லது அதற்கு மேல் பேணும் உரிமம் பெற்றவங்கிகள், அனைத்துத் தகுதிவாய்ந்த வைப்புக்களின் மொத்தப் பெறுமதியில் ஆண்டிற்கு 0.10 சதவீத கட்டணம் ஒன்றைச் செலுத்துமாறு வேண்டப்பட்டன.மேலும் ஏனைய வங்கிகளுக்கு வருடாந்தம் 0.125 சதவீதகட்டணம் அறவிடப்பட்டது. உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகளுக்கான பிரயோகிக்கத்தக்க கட்டணம் ஆண்டிற்கு 0.15 சதவீதமாக இருந்தது. உறுப்பு நிறுவனங்களிடமிருந்தான 2019ஆம் ஆண்டிற்கான கட்டணங்கள் மற்றும் தண்டப்பணங்கள் ரூ. 9.2 பில்லியன்களாக அமைந்தன.

(ஆ) 2018 சனவரி 01 இல் இருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் வைப்பாளரொருவருக்கான காப்புறுதி உள்ளடக்கம் ஒரு நிறுவனமொன்றிற்கு ரூ. 600,000 ஆகும்.

### 24.4. இடர்பாட்டு நிலையிலுள்ள நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்.

'சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பீஎல்சி' (CIFL), 'த ஸ்ராண்டெட் கிறெடிற் பினான்ஸ் லிமிடெட்' (TSCFL) மற்றும் 'ரீகேஸ் பினான்ஸ் லிமிடெட்' (TKSFL) ஆகிய உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை முறையே 2018.03.05, 2018.07.25 மற்றும் 2019.09.19 இல் இருந்து நடைமுறைக்கு வரும் விதத்ததில் இரத்துச் செய்வதற்கான ஒப்புதலை நாணயச்சபை வழங்கியது. அதற்கிணங்க, 'சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பீஎல்சி' மற்றும் 'த ஸ்ராண்டெட் கிறெடிற் பினான்ஸ் லிமிடெட்' ஆகியவற்றின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் முறையே 2018.08.27 மற்றும் 2019.01.25 இலிருந்து இலங்கை வைப்புக்காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஆரம்பமானது. அத்துடன், தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள கோரல் முறைமை(ரெட் கிளைம் ஸிஸ்ரெம்) வருடத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டு இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தால் இழப்பீட்டுக் கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தால் 'சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பீஎல்சி' வைப்பாளர்கள் 3,024 பேருக்கும் 'த ஸ்ராண்டெட் கிறெடிற் பினான்ஸ் லிமிடெட்' வைப்பாளர்கள் 2,309 பேருக்கும் என முறையே 1271.40 மில்லியன்கள் மற்றும் 947.35 மில்லியன்கள் பெறுமதியிலான இழப்பீடுகளைச் செலுத்தக்கூடியதாகவிருந்தது. 'ரீகேஸ் பினான்ஸ் லிமிடெட்' உடைய வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு 2020 சனவரி இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

## 25. இடர் நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை நோக்கங்களினை நடைமுறைப்படுத்துகின்ற போது பல்வேறு வகையான நிதியியல் மற்றும் நிதி சாரா இடர் நேர்வுகளை எதிர்நோக்குகின்றது. இத்தகைய ஏதாயினும் இடர் நேர்வுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவை மத்திய வங்கியின் நிதியியல் நிலைமை மற்றும் நற்பெயரினை பாதிப்படையச் செய்வதனால் முறையாக வடிவமைக்கப்பட்ட இடர் நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மத்திய வங்கிக்கு முக்கியத்துவமுடையதொன்றாகக் காணப்படுகின்றது.

புதிய இடர் நேர்வு முகாமைத்துவகட்டமைப்பிற்கு ஏற்ப, இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி முழுவதற்கும் இடர் நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை அமைத்து, இலங்கை மத்திய வங்கிக்கான இடர் நேர்வு முகமதுவாக் கொள்கை அறிக்கை ஒன்றினை தயாரித்தது. இச் செயற்பாட்டில், பல்வேறு பங்குதாரர்களுக்கிடையில் தெளிவான பொறுப்புடமையுடன் இடர் நேர்வு உரிமை மற்றும் முகாமைத்துவத்தினை நியமிக்கின்ற வேளை, இடர் நேர்வுகளை சமாளிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிலைகளையும் வழிகாட்டுதல்களையும் இலங்கை மத்திய வங்கி பின்பற்றுகின்றது.

### 25.1 நிதி சாரா இடர் நேர்வுகள்

இலங்கை மத்திய வங்கியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற பிரதான முழு வங்கிக்குமான செயற்பாட்டு இடர் நேர்வுகளினை தீர்மானிப்பதற்கு இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவத்திற்கிடையில் ஓர் ஆய்வினை நடாத்துகின்றது. இவ் ஆய்வின் பெறுபேறுகள்,நிறுவனத்தினை பாதிக்கும் பிரதான செயற்பாட்டு இடர் நேர்வுகளினை முன்னுரிமைப் படுத்துவதற்கு உதவுகின்ற,இலங்கை மத்திய வங்கியினுடைய செயற்பாடு இடர் நேர்வு வகைபிரித்தலை திருத்தியமைப்பதற்கு பயன்படுத்தப்படுவதுடன் முகாமைத்துவத்தின் கவனத்தினையம் ஈர்க்கின்றது.

வங்கியினுள் இடர் நேர்வு கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதற்கு இடர் நேர்வு முகாமைத்துவ திணைக்களம் ஆண்டு காலப்பகுதியில் பல இடர் நேர்வு விழிப்புணர்வு அமர்வுகளினைபல்வேறுபட்ட மன்றங்களில் இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் அலுவலகர்களோடும் மற்றும் தேவைப்படுகின்ற போது வெளியக வளவாளர்களின் ஈடுபாட்டோடும் இலங்கை மத்திய வங்கியின் அலுவகர்களுக்காக நடாத்துகின்றது.

செயற்பாட்டு இடர் நேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டினை வலுப்படுத்தும் நோக்குடன் 2019 இல் இடர் நேர்வு முகாமைத்துவ திணைக்களம் உலக வங்கியினுடைய செயற்பாட்டு இடர் நேர்வு குழுவுடன் நெருக்கமாக வேலைசெய்ததுடன் செயற்பாட்டு இடர் நேர்வுகளினை முகாமைத்துவம் செய்வதற்கான ஏற்கனவே தயாரிக்கப்பட்ட இடர் நேர்வு ஆளுகை கட்டமைப்பினையும் முறைமையினையும் மீளாய்வு செய்தது. நிதிசார இடர் நேர்வுகளினை இனங்காணல், மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றுடன் தொடர்புபட்ட குறிப்பிட்ட படிமுறைகள், ஆபத்து மதிப்பீட்டு அளவுகள் மற்றும் செயற்பாட்டுஇடர் நேர்வு வகை பிரித்தல்என்பனவற்றைபூரணப்படுத்துவதற்கு உலக

வங்கி உதவியது. அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் தெரிவு செய்யப்பட்ட இரண்டு அடிப்படை பிரிவுகளிற்கான செயற்பாட்டு இடர் நேர்வு மதிப்பேடுகளினை மேற்கொண்டதுடன் அனைத்து முக்கியமான அலுவலக அங்கத்தவர்களுக்கும் செயற்பாட்டு இடர் நேர்வு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியினையும் வழங்கினார்கள்.

இடர் நேர்வு முகாமைத்துவ திணைக்களம் இடர் நேர்வு பதிவுகளினை தயாரிப்பதனை எளிதாக்குவதற்காக ஏனைய திணைக்களங்களோடு இணைந்து வேலை செய்ததுடன் இவ் இடர் நேர்வு பதிவுகளினை தயாரிப்பதிலிருந்து படிப்படியாக வெளியேறும் நோக்கில் எக்செல் (Excel) அடிப்படையிலான இடர் நேர்வு பதிவு வடிவத்தினை செம்மைப்படுத்தியது. இச் செயன்முறை நிறைவு பெற்றவுடன் திணைக்கள செயற்பாடுகள் தொடர்பில் உணர்வுபூர்வமானதும், தெளிவானதுமான இடர் நேர்வு தீர்மானங்களினை முகாமைத்துவம் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இடர் நேர்வு முகாமைத்துவ திணைக்களம் தகவல் தொழில் நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் ஓர் தன்னியக்க சம்பவ அறிக்கை முறைமையினை ஒத்தோபர் 1, 2019 ஆம் ஆண்டு நிர்மாணித்ததுடன் இது இலங்கை மத்திய வங்கியின் அனைத்து மடடங்களிலுமுள்ள அலுவலகர்களாலும் அணுக்கக்கூடியதாக உள்ளது.பாதிப்பிற்குட்படக்கூடிய பகுதிகளினையும் சாத்தியமான போக்குகளினையும் அடையாளம் காண்பதற்கும் சரியான நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதனுடன் தொடர்புடைய முன்னேற்றத்தினை கண்காணிக்கும் வேலை சம்பவங்களின் ஓர் மத்திய களஞ்சியதினை உருவாக்குவதற்கும் வசதியளிப்பதற்கும் சம்பவங்களின் அறிக்கையிடுதலினை தூண்டுவதற்கும் இந்த முறைமை எதிர்பார்க்கப் படுகின்றது.

### 25.2 நிதியியல் இடர் நேர்வுகள்

இரண்டாம் கட்ட பாதுகாப்பு மாதிரியின் கீழ் இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது நிதியியல் இடர் நேர்வுகளினை சுயாதீனமாக கண்காணித்தல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் அறிக்கையிடல் என்பனவற்றை மேற்கொள்வதோடு பன்னாட்டு ஒதுக்குகளினதும், இலங்கை மத்திய வங்கியின் உள்ளக முதலீட்டு நித்தியங்களினதும் அதே போன்று அரசிற்கான முகவர் தொழிற்பாடாக மேற்கொள்ளப்படும் ஊழியர் சேமலாபா நிதியத்தினதும் நாணயச் சபையால் அனுமதியளிக்கப்பட்ட முதலீட்டுக்கு கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களோடு இணங்கி நடாத்தலை உறுதி செய்கின்றது.

இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் பன்னாட்டு ஒதுக்குகளினதும், இலங்கை மத்திய வங்கியின் உள்ளக முதலீட்டு நிதியங்களினதும் ஊழியர் சேமலாபா நிதியத்தினதும் மூலோபாய சொத்து ஒதுக்கீடுகளினையும் முதலீட்டுக்கு கொள்கைகப் பத்திரங்களினையும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீளாய்வு செய்தது.மேலும், இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் அனைத்து அத்தியாவசிய இடர் நேர்வு அளவுருக்களினை அமைப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட நிததியங்களுக்கான முதலீட்டு வழிகாட்டுதல்களினை மீளாய்வு செய்யத் தொடங்கியுள்ளது. இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இடர் நேர்வுக் குறிகாட்டிகளினை அடிக்கடி பகுப்பாய்வு செய்வதன் மூலம் சந்தை மற்றும் கடன் இடர் நேர்வுகளினை தொடர்சியாக கண்காணிக்கின்றது.மேற்கூறப்பட்டவற்றிற்கு மேலதிகமாக இடர் நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் பன்னாட்டு ஒதுக்குகளினதும், இலங்கை மத்திய வங்கியின் உள்ளக முதலீட்டு நிதியங்களினதும் அதே போன்று ஊழியர் சேமலாபா நிதியத்தினதும் மூலோபாய சொத்து ஒதுக்கீடுகள், முதலீடு கொள்கைப் பத்திரங்கள், முதலீட்டு வழிகாட்டுதல்கள் மற்றும் கடன் இடர் நேர்வு முகாமைத்துவ கொள்கைகள் என்பனவற்றில் வழங்கப்பட்ட அளவுஎல்லைக் கட்டமைப்புக்களை பின்பற்றுகின்றனவா என்பதனை வழக்கமாக கண்காணிக்கின்றது.இவ்வனைத்து இடர் நேர்வு மதிப்பீடுகளும் இணக்கமற்ற விடயங்களும் மாதாந்தம் நடாத்தப்படுகின்ற பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீட்டு மேற்பார்வை குழு, உள்ளக முதலீட்டு நித்தியங்களின் முதலீட்டு மேற்பார்வை குழு மற்றும் ஊழியர் சேமலாபா நிதியத்தின் முதலீட்டு மேற்பார்வை குழு என்பனவற்றின் மாதாந்த முதலீட்டு மேற்பார்வைக் குழுக் கூடங்களில் அறிக்கையிடப்படுகின்றது.மேலும், சபை இடர் நேர்வு மேற்பார்வைக் குழுவானது தொடர்புடைய கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களினை நாணயச் சபையின் அனுமதிக்காக சிபாரிசு செய்வதற்கு மேலதிகமாக முதலீட்டு மேற்பார்வைக் குழுக் கூடங்களில் அறிக்கையிடப்பட்ட பிரதான இடர் நேர்வு விடயங்களினையும் இணக்கமற்ற விடயங்களினையும் மீளாய்வு செய்கின்றது. அறிக்கையிடப்பட்ட இடர் நேர்வுகள்/ இடர் நேர்வு அளவுருக்களின் மாற்றங்கள் மற்றும் இணக்கமற்ற விடயங்கள் காலாண்டுஅடிப்படையில் நனையச்சபைக்கு அறிக்கையிடப் படுகின்றது.

## 26. செயலகம்

செயலகத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலில் நிறுவப்பட்ட திணைக்களங்களில் ஒன்றாகும். செயலகத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளானவை இலங்கை மத்திய வங்கியினுடைய அனைத்து அலுவலக நிருவாகத்திலும் ஈடுபடல், கொள்வனவு முகாமைத்துவம், ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல், வெளிநாட்டு கற்கைகள் மற்றும் பயிற்சிகளுக்காக வசதியளித்தல், அளவீட்டுச் சபையினை நடாத்துதல், ஆளுநருக்கு செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்குதல் என்பனவாகும்.

### (அ) அனைத்து அலுவலக நிருவாகம்

விதிமுறைகளைக் கையாளுதல், பொறுப்புக் கூறல், இடர் முகாமைத்துவம் மற்றும் சிறந்த ஆளுகையினுடைய ஏனைய பிரதான பண்புக் கூறுகள் தொடர்பில் அனைத்து அலுவலக நிருவாகப் பணியினை மேற்கொண்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆதனங்கள் மற்றும் இடர்நேர்வு விடயப்பரப்புக்களை இனங்காணல் தொடர்பான அளவீடொன்றினை நடாத்தியதன் மூலம் செயலகமானது இலங்கை மத்திய வங்கியினுடைய அனைத்து ஆதனங்களையும் உள்ளடக்குகின்ற கூட்டுக் காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக்கொண்டது. செயலகத் திணைக்களமானது அதன் அஞ்சல் முகாமைத்துவ பணிகளினூடாக இலங்கை மத்திய வங்கிக்கு உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அஞ்சல்களை வசதிப்படுத்தியது. திணைக்களமானது அதன் காகிதாதி முகாமைத்துவ முறையினூடாக திணைக்களங்களுக்குத் தேவையான போதியளவான காகிதாதிப் பொருட்கள் களஞ்சியத்தில் கிடைக்கப் பெறுவதனையும் வழங்கப்படுவதனையும் உறுதி செய்தது. இலங்கை மத்திய வங்கிக்கென பலதரப்பட்ட நிகழ்வுகளை ஒழுங்கமைத்தலும் திணைக்களத்தின் மற்றுமொரு முக்கிய பணியாக அமைந்திருந்தது. மேலும், செயலகமானது ஆண்டு காலப்பகுதியில் நாணயச் சபை சார்பாக பணி வழங்குனர்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டது. இதற்கு மேலதிகமாக செயலகத் திணைக்களமானது, ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினுடைய ஊழியர் சங்கங்கள், கழகங்கள், மற்றும் அமைப்புக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுடன் தொடர்புடைய தொடர்புகளைக் கையாண்டது. இதற்குப் புறம்பாக, பகிரங்க அறிவித்தல்கள், பொதுவான மின்னஞ்சல் சுற்றறிக்கைகள் போன்றவற்றிற்கான அனுமதிகளையும் செயலாளர் வழங்கியிருந்தார்.

### (ஆ) கொள்வனவு முகாமைத்துவம்

தேசிய பெறுகை வழிகாட்டல்களுடன் பரந்தளவில் இணங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் கையேட்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பெறுகை நடைமுறைகளுக்கமைவாக செயலகத் திணைக்களமானது, 2019 காலப்பகுதியில் விலைக்கோரல் நடைமுறைகளூடாகவும் அதேபோன்று விலைக்கோரல் நடைமுறைகளின்றியும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொண்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் நாணயச் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அதனடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைச் செயன்முறையானது ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்கமைவாக கொண்டு நடாத்தப்பட்டது.

செயலகத் திணைக்களமானது உலக வங்கியினுடைய நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவுகளில் ஈடுபட்டது.

**(இ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்**

செயலகத் திணைக்களமானது சுமார் 2,300 பயனாளிகளை ஈடுபடுத்துகின்ற வங்கியின் ஓய்வூதிய நிதியத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய தொடர்புகளை தொடர்ந்தும் நிருவகித்தது. அதற்கமைய, செயலகத் திணைக்களமானது பணிக் கொடைகள் திரட்டிய ஓய்வூதியங்களைக் கொடுப்பனவு செய்தல், சேமநிதியங்களை விடுவித்தல், மாதாந்த ஓய்வூதியங்கள், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு என்பவற்றில் ஈடுபட்ட அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் குறித்துரைக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளுக்கிணங்க அரையாண்டு அடிப்படையில் உயிர் வாழ்வதற்குச் சான்றாக சான்றிதழ்களை சேகரித்தது.

**(ஈ) வெளிநாட்டு கற்கைகள் மற்றும் பயிற்சிகளுக்கு வசதியளித்தல்**

2019 காலப்பகுதியில் செயலகத் திணைக்களமானது ஊழியர்களுக்கான பட்டப்பின்படிப்புக் கற்கைகளையும் குறுகியகாலப் பயிற்சிகளையும் மூத்த முகாமைத்துவத்திற்கான கடமைசார்ந்த வெளிநாட்டுப் பயணங்களையும் வசதிப்படுத்தியது. இது தொடர்பில் செயலகத் திணைக்களமானது பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய பயிற்சி நிறுவனங்களுக்கும் அத்துடன் மேற்குறித்த நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணித்த அலுவலர்களுக்கும் தொடர்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டது. இதற்கு மேலதிகமாக, வீசாக் கடிதங்களை வழங்குதல் மற்றும் சேமநிதிய நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்கள், விமானப் பயணச்சீட்டு வழங்கல் மற்றும் பயணக் காப்புறுதி என்பனவற்றை வழங்குவதனூடாக வீசா பெற்றுக்கொள்வதற்காகவும் வெளிநாடுகளுக்குச் சென்ற அலுவலர்களுக்கு செயலகத் திணைக்களம் உதவியளித்தது.

**(உ) அளவீட்டுச் சபையினை நடாத்துதல்**

அளவீட்டுச் சபை என்பது யாதெனில் இலங்கை மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் அதனுடைய நீண்டகாலச் சொத்துக்களினுடைய நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கான முறையாகும். பாவனைக்குதவாத, சேதமடைந்த, திருத்தமுடியாத, பழுதுபார்க்க முடியாத மற்றும் அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் ஏனைய நிலையான சொத்துக்களை விற்று அகற்றுவதற்காக அளவீட்டுச் சபை நடாத்தப்பட்டது. விற்று அகற்றல் முகாமைத்துவச் செயன்முறையானது வங்கியிலுள்ள அத்தகைய சொத்துக்கள் பற்றிய அளவீடு மற்றும் அளவீட்டுச் சபையினால் பரிந்துரைக்கப்பட்டவாறு பொருட்களை விற்று அகற்றுதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

**(ஊ) ஆளுநருக்குத் தேவையான செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்குதல்**

ஆளுநருக்கான செயலக மற்றும் உபசரணை உதவியினை ஆளுநரின் செயலகம் வழங்கியது. வழங்கப்பட்ட செயலக உதவிகளாக சந்திப்புக்கள் மற்றும் கூட்டங்களை அட்டவணைப்படுத்தல், ஆளுநரின் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள், பேச்சுக்கள், குறிப்புக்கள், கட்டுரைகள் போன்றவற்றினை தொகுத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. உபசரணை உதவியானது ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்களை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தல், ஆளுநரால் விருந்தளிக்கப்பட்ட உத்தியோகபூர்வ நிகழ்வுகள் மற்றும் ஆளுநரின் அத்துடன் வங்கியினது விசேட அதிதி வருகைதருநர்களுக்கு வழங்கப்பட்ட உபசரணைச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

## 27. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது கீழே தொகுக்கப்பட்டவாறு, வருடம் முழுவதும் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், வருகை தருநர்கள், சொத்துக்கள் மற்றும் கொண்டு செல்லப்படுகின்ற நாணயங்கள் என்பனவற்றைப் பாதுகாத்துக்கொள்கின்ற அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்ட அதேவேளை முறைமைகளை மேம்படுத்தல் மற்றும் ஆளணிப் பயிற்சிகளிலும் கவனம் செலுத்தியது.

### 27.1. முறைமை மேம்பாடுகள்

தலைமை அலுவலகத்திலும் மத்திய வங்கிக்கு உரித்தான ஏனைய பணிமனைகளிலும் அமைந்துள்ள அனைத்து தீயணைப்பு உபகரணங்களினதும் செயற்பாட்டுத் தகுதியானது ஆண்டு முழுவதும் கிரமமான அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டு, பேணப்பட்டு மற்றும் பதிலீடு செய்யப்பட்டன. மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியின் தீயணைப்பு முறைமை நேர்த்தியாக இருக்கின்றமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கொழும்பு மாநகர சபையினுடைய தீயணைப்பு பணிகள் திணைக்களத்தினால் தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு ஆய்வு நடாத்தப்பட்டது. தொடர் முறையிலிருந்து டிஜிட்டலிற்கு கண்காணிப்புக் கமராக் கருவி முறைமை மேம்படுத்தல்கள், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் உதவியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் நிறுவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களங்களினால் நடாத்தப்பட்ட தடங்கலற்ற அனைத்து வியாபார ஒத்திகைகளிலும் பங்குபற்றி ஒருங்கிணைத்தது.

### 27.2. பயிற்சி

**(அ) தீயினைத் தடுத்தல், தீயணைப்பு மற்றும் முதலுதவி நிகழ்ச்சித்திட்டங்கள்**

கொழும்பு மாநகர சபையினுடைய தீயணைப்புப் பணிகள் திணைக்களம், சென். ஜோன் அம்புலன்ஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பனவற்றின் உதவியுடன் 2019ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியினுடைய அனைத்துத் திணைக்களங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட தீயணைப்புப் பொறுப்பாளர்களுக்காக தீயினைத் தடுத்தல், தீயணைப்பு, முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இரண்டு நாள் விரிவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. மேலதிகமாக, விமானப்படை மற்றும் கொழும்பு தீயணைப்புப் படையின் உதவியுடன் தலைமை அலுவலகத்தில் அனைத்து ஊழியர்களுக்கும் தீயினைத் தடுத்தல் மற்றும் தீயணைப்பு பயிற்சிகள் தொடர்பாக 2019 மார்ச்சில் செயல்முறை விளக்கமளிக்கப்பட்டது.

**(ஆ) திறன்களையும் தகைமையினையும் கட்டியெழுப்புதல்**

பாதுகாப்பு அலுவலர்களினுடைய திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது அதன் ஊழியர்களுக்காக பல்வேறுபட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒழுங்கமைத்தது. இத்தகைய கல்விசார் நிகழ்ச் சித்திட்டங்கள், நிறைவடையாதுள்ள முக்கிய பாதுகாப்பு விடயங்கள், தகவல்தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் கவனிப்புக்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன.

**(இ) ஆயுதங்களை கையாளுதல் மற்றும் நேரடி துப்பாக்கி சுடுதல்**

ஆயுதங்களை கையாளுதல் மற்றும் நேரடி துப்பாக்கிச் சுடுதல் போன்றவை இறுதிக் காலாண்டில் இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் அனைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்காகவும் நடாத்தப்பட்டது.

**(ஈ) புதிய ஆட்சேர்ப்புக்கள்**

2019ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒன்பது பாதுகாப்பு பணியாளர்களின் அறிமுக பயிற்சியானது ஆண்டுகாலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டது.

### 27.3. கண்காணிப்பு நடவடிக்கைகள்

பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது 42,004 நாணயப் பெட்டிகளைக் கொண்டு செல்வதற்கும், இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு வருகைதந்த 99,400 விருந்தினர்களைப் பரிசோதிப்பதற்கும் வசதியளித்தது.

## 28. அலுவலர் பணிகள் முகாமைத்துவம்

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களமானது ஆண்டு முழுவதும் அனைத்து பயன்பெறுநர்களுக்கும் வினைத்திறனுடனும் பயனுறு விதத்திலும் நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இத்தகைய நலன்புரி வசதிகள், அலுவலகர் வீடமைப்பு (ஈட்டு) கடன்திட்டம், சேம நிதியக் கடன் திட்டம் மற்றும் அலுவலர் நலத்திட்டம் என்பவற்றின் கீழ் கடன்களை வழங்குதல் தொழில்தருநர் பங்களிப்பு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் செலவுகளை மீளளித்தல் மற்றும் மருத்துவ நிலையம் மற்றும் உணவக வசதிகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. 2019 இறுதியில் உள்ளவாறு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அவர்களின் பதிவுசெய்யப்பட்ட தங்கியிருப்போர் ஆகியோரை உள்ளடக்கி ஏறத்தாழ 10,700 பதிவுசெய்யப்பட்ட நன்மை பெறுநர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம், வீடமைப்புக் கடன்கள் (273), சேம நிதியக் கடன்கள் (1,014) ஊர்திக் கடன்கள் (197), கணனிக் கடன்கள் (3), கெற் டி கடன்கள் (73) மற்றும் கெற் பி கடன்கள் (188) உள்ளடங்களாக அலுவலர் நன்மைத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கி 1,748 கடன்களை வழங்கியது. கடன் கண்காணிப்பு முறைமை, ஊழியர்களுக்கான கடன் பகிர்ந்தளிப்புகளின் செயல்திறன்மிக்க மேற்பார்வையினை இயலச்செய்துள்ளது.

உண்மைச் சொத்துகளின் சந்தை விலை அதிகரிப்பு மற்றும் நிருமாணச் செலவுகளின் அதிகரிப்புக்களைக் கருத்திற் கொண்டு வீடமைப்பு கடன்களுக்காக வழங்கப்படும் கடன்தொகை 2019.03.01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ரூபா 7,500,000 வரை அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய, ஏற்கனவே உள்ள வீட்டினை திருத்துதல் மற்றும் விரிவுபடுத்தலுக்கான தொகைகளும் அதிகரிக்கப்பட்டன.

உணவகத் தொழிற்பாடுகளைச் சீரமைக்கும் அதேவேளை உற்பத்தித் திறனையும் செலவுச் சிக்கனத்தினையும் அதிகரிக்கும் பொருட்டு அலுவலக உணவக வசதிகள் பணிகள் 2019.09.01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் வெளியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களமானது மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் அனைத்துப் பதிவுசெய்யப்பட்ட நன்மைபெறுநர்களினாலும் உறப்பட்ட மருத்துவச் செலவுகளைத் தொடர்ந்தும் மீளளித்தது. மருத்துவச் செலவின் மொத்த மீளளிப்புத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் 12 சதவீதத்தினால் அதிகரித்தது. நாணயச் சபையின் அனுமதியுடன் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் மருத்துவ செலவினத்தின் மீளளிப்பு எல்லைகள் வரையறைகள் 2019.03.01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அதிகரிக்கப்பட்டன. வெளியிலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சேவை நேரங்களின் போது இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்காக மருத்துவ நிலைய வசதிகளை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. மருத்துவ நிலையத்தில் மருத்துவப் பரிசோதனைகளும் ஆய்வுகூடச் சோதனைகளும் நியாயமான கட்டணத்தில் வழங்கப்பட்டன.

அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களமானது முக்கிய சுகாதார விடயங்கள் மீது இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக 4 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை அதாவது "சுக்கிரச்சுரப்பி தொடர்புபட்ட இடர்நேர்வுகளைக் குறைத்தல்", "நவீன உலகில் ஆரோக்கியமான வாழ்க்கையினை எவ்வாறு முன்னெடுப்பது", "உணவு ஊட்டம் பற்றிய புனைக்கதைகளும் நம்பிக்கைகளும்" மற்றும் "பணி வாழ்க்கை மற்றும் அழுத்த சமநிலை" ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

## 29. புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் அதன் தொழிற்பாடுகளைக் காத்திரமான முறையில் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன், இலங்கை மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோள்களான 'பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்' மற்றும் 'நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுதல்' என்பனவற்றினை எய்துவதற்கு தொடர்ந்தும் பங்களித்து வருகிறது. இதற்கமைய 2019ஆம் ஆண்டுப்பகுதியில் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் முதலாந்தர மூலங்களிலிருந்தும் இரண்டாந்தர மூலங்களிலிருந்தும் தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல், வியாபார மனோபாவம், சொத்து விலை மற்றும் கூலி வீத சுட்டெண்களைத் தொகுத்தல், குறுங்கால பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திகளை எதிர்வுகூறல், இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்ற பிராந்திய புள்ளிவிபரங்களைத் தொகுத்தல், தரவு நூலகம், வெளியீடுகள், அறிக்கைகள் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் என்பனவற்றினூடாக தகவல்களை சரியான நேரத்தில் கிரமமாக பரப்புதல் மற்றும் அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

உலகெங்குமுள்ள மற்றைய பல மத்திய வங்கிகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில், பாரம்பரிய அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்காகவும் வசதியளிப்பதற்காகவும் பெரும் தரவுகள் (Big data), பொறிகள் பயில்தல் (Machine learning) மற்றும் தரவு காட்சிப்படுத்தல் (Data visualization) என்பன தொடர்பில் முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவதற்கான திணைக்கள முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னோக்கிய நடவடிக்கைகள் 2019இல் அவதானிக்கப்பட்டன. முக்கிய தரவின் மூலங்களிலொன்றான இணையத்தள தரவு, இவ்வாண்டுப்பகுதியில் சில பயன்மிக்க சுட்டெண்களைத் திரட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம் சொத்து வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள விலைகள் சொத்து விலைச் சுட்டெண்களைத் தொகுப்பதற்கு பயன்படுத்தப்பட்டதுடன் சிறப்பு அங்காடிகளின் வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள விலைகளின் தரவு, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது செலாவணி வீதங்கள் சுமத்தப்படுவதனை பரீட்சிப்பதற்காக சிறப்பு அங்காடியின் இறக்குமதி விலைச் சுட்டெண்னைத் தொகுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. பணவீக்க எதிர்வுகூறலை மேலும் மேம்படுத்தும் விதத்தில் திணைக்களம் எந்திரங்களைப் பயன்படுத்துகின்ற உத்திகள் பற்றி பரீட்சித்தது. மேலும், எதிர்வினையாற்றும் நடைமுறைச் செயன்முறையின் பயன்பாடு உள்ளிருக்கும் விடயங்களை இலகுவாக சுத்திகரிக்க இயலுமைப்படுத்தியதுடன் புள்ளிவிபரப் பகுப்பாய்வுகளைத் (Interactive dashboards) தொடர்பூட்டுவதும் இவ்வாண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

### 29.1 அளவீடுகள் மற்றும் ஏனைய தரவு மூலங்களினூடாக தரவுகளைச் சேகரித்தல்

(அ) வியாபார அளவீடுகள்

குறுங்கால பொருளாதார அபிவிருத்திகளைக் கண்காணிப்பதற்காக 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளின் முக்கிய குறிக்காட்டிகளுடன் தொடர்பான ஏற்கனவேயுள்ளதும் எதிர்பார்க்கப்படுவதுமான அபிவிருத்திகள் தொடர்பிலான வியாபார மனோபாவங்களின் நொடிப்பொழுதிலான தன்மைகளை

வழங்குகின்ற வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு (Business Outlook Survey - BOS)) காலாண்டு அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீட்டின் இலக்கிடப்பட்ட குடித்தொகையினராக பொருளாதாரத்தின் மூன்று முக்கிய நடவடிக்கைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகளை உள்ளடக்கிய பாரியளவு தொழில்முயற்சிகள் அமைந்திருந்தன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எதிர்வுகூறலில் நேரகாலத்துடனான குறிகாட்டியொன்றாகப் பயன்டுத்தப்படக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளின் உயர் அதிர்வலைகளைக் கொண்டதும் உரிய நேரத்திலுமான குறிக்காட்டிகளாகக் கருதப்படும் தயாரிப்பு, பணிகள் மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (Purchasing Managers' Index - PMI) அளவீடுகள் மாதாந்த அடிப்படையில் நடாத்தப்பட்டது. தயாரிப்பு மற்றும் பணிகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகளின் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக மேல் மாகாணத்தில் முனைப்புப் பெற்று ஒன்று திரண்டு காணப்படுகின்ற பாரிய தொழில்முயற்சிகள் காணப்படுகின்றன. கட்டடவாக்கக் கைத்தொழிலுக்கான அளவீடும் கட்டடவாக்கக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (Construction Industry Development Authority - CIDA) பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முக்கிய கட்டடவாக்க நிறுவனங்களை உள்ளடக்கி மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இச்சுட்டெண்கள் ஆராய்ச்சியாளர்கள், பொருளாதார ஆய்வாளர்கள், கைத்தொழில் நிபுணர்கள் மற்றும் வியாபார தீர்மானங்களை வகுப்போர் ஆகியோரினால் நாட்டின் பொருளாதார நிலைமைகளை மிகச்சிறந்த முறையில் விளங்கிக்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கொடுகடன் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் நிலைமைகள் அளவீடு 2019ஆம் ஆண்டுப் பகுதியிலும் தொடர்ந்தது. கொடுகடன் கேள்வி அளவீட்டினைப் பொறுத்தவரையில், இலக்கிடப்பட்ட குடித்தொகையினராக மேல் மாகாணத்திலும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச செயலகங்களின் பிரசன்னங்களைக் கொண்ட மாகாணங்களிலுமுள்ள பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் காணப்பட்டனர். இவ்வளவீடு அரையாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் பெறுபேறுகள் கொள்கை வகுப்புச் செயன்முறைகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக அறிவிக்கப்பட்டன. நாட்டிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் அனைத்தையுமுள்ளடக்கிய விதத்தில் கொடுகடன் சந்தையின் மீதான அண்மைய அபிவிருத்திகளையும் முன்னோக்கிய தகவல்களையும் பெற்றுக்கொள்ளும் விதத்தில் கொடுகடன் நிரம்பல் அளவீடு வடிவமைக்கப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் அளவீடானது மீளமைக்கப்பட்டு காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்டது. இதன் பெறுபேறுகள் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொள்கை இரண்டினையும் வடிவமைக்கும் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்பவியல் பகுப்பாய்வுகளுக்கு வசதியளித்தது. மேலும், அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் வெளிவாரிப் பயன்பாட்டாளர்களின் நன்மைகருதி இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

சில்லறை வர்த்தகத் துறையில் காணப்படும் அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுவான விற்பனை நிலையங்கள் மற்றும் சிறப்பு அங்காடிப் பிரிவுகளை உள்ளடக்கி இரு வேறுபட்ட அளவீடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. பொதுவான சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான அளவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான குறிகாட்டியொன்றினை அபிவிருத்திசெய்யும் பொருட்டு நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையினால் உள்ளடக்கப்பட்ட சில்லறை வர்த்தக நிலையங்களினூடாக சில்லறை விற்பனை அளவு அளவீடொன்று 2019இல் ஆரம்பிக்கப்பட்டது. நவீன சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் போக்குகளை கண்டறிந்துகொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட சிறப்பு அங்காடி சில்லறை வர்த்தக அளவீடு 2019 இலும் காலாண்டு அடிப்படையில் தொடர்ந்ததுடன் இவ்வளவீட்டினூடாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி காலாண்டு விற்பனைச் செலவுகளின் காலாண்டுச் சிறப்பு அங்காடிச் செலவு கணிக்கப்பட்டது.

கூட்டுறுதி தொடர்மாடிமனைத் துறையின் அபிவிருத்திகளைக் கண்காணிக்கும் பொருட்டு இலங்கையின் கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் சந்தையின் மீதான மூலத்தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2019ஆம் ஆண்டுப்பகுதியில், காலாண்டு அடிப்படையில், கூட்டுறுதி தொடர்மாடிமனை அளவீடொன்று தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. அவ்வளவீடானது முக்கிய தொடர்மாடிமனை அபிவிருத்தியாளர்களையும் உண்மையான விற்பனை விலைகள், கேள்வி, விலையில் ஏற்படும் மாற்றங்களுக்கான காரணம், தற்போதுள்ள மற்றும் இனிவரவிருக்கின்ற வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை, செயற்றிட்டங்களில் தங்குகின்ற மட்டம், வாங்குகின்றவர்களின் சொத்துப்பட்டியல் தகவல்கள் என்பன மீதான தகவல்களையும் உள்ளடக்கியிருக்கிறது. மேலும், முன்னோக்கிய எதிர்கால நோக்கும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வளவீடானது கொள்கை வகுப்புக்களை மேற்கொள்ளுகின்ற செயன்முறைக்கான தகவல்களை வழங்குகிறது.

### (ஆ) பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு

பொருளாதார முகவர்களின் அதாவது கம்பனித் துறை மற்றும் வீட்டுத் துறைகளின் தெரிவுசெய்யப்பட்ட வகைகளிலிருந்தான பணவீக்கத்தின் மீது தற்போதைய மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புக்கள் பற்றிய தரவுகளையும் தகவல்களையும் ஒன்றுதிரட்டுவதற்காக பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் வீட்டுத் துறையின் பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை வலையமைப்பினூடாக தேசிய மட்டத்திற்கு விரிவுபடுத்தப்பட்டது. இவ்வளவீட்டினை மேற்கொண்ட அதேவேளையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு அமர்வுகள் பணவீக்கம் மற்றும் பணவீக்கத்தின் மீதான விழிப்புணர்வில் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதற்கும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மீதான சிறந்த நிறுத்தி முகவர்களைப் புரிந்துகொள்வதற்கும் பங்களித்தன.

### (இ) நாடளாவிய தரவு சேகரிப்பு முறை

நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் தொழிற்பாடுகளுக்காக 2018இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலத்திரனியல் தரவுசேகரிப்புத் தளம் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், வேளாண்மைப் பண்டங்களினதும் கட்டட மூலப்பொருட்களினதும் உற்பத்தியாளர் விலைகள் முறைசாராத் துறை வேலையாட்களின் நாளாந்தக் கூலிகள் மற்றும் பொருட்களின் தெரிவுசெய்யப்பட்ட வகைகளினது சில்லறை விற்பனை அளவுகள் என்பனவற்றிற்கான பொருட்களின் ஒரேமாதிரியான கூடைகளின் சில்லறை விலைகளைச் சேகரிப்பதற்காக 53 ஆசிரியப் பரீட்சகர்களின் ஈடுபாட்டுடன் 2019ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. இது, மத்திய வங்கி உள்ளகக் கொள்கை வகுப்புச் செயன்முறைகளுக்கான உள்ளீடுகளை சரியான நேரத்தில் வழங்குவதனை இயலுமைப்படுத்தியது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறையினூடாகப் பெறப்பட்ட தரவுகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் தனியாகக் காணப்படுகின்ற மற்றும் முரண்பாடான தரவுகளை அடையாளம் காண்பதற்கும் தேவையான போது தேவையான சீர்செய்யும் வழிமுறைகளை எடுப்பதற்காகவும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச

அலுவலகங்களின் உதவியுடன் தளத்திலான அல்லது தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகளை நடாத்தியது. ஆசிரியப் பரீட்சகர்கள் பொதுவாக இழைக்கும் தவறுகளை அவர்களுக்கு புரியச்செய்வதற்காகவும் தரவு சேகரிப்புச் செயன்முறையின் போது ஆசிரியப் பரீட்சகர்களினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளுக்கான தீர்வுகள் பற்றி கலந்துரையாடுவதற்காகவும் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் புள்ளிவிபரத் திணைக்களம் மூன்று பிரதேச ஆய்வரங்குகளை நடாத்தியது. மேலும், தரவு சேகரிப்புச் செயன்முறையின் போது ஆசிரியப் பரீட்சகர்களினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக 2019இல் இ-தொடர்பூட்டல் தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாண்டு காலப்பகுதியில் வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படைகளில் சேகரிக்கப்பட்ட தரவு/ தகவல்கள் விலை அசைவுகள் மற்றும் பணவீக்கங்களை எதிர்வுகூறுவதற்கும், விலைகள் மீதான கொள்கை மாற்றங்களை மதிப்பிடுவதற்கும், விலைகள் மற்றும் கூலிகளில் காணப்படும் பருவகால மாறிகளையும் பிரதேச வேறுபாடுகளையும் பகுப்பாய்வு செய்வதற்காகவும் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் இலங்கை சுபீட்சச் சுட்டெண் என்பனவற்றைத் தொகுப்பதற்காகவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை எதிர்வுகூறுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

மேலும், புறக்கோட்டைச் சந்தை, மரடகஹமுல்ல அரிசிச் சந்தை, தம்புள்ள மற்றும் நரஹென்பிட்டிய சிறப்பு பொருளாதார மையங்கள், நீர்கொழும்பு மற்றும் பேலியகொட மீன் சந்தைகள் என்பனவற்றிலிருந்து நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகள் மீதான தரவுகளை/ தகவல்களைத் திரட்டுவதற்காக நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையினூடாக ஆசிரியரல்லாத தரவு பரீட்சகர்களினுடைய பணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இன்றியமையாத உணவுப் பொருட்களின் விலை அசைவுகள் மீதான முகாமைத்துவத் தகவல் முறைமைகளை வலுப்படுத்துவதற்காகவும் எதிர்வுகூறல் நோக்கங்களுக்காகவும் திணைக்களம் முக்கிய சந்தைகளிலிருந்து இத்தகவல்களைச் சேகரித்தது. மேலும், பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக இவ்விலைத் தரவு இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் சுருக்கமானதொரு வடிவில் நாளாந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு வருகின்றன.

**(ஈ) தொழிற்படைத் தகவல்கள் மற்றும் அரசதுறை தொழில்நிலை அளவீடு**

புள்ளிவிபரத் திணைக்களம் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், தொழில் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் ஏனைய தரவு வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தரவுகள்/ தகவல்களின் மூலம் தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டுத் தொழில்நிலை, தொழிலாளர் உறவு, வேலைநிறுத்தம் மற்றும் தொழிலாளர்சந்தை சீர்திருத்தங்கள் என்பன தொடர்பில் ஒட்டுமொத்த தொழிலாளர் தரவுப் பகுப்பாய்வொன்றினை மேற்கொண்டது. அரச துறைத் தொழில்நிலையில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் கண்டறியும் பொருட்டு அனைத்து அரச துறை நிறுவனங்களையும் உள்ளடக்கிய அரச துறை தொழில்நிலை அளவீடொன்று வருடாந்த அடிப்படையில் நடாத்தப்பட்டது.

**(உ) தேவையின் அடிப்படையிலான அளவீடுகள்**

கிரமமான அளவீடுகளுக்குப் புறம்பாக, இத்திணைக்களம் பொருளாதாரத்தின் மீது அத்துடன்/ அல்லது மத்திய வங்கியின் நடவடிக்கைகளுக்கு முக்கிய துறைகளாக விளங்கக்கூடியவற்றின் மீது கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சடுதியான நிகழ்வுகள்/ அபிவிருத்திகள் தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தேவைகளின் அடிப்படையில் பல்வேறுபட்ட ஏனைய அளவீடுகளையும் மேற்கொள்கிறது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் நாட்டில் நிலவிய எதிர்பாராத நிலைமைகளினால் ஏற்பட்ட பொருளாதார தாக்கங்கள் மீதான தகவல்களை ஒன்றுதிரட்டுவதற்காக தேவையின் அடிப்படையிலான பல அளவீடுகள் நடாத்தப்பட்டன. மேலும், இலங்கை மத்திய வங்கி உலகம் முழுவதிலும் ஒன்றுசேர்ந்த விலை மாற்றங்களின் மந்தமான நிலைமையினை விளக்குகின்ற விதத்தில் பல மாறாத்தன்மை கொண்ட விலைக் கோட்பாடுகளின் செல்லுபடியாகும் தன்மையினைப் பரீட்சிப்பதற்காக "விலை நிர்ணயிக்கும் உபாயங்கள் மற்றும் கால இடைவெளி" மீது ஏனைய 20 மத்திய வங்கிகளின் ஒத்துழைப்புடன் உலகளாவிய அளவீடொன்றினை மேற்கொண்டது.

## 29.2 சுட்டெண்களைத் தொகுத்தல்

**(அ) வியாபார மனோபாவச் சுட்டெண்கள்**

வியாபார நிலைமைகள், இலாபத்தன்மை, தேர்ச்சி பெற்ற தொழிலாளரின் கிடைப்பனவு, விற்பனை, கேள்வி மற்றும் இயலளவுப் பயன்பாடு என்று அழைக்கப்படும் வியாபார மனோபாவச் சுட்டெண்கள் வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடுகளினூடாகப் பெறப்பட்ட பதிலிறுப்புக்களைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டன. இது, உடனடியாக முற்போந்த காலாண்டிலும் வரவிருக்கும் காலாண்டிலும் பொருளாதார அசைவுகளின் குறியீடுகளை வழங்கும். இத்தகவல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்வுகூறலில் பயன்படுத்தப்பட்டது. இதன் பெறுபேறுகள், சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பு நோக்கங்களுக்காக நாணயக் கொள்கைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், மொத்த வடிவிலமைந்த முக்கிய சுட்டெண்கள் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் காலாண்டு அடிப்படையில் வெளியிடப்பட்டன.

புதிய கட்டளைகள், தயாரிப்பு, தொழில்நிலை, நிரம்பலர் வழங்கல் நேரம், கொள்வனவுகளின் இருப்பு என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு மற்றும் புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கை, தொழில்நிலை, வேலைகளின் நிலுவை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனான பணிகள் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் என்பன மாதத்திற்கு மாத மாற்றங்களை மதிப்பிடுவதற்காக தொகுக்கப்பட்டன. பெறுபேறுகள் பொருளாதாரத்தின் குறுங்காலம் தொடர்பான உயர் அதிர்வலைத் தரவுகளை வழங்குகிறது. இத்தகவல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்வுகூறல்களுக்காக பயன்படுத்தப்பட்டதுடன் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை மேற்கொள்கின்ற நாணயக் கொள்கைக் குழுவிற்கு அறிவிக்கப்பட்ட வேளையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பத்திரிகை அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் கட்டடவாக்க அளவீடும் நடாத்தப்பட்டதுடன் அதன் பெறுபேறுகள் உள்ளகப் பகுப்பாய்வுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

**(ஆ) சொத்து விலைச் சுட்டெண்கள்**

2019ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலுமுள்ள 82 நிலையங்களை உள்ளடக்கிய காணி விலைச் சுட்டெண் (தளக்காலம்: 2017இன் முதலரைப்பகுதி) தொகுக்கப்பட்டு அரையாண்டு அடிப்படையில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒரு பேர்ச் வெற்றுக்காணிக்கான காணி விலைகளைப் பயன்படுத்தி வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மூன்று வெவ்வேறான துணைச் சுட்டெண்கள் தொகுக்கப்பட்டன.

மேலும், கூட்டுறுதித் தொடர்மாடிமனைத் துறையினை உள்ளடக்கிய வதிவிட சொத்து விலைச் சுட்டெண்கள் பகுப்பாய்வு நோக்கங்களுக்காக மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படைகளில்

2016ஆம் ஆண்டிலிருந்து தொகுக்கப்பட்டு வருகின்றன. மாதாந்த சுட்டெண்களைத் தொகுப்பதில் அதேநேர சொத்து விற்பனை வெப்தளங்களிலிருந்து பெறப்பட்ட விளம்பரப்படுத்தப்பட்ட விலைத் தகவல்கள் பயன்படுத்தப்பட்ட வேளையில் கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் சந்தை அளவீடுகளுக்கூடாகப் பெறப்பட்ட உண்மையான விற்பனைக் கொடுக்கல்வாங்கல்கள் காலாண்டுச் சுட்டெண்களைத் தொகுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. இச்சுட்டெண்கள் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலும் விலை அசைவுகளைக் கண்காணிப்பதற்கு உதவின. 2019இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியுடன் தொகுத்தல் செயன்முறைகளுக்கு மேம்பட்ட தன்மைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் சுட்டெண்களை வெளியிடுவதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(இ) கூலி வீதச் சுட்டெண்கள்**

பொருளாதாரத்தில் காணப்படும் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக அரச, முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார் துறையினை உள்ளடக்கிய கூலிவீதச் சுட்டெண்கள் தொகுக்கப்பட்டன. 2019இல், 2016 பெப்புருவரி 25ஆம் நாளன்று பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் விடுக்கப்பட்ட பொது நிருவாகச் சுற்றிக்கை இல. 03/2016இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறிப்பிட்ட தொழில்களில் ஆரம்ப சம்பளக் குறியீட்டுடன் இசைந்துசெல்லும் விதத்தில் அரச துறையின் கூலிவீதச் சுட்டெண் வீதம் 2016இற்கு மீள்தளப்படுத்தப்பட்டது (2012 இலிருந்து). தளக்காலப்பகுதி தொழில்நிலை அமைப்பு தொடர்பான தரவுகள் 2016 நவெம்பரில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அரச மற்றும் அரசுசார் துறை தொழில்நிலை தொகைமதிப்பிலிருந்து பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரச துறைக்கான பெயரளவு மற்றும் உண்மைக்கூலி வீதச் சுட்டெண்கள், காலத்திற்குக் காலம் விடுக்கப்பட்ட பொது நிருவாக கம்பனி சுற்றறிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டன. முறைசார்ந்த தனியார் துறையினைப் பொறுத்தவரையில் தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள ஊழியர்களுக்கான பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களைப் பயன்படுத்தி உண்மைக் கூலிவீதச் சுட்டெண்கள் தொகுக்கப்பட்டன. துறையின் கூலி அசைவுகளை மதிப்பிடுவதற்காக நாடளாவிய தரவு சேகரிப்பு முறையூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்கள் தொகுக்கப்பட்டன.

**29.3 குறுங்கால பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எதிர்வுகூறல்**

புள்ளிவிபரத் திணைக்களம் பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான குறுங்கால எதிர்வுகூறலையும் ஏனைய தகவல்களையும் வழங்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமைக்கு தொடர்ந்தும் பங்களித்தது. பல்வேறுபட்ட மூலங்களிலிருந்தான தொடர்பான உள்ளீடுகளைப் பயன்படுத்தி மாதிரி அடிப்படையிலான மற்றும் குறிகாட்டி அடிப்படையிலான எதிர்வுகூறல்கள் இரண்டினையும் தயாரித்தது. இவ்வெதிர்வுகூறல்கள் கிரமமான நாணயக் கொள்கைக் கூட்டங்களில் ஆராயப்பட்டு கலந்தரையாடப்பட்ட பின்னர் கொள்கை வகுப்புக்களை மேற்கொள்ளப்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் நாணயச் சபைக்கு 2019 இல் சமர்ப்பிக்கப்பட்டன.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டினதும் குறுங்கால பணவீக்க எதிர்வுகூறல்கள் அண்மைய விலைப் போக்குகள் சந்தை அபிவிருத்திகளுடன் இணைந்து காணப்படும் எதிர்வுகூறப்படும் விலை அசைவுகள் மற்றும் பொருளாதார அடிப்படையில் தொழில்நுட்பங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. பணவீக்க எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதற்காக திணைக்களம், பணவீக்கத்தின் மீதான நிரம்பல் மற்றும் கேள்விப்பக்க தாக்கங்கள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற புதிய மாறிகளை தொடர்ந்தும் கண்டறிந்தது. மேலும், திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அளவீடுகளில் கண்டறியப்பட்டவற்றினூடாகப் பிரதிபலிக்கப்பட்ட உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு விலைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பணவீக்க எதிர்வுகூறல்கள் அடிக்கடி இற்றைப்படுத்தப்பட்டன. பணவீக்க எதிர்வுகூறல்களில் காணப்படும் தவறுகளை குறைப்பதற்காக நாளாந்த விலைகளைப் பயன்படுத்தி 2019இல் புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, எதிர்வுகூறல் செயன்முறைக்கான தொடர்ச்சியான முறையியல் சார்ந்த முன்னேற்றங்களின் ஒரு பகுதியாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் பணவீக்க எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதற்காக முக்கியமாக தளம்பலடையும் உணவுப் பொருட்களின் நாளாந்த விலைகள் பயன்படுத்தப்பட்டன.

அண்மைக்கால மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி எதிர்வுகூறல்களைப் பொறுத்தவரையில் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட உத்திகள் இரண்டும் எதிர்வுகூறலில் பயன்படுத்தப்பட்டன. குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களை தயாரிக்கையில் நிபுணத்துவ தீர்மானங்களுடன் முன்னணி பொருளாதார குறிகாட்டிகள், அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பொருளாதாரத்தின் துணை நடவடிக்கைகளுடன் தொடர்பான ஏனைய முதலாந்தர மற்றும் இரண்டாந்தர தகவல்கள் இணைக்கப்பட்டன. காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எதிர்வுகூறலுக்கு மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட உத்திகளும் பயன்படுத்தப்பட்டன.

**29.4 பிரதேச புள்ளிவிபரங்களைத் தொகுத்தல்**

**(அ) இலங்கை சுபீட்சச் சுட்டெண்**

2019இல் புள்ளிவிபரத் திணைக்களம் நாட்டினதும் அதன் மாகாணங்களினதும் ஒட்டுமொத்த சுபீட்சத்தை மதிப்பிடுவதற்காக இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொடர்ந்தும் தொகுத்து வெளியிட்டு வருகிறது. இச்சுட்டெண்ணானது மூன்று துணைச் சுட்டெண்களான பொருளாதாரம் மற்றும் வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் இவை 43 பிரதிநிதித்துவ மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டிருக்கிறது. சுபீட்சச் சுட்டெண் பெறுமதிகள் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் வெவ்வேறாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வேறுபட்ட மாகாணங்களிலுள்ள கரிசனைக்குரிய விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொருத்தமான கொள்கை வழிமுறைகளை உருவாக்கும்பொருட்டு இச்சமச்சீரற்ற தன்மையினை அடையாளம் காண்பதற்கு மாகாண அதிகாரிகளுக்கும் ஏனைய கொள்கை வகுப்பாளர்களுக்கும் இது பயன்மிக்கதொரு வழிமுறையாக விளங்குகிறது. மேலும், இச்சுட்டெண்ணினையும் அதன் துணைச் சுட்டெண்களையும் மாகாண மட்டங்களில் இலக்குகளை ஏற்படுத்தவும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளை காத்திரமான முறையில் மதிப்பிடவும் பயன்படுத்த முடியும்.

**(ஆ) மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி**

புள்ளிவிபரவியல் திணைக்களம் பொதுவான மற்றும் குறித்துரைக்கப்பட்ட முறையியலைப் பயன்படுத்தி பெயரளவு நியதிகளில் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தொடர்ந்தும் தொகுத்தது. இங்கு மாகாண ரீதியான வேளாண்மை உற்பத்திகள், கைத்தொழில் நடவடிக்கைகள் மற்றும் பணிகளின் பெறுமானம் என்பன தொடர்பான பொருத்தமான மாகாணக் குறிகாட்டிகளினூடாகப் பெறப்பட்ட பிரதேச விகிதங்களைப் பயன்படுத்தி தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திப் புள்ளிவிபரங்கள் மாகாண அடிப்படையில் பிரிக்கப்பட்டன. இதற்கமைய, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வருடாந்த

மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் வெளியிடப்பட்டதும் 2018ஆம் ஆண்டிற்கான மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி தொகுக்கப்பட்டு 2019 செத்தெம்பரில் வெளியிடப்பட்டது. இம்மதிப்பீடுகள் மாகாணங்களுக்கிடையேயான பொருளாதார நடவடிக்கைகளை அளவிட்டு ஒப்பீடு செய்கின்ற வேளையில், தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஒவ்வொரு மாகாணத்தினதும் பங்களிப்பினை எடுத்துக்காட்டுகிறது. இதன் மூலம் முக்கிய கவனத்திற்குரிய அபிவிருத்திகளை ஊக்குவிப்பதற்கு பிரதேச மட்டங்களில் நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான தளமாகவும் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 29.5 தகவல்களைப் பரப்புதல்

புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் இன்றியமையாத தொழிற்பாடுகளில் ஒன்றாக விளங்கும் அலுவல்சார் புள்ளிவிபரங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் முறைமைகள் இரண்டினூடாகவும் சரியான நேரத்திலும் கிரமமான முறையிலும் பரப்புவது 2019ஆம் ஆண்டுப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டது. இதற்கமைய, இரண்டு முக்கிய வருடாந்த புள்ளிவிபரவியல் வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள் - 2019 தொகுதி XLI" மற்றும் "இலங்கை சமூக பொருளாதார தரவு 2019 - தொகுதி XLII" என்பன முறையே 2019 ஓகத்திலும் செத்தெம்பரிலும் அனைத்து மூன்று மொழிகளிலும் வெளியிட்டன. திணைக்களம் முக்கியமாக இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்காலப் பொருளாதார அபிவிருத்தி அறிக்கை என்பனவற்றின் இரண்டு அத்தியாயங்களுக்குப் பங்களித்ததுடன் 2019இன் மாதாந்த செய்தித்திரட்டுக்களுக்கான தரவுகளையும் தொடர்ந்தும் வழங்கியது. தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் நாளாந்த விலை அறிக்கை உட்பட வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதார குறிகாட்டிகளை திணைக்களம் உரிய நேரத்தில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் ஆண்டு முழுவதும் வெளியிட்டது. மேலும், பத்திரிகை வெளியீடுகளூடாக பல்வேறுபட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு பாரியளவில் பரப்பப்பட்ட வேளையில் தேவைப்பட்ட நேரங்களில் அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

பொருளாதார ஆராய்ச்சி மற்றும் கல்வியை பேணிப் வளர்ப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினதும் ஏனைய நிறுவனங்களினதும் தயாரிக்கப்பட்ட பரந்தளவிலான பொருளாதாரம் மற்றும் நிதியியல் தரவுகளுடன்கூடிய முறைமையொன்றாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியின் தரவு நூலகத்தினூடாக (Data Library) இலத்திரனியல் தரவுகளை தேவைக்கேற்றவாறு வழங்கும் பணிகளை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் முறைமையின் கட்புல காட்சிப்படுத்தல்கள் 2019இல் மேம்பட்டதுடன் மாற்றங்கள் செய்தித்தாள்களினூடாக தெரியப்படுத்தப்பட்டன.

## 30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திடம் முறையே 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் நுண்பாக நிதிக் கம்பனிகள் என்பவற்றினை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யும் பொறுப்பாணை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் முதனிலை வணிகர் கம்பனிகளினையும் மேற்பார்வை செய்கிறது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் உரிமம்பெற்ற நிறுவனங்களின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களை நடத்துவதனையும் (தளத்திலான மேற்பார்வை) தொடர்ச்சியான கண்காணிப்பினையும் (தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை) உள்ளடக்கியிருந்த வேளையில், ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடானது முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வழங்குவதுடனும், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குவதுடனும், அதிகாரமின்றி நிதித்தொழிலை மேற்கொள்கின்ற கம்பனிகளை புலனாய்வு செய்வதுடனும் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. முக்கிய தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் இத் துறையின் இயலாற்றலை கட்டியெழுப்புதல், நீதிமன்ற வழக்காடல்களுக்கு வசதியளித்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் போன்ற மற்றும் பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

2019 இறுதியில், திணைக்களத்தின் அதிகார வரம்பிற்குள் 42 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும், 4 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் 3 உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் 8 முதனிலை வணிகர் கம்பனிகளும் காணப்பட்டன. மேலும் நிதிக் குத்தகைக்கு விடும் சட்டத்தின் கீழ் 4 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள், உட்பட 61 பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கு விடும் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. அத்துடன், தற்பொழுது 7 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. இவ்வுரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கு விடும் நிறுவனங்கள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் பெயர்கள் இப்பிரிவின் இறுதியில் தரப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 30.1. கொள்கை வழிமுறைகளின் வழங்கல்

2019இல் விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன. முக்கிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் கீழே தரப்படுகின்றன.

அ. பிணையுறுதியாகப் பெறப்படும் வைப்புக்கள் தவிர்ந்த வைப்புக்களை உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் பெற்றுக்கொள்வதனைக் கட்டுப்படுத்துகின்ற "வைப்புக்கள்" மீதான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

ஆ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக் கடன்கள் மீது மிகையான வட்டி வீதங்கள் விதிக்கப்படுவதிலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் "நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்" மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

இ. பொருளாதாரத்தில் அவதானிக்கப்பட்ட வைப்புக்கள் மீதான உயர்ந்த உண்மை வட்டி வீதங்களையும் கடன் வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்த வட்டி வீதங்களையும் நிதியியல் முறைமையூடாக நாணயக் கொள்கை பரிமாற்றங்களை வலுப்படுத்தி விரைவுபடுத்துவதற்கான தேவையினையும் பரிசீலனையிற் கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கடன் வழங்கல் மீதான அதன் வட்டி வீதங்களைக் குறைப்பதன் மூலம் உண்மைப் பொருளாதாரத்திற்கான கொடுகடன் உட்பாய்ச்சல் அதிகரிக்கும் நோக்குடன் "வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்" மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

ஈ. 2019.04.21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக சுற்றுலா கைத்தொழில் மீது ஏற்பட்ட மோசமான தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு சலுகை ரீதியான

கடன்களை பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்ற சுற்றுலாத் துறைகளிலிருந்தான தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கையிலுள்ளவாறு சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கேட்டுக்கொள்கின்ற விதத்தில் சுற்றுலாக் கைத்தொழில்களின் மீது வழங்கப்பட்ட சலுகைகள் பற்றிய சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

உ. 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி வியாபார (நிதிக் கம்பனியொன்று மூடப்படுகையில் கோரல்களின் முன்னுரிமை) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. இது நிதிக் கம்பனியொன்றினை முடிவுறுத்தும் சந்தர்ப்பமொன்றில் ஏற்புடைத்தாக இருத்தல் வேண்டும்.

ஊ. கம்பனி ஆளுகை, கடமைகளைச் சரியான அர்ப்பணிப்புக்களுடன் மேற்கொள்ளுதல், ஒன்றுசேர்ந்து தீர்மானங்களை மேற்கொள்ளுகின்ற செயன்முறை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றை வலுப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலுள்ள பங்குச் சொத்துடமைகளை விரிவுபடுத்தும் நோக்குடன் “உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு சொத்துடமை வரையறைகளை அறிமுகப்படுத்தல்” பற்றிய ஆலோசனைப் பத்திரமொன்று விடுக்கப்பட்டது.

எ. மென்பாரவண்டிகளுக்கு உயர் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை அனுமதிக்கின்ற 2019 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கும் விதத்தில் பெறுமதிக்கான கடன் விகிதப் பணிப்புரை திருத்தப்பட்டது.

ஏ. இலங்கையில் நுண்பாக நிதி மற்றும் பணம் கடன் வழங்கல் வியாபாரங்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபையொன்றினை நிறுவும் நோக்குடன் நிதி அமைச்சுடன் இணைந்து உத்தேச நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச் சட்டம் உருவாக்கப்பட்டதுடன் அதன் சட்டவாக்க செயன்முறைகளை முன்னெடுப்பதற்காக நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஐ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான தற்போதுள்ள பணிப்புரையானது மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணத்திலும் மதிப்பீட்டுக் கால இடைவெளியிலும் செய்யப்பட்ட மாற்றங்களின் மூலம் திருத்தப்பட்டது.

ஒ. பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களிலுள்ள வணிகர் நேரடி பங்கேற்பாளர்களின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. பணிப்புரையானது, இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கொடுக்கல்வாங்கல் மற்றும் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் தவிர்ந்த, பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருத்தல் வேண்டும்.

**30.2. உரிமம்பெற்ற நிறுவனங்களின் மேற்பார்வை**

**அ. நியதிச்சட்ட பரீட்சிப்புக்களை நடத்துதல்**

i. 2019ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் தொடர்பில் 20 நியதிச்சட்ட பரீட்சிப்புக்களை நடத்தியது. பரீட்சிப்பின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் குறைந்த வினைத்திறன், கம்பனி ஆளுகை தொடர்பான பிரச்சினைகள், கடன்களையும் முற்பணங்களையும் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்துவதில் காணப்பட்ட காலதாமதம், கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள் போதுமான அளவில் இல்லாமை, இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிலுள்ள பலயீனம், உள்ளகக் கணக்காய்வு மற்றும் இணங்குவிப்புத் தொழிற்பாடுகளில் காணப்படும் பிரச்சனைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு போதுமானளவு மூலதனத் திட்டங்கள் இல்லாமை மற்றும் வியாபார மாதிரிகளிலிருந்து உருவாகின்ற உறுதிப்பாட்டுத் தன்மை தொடர்பான பிரச்சினைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

ii. நாணயச் சபை நேரக் கட்டமைப்புடன் கூடிய நடவடிக்கைத் திட்டங்களுக்கும் முன்னைய காலத்தில் இடம்பெற்ற 18 பரீட்சிப்புக்களை உள்ளடக்கிய 23 பரீட்சிப்புக்களின் விதந்துரைப்புக்களுக்கும் ஒப்புதலளித்ததுடன் இவை பணிப்பாளர் சபையினதும் சபைத் துணைக் குழுக்களினதும் கவனத்திற்காக தொடர்பான கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன. கண்டறியப்பட்ட கரிசனைகளை சீர்செய்யும் பொருட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் இணங்கப்பட்ட காலகட்டமைப்பொன் றிற்குள் எடுத்த நடவடிக்கைகளும் விதந்துரைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமையும் தலத்திற்கு வெளியிலான கண்காணிப்பு பிரிவினால் கண்காணிக்கப்பட்டன.

iii. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 4 முதனிலை வணிகர்களின் சட்ட ரீதியான பரீட்சிப்புக்கள் நிறைவடைந்த வேளையில் அனைத்து முதனிலை வணிகர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியானதொரு அடிப்படையில் கண்காணிப்புக்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. நட்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான பரீட்சிப்புக்கள் மற்றும் புலனாய்வுகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாணயச் சபை அவதானிப்புக்களைச் செலுத்தியதுடன், கம்பனியின் வியாபாரத் தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் 2019.05.31ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆறு மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்பட்டன. முதனிலை வணிகர் என்ற ரீதியில் வியாபாரம் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தும் நட்வெல்த் செக்குறிட்டீஸ் இடைநிறுத்தப்பட்டமை 2019.11.30 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டது.

மேலும், மேற்பார்வை வழிமுறைகளாக பேர்பெஜுவல் ரெசரீஸ் லிமிடெட் மற்றும் பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி - முதனிலை வணிகர் பிரிவு என்பனவற்றின் வியாபார நடவடிக்கைகளின் இடைநிறுத்தம் மேலும் ஆறு மாத காலப் பகுதிக்கு நீடிக்கப்பட்டது. (பேர்பெஜுவல் 2020.01.05 இலிருந்தும் பான் ஏசியா 2019.08.15இலிருந்தும்).

**ஆ. தொடர்ச்சியான கண்காணிப்பினை நடத்துதல்**

i. அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் முதனிலை வணிகர்களும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்-டெக் முறைமையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் தகவல்கள் மற்றும் கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவ கடிதங்கள், வெளிவாரித் தரமிடல் மற்றும் பத்திரிகை அறிக்கைகள் போன்றன உட்பட ஏனைய நிதியியல் தகவல்களின் மீளாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக மேற்பார்வை

செய்யப்பட்டன. இம் மீளாய்வுகள் மூலதனம், திரவத்தன்மை ஒதுக்கங்கள், கம்பனி ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகிய துறைகள் மீதான நேர காலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் குறிகாட்டிகள் மற்றும் உள்ளகத் தரமிடல் முறைமையூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் காண்கிறது.

**ii.** கண்டறியப்பட்ட விடயங்களின் மதிப்பீடு மற்றும் கடுமையான தன்மை என்பனவற்றின் அடிப்படையில் வங்கியல்லா நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் தெளிவான குறித்துரைக்கப்பட்ட நேரக் கட்டமைப்பொன்றிற்குள் மேற்பார்வைக் கரிசனைகளைத் திருத்துவதற்காக உடனடியாகச் சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், இத்துறையின் பிந்திய அபிவிருத்திகளை மூத்த முகாமைத்துவத்திற்கு அறிவிக்கும் நோக்குடன் இத்துறையின் செயலாற்றம் நாணயச் சபைக்கு கிரமமான அடிப்படையில் அறிவிக்கப்படுகிறது.

**iii.** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்ச மைய மூலதனப் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத பொழுது, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் வைப்புக்கள், கடன் வழங்கல் மற்றும் கடன்பாடுகளின் மீது உச்ச வரையறைகளை விதித்தது.

**iv.** அனைத்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் தகவல்கள் மற்றும் கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல் மற்றும் பத்திரிகை அறிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையில் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டன.

**v.** வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் படுகடன் சாதனங்களை வழங்குதல், பங்கு மூலதனத்தினை அதிகரித்தல், புதிய முதலீட்டாளர்களின் மூலதன உள்ளீடுகள், அமைப்பு அகவிதிகளைத் திருத்துதல், துணைக் கம்பனிகளை உருவாக்குதல், வெளியாரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், புதிய பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும், அலுவலர்களையும் நியமித்தல், வியாபாரத் தலத்தினை வேறிடத்தில் அமைத்தல், சொத்துரிமை மாற்றல்கள் மற்றும் புதிய கிளைகளைத் திறத்தல் என்பன தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது.

**vi.** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து முக்கியமாக, நியாயமற்ற வாடிக்கையாளர் நடைமுறைகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் மீதான நிவாரணங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளுக்குத் தீர்வு காண மத்தியஸ்தராகத் தொழிற்பட்டது.

**இ. நலிவடைந்த உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் தொடர்பில் தீர்வு காணும் நடவடிக்கைகள்**

2019 காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய கவனம், கடந்த பல ஆண்டுகளாகக் கடுமையான திரவத்தன்மை நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த கடன் தீராற்றலற்ற கம்பனிகளின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதன் மீது இருந்தது. இதன்படி, இது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

i. நிதித்தொழில் சட்டத்தின் கீழ் ரீகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்டிற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்துச் செய்யப்பட்டதுடன் தற்பொழுது ஒடுக்கிவிடும் செயன்முறைகள் இடம்பெறுகின்றன.

ii. வைப்புக்கள், கடன் வழங்கல் மற்றும் கடன்பாடுகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை உட்பட பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இடர்பாட்டிலுள்ள கம்பனியொன்றின் வியாபார அலுவல்களை முகாமைப்படுத்துவற்காக திணைக்களம் முகாமைத்துவக் குழுவொன்றினை நியமித்தது. திணைக்களம், இடர்பாட்டிலுள்ள மற்றொரு நிதிக் கம்பனியின் சொத்துக்களை விற்பனை செய்தமையினூடாக அதன் வைப்புக்களின் ஒரு பகுதியை மீளச் செலுத்துவதற்கு வசதியளித்தது. மேலும் மற்றொரு இடர்பாட்டிலுள்ள கம்பனியின் வைப்புக்களின் ஒருபகுதி உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி மீளச்செலுத்தப்பட்டது.

iii. மேலும், இக்கம்பனிகளிலுள்ள தவறிழைத்தோரினால் அக்கம்பனிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களை அறவிட்டுக் கொள்வதற்காகக் கடவுச்சீட்டுக்களைக் பறிமுதல் செய்தல், தனிப்பட்ட வங்கிக் கணக்குகளையும் சொத்துக்களையும் முடக்குதல் உட்பட அவர்களுக்கெதிராக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

iv. இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இக்கம்பனிகளின் முன்னேற்றம் மற்றும் மீளமைப்பு/ மீளெழுச்சித் திட்டங்களை கண்காணிப்பதற்காக பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் கூட்டங்கள் கிரமமாக இடம்பெற்றன.

v. அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் வெப்தளங்கள், செய்தித் தாள்களில் வெளியிடப்படும் கட்டுரைகள் மற்றும் நிதியியல் கூற்றுக்கள் போன்ற பல்வேறு வெளியீடுகளிலும் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களையும் படுகடன்களையும் வலிந்து கேட்கின்ற விளம்பரங்களிலும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை வெளிப்படுத்து மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

vi. இலங்கை மத்திய வங்கி, ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளுக்குள் இருக்கும் ஐந்து கம்பனிகளின் பெயர்களை இலங்கை மத்திய வங்கியின் வெப்பதளத்திலும் இலங்கை மத்திய வங்கியின் 2018 ஆண்டறிக்கையிலும் வெளிப்படுத்தியிருக்கிறது.

vii. உரிமத்தினை இரத்துச் செய்யும் அறிவித்தல் சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி இற்கு விடுக்கப்பட்டது. எனினும், அதன் பின்னர் நாணயச் சபை, கம்பனியினால் முன்மொழியப்பட்ட மூலதனத்தினைப் பெருக்குகின்ற திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பமொன்றினை கம்பனிக்கு வழங்குவதற்கு தீர்மானித்தது.

viii. த பினான்ஸ் பிஎல்சி இன் நெருக்கடியான நிதியியல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நிதியியல் வியாபாரத்தினை கொண்டு நடாத்துவது தொடர்பில் உரிமத்தினை இரத்துச் செய்யும் அறிவித்தல் அக்கம்பனிக்கு விடுக்கப்பட்டது. மூலதனத்தினை உள்ளீடு செய்வதற்கான

நிதி மற்றும் மூலதன மீள் அட்டவணைப்படுத்தல் திட்டம் என்பனவற்றினை நிரூபிப்பதுடன் சேர்த்து ஏற்றுக்கொள்ளத்தக்க ஆர்வத்தினை வெளிப்படுத்தலை நம்பகமான முதலீட்டாளர்கள் இன்னமும் சமர்ப்பிக்க முடியும்.

ix. நிதியியல் குத்தகைச் சட்டத்தின் கீழ் நிவ்வெஸ்ட் கபிட்டல் லிமிடெட்டிற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்துச் செய்யப்பட்டதுடன் கம்பனியானது, ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மற்றொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் கையேற்கப்பட்டது.

**ஈ. பொதுமக்களின் விழிப்புணர்வு மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்.**

i. **இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்**

தேர்ச்சியை/ தகுதியினை அதிகரிக்கின்ற நோக்குடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்கள் தடயவியல் புலனாய்வுகள், பாசல் கோட்பாடுகள், அழுத்தப் பரீட்சிப்பு, கம்பனி ஆளுகை மற்றும் பன்னாட்டு அறிக்கையிடல் நியமம் போன்ற துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றுக் கொண்டனர். திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள், இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளின் ஆய்வுநிலையத்திலும் மற்றைய வெளிநிறுவனங்களிலும் நடத்தப்பட்ட பயிற்சித் தொடர்களில் வளவாளர்களாகத் தொடர்ந்தும் பணியாற்றினர்.

ii. **உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் ஆர்வலர்களுடனான கூட்டங்கள்**

பொருளாதாரம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் தொடர்பான விடயங்களில் மத்திய வங்கிக்கும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமிடையிலான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் குறிக்கோளுடன் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் ஆளுநர் தலைமையில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் நான்கு கூட்டங்களை நடத்தியது. மேலும், திணைக்களம் கம்பனி மற்றும் இத்துறை தொடர்பான பிரச்சனைகள் பற்றி ஆராய்வதற்கும் சரியான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குமாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் மற்றும் பன்னாட்டு முகவர்களுடன் தொடர்ந்தும் கூட்டங்களை நடத்தியது.

iii. **பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் போன்ற மற்றைய திணைக்களங்களின் கோரிக்கையின் பேரில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் கேட்டுக் கொள்ளப்படும் நேரத்தில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு உதவிகளை வழங்குகிறது. 2019இன் பிற்பகுதியில் பணம் கடன் வழங்கல் நடவடிக்கைகள், படுகடன் சாதனங்களூடாக வைப்புக்களைத் திரட்டுதல், ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிறவனங்களினால் மேற்கொள்ளப்படும் இணைந்த மோசடி நடடிவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் பத்திரிகை வெளியீடுகள் விடுக்கப்பட்டன. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மற்றைய அமைப்புக்களின் கோரிக்கையின் பேரில் நுண்பாக நிதி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றது.

**30.3. அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு வசதியளித்தல்**

**அ. கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்**

கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்டின் பிணைய வைப்பு உடமையாளர்களுக்கு மீள்கொடுப்பனவுகளைச் செய்வதற்காக உயர் நீதிமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட மாதிரி முறைகளுக்கிணங்க, வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனியின் வாடிக்கையாளர்களினால் வைத்திருக்கப்பட்ட பிணைய வைப்புக்களின் மீள்கொடுப்பனவினை இணைத்து வருகின்றது.

**ஆ. அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள்**

திணைக்களமானது தபினான்ஸ் அன்ட் கறண்டி புறொப்பட்டி டெவலப்பேர்ஸ் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜீ றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட் என்பனவற்றின் வைப்பாளர்களினால் 2015இல் தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகள் 2019இல் வழக்கு முடிவடையும் வரை தொடர்ந்தும் வசதியளித்தது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரம் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கான சான்றுகளை நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படும் வேளைகளில் வழங்கியது.

## இணைப்பு II - 4

### அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் (2019 இறுதியிலுள்ளவாறு)

#### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி | 21. | எல்ஒஎல்சி பினான்ஸ் பிஎல்சி |
| 2. | அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 22. | மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 3. | ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 23. | மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 4. | ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 24. | மல்ரி பினான்ஸ் பிஎல்சி |
| 5. | ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி | 25. | நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி |
| 6. | அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 26. | ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 7. | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி | 27. | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 8. | சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 28. | பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 9. | சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி | 29. | பிறைம் பினான்ஸ் பிஎல்சி |
| 10. | கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 30. | றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் |
| 11. | கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 31. | சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட் |
| 12. | டயலொக் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் கொழும்பு றஸ்ட்ற் பினான்ஸ் பிஎல்சி) | 32. | செங்கடகல பினான்ஸ் பிஎல்சி |
| | | 33. | செரன்டிப் பினான்ஸ் லிமிடெட் |
| 13. | ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் (அ) | 34. | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி |
| 14. | பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் மெல்ஸ்ரா றியல் பினான்ஸ் லிமிடெட்) | 35. | சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி(ஆ) |
| 15. | எச்என்பீ பினான்ஸ் லிமிடெட் (முன்னர் எச்என்பீ கிறமீன் பினான்ஸ் லிமிடெட்) | 36 | சியப்பதா பினான்ஸ் பிஎல்சி |
| 16. | ஐடியல் பினான்ஸ் லிமிடெட் | 37. | சொவ்றிலொஜிக் பினான்ஸ் பிஎல்சி |
| 17. | கன்றிச் பினான்ஸ் லிமிடெட் | 38. | சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி(அ) |
| 18. | லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் சிற்றி பினான்ஸ் கோப்பரேஷன் லிமிடெட்) | 39. | த பினான்ஸ் கம்பனி பிஎல்சி(இ) |
| | | 40. | ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி |
| 19. | எல்பீ பினான்ஸ் பிஎல்சி | 41. | யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட் |
| 20. | எல்ஒஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் பிறக் லங்கா பினான்ஸ் பிஎல்சி) | 42. | வெலிபல் பினான்ஸ் பிஎல்சி |

#### பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்

| | | | |
|---|---|---|---|
| **அ.** | **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | **ஆ.** | **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** |
| 1. | அமானா வங்கி பிஎல்சி | 1. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 2. | இலங்கை வங்கி | 2. | பிரதேசிய சங்வர்தன பாங்க் |
| 3. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 3. | சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |
| 4. | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி | | |
| 5. | அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி | **இ.** | **சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்** |
| 6. | எம்சிபி பாங்க் லிமிடெட் | 1. | அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் |
| 7. | நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி | 2. | கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட் |
| 8. | நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி | 3. | எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி |
| 9. | பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி | 4. | யுனிசன்ஸ் கப்பிட்டல் லீசிங் லிமிடெட் |
| 10. | சம்பத் பாங்க் பிஎல்சி | | |
| 11. | செலான் பாங்க் பிஎல்சி | **ஈ.** | **அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மேலே பட்டியலிடப்பட்டுள்ளன** |
| 12. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி | | |

#### உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மன்ட் கம்பனி லிமிடெட் | 3. | தும்பற மைட்ரோ கிரடிட் லிமிடெட் |
| 2. | லக் ஜெயா மைக்ரோ பினான்ஸ் லிமிடெட் | | |

#### முதனிலை வணிகர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் | 9. | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி(ஊ) |
| 2. | இலங்கை வங்கி | 10. | மக்கள் வங்கி |
| 3. | கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட் | 11. | பேப்பச்சுவல் ரெஷரீஸ் லிமிடெட்(எ) |
| 4. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 12. | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 5. | என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி(ஈ) | 13. | செலான் பாங்க் பிஎல்சி |
| 6. | பர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி | 14. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| 7. | நற்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட்(உ) | 15. | வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 8. | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட் | | |

அ. இந்நிறுவனங்கள், புதிய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பது உட்பட, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும்.

ஆ. நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதி வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்டது. எனினும், சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி உரிமத்தினை இரத்துச் செய்யும் அறிவித்தலுக்கான அதன் ஆட்சேபனைகளை சமர்ப்பித்ததுடன் மூலதனத்தினைப் பெருக்குவதற்கான அதன் திட்டத்தினையும் சமர்ப்பித்தது. சிங்கபுத்ர நிதிக் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச மூலதன பெருக்கத் திட்டத்தினையும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களையும் கவனத்திற்கொண்ட நாணயச் சபை, குறித்துரைக்கப்பட்ட காலக்கட்டமைப்பொன்றிற்குள் உத்தேச மூலதன பெருக்கத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பமொன்றினை சிங்கபுத்ர நிதி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானித்தது.

இ. இந்நிறுவனங்கள் புதிய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பது உட்பட, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டனவாகும். மேலும், இலங்கை மத்திய வங்கி, கம்பனியின் நெருக்கடிமிக்க நிதியியல் நிலைமையினை கருத்திற்கொண்டு நிதித்தொழில் வியாபாரத்தினை கொண்டு நடாத்துவதற்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இரத்துச் செய்யும் அறிவித்தலை விடுத்தது. எவரேனும், நம்பகமான முதலீட்டாளர்கள் மூலதன உள்ளீட்டிற்கான நிதியம் மற்றும் வியாபாரத்தினை மீள் கட்டமைப்பதற்கான திட்டம் என்பன பற்றி நிரூபிக்கும் சான்றுகளுடன் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆர்வத்தினை வெளிப்படுத்தும் ஆவணங்களை இன்னமும் சமர்ப்பிக்க முடியும்.

ஈ. அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பது 2017.07.24 இலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் தவிர்க்கப்பட்டது.

உ. 2019.05.31 அன்று நடைமுறைக்கு வரும் விதத்தில் முதனிலை வணிகர் வியாபாரம் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது 6 மாத காலப்பகுதிக்கு இடை நிறுத்தப்பட்டதுடன் இது 2019.11.30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

ஊ. முதனிலை வணிகர் வியாபாரத்தினையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது 2019.08.15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 6 மாத காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டது.

எ. முதனிலை வணிகர் வியாபாரத்தினையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது 2020.01.05இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 6 மாத காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டது.

## 31. பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம்

பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியினுடைய மனிதவள விருத்தியின் வளர்ந்துவரும் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்காணல், பயிற்சி இடைவெளியினை நிரப்புவதற்கான உபாயங்களை உருவாக்குதல், வருடாந்த பயிற்சித் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் நடைமுறைக்கிடல், அலுவலர்களுக்கு அவர்களின் பட்டப்பின் படிப்பிற்கு வசதியளித்தல் மற்றும் அலுவலர்களுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குறுங்காலப் பயிற்சிக்கான வாய்ப்புக்களை வழங்குதல் போன்றவற்றை வழங்கி வருகின்றது. மேலும், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது அலுவலர்களுக்கிடையில் அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.

### 31.1 பட்டப்பின் படிப்பு

ஆண்டுக் காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கு 3 உயர் பதவி அலுவலர்களுக்கும் முதுமானிப் பட்ட படிப்பினை ஆரம்பிப்பதற்கு மேலும் 5 அலுவலர்களுக்கும் வசதியளித்தது. அதேவேளை, உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டப் படிப்பொன்றினை ஆரம்பிப்பதற்கு அலுவலர் ஒருவருக்கும், பகுதிநேர முதுமானிப் பட்ட படிப்பினை ஆரம்பிப்பதற்கு 2 அலுவலர்களுக்கும் வசதியளித்தது.

மேலும், 2019 ஆண்டுக் காலப்பகுதியில் முனைவர் பட்டப் படிப்பினை நிறைவு செய்த 01 அலுவலரையும் முதுமானிப் பட்ட படிப்பினை நிறைவு செய்த 07 அலுவலர்களையும் உள்ளடக்கி 08 அலுவலர்கள் வெற்றிகரமாக அவர்களுடைய பட்டப்பின் படிப்பினை நிறைவு செய்த பின் கடமைக்குத் திரும்பினர். 2015-2019 காலப்பகுதியில் மத்திய வங்கி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்பினைத் தொடங்கிய அல்லது நிறைவு செய்த அலுவலர்களினுடைய எண்ணிக்கையானது கீழே அட்டவணை II - 33இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II - 33**
**மத்திய வங்கியின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்புகள்**

| கற்கைகள் | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் |
| முனைவர் பட்டம் | 3 | 5 | 5 | 2 | 3 | 3 | 8 | 1 | 4 | 1 |
| முதுமானிப் பட்டம் | 19 | 21 | 24 | 11 | 19 | 18 | 8 | 14 | 7 | 7 |

### 31.2 குறுங்காலப் பயிற்சி

2018இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த தகைமைகள் திட்டமிடல் செயன்முறையினூடாக இனங்காணப்பட்ட தகைமை இடைவெளிகளைக் குறைக்கும் நோக்குடன், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது 1,532 குறுங்கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வங்கி அலுவலர்களுக்கு வழங்கி வசதியளித்தது.

#### 31.2.1 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி

2019 ஆண்டுக் காலப்பகுதியில் புகழ்பெற்ற வெளிநாட்டு பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மத்திய வங்கிகளினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள், கற்றல் விஜயங்கள் மற்றும் கூட்டங்கள் உள்ளடங்கலாகப் பொருத்தமான குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சியில் வங்கியினுடைய ஊழியர்கள் பங்குபற்றுவதற்குப் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வசதியளித்தது. அதற்கிணங்க, பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது மத்திய வங்கியினுடைய அலுவலர்களுக்காக 392 குறுங்கால பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா, இந்தியா, மலேசியா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளுக்கு 9 கற்கை விஜயங்களை மேற்கொள்வதற்கு வசதியளித்திருந்தது. மேலும், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வளவாளர்களாக வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்களிப்பதற்கு 3 இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு வசதியளித்திருந்தது. அதற்கு மேலதிகமாக, பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது பயிற்சி மற்றும் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு 18 பயிற்சிக் குழுக் கூட்டங்களை நடாத்த வசதியளித்தது.

பாங்க் ஒவ் இங்கிலாண்ட், ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் முறைமை, சுவிஸ் நஷனல் பாங்க், பாங்க் ஒவ் மொன்றியல், டொய்ச் புண்டேஸ் பாங்க், பாங்க் டி பிரான்ஸ், நஷனல் பாங்க் ஒவ் உக்ரைன், பாங்க் ஒவ் கொரியா, சிங்கப்பூரினுடைய நாணய அதிகார சபை, பாங்க் நேகரா மலேசியா, பாங்க் ஒவ் தைலண்ட், பாங்கோ சென்ரல் என்ஜி பிலிப்பைன்ஸ், பாங்க் ஒவ் இந்தோனேசியா, மாலைதீவு நாணய அதிகார சபை, றிசேர்வ் பாங்க் ஒவ் இந்தியா, ஸ்ரேட் பாங்க் ஒவ் பாகிஸ்தான், நேபாளம் றஸ்றா பாங்க், பூட்டானுடைய றோயல் நாணய அதிகார சபை, மற்றும் நஷனல் பாங்க் ஒவ் கம்போடியா போன்றவை இலங்கை மத்திய வங்கியினுடைய ஊழியர்களுக்கு 2019இல் பயிற்சியை வழங்கிய வெளிநாட்டு நிறுவனங்களாகும். அதற்கு மேலதிகமாக, பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் (சீசென்), பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி போன்ற பன்னாட்டு நிதியிடல் முகவர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றினால் வழங்கப்பட்ட குறுங்காலப் பயிற்சித் திட்டங்களில் வங்கி ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கை மத்திய வங்கியினுடைய அலுவலர்களுக்குக் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும் வேளையில், அவர்கள் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் திறன்களை வங்கியினுடைய தொழிற்பாடுகளின் விருத்திக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது உறுதிப்படுத்துவதில் அக்கறை காட்டியது. இந்த நோக்கத்திற்காக, பயிற்சியின் பின்னரான கண்காணிப்பு தொடர்பான பயிற்சித் துணைக் குழுவினுடைய கூட்டங்களுக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வசதியளித்தது. 2019 காலப்பகுதியில், 10 அத்தகைய பயிற்சித் துணைக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன், நிதியியல் நிறுவனங்களினுடைய மேற்பார்வை கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், காட்சிப்படுத்தல்களைத் தயாரித்தல் முறைமைகள் மற்றும் தொழிற்பாடுகள் மற்றும் கருத்துப் படிவங்களுக்கான முன்மொழிவுகளின் விருத்திக்காக 262 ஒப்படைகள் வழங்கப்பட்டுள்ளன.

#### 31.2.2 குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி

ஆண்டுக் காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்ற முறைகளில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் ஏனைய புகழ்பெற்ற உள்நாட்டு நிறுவனங்கள் போன்றவற்றில் வங்கி ஊழியர்களுக்கு 958 குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது. இவை முக்கியமாக பொருளியல், புள்ளிவிபரவியல், கணக்கியல், வங்கித்தொழில், தகவல் தொழில்நுட்பம், சட்டம், கணக்காய்வு, நிதி முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம், செயலக நடைமுறைகள், மனிதவள அபிவிருத்தி, வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களினுடைய மேற்பார்வை, நிதியியல் சந்தைகள், வெளிநாட்டுச் செலாவணி, நாணயம் மற்றும் பிரதேச

அபிவிருத்தி போன்ற விடயங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுக் காலப்பகுதியில் உள்நாட்டு நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 105 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 558 அலுவலர்கள் பங்குபற்றிய அதேவேளை, வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட 44 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 400 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர். அதற்கு மேலதிகமாக, பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது 2019இல் பாங்க் ஒவ் கொரியா அறிவு பங்குடைமைத் திட்டத்தினுடைய உள்நாட்டு அமர்வுகளை நடாத்துவதற்கு வசதியளித்தது.

### 31.3 அறிவுப் பரிமாற்றம்

பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது முதுமானிக் கற்கைகளை நிறைவு செய்து கடமைக்குத் திரும்பிய இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளை மேற்கொள்ள வசதியளித்திருந்தது. மேலும், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வரவழைக்கப்பட்ட விருந்தினர் பேச்சாளர்கள் அதேபோல், இலங்கை மத்திய வங்கியினுடைய அலுவலர்களுடன் இணைந்து பொருளாதார மன்றங்களை ஒழுங்கமைத்தது. இலங்கை மத்திய வங்கியினுடைய அலுவலர்களின் திறன்களை மேலும் மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது வங்கித் தொழிற்பாடுகளுக்கு பயன்மிக்க தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி அலுவலர்களை ஊக்குவிப்பதற்காக சார்டட் பினான்சியல் அனாலிஸ்ற் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கு புலமைப்பரிசில் திட்டத்தினைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

### 31.4 கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்

ஆய்விற்குட்பட்ட காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது செயலமர்வுகள், மாநாடுகள், கூட்டங்கள், மன்றங்கள், பட்டறைகள், அறிமுக நிகழ்ச்சித் திட்டங்கள், கற்கை ஆய்வுகள் போன்ற வெளிநாட்டில் நடைபெற்ற குறுங்கால வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கு மத்திய வங்கியினுடைய அலுவலர்களை தெரிவுசெய்தல் விடயப்பரப்பிற்கான சுற்றறிக்கை உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கி ஊழியர்களினுடைய திறன்களை மேம்படுத்துவதற்கான வசதிப்படுத்தல் தொடர்பான பல சுற்றறிக்கைகளை வெளியிட்டது.